உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்காட்டுப் புராணம்.

இராதாநல்லூர்

சைவ எல்லப்ப நாவலரவர்கள்

இயற்றியது.

இஃது

இந்நூலாசிரியர் கோத்திரத்தாரில் ஒருவரும்

வைமுத்து கூடய ஐயாறப்பிள்ளையவர்கள் குமாரருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ

முத்தப்பிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டபடி.

பெருந்தோட்டம்,

ம-௱-௱-ஸ்ரீ.

நெ. சி. துரைசாமிப் பிள்ளையவர்கள்

சருக்கந்தோறும் செய்தவசனத்துடன்

இந்நூலாசிரியர் கோத்திரத்தாரி லொருவரும்

இலயமுத்துகூடம்

கணபதிப் பிள்ளையவர்கள் குமாரரும்

ம-௱-௱-ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களால்

சென்னை,

பண்டிதமித்திர யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

உ

சிவமயம்.

# சாத்துகவி.

திருவெண்காட்டுச் சிவாலய தர்மகர்த்தர்களில்

ஒருவராகிய

அமராவதிபுதூர்

வயி - நாக - ராம - அ.

ஸ்ரீமான்

## இராமநாதச்செட்டியார் அவர்கள்

இயற்றியது.

நீர்காத்த சடைமுடியா னுறைதிருவெண்
காட்டுயர்வை நெடிது சைவப்
பேர்காத்த எல்லப்ப நாவலன்முன்
றமிழ்ப்பாவாற் பிறங்கச் செய்தான்
ஆர்காத்த பொழுதுமது மெலிவுறக்கண்
டாற்றுதாய்ந் தச்சிட் டீந்தான்
கார்காத்த வேளாளன் பெருந்தோட்டத்
துரைசாமிக் கவிவல் லோனே.

# சர்த்துகவிகள்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துவித்வான்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியன.

குலமலிவே ளாளரிற்கா லிங்கரா யன்கோத்ரங் குலவ . வந்து, வலமலிபிள் ளைப்பெருமா ளையங்கார் தோல்வியுறு வகையிற் பாடும், புலமலிநல் லுயர்சைவ வெல்லப்ப நாவலன்ருன் பொலிவிற்சொற்ற, நலமலிவிண் ணமுதநிகர் வெண்காட்டுப் புராணத்தி னயத்தைச் சூழ்ந்து. (க)

சிவைமிகுசா தனமோர்நற் சைவசிகா மணியாகிச் சிறக்கக்கற் ரோ, ரவைமகிழ்விற் பனனுகி வளர்துரைசா மிக்கவிஞ னருத்தங் கண்டு, நவைநனிநீக் கிப்பாட பேதமாற் றிப்பெருமை நலம்ப யக்குஞ், சுவைமிகுகத் தியரூபஞ் சருக்கந்தோ றுஞ்சேர்த்துத் தூய்மை செய்ய. (உ)

அந்நாவ லவ்கோத்தி ரத்துதித்த பெருஞ்சீர்த்தி யழகின் வாய்ந்து, பன்னுளும் பரமதயா நிதியாநங் கண்ணுதல்பாற் பத்தி வாய்மை, சொன்னுண யம்பொறுமை சார்ந்தசிதம் பரச்சீமான் சொல்லின் பந்தேர், நன்னுவ லோர்களிக்க வச்சியற்றிப் பெருங்கீர்த்தி நண்ணினுனல். (ங)

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## ஈக்காடு - இரத்தினவேலுமுதலியாரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூவல ரயன்மா னேடியுங் காணுப் புராந்தகன் சரிதையே நாளும், ஆவலி னியற்றித் திவ்விய கவிப்பே ரடைந்தொளிர் சைவஎல்லப்ப, நாவலன் திருவெண் காட்டுமான் மியத்தை நலஞ்செறி தமிழ்க் கவிப் படுத்தான்,பாவல ரெவரு மனங்களிதுளும்பப் பான்புகழ் பல ருணர் பாக்கு. (க)

அன்னநூ லெயிலை யமுதுகூ டத்தி லருந்தவப் பயனென வுதித் தோன், சொன்னநா வலனன் மரபின்முத் தப்ப தூயவன் விரும்பி யாங் கதனைப், பொன்னுயர் பெருந்தோட் டத்துரைச் சாமிப் புலவர் கோன் புதுமது மடையாய்ப், பன்னயங் கனிந்த கத்திய வடிவிற் பர ப்பினுன் பகருஞ் சிறப்பால். (உ)

அத்தகு சிறப்பு வாய்ந்தநூ லெயிலை யமுதுகூ டத்துவே ளாள, உத்தமக் காலிங் கராயகோத் திரத்தி லுறுசிதம் பரப்பெருந் தகை யோன், பத்திமை பலர்க்கும் பரனிடம் வளரப் பரப்புவான் கருதியே யிந்நாள், இத்தல மதிக்க வெழுதிடா வெழுத்தி லீந்தன னெவரு மேத்திடவே. (ங)

---

திருவிடைமருதூர். தமிழ்ப்பண்டிதரும் சைவப்பிரசாரகருமாகிய

## கோவிந்தசாமி உபாத்தியாயரென்னும்

## சுந்தரமூர்த்திப் பிள்ளையவர்கள்

இயற்றியன.

கல்லப்பன்றிருவடியேகருத்திருத்துங்காலிங்கராயனென்னச், சொல்லப்பன் கோத்திரத்தார் செய்தவத்தாலவ தரித்துத்தொல்சீர் வாய்மை, புல்லப்பன் னூளுமுயர்தமிழ்க் கடலின் வரம்புகண்டபுல வன் சைவ, நல்லப்ப நாவலனு லிசைத்தருணூல் பலவுளவாலிவை கடம்முள். (க)

திருவெண்காட்டுயர் சரிதையொன்றதனுட்பேரன்புசிறத்தலா லே,மருவெண்காட்டுறு சருக்கவகைகடொறும் வசனநடைமாண்பி ற்செய்தான், கருவெண்காடரிற்புத்தகாராளர்குலமணியாங்கவினுன் றெய்வத், தருவெண்காட்டுறுதகையபெருந்தோட்டத்துரைசாமித் தக்கோன்மாதோ. (உ)

இதம்பெறவிந்நூலையறிந் தெவ்வெவரும்பயன்பெறு மாறிதயங் கொண்டு, நிதம்பரவந்நாவலர் தங்கோத்திரத்திலுதித்தபெருநீர்மை யாளன், பதம்பெருகுமிலையமுதுகூடமெனும்பழம்பதிவாழ்பாக்ய சீலன், சிதம்பரவேளெனுய்பெரியசெம்மலினிதச்சியற்றித்தெரித்தா ன்மன்னோ. (ங)

---

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்காட்டுத்

# தேவாரப்பதிகங்கள்

## ௨-ம் திருமுறை,

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

### பண் சீகாமரம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (௧)

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. (௨)

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ௨-ம் திருமுறை பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்நஞ்சையுமையோர்பங்காவென்றுள்கித்
தொண்டாய்த்திரியுமடியார்தங்கடுயரங்க
ளண்டாவண்ணமறுப்பானெந்தையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. (௧)

விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியா
னடையாரின்சொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ௩-ம் திருமுறை பண் காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரம்மறையவைவானவரொடு
மிந்திரன்வழிபடநின்றவெம்மிறை
வெந்தவெண்ணீற்றர்வெண்காடுமேவிய
வந்தமுமுதலுடையடிகளல்லரே. (க)

நல்லவர்புகலியுண்ஞானசம்பந்தன்
செல்வனெஞ்சிவனுறைதிருவெண்காட்டின்மேற்
சொல்லியவருந்தமிழ்பத்தும்வல்லவ
ரல்லலோடருவினையறுதலாணையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

## ௫-ம் திருமுறை திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

பண்காட்டிப்படியாயதன்பத்தர்க்குக்
கண்காட்டிக்கண்ணினின்றமணியொக்கும்
பெண்காட்டிப்பிறைச்சென்னிவைத்தான்றிரு
வெண்காட்டையடைந்துய்ம்மடநெஞ்சமே. (க)

இராவணஞ்செயமாமதிபற்றவை
யிராவணம்முடையான்றனையுள்குமி
னிராவணன்றனையூன்றியருள்செய்த
விராவணன்றிருவெண்காடடைமினே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

## சு-ம் திருமுறை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

---

தூண்டுசுடர்மேனித் தூநீறாடிச்
சூலங்கையேந்தியோர்சுழல்வாய்நாகம்
பூண்டுபொறியரவங்காதிற்பெய்து
பொற்சடைகளவைதாழப்புரிவெண்ணூலர்
நீண்டுகிடந்திலங்குதிங்கள்சூடி
நெடுந்தெருவேவந்தெனதுநெஞ்சங்கொண்டார்
வேண்டுநடைநடக்கும்வெள்ளேறேறி
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (க)

மாக்குன்றெடுத்தோன்றன்மைந்தனாகி
மாவேழம்வில்லாமதித்தான்றன்னை
நோக்குந்துணைத்தேவரெல்லாநிற்க
நொடிவரையினோவவிழித்தான்றன்னைக்
காக்குங்கடலிலங்கைக்கோமான்றன்னைக்
கதிர்முடியுங்கண்ணும்பிதுங்கவூன்றி
வீக்கந்தவிர்த்தவிரலார்போலும்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

## பலவகைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தண்காட்டச்சந்தனமுந்தவளநீறுந்
தழையணுதுங்குறுங்கொன்றைமாலைசூடிக்
கண்காட்டாககருவரைபோலனையகாஞ்சிக்
கார்மயிலஞ்சாயலார்கலந்துகாண
எண்காட்டாக்காடங்கிடமாநின்று
எரிவீசியிரவாடுமிறைவர்மேய
வெண்காடேவெண்காடேயென்பீராகில்
வீடாதவல்வினையைவீட்டலாமே.

திருச்சிற்றம்பலம்.

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

## ௭-ம் திருமுறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

படங்கொணாகஞ்சென்னிசேர்த்திப்பாய்புலித்தோலரையில்வீக்கி
யடங்கலாரூரெரியச்சீறியன்றுமூவர்க்கருள்புரிந்தீர்
மடங்கலானைச்செற்றுகந்தீர்மனைகடோறுந்தலைகையேந்தி
விடங்கராகித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௧)

விரித்தவேதமோதவல்லார்வேலைசூழ்வெண்காடுமேய
விருத்தனையவேதன்றன்னைவிரிபொழிற்றிருநாவலூர
னருத்தியாலாரூரன்றொண்டனடியன்கேட்டமாலைபத்துந்
தெரித்தவண்ணமொழியவல்லார்செம்மையாளர்வானுளாரே. (௨)

திருச்சிற்றம்பலம்.

## பட்டினத்துப்பிள்ளையார் திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்

உண்டதேயுண்டும் உடுத்ததேயுடுத்து மடுத்தடுத்துரைத்ததே யுரைத்தும், கண்டதேகண்டுங் கேட்டதேகேட்டுங் கழிந்தனகடவநாளெல்லாம், விண்டதாமரைமேலன்னம் வீற்றிருக்கும் விழாவறாவீதிவெண்காடா, அண்டரேகாண வம்பலத்தாடு மையனேயுய்யுமாறருளே. (க)

கோடியமனத்தால் வாக்கினாற்செயலாற் கொடியவைம்புலன்களாலடியேன், றேடியபாவ நரகமுங்கொள்ளா செய்தவம்புரியினுந் தீரா, வீடியபிரமர் சிரமெலாங்கவர்ந்த விழாவறாவீதிவெண் காடா ஆடியபாதா வம்பலத்தாடு மையனேயுய்யுமாறருளே. (உ)

திருச்சிற்றம்பலம்

---

## சேந்தனார்க்குஅரசனிட்டவிலங்குநீங்கவேண்டிப் பட்டினத்துப்பிள்ளையார்பாடிய செய்யுள்.

மத்தளைதயிருண்டானு மலர்மிசைமன்னினானும்
நித்தலுந்தேடிக்காணா நிமலனேநீயின்றேகிச்
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே. (க)

திருச்சிற்றம்பலம்.

---

என்ற திருப்பாடலைப் பாடிய உடனே, சுவேதவன நாதரது திருவுளக் குறிப்பை விநாயகக் கடவுளறிந்து சிறையிலிருந்த சேந்தனாரை விரைவில் விலங்குநீக்கிப் பட்டினத்துப் பிள்ளையார் பால்விடுத்தருளினார். இவ்விநாயகப் பெருமான் பெரிய திருவீதியின் நிருதிதிக்கில் வடக்கு நோக்கிய திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்றனர்.

---

# சருக்கவகராதி.


| | பக்கம். |
|---|---|
| 1—சுவேதவனச்சருக்கம். | ௭ |
| 2—திருநகரச்சருக்கம். | ௨௩ |
| 3—தீர்த்தச்சருக்கம். | ௩௩ |
| 4—வேதராசிச்சருக்கம் | ௪௨ |
| 5—சத்தியநல்விரதச்சருக்கம். | ௫௫ |
| 6—அக்கினிதீர்த்தச்சருக்கம். | ௬௪ |
| 7—சந்திரதீர்த்தச்சருக்கம். | ௬௮ |
| 8—ஆதித்ததீர்த்தச்சருக்கம். | ௭௭ |
| 9—சுவேதகேதுச்சருக்கம். | ௮௩ |
| 10—இந்திரன்பழிதீர்த்தசருக்கம். | ௮௯ |
| 11—ஐராவதசசிவப்பிரியச்சருக்கம். | ௯௩ |
| 12—ஐராவதச்சருக்கம். | ௯௭ |
| 13—வியாக்கிரபாதச்சருக்கம். | ௯௯ |
| 14—சுவேதச்சருக்கம். | ௧௦௨ |
| 15—மருத்துவச்சருக்கம். | ௧௦௮ |
| 16—தாண்டவச்சருக்கம். | ௧௨௯ |
| 17—இலிங்கச்சருக்கம். | ௧௩௩ |
| 18—திருவிழாச்சருக்கம். | ௧௩௬ |


| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|

௩௫, ௩௭, ௩௯-ம் பக்கங்களின் தலைப்பில் திருநகரச்சருக்கமென்றிருப்பனவற்றைத் தீர்த்தச்சருக்கமென வாசித்துக்கொள்க.

| | | | |
|---|---|---|---|
| ௩௫ | ௨௩ | வாவர் | வாழ்வர் |
| | ௨௪ | கன்னியர்த் | கன்னியர் |
| | ௨௯ | புணை | புணை |
| ௬௩ | ௨௬ | மெய்தவம் | மெய்த்தவம் |
| ௮௭ | ௧௭ | றப்பிபிற் | பிறப்பிற் |

உ

*சிவமயம்.

# திவ்யகவி,

# சைவ-எல்லப்ப நாவலர்

## வரலாறு.

---

இந்நூலாசிரியராகிய சைவ எல்லப்பநாவலர், திருவெண்காட்டின் தென்மேற்கில் ஒருகடிகை தூரத்தில் காவிரியின் வடகரையிலிருக்கின்ற இராதாநல்லூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே காலிங்கராய கோத்திரத்திலே பிறந்து, உரிய பருவத்திலே நல்லாசிரியரிடத்தே இலக்கண இலக்கியங்களை நிரம்பக்கற்றுப், பின்சமயவிசேட நிருவாணமென்னுஞ் சிவதீக்ஷைகளைப் பெற்றுத், தருமபுர ஆதீனத்தில் அக்காலத்திருந்த மகாசந்நிதான மூர்த்திகள்பால் சுத்தாத்துவித சைவசித்தாந்த நூல்களைக் கேட்டறிந்து வல்லவராய், அம்மகாசந்நிதான மூர்த்திகளால் "திவ்யகவி சைவ எல்லப்ப நாவலர்" என்று பெயர்கொடுக்கப் பெற்றவர். இவர்சிவபெருமானையன்றி மற்றத்தேவர்களைப் பாடாதவர். இது இந்நூற் பாயிரத்தில் (செப்புமியற்றமிழ்க ளெல்லாமரியயனே முதலாய தேவர்க்கோதி ஒப்புவிக்கவறியாம லரனிடத்தே வளைத்து வளைத்துரையா நின்றேன்) என்னும் செய்யுளால் நன்கு புலப்படுகின்றது.

இவராற் செய்யப்பட்ட நூல்கள்: அருணாசலப் புராணம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப்புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருச்செங்காட்டங் குடிப்புராணம், திருவாரூர்க்கோவை, திருவருணைக் கலம்பகம், திருவருணையந்தாதி முதலாயின. இவரால் உரைசெய்யப்பட்ட நூல்: சவுந்தரியலகரி.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்காட்டுப்புராணம்.

## விநாயகர் காப்பு.

சூதரோது சுவேத வனப்பெருங்
காதை தன்னையாங் கட்டுரை செய்திட
மோத கத்தை விரும்பிய மும்மதப்
போத கத்தின் புனைகழல் போற்றுவாம்.

## பாயிரம்.

### சுவேதாரணியேசுரர்.

சொற்கண்டு பசுங்கிளியுங் கருங்குயிலுங் கடலமுதுஞ் சுவையருத
கற்கண்டுந் திறையளக்கு மலர்த்திருவின் பெருமானுங் கமலத்தானு
மற்கண்ட விடம்பிறந்த தலைநாளி லிறவாம லருள்செய் தானைப் [மே
பொற்கொண்டலனையவனைச்சுவேதவனப்பெருமானைப்போற்றுவா

### பெரியநாயகியம்மை.

அடையலர்தம் புரமூன்று மடர்த்தபிரான்
புவனமுய்ய வாடா நிற்பான்
பெடைதழுவுஞ் சுவேதவனம் புடைசூழுஞ்
சுவேதவனப் பெருமா னார்தந்
தொடைதிகழு மணிப்புயமுந் திருமார்புங்
குழைத்தகொங்கைத் துணையி னாளை
யிடைசிறிய நாயகியை யருட்பெரிய
நாயகியை யிறைஞ்சு வாமே. (௨)

### நடராசர்.

தடிவரத மெரிகனலு முயலகனை
மிதிபதமுந் தூக்குந் தாளும்
படிமுழுதும் படைத்தளித்துச் சங்கரித்து
மறைத்தருளும் பான்மைத் தாக

நடனவிற்றி நவ்விவிழிச் சிவகாம
சுந்தரியை நாடி நின்ற
படவரவுங் கொடுவரியும் பழிச்சவபர்
பரம்பரனைப் பரவி வாழ்வாம். (௩.)

அகோரமூர்த்தி.

கருநிறமு மணிமாலை புனையழகும் வளையெயிறுங் கவினேர்.செய்ய
எரிசிகையு நுதல்விழியு நடைக்கோல விணையடியு மிலகவெட்டுக்
கரமிலவு மணிபலகை வெண்டலைவாள் கடிதுடியோர் சூலமேற்று
வெருவமருத்துவனையடரகோரசிவன் றுணைப்பதச்சீர் விளம்புவாமே.

தக்ஷிணாமூர்த்தி.

ஞாலமதிற் புகழ்படைத்த வெண்காட்டி னான்முகற்கு நான்க னுய்யச்
சீலமுறு திருவாயாற் பதிபசுபா சப்பொருளைத் தெரித்தல் செய்த
கோலமொடு யோகபீடத்தமர்ந்து முத்திரைக்கைக்கொண்டுதோற்று
பாலவிலோ சனதக்கி ணாமூர்த்தி பதமலரைப் பழிச்சு வாமே. (௫)

தலவிநாயகர்.

கரியநா ரணனுர்க்குங் கரியநா ரணமளித்த கமலத் தார்க்கு
மரியநா யகரைவலம் புரிந்துசெழுங் கனிவாங்கி யருந்தி னுனைத்
தெரியுநான் மறைமுனிவர் மகப்புரியுமுழுக்கமருத்திருவெண்காட்டிற்
பெரியநா யகியளித்த பெரியவா ரணத்தையன்பாற் பேசு வாமே.

சுப்பிரமணியர்

எண்காரும் புனக்குறவர் தமக்குறவ னெனவணுகி யேனல் காத்துத்
தண்காருஞ் சைவலமு மனையகுழல் வள்ளிதனந் தழுவுங் கோவை
வெண்காடன் றிருமகனை மயிலோனை யமரர்சிறைவிடுத்தவேளைக் [மே.
கண்காணப்பரவினர் தப்பிறவியெனும்பெருஞ்சிறையைக்கடப்பர் தா

சமயகுரவர் மூவர்திருமுறை.

காழிதனிற்பெருமானைக்காட்டியகைத்தமிழ்விரகன் கழற்றுள்போற்
றாழியிலே குண்டரிடுங் கன்மிதப்ப வந்தபிரா னடியை யேத்திச் [றி
சூழியப மன்றுரித்தார் துணையான தோழனடித்துணையைவாழ்த்தி
வாழியவர் திருமுறைக ளேழையுநம் மனதார வழுத்து வாமே. (௮)

௩-௪-௫-எண்ணுள்ள செய்யுள்கள் இரண்டு பிரதிகளிலேயே காணப் படுகின்றன.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடிபெண்
கொடியாக வெழுவித்த தோனைத்
திருவருளாற் பாலருந்தி யேடதனை
யாற்றிலிட்ட தெய்வக் கோவை
பருமறையின் றலைக்கொழுந்தைப் பரசமயத்தினை
றணிமுதலை யடியார் வாழ்வைப்
பரசமய கோளரியைக் கவுணியர்கு
லாமணியைப் பகருவாமே. (௧)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

இற்றாணின் மரகதத்தி னொளிபரவு மிருங்காட் டெழுந்தகாமன்
விற்றாணி மலரெடுத்து விளையாடுந் திருவாரூர் விளங்க வந்தோன்
கற்றூணைப் பிடித்துவலை கடல்கடந்தோ னிருபாத கமல மான
பொற்றூணைப் பிடித்துநம திடராழி கடந்துகதி புகுது மாமே. (௨)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இருமுதலை யடைந்தநாண் முடியசைய வாவணையொன் றேந்திப் போந்த
வொருமுதலை நவநீத புரியானை வழக்கேற்றி யுரைத்த கோவை
யருமுதலை குழவிதர மறையொழுகுங் கனிவாயா லமுதப் பாட
றருமுதலை யடிபணிந்து கருமுதலை வேரொடுங் கல்லுவாமே.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

சிற்றம்பலக்கோவைத் தேன்சொரியுஞ் செம்முகிலை
மற்றொப்பி லாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருகுங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே. (௪)

## திருநந்திதேவர்முதலியோர்.

நந்திமலர்ப் பதம்பரவி யுருத்திரபல் கணத்தவர்தா ணளினம் போற்றி, யைந்துமுகன் பணிவிடைசெய்தப்பாலுமடிச்சார்ந்தாரடிகள் போற்றி, செந்தமிழா கரமுனிவன் பதமிறைஞ்சித் தாழ்கொடு தாழ் திறக்கு மாபோற், றந்தைபிருதாளைகற்றிச்சிவன்றளிற்புகுந்த வன்று டலைமேற்கொள்வாம். (௫)

## பட்டினத்தடிகள்.

தம்மகத்திற் செல்வமெலாம் பொய்யென் றெண்ணிச்
சத்தியமெய்ப் பொருளுணர்ந்து தவத்தோர் போற்றச்
செம்மலுக்குத் திருவிசைப்பா விசைத்துத்தெய்வ
சிகாமணியாந் திருவாரூர்ச் செல்வ னூர்க்கு
மும்மணிக்கோ வையும்பகர்ந்து திருவெண் காட்டின்
முதல்வருக்கு மகபூசை முடித்தோர் நாகப்
பைம்மணித்தார் காவிரிப்பூம் பட்டி னத்துப்
பட்டினத்துப் பிள்ளைபதம் பரவு வாமே. (கச)

## மெய்கண்டசுவாமிகள்.

மெய்க்கடந்தை யச்சுதனுங் களப்பா ளன்றன்
விருப்பமிகுஞ் சிறுவருக்கா வெண்கா டெய்தி
முக்குளத்திற் படிந்துதவம் புரியும் போது
மோனியெனு மொருபுதல்வன் முதல்வ னீந்தான்
றக்கபுகழ்ச் சுவேதவனப் பெருமா னென்றே
தனயனுக்குத் திருநாமந் தரிப்பித் தைந்து
கைக்களிறு வரங்கொடுக்கும் வெண்ணெய் நல்லூர்க்
காங்கெயபூ பதிமனையிற் கலப்பித் தானே. (கரு)

பன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி யடிகளந்தப் பதிபின் மேவி
யுன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமா னிங்கே
வருகவென விளம்புதலு மவண நீங்கித்
தன்னிகரி லவனதருள் பெற்றுச் சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவ
னடியவருக் கடியவர்தா ளகத்திற் சேர்ப்பாம். (கசு)

## சைவர்.

குற்ற மற்ற திருத்தொண்டர் கூட்டமும்
வெற்றி யாகிய மேருவு மொக்குமே
புற்றி டங்கொள் புராந்தகர்க் கல்லது
மற்றெ வர்க்கும் வணங்குவ தில்லையால். (கஎ)

தெய்வ மாகவொர் தேவனை யுங்கொளோ ஞ்
சைவ ரானவர் தாளிணை போற்றுவோம
வைய மீதினில் வன்றொண்ட னுக்குமுன்
னைய னேவல் புரிந்தன னாதலால். (கஅ)

## அவையடக்கம்.

உற்றசெய்யுளா லருணைமா நகர்ச்சிறப் புரைத்தேன்
குற்ற மானவை குணத்தவர் பொறுத்துளங் கொண்டா
ரிற்றை நாளுமச் செருக்கினு லிதனையு மிசைத்தேன்
கற்ற மாந்தருக் கனைத்தையும் பொறுப்பது கடனால். (கசு)

வல்லவியற் புலவர்பல கவிக டோறும்
வழுக்கள்வந்த வகைதேடி மயங்கா வண்ணஞ்
சொல்லினது விதிக்குற்ற மெழுத்தின் குற்றந்
தொடர்நிலைச்செய் யுளின்குற்றந் தொடர்பின் குற்ற
நல்லதொடை களின்குற்றங் குணத்தின் குற்ற
நவரசத்தின் குற்றமோ டணர்த குற்ற
மெல்லையற்ற குற்றமெலா மெளிதிற் காண
விலக்கியமா வதற்கிதனை யியம்பு கேனே. (உய)

செப்புமியற்றமிழ்களெல்லாமரியயனேமுதலாயதேவர்க்கோதி யொப்புவிக்கவறியாமலரனிடத்தேவளைத்து வளைத்துரையாநின்றேன், மைப்பரவைதருவிடமு நீறுமென்புமாடாவும் வனப்பாக்கொண்டா, னப்பொறுமையுடையவனென் புன்கவியும்பொறுப்பனென வறிந்துதகனே. (உக)

அலர்மதியுமென்கவியுங் களங்குறையுங் கலைகுறையுமானக்காலும், புலவரெலாமிகமகிழ்ந்தின்னமுதெனவேபயனுகர்ந்துபுகழாநிற்பர், நிலவுமிழுமதிகரவுபுரிபவர்க்கும்விரகியர்க்கு நெருப்பாத்தோன்று, முலகினிலென்கவியழுக்காறுடையவர்க்கும் பேதையர்க்குமுவப்பெய்தாதே. (உஉ)

## நூல்வரலாறு.

கனத்திடுமூவாறுபுராணத்தின்மிக்ககந்தபுராணத்துட்டுதித்தகதிகடாமுஞ், சனற்குமரசங்கிதையுமினியசூதசங்கிதையுஞ் சங்கரசங்கிதையுஞ்சோதி, வனப்பிரமசங்கிதையும்வினைகளர்க்கும்வயிணவசு

ங்கிடைதயுமந்தமறைபோன்மிக்க, தனிச்சவுரசங் கிதையென்றுருமீதி ற்சங்கரசங்கிதையுரைத்ததகைமைநாடி. (உங)

இந்திரகற்பந்தனிலே யமலனுருமிமயபயின் முருகுந்தர்கந்தற்கி னிதுசொன்னர், முந்தவரிதிரு வனந்தர்சுவேத கேதுமுனிவர் பெ றும்படிமொழிந்தான்முருகவேளுஞ்,சந்தனஞ்சூழ்மலயமுனிக்குரை த்தானந்தத்தமிழ்முனிவன்வசுவரசன்றனக்குச்சொன்ஞன், சிந்தைம கிழ்ந்தேசூதர்முனிவோர்க்கெல்லாந் திருவெண்காட்டின்சிறப்பைச் செப்பினரே. (உச)

குருகுதிகழ் திருவெண்காட்டிலக்கணமுநகர்ச்சிறப்புங் குளத் தின்சீரும், பிரமகத்தியகன்றதுவுமதுவருநதுமவன்பாவம் பெயர்ந் தவாறும், பொருள்கவர்ந்தவினையுடனே குருவினையாட்புணர்ந்தவி னைபோனவாறுஞ், செருவலியாலந்தகனர் சுவேதகேதுவைப்பொ ருதுசிதைந்தவாறும். (உரு)

சதமகனர்பழிதுடைத்த கதையுமயிராவதத்தின்சாபம்போன, கதையுமறைச்சிவப்பிரியன்கதையும் வியாக்கிரபாதன்கதையும் பா ரோர்க், கதிபதியாஞ்சுவேதமன்னன்பெருங்கதையு மருத்துவனுரை ழிந்தவாறும், பதிநடிக்குநதாண்டவமு மிலிங்கமுடன்றிருநாளும்ப கர்தலுற்ரும். (உசு)

## நைமிசச்சிறப்பு.

சந்தனுடைவிசூழிடநதந்திபுங்கொடிமபோர்
சிந்துபாளியுமருவிடங்கோபநிசீத்
தெந்தநாளினுமவேலிவியேதிகழிடமிமைவோ
ரந்தணாளர்கள்பயிலிடநைமிசாரணியம். (உஎ)

வானரங்கள்போய்க்கிழங்குகாய்கனிகொடுவழங்குந
தானிவாரணந்தருக்களைமுறித்திடஞ்சமைக்கு
மேனமானவையுழுதுநல்லிடப்பலவியற்று
மானவற்புதமுடையதுநைமிசாரணியம. (உஅ)

அன்னதாகியதலத்தினிலுறைந்தவரனேக
ரென்னையாளுடையரன்பணியலாமலொன்றியற்ருர்
முன்னையாரணச்சவுனகர்முதல்வராமுனிவர்
பன்னிரண்டியாண்டளவுசெய்மகத்தினைப்பயின்ருர். (உகூ)

போதமிக்கவர்செயுமகம் பார்ப்பதுபொருட்டாற்
சூதமாமுனிசடைநிறைமரவுரிதுலங்கக்
காதுமார்புகைகழுத்தினிற்கண்டிகைகபழச்
சீதமேனியினீறுவெண்ணிலவெழச் சேர்ந்தார். (௩௰)

சேர்ந்தசூதரைச்சவுனகர்முதலினோர்சிறப்பு
மீய்ந்தொராசனத்திருத்தினர்தாங்களுமிருந்தா
ராய்ந்தசூதருமவரவர்க்கினியசொல்லளித்தார்
வாய்ந்தவேள்வியின்முடிவினொன்றுரைத்தனர்மறையோர்.

இலகுவாதராயணமுனியருளினானினிமை
யுலகமானதுபெறவருமறைநெறியுரைத்தோ
யலகிலாதநற்குணப்பெருங்கடலினுடையமுதே
திலகனேமிகவிரும்பினஞ் சிவன்புகழ் செப்பாய். (௩௨)

தொல்லையாகியபுராணமூவாறுமுன்சொன்னீ
ரெல்லையாமிதிகாசமுமிருதியுமிசைத்தீ
ரொல்லையேசிவன்படைத்தளித்தழிப்பதுமுரைத்தீர்
நல்லதின்னமுங்கேட்பதொன்றுளதெனநவின்றார். (௩௩)

யானறிந்ததுமொழிவனும்மிதயத்தில்விருப்ப
மானவாறெலாம்வினவுமென்றுரைத்தனரவர்கள்
ஞானமாவதுமுத்திசேர்வழக்குமுநவினு
மானமன்றியென்றுரைத்தனர்சூதருநவல்வார். (௩௪)

ஆக செய்யுள், ௩௫.

# சுவேதவனச் சருக்கம்

வள்ளலாரடிதொழவருமிமையவர்மகுடம்
புள்ளிதாக்கிடவுரைசலாலுதிர்ந்தபொற்பொடிகள்
கள்ளருமலர்ப்பொடியுடன்படிதலிற்கயிலை
வெள்ளிமீதுபொன்பூசினுலெனுமபடிவிளங்கும். (௧)

அலங்கல்சேர்குழலம்பிகைபணிவிடைக்காகத்
தலங்குநாண்மலர்ச்சோலையிற்சுனைகளிற்சூழ்ந்து
கலந்தமங்கையர்கால்களிற்கழன்றசெங்கனகச்
சிலம்பினொளிமறைந்திடுவது வெள்ளியஞ்சிலம்பு. (௨)

பீடிகைத்தலஞ்சுவர்த்தலஞ்சாலைகள்பிறவு
மாடகத்தினாற்சமைத்துநல்லிரத்தினத்தாலே
தாடிகூடபேற்பலகையுத்திரங்களுஞ்சமைத்துக்
கோடிகோடியிற்கோடிதூண்டுகிரினாற்குயிற்றி. (௩)

மரகதத்தினாற்பூத்தலைப்போதிகைவகுத்திட்
டரவரிமணியுத்திரக்கொடுங்கைகளமைத்துப்
பரவுசந்திரகாந்தமுத்திரங்கண்மேற்பரப்பித்
தெரியுமண்டபமுளதுநற்கயிலையின்சிரத்தில். (௪)

அந்தமண்டபத்திடையிலேயராமணியழுத்துந்
தந்தவர்சிரத்தகட்டரியாசனந்தன்னிற்
சுந்தரத்திருமுகமெலாங்கருணையேசொரிய
மைந்தர்தம்மொடுமணங்கொடுமிருந்தனன்வள்ளல். (௫)

ஐயனோக்கியதிசைதொறுமிறைஞ்சுவரமரர்
செய்யவாய்மலர்ந்திடுதொறுந்திசைமுகன்றிருமால்
கைபின்வாய்புதைத்தணுகியேவருகுவர்கமலத்
துய்யதாளசைந்திடுதொறுங்கூற்றுவன்றுளங்கும். (௬)

வெண்முகிற்கருமுகிலெனவரனுமைவிளங்கச்
சண்முகத்தவன்மயூரமுஞ்சதுமுகனனமு
முண்மயக்கமாவொருதரப்பயந்திடுமொளிக்குங்
கண்மகிழ்ச்சியாலொருதரநயந்திடுங்களிக்கும். (௭)

கருந்தடங்கண்ணிதன்னுடனடியவர்களிக்க
விருந்தசெம்மலைப்பொன்மலைவில்லியையிமையோர்
மருந்தருந்தநஞ்சருந்தியகருணைமால்வரையைப்
புரந்தராதியர்க்கரியனைநெடியமால்போற்றி. (௮)

உய்யுமாறறப்பிறந்திறந்துலைந்திடுமுயிர்கள்
மையமுத்திசேர்நெறியினைப்பகரெனப்பகர்ந்தான்
ஐயனோதுவான்பிறக்குதல்காண்டனெஞ்சழுத்தல்
வெய்யதாகியவிறப்பினாலுரைத்தலால்வீடாம். (௯)

பைவிளங்கியபாம்பணையானெனப்பகர்ந்தான்
வெவ்விடங்களத்தமைத்தவனிப்படிவிளம்பு
மவ்விடங்களிலிவைகளைமுடிப்பனென்றிசைத்தான்
நவ்வியங்கையானன்றுநன்றெனவிதுநவில்வான். (௰)

தெரிசனஞ்செயத்தில்லையிற்கமலையிற்செனிக்க
மரணமாய்விடக்கங்கைசூழ்வாரணாசியிலே
யருணைமாநகர்நினைத்திட்முத்தியஞ்செழுத்தாம்
பிரணவத்தொடெம்பேர்களுமுரைக்கிலும்பெறலாம். (கக)

அரியஞானமேமுத்திசாதனமெனவருளிக்
கிரியையாலுமாமெனச்சொனல்விரோதமேகிளக்குஞ்
சுருதியான்மலைவறமொழிந்தருளெனச்சொன்னான்
பரிதியாயிரங்கோடிநேர்சக்கரப்படையான். (கஉ)

அரசனுக்கிணையாகுமோபரிசனமனைத்துந்
தெரியின்ஞானநேராகுமோகிரியையின்றிரளும்
பரிசனங்கள்பற்பலபெறிலரசனோர்படைக்குங்
கிரியைபற்பலபுரிந்திடின்ஞானமுங்கிடைக்கும். (கங)

தாய்த்தநன்பருந்துடற்பிணியகற்றியேதொலையுஞ்
சித்தசுத்தியைப்பண்ணியேகிரியையுந்திரும்பும்
புத்திசுத்தியான்ஞானமாம்ஞானத்தின்பொருட்டான்
முத்திமுகதியின்பதங்களேகிரியையாமுடியும் (கச)

நந்தவொன்றிரண்டாதியாப்பிறப்பிலேநரனுக்
கந்தமுத்தியாந்தாரதம்மியவாத்தாலே
சந்தனந்திகழ்தில்லையேயாதியாநகரு
மந்திரங்களுமவ்விமேமுத்தியைவழங்கும். (கரு)

இத்தலங்களலன்றியேபெரும்பதியெவையுஞ்
சுத்தமாகியசரியையேமுதலவாந்தொழிலு
மெத்தமொத்தமெப்பாலநருபவிரைவினும்பலமா
மத்தலங்களுந்தாரதம்மியங்களுண்டதனால். (கசு)

நண்ணுபுண்ணியந்தன்னையோர்பலத்தினைநாடிப்
பண்ணினலதுபிறந்திறந்தின்பமேபண்ணு
மெண்ணமின்றியேசெய்தநல்வினைப்பயனெவர்க்கு
முண்ணிறைந்தகாமியமுதன்மலங்களையொழிக்கும். (கஎ)

நம்மைநோக்கிநல்வினைசெய்வோர்க்குதவுமேவாஞான
மிம்மையிற்செயலினைத்தையுநமதுமேலேற்றித
தம்மையற்றவர்செயற்கைநஞ்செயற்கையேதானு
மும்பலத்தையுமறுக்குநம்பணிவிடைமுடித்தால். (கஅ)

தெரிசனுதியாங்கன்மகாண்டங்களின்சிறப்பா
மரியகன்மயானவையெலாமறுத்திடலாணுற்
குருதிபட்டதுகுருதியாற்கழுவியேகொளலாம்
விரவுசேற்றையுஞ்சேற்றினைகற்றியேவிடலாம். (௧௯)

பாலலோசனுவெனச்சொலிநெடியமால்பணிந்தா
ளைபோசனனுரைசெய்வானப்படியலக்காண்
காவிமேலேறியமுன்னையுமுள்ளினார்கள்வர்
கோலிநம்மையுமிருபவினையறுப்பரேகொல்லர். (௨௰)

ஆனைபோலவேவினைகளும்வினைகளையறுக்கும
வினைகளானவையிரண்டுபாற்படுமவெகுவிதமா
நினையுமால்வினைநினைவிலாவினையெனாகமும்
புனையிரண்டினும்விநாபிறைல்வினைவினைபோக்கும். (௨௧)

சூறையால்வருந்தூளியோடணைந்திடுந்தூயன்
சேறதாகுமுன்போலவேகழுவிடாசேற்றை
வீறுமிச்சைசேர்வினைகளுமினைகளைவிட்டாமர்
மாறுமிச்சையில்கன்மமேவினைகளைமாற்றும். (௨௨)

பயனைநாடியகன்மநாருயிரப்பளித்தாற்
பயனைநாடிசாதியற்றியதொருவினைபலிக்கும்
பயனைநாடியவினைகளைநாசமேபண்ணிப்
பயனைநாடிலாவினைசெபேறுக்கறப்பண்ணி. (௨௩)

ஆசையாலிலைநினைத்தலும்புகழ்தலுமறிந்து
பூசைசெய்தலுமுத்தியையுதவுமெப்பொழுதுங்
காசிமேமுதற்றலங்களுநதிகளுங்கயிலை
பாசிலாவிரகிரிமுதல்வரைகளுர்வழங்கும். (௨௪)

வேறு.

கங்கைநதியமுனைநதிவாணியாறுகருதுசிந்துநன்பனதயேகன்னவேணி, துங்கமிகுபம்பைநதிகோதாவேரி சுதுக்கிரியேயதுக்கினியசோணவாறு, மங்கரியபொன்முகலிபாலியாறுமறையூரிற்செய்யாறுமணிமுத்தாறு, பொங்கியவெள்ளாறிரண்டாய்வருகாவேரிபொதியவைகைநதியொடுதண்பொருந்தவாறு. (௨௫)

மற்றுமுள்ளதெய்வநதியனேகமிந்தமணிநதியினொருநதியின்மகிழ்ந்தாமூழ்கப், பெற்றவர்கள்பிறப்பொழிந்தார்கரைகடோறும்பெருகியதேவாலயங்கள்பிறங்குமங்கே, யுற்றவர்களெடாமூதவர்களனைத்தபேர்களுரைத்தவர்கள்தவம்புரிந்தோருயர்ந்ததானம், நற்றவர்களிடையளித்தோர்குலத்துக்கெல்லாநரகமில்லைபரகதியைநல்குமாமே.

தீர்த்தகிரிகாளத்திமலைகேதாரந்திருக்கழுக்குன்றீராபகிரியேமகூடம், வாய்த்தமுதுகுன்றுகயிலாயங்கந்தமாதனமாணிக்கமலைதிரிசிராவெற், பேத்தரியநமதுவரைபிறவும்வாழ்த்தியெழுவிடங்கம்வீரட்டமெட்டும்போற்றிக், கார்த்திகைக்குக்கார்த்திகைநாளருணைவெற்பிற்கவுரியிடுமணித்தீபங்கண்டான்முத்தி. (௨௭)

வேதவனங்கழிப்பாலைதலைச்சங்காடு விரிஞ்சிபுரந்தலையாலங்காடானைக்கா, வேதருமோரம்புலியூர்முல்லைவாயிலொற்றியூர்திருநறையூரோத்தூர்நல்லூர், பாதிரிசூழ்கன்னிவனந்திருவாமாத்தூர்படிக்கரைகண்ணார்கோயிலொச்கோயில், சேதுவிராமேச்சுரந்தென்னலவாயில்திருப்புகலூர்திருத்துறையூர்செய்ஞலூரே. (௨௮)

கச்சியவந்திகைதுவரைமதுரைமாயைகாசிநகரயோத்திநகர்கலையநல்லூ, ரச்சிறுபாக்கங்கடம்பூர்வெண்ணெய்நல்லூரையாறுமயிலாடுதுறைநள்ளாறே, டிச்சைதருவாஞ்சியந்தென்குடந்தைசாய்க்காடிடைமருதாவடுதுறைபுள்ளிருக்குவேளூர், கொச்சைநகர்சந்தலைகைகாட்டுப்பள்ளிகோட்டாற்றார்முதலனந்தகோடிதானம். (௨௯)

இத்தலங்களுமிருக்குந்தானமாகு மிவைகளினாற்சித்திமுத்தியெய்தலாகு, முத்தமமாமிவைகளிற்செய்தவந்தானங்களொன்றுபத்தாயிரமாகுமுயர்ச்சிதாழ்வால், வத்திரமார்பகடுதுடைசிரமுப்போலவந்தமந்திரங்களினல்வழங்குவோமென், றத்தனுமித்தகைமையெல்லாமருளிச்செய்தானரவணையிற்றுயில்பவனீதறைவதானன். (௩௰)

காசியிலேயிறக்கவென்றாலிறக்கலாமோ கனகசபைகாணவென்றாற்காணலாமோ, தேசுபெறுகமலையிலேசெனிக்கலாமோ திருவெழுத்தைவிதிப்படியேசெபிக்கலாமோ, ஆசையினாற்றிரிந்துதிரிந்தரியதீர்த்தமாடவென்றாலெளிதாமோவருமையன்றோ, பாசமறவெளிதானெறிக்கேமுத்திபலிப்பதனையருளுமெனப்பரமன்கூறும். (௩௧)

வேதாந்தத்துரைப்பதொன்றுண்டெவர்க்குஞ்சொல்லோம்விரும்புதல்கண்டுனக்கிதனைவிளம்பாநின்றோம், நாதாந்தத்தொளியாய்

நம்முருவமாகிஞானமயமாகுமொருநகருண்டங்கே, கோதாந்தபி ரளாநமதுசூலக்குடுமியிலத்தலமிருக்குங்கூறும்போதிற், சேதாம பற்புதுமலராற்செங்காடாகிச்சிறையளியாற்பசுங்காடாந்திருவெண் காடு. (௩௨)

மறந்துமதன்பெயருரைப்போர்நினைப்போரங்கேவழிவசத்தா லடைந்திடுவோர் பரணமாவோர், பிறந்திடுவோரதிலிருப்போரெவரா னுலும்பிறவாதவரமளிக்கும்பெரியமூதூர், பறநதுவருகொடிகளுக்கு மதனைச்சூழப்படர்ந்தகொடிகளுக்குமுத்திபலிக்குமூதூர், சிறந்ததிரு ச்சாய்க்காடுதலைச்சங்காடுதிருநாங்கைநகர்புடைசூழ்திருவெண்காடு.

அருமறையின்மணிமுடிமேலிருப்பதாகியவனிமங்கைசெங்கை யிற்கண்ணாடியாகிக், கிருமியிறந்தாலும்வலச்செவிமேலாகிக்கிளர்ந் துநமதுபதேசங்கேட்குமூதூர், பொருமுகமண்டலவயனுர்மயானமா கிப்புராதனமாய்நமக்குமலர்ப்புண்டரீகத், திருமுகமண்டலமாகிநய னமூன்றுந்திருக்குளமாமெனவிளங்குந்திருவெண்காடு. (௩௪)

கற்பமொருமழியாதுமுடிந்தநாளிற்கனலாலுங்காற்றாலுங்கலைப் புறாது, வெற்பணங்கோடினிதுறைவோமதனுலிந்தவெள்ளிமலையினி ற்சிறிதுவிருப்பமீந்தோஞ், சிற்கனமாயேகமுமாய்ப்பலவாய்நாமே திருவவதாரஞ்செய்யுந்திருவெண்காடென், றற்புதமாமதனைநினைந்த ரியகூத்தையானந்தநடராசனுடினனே. (௩௫)

வேறு.

தேவராடினர்சித்தருமாடினர்
தாவராதிகள்சங்கமாடின
மூவராடினர்முச்சுடராடின
ஆவிலேறினனந்தமாடவே. (௩௬)

சுத்தவேதச்சுருதிகளாடின
பத்தராடப்பதஞ்சலியாடினன்
நித்தனேகனிமலனசஞ்சலன்
சத்தனானந்தத்தாண்டவமாடவே. (௩௭)

இம்பராடவிருடியராடினர்
தும்பியாறிருதோளவராடினர்
கம்பைநாயகிகைத்தலங்கொட்டிடச்
சம்புவானந்தத்தாண்டவமாடவே. (௩௮)

மாயனனந்தவாரிதிமூழ்கியே
யாயகாலங்களாயிரமற்றபி
னேயமாகிப்பரவசநீங்கியே
தூயகோவைத்தொழுதிவைசொல்லுவான். (௩௯)

வே று.

அத்தலமெத்திசையிலுள்ளதெல்லையெங்கேயாறேதாச்சிரமமி
ழைத்தரியதான, சித்தியங்கேபெற்றவராரோடையேதுதீர்த்தவகை
யாவைவினைதீர்ந்தபேரார், சத்தியுடனடிப்பதற்குநிமித்தமேதுசதா
சிவமூர்த்திகளிருக்குந்தானமேது, முத்தியைநீரெளிதாகத்தருமாறெ
ன்னே முதல்வனேமொழிகவெனமொழிவதானன். (௪0)

தில்லைநகர்க்கோசனையோரிரண்டதாகுந்தியவனர்திசையாகத்
திருவாரூருக், கெல்லையுமூன்றேசனையீசானத்தாகுமெழிற்குடந்தைக்
கோசனையிரிரண்டாங்கீழ்பாற், கல்லெனுங்கீழ்கடற்கரைக்கோசனை
மேல்பாலாங்காவிரிகளிடையாங்காலாஞ்சரப்பேர், வில்லவனமகாவ
ரங்கமுத்திவாயில்வெண்காடுசிதம்பரமாய்விளங்குமூதூர். (௪க)

காவிரித்தென்கரைமுதலாமண்ணியாற்றங்கரைவடக்காறாறெ
னும்விற்கடைமட்டெல்லை, தாவிறிருச்சாய்க்காடுகிழக்காமேற்குதனி
நாங்கைநடுக்காலாஞ்சரமதாகும், வாவுபுனற்றிருக்கடவூர்நகர்தென்
பாலாவடபுறஞ்சீகாழியெல்லைமருவியாழி, மேவுகரைகீழ்புறம்புள்
ளிருக்குவேளூர்மேற்காகவில்வவனம்விளங்குந்தானே. (௪௨)

எழுதடஞ்சூழ்நடுத்தலம்பேரரங்கமாகுமிறைகோயிற்சிதம்பரமா
மினியநாம, மழகியசங்காரணியந்தென்பால்பொன்னூரதன்வடபாற்
கீழ்கரைமேற்கரகரேச, மழவிடைசூழ்சுவேதவனமிருகாவேரிவடக
ரைதென்கரைநடுவாய்மதங்கமேற்காத், தழுவுபுனன் * முனிவாசங்
கிழக்காவுள்ளதலத்தைமுத்திவாயிலென்றேசாற்றுவாரே. (௪௩)

இப்படியேயறுவகையாந்திருவெண்காட்டுக்கிணையாகவிலையொ
ருகாலிருகான்முக்கால், செப்பினம்பொற்பொதுவருணையாரூர்காசி
தெரிசிக்கச்சிந்திக்கச்செனிக்கமாய, வொப்பறுவீடுதவுமவையுதவும்
பேற்றையொருக்காலேகணப்போதிலுதவுமவ்வூ, ரப்பதியிற்பதினறி
லொருபங்கொவ்வாவருமறையிற்புகழ்ந்ததலமனைத்துந்தானே. ()

* முனிவாசம்-நெய்தல் வாயில்.

## வேறு.

ஆக்கவிராட்புருடன்மனத்தலமிரண்டாமுதனகராங்காரமென் றூங்,தாக்கியவோங்காரமென்றுமவையிலொன்றுசிவானந்தச்சபைய தாகும்,நீக்கமிலாவானந்தக்கமலமலருளததிலேநிருத்தஞ்செய்வோம், தேக்கியமாதவம்புரிந்தோர்நமதருளாலந்தநடந்தெரிசிப்பாரே.

மற்றதுசாத்துவிதமிராசதத்துடன்றாமதமெனமூவகைத்தாய்த் தோன்று, மூற்றுமதின்முன்னையதுசுவேதவனங்கமலம்வெள்ளைமுளரியாகு, முற்றவிரண்டாவதுசெங்காடுசெந்தாமரையுளதாமுறைக்கின்மூன்றுப், பெற்றதுவோராமனந்தீச்சரங்கரியகமலமலர்பேசுங்காலே. (சசு)

'தெரிவிந்தமூவகையாவிளங்குகினுஞ்சிறந்தபெயர்திருவெண்காடா, மோரிலிங்கமூர்த்தியுமாய்நடேசனுமாயகோரனுமாயுறைவோமங்கே, பேருலகமுடிவினிலுஞ்சங்காரதாண்டவத்தைப்பெருகச்செய்தோந், தாரணியைப்படைத்திடும்போதுமையவளத்தலத்தில் வந்துதவமேசெய்தாள். (சஎ)

ஓதுவரமுனக்களிப்போமெனவுரைக்கவுமையவளுமுரைப்பாளுந்து, பூதமெலாமுடிவிடத்துஞ்சங்காரநடமிதிலேபுரிந்தீரன்றோ, வேதமறப்புவனமெலாமுய்விக்கும்படிக்குநடமிடுவீரென்று, ளாதவிஷற்புவனமுய்யவத்தலத்தேஞானநடமாடினேமே. (சஅ)

அன்றுமுதனவனிருத்தகணமெனும்பேர்படைத்ததுபேரரங்கமான, தின்றுமுதற்சங்காரமளவுமகலாதுநடமிடுகையாலே, குன்றரியவவிமுத்தமெனும்பெயரும்படைத்ததொன்றுகோடியாக, நன்றிதனையுதவுதலாலதுதருமகோடியெனுநாமமாகும். (சகூ)

மனதாலேயனுதியிலேசமைத்ததிலே புறைவமிகட்கிழ்ச்சியாகிச்
சனகாதியிருடியருஞ் சனகாதியோகியருந் தவஞ்செய்வார்கள்
இனமாகவதனுலேசித்திநக ரெனும்பெயருமியல்பாமங்கே
புனலாருமுக்குளமுமெழுதடமுங்கோயிலுள்ளும்புறம்புங்காணும். ()

கிருதயுகமதிற்பூசைபுரிந்தனனுர்முடன்கூடிக்கிளரும்வேதா
மருவுதிரேதாயுகத்தின்மதிகதிரோன்றுவாபரத்தின்மகவானங்கி
யரியபெருங்கலியுகத்திலானைமுகனறுமுகவனருச்சித்தார்கள்
பொருவரியவியாக்கிரமாமுனியுடனேசுவேதனுமுன்பூசித்தார்கள். ()

மாதவனேயெனவுரைத்தான் மாதவனும்புகழ்ந்துவெள்ளைவன த்திலாடுஞ், சீதநடந்தமியேனுஞ்சேவிக்கும்படியருளிச்செய்வாயெ ன்றான், நாதனுநன்றெனமகிழ்ந்துபதங்கதலத்திருந்துபின்னைநடப்பா ரென்றான், ஆதிமொழிப்படிமதங்கதலத்தடைந்துதவம்புரிந்தானயு தங்காலம், (௫௨)

நாரணனுந்தவபலத்தால் வெண்காட்டின்மகாவரங்கினடஞ்சே வித்தான், சீரணிபுமலர்மகட்குமனந்தனுக்குஞ்சுவேதவனச்சிறப் பைச்சொன்னான், றாரணியைச்சுமந்தவனுந்திருமகளும் விருப்புடன த்தலத்தேநண்ணிக், காரணகாரியங்கடந்தசங்காரநடந்தொழுதுகளி ப்புற்றார்கள். (௫௩)

சுவேதவனச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் அ௮.

## வசனம்.

எண்ணியவரந்தரும் புண்ணியநதிகளுள் ஒன்றாகிய கோமதிந திக்கரையிலே, சந்தனச்சோலைகள் சூழ்ந்தஇடமும், யானையுஞ்சிங்க மும் நண்புசெய்யுமிடமும், எந்தநாளினும் யாகமே நடக்கின்றவிட மும், தேவர்களும்முனிவர்களும் பயில்கின்றவிடமும், வானரங்கள் முனிவர்களுக்கும்காய் கனிகிழங்குகளைக்கொண்டுபோய்க் கொடுக்கு மிடமும்,யானைகள்மரங்களைமுறித்துமுனிவர்களுக்கு இருப்பிடஞ்செ ய்யுமிடமும்,ஆகியபலவற்புதங்களையுடையநைமிசாரணியத்திலே சிவ பணிவிடையன்றி மற்றொன்றையுஞ் செய்யாதவர்களாகிய சவுனகர் முதலியமுனிவோர்கள் பன்னிரண்டுவருஷமளவுஞ்செய்கின்றவோர் யாகத்தினைச்செய்தார்கள் - அந்தயாகத்தைப் பார்க்கும்பொருட்டுச் சூதமாமுனிவர், அங்கெழுந்தருள, சவுனகர்முதலியமுனிவோர்கள் சூதமாமுனிவர்க்குச்சிறப்புச்செய்து, அவரையோராசனத்தெழுந்த ருளப்பண்ணித் தாங்களுமிருந்தார்கள். சூதமாமுனிவரும் அவர்க ளுக்கு இனியவசனங்களைச் சொல்லினர். அந்தயாகத்தின் முடிவில் சவுனகாதிமுனிவர்கள் சூதமாமுனிவரைநோக்கி, வியாசமுனிவரு

டைய அருளினாலே உலகம் இன்மைபெறும்பொருட்டு மறைநெறியையுரைத்தவரே! அளவில்லாத நற்குணமாகிய கடலினிடத்துப்பிறந்த வமுதமே! திலகம்போன்றவரே! சிவபெருமான் புகழைக்கேட்க யாங்கள்மிகவிரும்பினோம். சொல்லியருள்வீர். முன்னேபதினெண் புராணமுஞ்சொன்னீர். இதிகாசமுமிருதிகளுஞ்சொன்னீர். சிவபெருமான் படைத்தளித்தழிப்பதுஞ்சொன்னீர். நல்லதாக இன்னமுங் கேட்பதொன்றுளதென்று சொன்னார்கள். அவ்வார்த்தையைச் சூதமாமுனிவர்கேட்டு, முனிவிர்காள்! யானறிந்ததைச் சொல்லுவேன். உங்களுள்ளத்தில் விருப்பமானவைகளையெல்லாம் கேளுங்களென்று கூறவும், முனிவர்கள் ஞானமார்க்கத்தையும் முத்திமார்க்கத்தையும் விரிவாய்க்கூறியருளவேண்டுமென்னச் சூதமாமுனிவர் சொல்லலாயினார்.

முனிவிர்காள்! திருக்கயிலாயமலையின்மேலுள்ளசுவர்ணமண்டபத்திலமைந்த சிம்மாசனத்தின்கண் சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தருளியிருக்கும்போது விஷ்ணுமூர்த்தியானவர் சிவபெருமானைவணங்கிச்சுவாமி! முத்தியடையுமாறின்றிப்பிறந்திறந்துலைகின்றவுயிர்கள் எளிதாகமுத்தியடையுமார்க்கத்தைச் சொல்லியருளவேண்டுமென்ன,சிவபெருமான் சர்ப்பசயனா! பிறத்தலினாலும் தரிசித்தலினாலும் நினைத்தலினாலும் மரித்தலினாலும் செபித்தலினாலும் முத்தியுண்டாகுமென்று கூறியருள, ஐயனே! இவைகளை எவ்விடங்களின் முடிப்பதென்று விஷ்ணுமூர்த்திகேட்க, சிவபிரான் எவ்வாறெனின் திருவாரூரிற்பிறத்தலாலும், சிதம்பரத்தைத் தரிசித்தலாலும், திருவண்ணாமலையை நினைத்தலாலும், காசியின்மரித்தலாலும், பிரணவத்தொடுபஞ்சாக்கரத்தையும் நமது திருநாமங்களையு முச்சரித்தலாலும்முத்தியுண்டாகுமென்றுசொல்லி அருளலும், விஷ்ணுஞானத்தான் முத்திபெறலாம் என்றமகாதேவர்நீரே, கிரியையாலுமுத்திபெறலாமென்றல்பொருந்துமோ? பிரபலசுருதியாலையம் நீங்கமொழிந்தருள்வீரென்றலும்,சிவபெருமான் விஷ்ணுவே! அனேக பரிசனங்கள்கூடினாலும் ஆராயுமிடத்து ஓரரசனுக்கிணையாவரோ? ஆகார். அதுபோல அனேகங்கிரியைகள் கூடினாலும் ஞானத்துக்கொப்பாகா. ஆயினும் பற்பலபரிசனங்களைப்பெற்றால் அரசனுக்கு இறைமை உண்டாகும். அதுபோலப் பற்பலகிரியைகளைச்செய்தால் ஆன்மாக்களுக்கு ஞானமுண்டாகும். உண்ட நல்லமருந்தானது உடலிலுள்ளநோயை நீக்கியகலும். அதுபோலக்கிரியையும் சித்தசுத்தியைச் செய்துதிரும்பும்.

யுச்சித்தசுத்தியான் ஞானமுண்டாகும். ஞானத்தினாலே முத்தியுண்டாகும். ஆகவே முத்திக்குக்காரணம் கிரியையாகும், தாரதம்மியவசத்தினாலே நரனுக்கு ஒன்றிரண்டுமுதலிய பிறப்புக்களிலே அந்தத்தின்முத்தியுண்டாகும். சிதம்பரமுதலிய தலங்களும் மந்திரங்களும் திருநாமங்களும் காலவளவிலே முத்தியைக்கொடுக்கும். இந்நான்கு தலங்களன்றி மற்றத்தலங்களும் கிரியைமுதலாகிய தொழில்களுந் தாரதம்மியங்களினால் விரைவாகவும் மந்தமாகவும் பலனைத்தரும். பலனைநாடியோர் புண்ணியத்தைச்செய்தால் அது பிறந்திறந்திடும்பத்தைச்செய்யும் பலனைநாடாது ஓர்புண்ணியத்தைச்செய்தால் அது உள்ளத்திலுள்ள காமியமுதலிய மலங்களைநீக்கும். நம்மைக்கருதிப் புண்ணியஞ்செய்வோர்க்கு ஞானத்தைக்கொடுப்போம். இம்மையிற் செய்யும் செய்கையாவும் எமதுசெய்கையாகக்கண்டு யான் எனது என்னும் செருக்கற்றவரைச்சேர்தல் நம்மைச்சேர்தலேயாம். நம்பணிவிடைகளைச் செய்தால் அவைமும்மலங்களையும் ஒழிக்கும்! என்றுமொழிந்தருள, நெற்றிக்கண்ணையுடையகடவுளே கன்மகாண்டங்களிற் கூறியதெரிசனாதிகளால் கன்மங்களை யொழிக்கலாமென்றால் உதிரக்கறையை உதிரத்தாலும் சேற்றின்கறையைச் சேற்றாலும் நீக்கலாமன்றோ என்று, விஷ்ணுமூர்த்தி விண்ணப்பிக்க அதற்கிறைவர் விஷ்ணுவே நீகருதியதுபோலல்ல, சாலிமேலேறியமுள்ளையு முள்ளினாற் களைவர். இருப்புக்கோலைக் கொல்லர் இருப்பினாலறுப்பார். அவைபோலவினைகளும் வினைகளையறுக்கும் அவ்வினைகளும் அனேகவிதமாக இச்சிக்கும்வினையென்றும் இச்சியாவினை என்றும இருவகைப்படும். இவ்விருவகைவினைகளையும் விரும்பினால் வினைகள் வினைகளைப் போக்கும். நீரில் அழுக்குக்கூடிற் சேற்றைக்கழுவாது. அதுபோல இச்சைசேர்ந்தவினைகளும் வினைகளைப்போக்கா. அழுக்கில்லாதநீர் சேற்றைக் கழுவுதல்போல ஆசையில்லாதவினைகளும் வினைகளைமாற்றும். பயனைநாடிய கன்மங்கள் செய்தனவெல்லாமபலிக்கும். பயனைநாடாதகன்மங்கள் அனேகஞ்செய்யினும் ஒன்றுதான்பலிக்கும் பயனையிச்சியாதகன்மம் பயனையிச்சித்த கன்மங்களைக்கெடுத்துச் சித்தத்தைச்சுத்திசெய்து தானுங்கெடும். அன்பினாலே எம்மைத்தியானித்தல் புகழ்தல் பூசித்தல்செய்தால் அவைகளும் முத்தியைத்தரும். எந்தக்காலத்திலும் காசிமுதலிய விசேடதலங்களும் கங்கைமுதலிய விசேடநதிகளும் திருக்கயிலாய முதலியமலைகளும் மந்திரங்களும் முத்தியைக்கொடுக்கும் என்றருளிச்செய்தலும், பின்னும் விஷ்ணுவா

னவர் எம்பெருமானே! காசியின்மரித்தலும் கனகசபையைக்காணு தலும்திருவாரூரிற்பிறத்தலும் திருவைந்தெழுத்தைவிதிப்படிசெபித் தலும் அன்போடு அரியதீர்த்தங்களில் ஆடுதலும் எளிதல்லவே அரி தாகையால்எளிதாகப்பாசமற்று முத்தியையடையுமார்க்கத்தை அ னுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கப்பரமசிவன்சொல்வா ராயினர்.

திருமாலே! உபநிடதங்களிலே சொல்வதாகிய ஒருதலமுண்டு அதை யாவர்க்குஞ் சொல்லேம்; விரும்புதல்கண்டு உனக்குச்சொல் கின்றோம். அது நாதாந்தத்தொளியாகி நம்வடிவமாகி ஞானமயமா கும். அங்கே சனனம் நீங்கலாம். அத்தலம் நமது சூலக்குடுமியி லிருக்கும். அதன்பெயர் திருவெண்காடு, மறந்தேனுந் திருவெண் காடென்று சொல்வோரும், நினைப்போரும் அங்கே வழிவசத்தால் நடப்போரும் மரிப்போரும் பிறப்போரும் வசிப்போரும் யாவ ராலும் அவர்களுக்கும், பறந்துவருகின்ற காகங்களுக்கும், அத னைச்சூழப்படர்ந்திருக்குந் தாவரமாகிய கொடிகளுக்கும் முத்தி யையளிப்பதும், பூமிதேவியின் கையிலுள்ளகண்ணாடி போல்வதும், கிருமிகளும் மரிக்குங்காலத்து வலச்செவி மேலாகவிளங்கி நமதுப தேசத்தைக் கேட்கப்பெறும் பெருமைவாய்ந்ததும், பிரமமயான மானதும், நம்முடைய திருமுகமண்டலமானதும், சோமசூரியாக் கினியென்னு மூன்றுகண்களும் முத்திருத்தீர்த்தமாய் விளங்குவதும், கற்பங்களிலெல்லாம் அழிவடையாததும், அக்கினியாலுங் காற்றா லும் சிதையாததும் ஆகியென்றும் விளங்குவது அத்திருவெண் காடாம்.

அத்தலத்தின் கண்ணே நாம் உமையோடும் இனிதாக வீற்றி ருப்போம். அதனாலிக்கயிலாய மலையிடத்தும் சற்றுவிருப்பம் நீங் கினேம். அன்றியும் சிற்கனமாயும் ஏகமாயும் பலவாயும் நாமே திருவவதாரஞ்செய்யுந் தலமும் அத்திருவெண்காடேயாம் என்று சொல்லியருளி அத்தலத்தின் அற்புதங்களை நினைந்து ஆனந்தநி ருத்தஞ்செய்தருளினர். விஷ்ணுமூர்த்தியானவர் அந்நிருத்தானந்த க்கடலிலே யனேககாலமூழ்கியிருந்து பின்பரவசநீங்கியன்போடும் ஆன்மநாயகராகிய சிவபெருமானைத்தொழுது சுவாமி அத்திருவெ ண்காடு எத்திக்கில் உள்ளது? அதற்கு எல்லையாது? வழியாது அங் கேசித்திபெற்றவரார்? ஒடையாது? தீர்த்தங்கள்யாவை வினைதீர்ந்த

வர்கள் யாவர்? உமாதேவியாரோடும் நீர் நிருத்தஞ்செய்வதற்குக் காரணம்யாது? சிவலிங்கமூர்த்திகள் இருக்குந்தானங்கள் யாவை? முத்தியை எளிதாக அங்கே தரும்வழியென்னை? இவற்றைச்சொல்லி யருளவேண்டு மென்று பிரார்த்திக்கச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருள்வாராயினர்.

கேசவா! அத்திருவெண்காடானது சிதம்பரத்துக்குத் தென்கிழக்கில் இரண்டுயோசனை தூரத்தில் உள்ளதாயும், திருவாரூர்க்கு வடகிழக்கில் மூன்றுயோசனை தூரத்தில் உள்ளதாயும், கும்பகோணத்திற்குக்கிழக்கேநான்குயோசனை தூரத்தில் உள்ளதாயும், கீழ்சமுத்திற்குமேற்கே ஒருயோசனை தூரத்தில் உள்ளதாயும், உபயகாவிரியின் மத்தியில் விளங்குவதாயும், காலாஞ்சரம் வில்வவனம் மகாவரங்கம் முத்திவாயில் வெண்காடு சிதம்பரம் என்று அறுவகையாக நிலைபெற்றதாயும் விளங்குவதாம். காவிரியாற்றின் தென்கரைக்கு வடக்காயும் மண்ணியாற்றின் வடகரைக்குத்தெற்காயும் திருச்சாய்க்காட்டிற்குமேற்காயும் திருநாங்கூருக்குக்கிழக்காயும் இவற்றின் நடுவில் விளங்குவது காலாஞ்சரமாகும். திருக்கடவூர்க்கு வடக்காயும் சீகாழிக்குத்தெற்காயும் சமுத்திரத்திற்கு மேற்காயும் புள்ளிருக்குவேளூர்க்குக் கிழக்காயும் நடுவில் விளங்குவது வில்வவனமாகும். சப்தரிஷிகளாலியற்றிய ஏழுதடாகங்களின் மத்தியில் விளங்குவது மகாவரங்கமாகும். உபயகாவிரியின் வடகரை தென்கரைகளுக்கு நடுவாய்த் திருநாங்கூருக்குக் கிழக்காய் முனிவாசத்துக்கு மேற்காய் விளங்குவது முத்திவாயிலாகும். தலைச்சங்காட்டுக்கு வடக்காயும் திருநகரிக்குத் தெற்காயும் சமுத்திரத்துக்கு மேற்காயும்திருக்கடைமுடீச்சுரத்துக்குக் கிழக்காயும் விளங்குவது வெண்காடாகும். அங்கேநாம் எழுந்தருளியிருக்குந் திருக்கோயில் சிதம்பரமாகும். இவ்விதமாக ஆறுவகையாய் விளங்குந்திருவெண்காட்டுக்கு ஒப்பாக ஒருதலமும் இல்லை, முக்காலுஞ்சொன்னோம். சிதம்பரம் தெரிசிக்கவும், திருவண்ணாமலை நினைக்கவும் திருவாரூர் பிறக்கவும், காசி மரிக்கவுங் கொடுக்கும்பலன்களை இத்தலம் ஒருக்காலே கண்டபோதில் உதவும். வேதத்திலே புகழப்பட்ட தலங்களெல்லாம் திருவெண்காட்டிற்குப் பதினாறிலொருபங்கேனும் ஒவ்வமாட்டா. விராட்புருடனுடையஇருதயத்தலம் ஆங்காரமென்றும் ஓங்காரமென்றும்இரண்டாம்அவைகளுள்ளேஒன்று சிவானந்தசபையதாகும். அதன்கணுள்ள ஆனந்தக்கமலமலரிலேநாம் நிருத்தஞ்செய்வோம்பெருந்

தவத்தினர்கள் நமதருளால் அந்தநடனத்தைத்தெரிசிப்பார்கள். மற்றையதாகிய ஓங்காரமானது சாத்துவிதம் இராசதம் தாமதம் என மூன்றுவகைத்தாய்த் தோன்றும். அவைகளுள்ளே சாத்துவிதம் சுவேதவனம் அதற்கு மலர் வெண்டாமரைமலராகும். இராசதம் செங்காடு-அதற்குமலர் செந்தாமரை மலராகும். தாமதம் இராமநந்தீச்சரம், அதற்கு மலர்கரிய தாமரைமலராகும். ஆராயுமிடத்து இம்மூவகையாய் விளங்குகினும் சிறந்தபெயர் திருவெண்காடாகும்.

அங்கேஒப்பற்ற இலிங்கமூர்த்தியாகியும், நடேசனாகியும், அகோரனாகியும் உறைவோம், பெரியஉலகமுடிவிலும் அங்கே சங்காரதாண்டவத்தைச் செய்தோம். தாரணியைப்படைக்குங்காலத்து உமையவள் அத்தலத்தில் வந்து தவஞ்செய்தாள். யாம உமையவளே உனக்குவேண்டும் வரத்தைக்கேள் தருவோமென்ன உமையவள் பஞ்சபூதங்களெல்லாம் முடியுமிடத்துஞ் சங்கார நடனத்தை இத்தலத்திலே செய்தீரல்லவா? இப்போதும் உலகமெல்லாம் உய்யும்படிக்கு நடனஞ்செய்வீரென்று வேண்ட அதனால் உலகம் உய்ய அத்தலத்திலே ஞானநிருத்தத்தைச் செய்தோம், அந்நாண்முதல் நவநிருத்தகணமென்றும் பேரரங்கமென்றும் பெயர்படைத்தது, இன்றுமுதற்சங்காரகாலமளவும் அகலாது நாம்நிருத்தஞ்செய்தலால் அவிமுத்தமென்னும் பெயரும் படைத்தது. அங்கே செய்யுந்தருமம் ஒன்றுகோடியாய் விருத்தியாதலினால் அத்தலம் தருமகோடியென்னும்பெயரும் பெற்றது. நாம் திருவெண்காட்டை அனாதியிலேயே மனத்தாற்சிருட்டித்து அங்கே மிகமகிழ்ச்சியாயுறைவோம். சனகாதி இருடியரும் சனகாதியோகியரும் தவஞ்செய்துறைதலால் சித்திரகரென்னும்பெயரும் பொருந்தித் திருக்கோயிலினுள்ளே முக்குளங்களும் புறம்பேசப்ததடாகங்களும் விளங்கும். அத்திருவெண்காட்டிலே கிருதயுகத்திற் பிரமனும், திரேதாயுகத்தில் சந்திரனுஞ் சூரியனும், துவாபரயுகத்தில் இந்திரனும் அக்கினியும், கலியுகத்தில் கணபதியும் மூநகரும், முன்யுகங்களிலே சுவேதனும் வியாக்கிரபாதமுனியும் பூசித்து வேண்டியவரங்களைப் பெற்றார்கள் என்று சிவபெருமான் சொல்லியருளுதலும், விஷ்ணுமூர்த்திகேட்டுச் சிவபெருமானை வணங்கித் துதித்து எமபெருமானே திருவெண்காட்டில்நீர் செய்தருளும் திருநிருத்தத்தைத்தமியேனுஞ் சேவிக்குமாறு திருவருள் புரியவேண்டுமென்ன, சிவபெருமான் திருவுளமகிழ்ந்து மாதவனே மதங்காச்சிரமத்திற்சென்று நீ தவஞ்செய்து பின்பு

நடனதரிசனஞ் செய்வாயாக என்று சொல்லியருளினார். விஷ்ணு அத்திருவாக்கின்படி மதங்கதலத்தடைந்து பதினாயிரவருஷந்தவஞ் செய்து அத்தவபலத்தாற் றிருவெண்காட்டையடைந்து திருநிருத்த தரிசனஞ்செய்து தம்முலகடைந்து, இலக்குமிக்கும் ஆதிசேடனுக்கும் திருவெண்காட்டின் மான்மியத்தைச்சொல்ல, உடனே இலக்குமியும் ஆதிசேடனும் நிருத்ததரிசனத்தின்மீது பேராசையுடையராய்த் திருவெண்காட்டைச்சேர்ந்து திருநடனத்தைத் தெரிசித்துக் களிப்படைந்தார்கள்.

சுவேதவனச்சருக்கம்

முற்றிற்று.

---

# திருநகரச்சருக்கம்

மன்றல்சேர்பொதியில்வாழ்வோன்வசுவினுக்கிதனைச்சொன்
றூன்றியகருணைமாயோன்சுவேதகேதுவுக்குச்சொன் [ன்
னொன்றிரண்டொருமூன்றாகிவடசொல்லோர்சருக்கமாகப்
பொன்றரும்புராணமெல்லாமுரைக்குமிப்புகழைத்தானே. (க)

அந்தணீரெனவேயிவ்வாறருளினாரந்தணாளர்
புந்திசேர்களிப்பாற்சூதபுராணிகமுனியைவாழ்த்தி
மந்தமாருதஞ்சேர்வெற்பிலகத்தியன்வசுவென்பாற்குத்
தந்தமாகதையைக்கூறுமெனச்சொலத்தவத்தோன்கூறும். (உ)

மகரசாகரங்களேழும்வளந்தருமுலகேழுஞ்
சிகரசேகரவெற்பேழும்பிறவுமேற்பரித்தசேடன்
நிகரிலாவிளப்புநீங்கவுசுவெனுநிருபன்மண்மேற்
றிகிரிநேருருட்டிமுன்னேபுரந்தனன்செங்கோலோச்சி. (ங)

ஆற்றல்சேர்கனகநாகமரணமாநாகமாக
மேற்றிகழ்சருமம்போலேவிளங்குமவ்வேந்தன்சீர்த்தி
கூற்றைநேரவன்கைவாளேகுடிக்குமொன்னலர்புண்ணீரை
மாற்றலர்மடவார்கண்வாள்சொரிந்திடுமலர்கணீரை. (ச)

வையமிப்படியேயாண்டுவசுவெனுமரசனமைந்தற்
குய்யுமாயகுடஞ்சூட்டியுறுதியாந்தவத்தைநாடிச்
செய்யுமாறெழுந்துவீடுதருந்தலந்தேடித்தேடிச்
சையமால்வரையைச்சேர்ந்தகாவிரிமருங்கிற்சார்ந்தான். (௫)

அற்புதத்திருவெண்காட்டையடைந்திடும்பொழுதுகண்ணு
மற்புயவரையுமார்புந்துடித்தனவலமதாகப்
பற்பலநலமும்வீடும்பலிக்குமித்தலமென்றெண்ணிச்
சிற்பரமுணர்ந்தயோகமுனிவராச்சிரமஞ்சேர்ந்தான். (௬)

சாமிகாமகுடஞ்சொல்வார்கனவுட்கரத்தைக்கேட்பார்
மாமறைவிரித்துச்சொல்வார்மருவறுபுராணங்கேட்பார்
ஓமதூமத்தாற்கண்ணீருகுத்திடுவார்களாகு
மோமவற்புதங்கண்டிப்பாலெய்தினனிளஞ்சோலைக்குள். (௭)

வேறு.

தங்குமாவனமேற்றலைகீழுறத்
துங்கமாதுளையின்கனிதூங்குதல்
மங்கைமார்முலைபோலவனப்புறச்
செங்குடந்தவஞ்செய்வனபோலுமே. (௮)

நாளிகேளநெருங்கியநாப்பணே
பாளையூடெழுபச்சிளநீரினம்
வாளிபோல்விழிமங்கையர்முத்தணி
தோளிலேறுதுணைமுலைபோன்றவே. (௯)

மாண்டசெங்கனிவாழைவளர்ந்தன
கூண்டுமெள்ளரிப்பூமியைக்கொத்தியே
கீண்டதெங்கள்பொருட்டெனக்கேதபாய்
நீண்டகையுறைநீட்டுதல்போலுமே. (௰)

வேறு.

கதிர்ச்சுமைகனத்தசாலிகழுத்துறவளைத்தனீரின்
முதிர்ச்சியாயினமோவென்றுபார்த்திடுமுறைமைபோலு
மெதிர்த்தசெங்கழுநீர்ப்போதிலிறைஞ்சிமோந்தசையுஞ்செந்தேன்
மதுக்களைநுகர்ந்துதாமுஞ்சுழன்றிடும்வளமைபோலும். (௰௧)

பயிரடர்பழனந்தோறுஞ்செறிபுனற்பரப்பினூடுங்
கயிரவநடுவிற்காலாலசையுமுட்கமலராசி
யயிர்கொழித்துலவும்பொன்னியாற்றுநீர்க்குளிர்ச்சியாலே
மயிர்களும்பொடித்துமெய்யுநடுங்கிடும்வளமைகாட்டும். (௰௨)

வேறு.

காருறுநெய்தலுங்கரியகாவியும்
பாருறுவாவியிற்[illegible]த்திபாய்ந்தன
சேர்வுறுமதுகரந்தீண்டிஞெமென
நீரிடைமூழ்கியநீர்மைபோலுமே. (௰௩)

கண்ணிறைந்தரும்பவிழ்கமலப்போதினை
வண்ணமெல்லிசைபயில்வண்டுசூழ்த
லெண்ணுறுதிருமகளிருக்குமில்லெனப்
பண்ணுறுகின்னரர்பாரிபோலுமே. (௰௪)

முட்டிகழ்தாமரைமுகஞ்சுருக்கியே
கட்டியமுகையினிலிருக்குங்காரளி
வட்டவெண்மதியதன்மணங்கொளாததி
னிட்டமுத்திரையெனவிரவிற்றோன்றுமே. (௰௫)

தெளிந்தநீர்வயலடர்செந்நெலிற்களை
களைந்தெறிகாவிகள்கரும்பிற்சேர்ந்திடு
முளங்கவர்மாரவேளுலகினைப்பொர
வளைந்தவிற்செறிமலர்வாளிபோலவே. (௰௬)

பூணுலாவியவனப்புட்களியானையுங்
காணவேயாம்பலிற்கடிதிற்புக்கன
சேணிலாமுகத்தியர்செலவிற்றோற்றிடு
நாணினுற்றுழலிடைநடத்தல்போலுமே. (௰௭)

வேறு.

பூகமுற்றியபழமுதிர்பொதும்பரிற்புகுந்து
மாகடற்கயல்செறிவயலகன்றபின்மன்னன்
சாகரத்துடனுபயகாவிரியுறத்தழுவி
யாகமத்திசைமணத்தவெண்காட்டைவந்தடைந்தான். (௰௮)

விட்டுமேவிடித்தலத்தையென்றியமனைவிலக்கி
யிட்டகோடெனவளைந்துமாமணிமதிலிலங்கும்
வட்டவார்கடலெனவதிலகழியையதித்துக்
கிட்டிநீருணும்புயலெனக்களிற்றினங்கெழுமும் (௧௯)

அகழிசூழ்மதில்வானநாடடைந்திடவகழி
புகரிலாப்பெரும்பாதலம்புகுதுவான்போந்து
ககனகேதுவுமனந்தனுங்குறுகிடக்கண்டு
சகுனமன்றெனவிடையிலேநின்றபோற்றயங்கும். (௨௰)

உத்தமத்தடத்தம்புயமலரையோதிமங்கள்
கொத்திழுக்கினுற்கொண்டுவான்கங்கையிற்குளிப்பப்
புத்தலர்ச்செறிநாளம்வானளவெலாம்போயு
மத்தடத்திலுங்கிழங்குமேற்புறப்படாதமையும். (௨௧)

வாய்த்தமுக்குளங்கோயிலுட்டிகழ்ந்திடமதிலைப்
போர்த்தநீரகழ்புறம்பெலாம்வளைந்திடும்பொலிவு
தாத்திரிக்கெலாந்தருமமாகியதருதழைப்பப்
பாத்திகட்டிநீர்நிறைத்திடும்பரிசினைப்பண்ணும். (௨௨)

வச்சிரத்தினலடுக்கிய கனகவான்மதிலி
னுச்சியிற்செறிவிளக்கின்மேன்முழுமதியுலாவ
வச்சுடர்த்தலையெழுதருபுகையினலடைந்த
கச்சளத்தினைக்களங்கெனப்பகருவர்கலையோர். (௨௩)

வேறு.

மந்தரநிகர்புயமன்னர்வீதியிற்
சந்தனமுறிகளாற்சமைத்ததோரணங்
கந்தடர்களிற்றினைக்கரியமேகமென்
றிந்திரதனுவளைத்திருத்தல்போலுமே. (௨௪)

உவாமதிமுகத்தியருலாவும்வாயிலிற்
குவாலெனவரம்பையின்குலத்தைக்கட்டுதல்
கவானெழிறிருடியகள்வராமெனத்
தவாதுறப்பிணித்திடுந்தகைமைபோலுமே. (௨௫)

மோகனக்குளிகைநேர்முறுவல்வெண்மையும்
பாகமுதொழுகியபவளச்செம்மையு
மாகயற்கருமையும்வானவில்லிடத்
தோகையர்முலைநிகர்சூதமாடுவார். (உசு)

அண்டருமரகதவரமியத்துறை
யொண்டொடியவர்கரத்துலவுநன்கழன்
முண்டகவாவியின்முறுவற்போதிடை
வண்டினம்விழுநதெழும்வளைகாட்டுமே. (உஎ)

தப்பிலாவேற்கணார்தமதுமங்கையர்க்
கொப்பனைப்பஞ்சுதாளொன்றிலூட்டுவா
ரப்பதத்தழகைமற்றொன்றுங்காட்டலா
லெப்பதமெழுதினேமென்றுநாணுவார். (உஅ)

ஒப்பனைநாடுதற்கொளிக்கண்ணாடியை
மைப்படாத்துறையினுமாதர்வாங்குவார்
துப்புறுகலையெலாஞ்சோதனைப்படு
மப்பொழுதிலங்கியவாவிபோலுமே. (உகூ)

கூந்தலையவிழ்த்தலாற்கொங்கைசேர்தலாற்
சாந்தினையுதிர்த்தலாற்றரளஞ்சிந்தலாற்
பூந்துகினெகிழ்த்தலாற்புடைத்தலாலவர்
காந்தரைநிகர்த்தனகந்துகங்களே. (ங0)

விரிந்தசந்திரச்சிலையிடைந்தமாளிகை
பொருந்தியநிலவினூற்புனலிறைத்திடல்
வருந்துவர்பிரிந்தவர்மதியினுமெலனக்
கரைந்துளமுருகியேகலுழ்தல்போலுமே. (ஙக)

அளிக்குழன்மடந்தையாகங்கைமேவிய
கிளிக்குலந்தமதொழில்கிளர்ந்துதோன்றிய
பளிக்கறைநிழலினைப்பஞ்சரத்திடை
யொளித்திடும்பேடையென்றோடிமீளுமே. (ஙஉ)

விருப்புடைமடந்தையர்விளங்குகொங்கையிற்
பொருப்பெனுந்தோளினார்புழுகைவீசுதல்
கருப்புவில்லெடுப்பவன்காடச்சிந்துர
மருப்பிடைவழிந்திடுமதங்கள்போலுமே. (ஙங)

தாமரைக்கிருட்டுவான்சசிக்குநண்பக
லாமலர்முகத்தியரளகப்பந்தியின்
மாமதுகரத்தொலிவளையின்பேரொலி
காமருசிலம்பொலிகடலின்மிக்கதே. (௩௪)

கோதையரிப்படிகுலவும்வீதியும்
வேதியர்வீதியும்வேந்தர்வீதியு
மாதிபவணிகர்வேளாளர்வீதியுங்
காதலின்மிகுதியாற்கண்டுபோந்தனன். (௩௫)

வேறு.

முக்குளத்திலேமூழ்கினனியமங்கண்முடித்தா
னெய்க்குளத்துடனேதனபாதனநேர்ந்தான்
மெய்க்குளத்தினில்விழியனையிமலனைவணங்கிப்
புக்குளத்திலன்பொடுதிருக்கோயிலுட்புகுந்தான். (௩௬)

கள்ளலம்புசெண்பகவனஞ்சிறந்தவெண்காட்டி
னுள்ளிருந்தசெந்தேனைநேத்திரங்களாலுண்டு
வள்ளையங்குழைப்பெரியநாயகியையும்வணங்கி
வெள்ளையம்பலநடத்தையுந்தொழுதிறைமீண்டான். (௩௭)

அந்தவூரிலற்புதமெலாம்பார்த்தகமலர்ந்தான்
பந்தபாசமற்றவரிலக்குடியெலாம்பார்த்தான்
மந்தமாருதமூரல்செய்பசுந்தமிழ்வளர்ந்த
சந்தசைலமுனிவராச்சிரமமேசார்ந்தான். (௩௮)

படரொலிக்குவெய்யிலைமறைத்திடுமராப்படத்தால்
விட்டவராக்களுக்கணிமயில்சிறைகளால்வீசுங்
கடகளிற்றினங்கரத்திலேயெழுந்தசீகரத்தா
லடலரிக்கிளைப்பாற்றிடுமகத்தியாச்சிரமம். (௩௯)

செந்தமிழ்க்குறுமுனியுடன்பலகதையாற்செருக்கி
விந்தவெற்புமுன்பழிந்தகொல்லுறுதுதனைவெறுத்துத்
தந்தலத்தைவிட்டமரபடிதொழுதுதனித்தனியே
வந்தவெற்பினைநிகரெனப்பொலிந்தனமாயா. (௪௰)

பாந்தளந்தொடையணிந்தவனிருபதம்பரிக்க
வாய்ந்தநம்மையாமெனநிறைசடைமுடிவயங்க
வேய்ந்தவாழியிவ்வுதரத்திலிருக்குமோவென்று
சேர்ந்திடுந்திரிபதகைபோற்புரிமுநூறிகழ. (சக)

பூரணத்திருநீற்றினுத்தூளனம்பொலிந்து
நாரதப்பெயர்முனிவனுமெலும்படிநயக்க
மூரன்முற்றியமுகத்தொடன்வில்லமாமுதற்கீழ்க்
காரணத்துடனுறைகுறுமுனிவனைக்கண்டான். (சஉ)

வித்தகக்குறுமுனியிணையடியினில்வீழ்ந்தா
னத்தன்மன்னனுங்காசியோடாதனமளித்தா
னித்தலத்தியறடத்தியலுரைத்தருளென்றான்
முத்தமிழ்க்கடல்வரவுடனவையெலாமொழிவான். (சங)

தலங்களுக்கெலாமரசெனப்படுவதித்தலமே
யிலங்குதெய்வநாயகமெனவுரைப்பதிவ்விலிங்கங்
குலங்கொளமர்த்தநாயகமெனப்படுவமுக்குளமே
யலங்கன்மார்பனேயிம்மகாரளவைகொண்டறிவார். (சச)

சந்ததங்களுமெழுவகைப்பிறப்பினுஞ்சார்ந்து
நொந்துநொந்திருவினைதரும்பயனெலாநுகர்ந்து
வந்துலைந்திடுமுயிர்களுக்கருங்கதிவழங்க
வந்திமேனியானருளினுலித்தலமமைத்தான். (சரு)

வண்ணவார்கடற்குணதிசையடைந்திடவளைந்து
நண்ணுகாவிரியிருமருங்கினும்வரநடுவே
புண்ணியங்களைத்திரட்டியேயனைவருங்காப்
பண்ணினுரதிற்கொடுவினையுருவகைபரிந்து. (சசா)

இத்தலத்துடன்றனும்வேற்றுமையறவிருந்து
முத்திக்குறையாயிடுதலைப்புரிந்தனன்முதல்வன்
சத்யலோகவாசிகளுமித்தலத்தில்வந்திறந்தா
ளித்தமாகலாமெனச்சொலிமனத்தினினினைப்பார். (சஎ)

இணையிலாதமால்பதத்தினிலிருப்பவரிதனின்
மணவிலாகியபடுக்கையேநலமெனமகிழ்வார்
தணிவிலிந்திரபுரியினிலிருக்குமாதவருந்
துணையதாமிதிற்கிருமியாய்ப்பிறந்திடத்துணிவார். (சஅ)

யாகநூறுசெய்பலத்திறற்கிடைக்குமின்னமுதி
ஞேகையாமிதிற்சிறுகுழியினிற்சருகூற
லாகமாருமிப்பிறவிநோய்க்கிதுமருந்தாகும்
போகமேயலாற்பிறவிநோயமுதிறற்போகா. (சகூ)

சொர்க்கமங்கையர்கொங்கையிற்குங்குமத்துகளிற்
கற்பகப்புதுமாலையினெழுந்துகட்கணத்தி
னற்பதிக்கெலாந்தலைமையாமிதிலொருநாயின்
புற்பதத்தினிற்புறப்படுஞ்சிறுதுகள்புனிதம். (ருப)

வேறு.

சிற்றிடையரம்பையர்செருக்குஞ்செவ்வியைப்
பெற்றிடுமதிலிதிற்பிச்சையுணல
மற்றொருதலத்திடைமகஞ்செய்வாரினு
நற்றவமுடையதிந்நகரிற்றேரையே. (ருக)

புண்ணியபலத்திறற்புடவியாள்வதி
னண்ணியித்தலத்தில்வானரங்களாவதே
யெண்ணமிப்பதியிலேயிறந்தபேர்க்கெலாம்
விண்ணவர்க்கரசராய்விளங்கலாகுமே. (ருஉ)

மெய்த்தவந்தருந்தலமிகவுண்டாயினுஞ்
சத்தியமிதற்கிணைசாற்றலாகுமோ
நித்திலம்விலையிலாநேர்த்தியாயினு
முத்தமவராமணிக்குவமையல்லவே. (ருங)

வேறு.

முனிவர்தேவரிற்றலைவராமுப்பதின்மூவர்
வினைசெய்காலனுக்கஞ்சிவெண்காட்டினின்மேவித்
துனிகொல்பொன்னியிற்படிந்துமுக்குளத்தினிற்றோய்ந்து
புனையும்வல்லியையமலனைநடத்தினைப்போற்றி. (ருச)

திரமதாகவேபெருந்தவம்புரிந்தனர்சிலநாட்
பரமனுடகச்சிலையினைமுவிலாய்பதவி
வரமதானதுநல்கியேமறைந்தனன்றேவர்
புரமதாமெனுந்திருப்பெயர்படைத்ததிப்புரமே. (ருரு)

வேறு.

அந்தவசுவிருநாலுபேருமொன்றாய்வந்தமெதன்னவயிலேோனென்ன
வந்தவசுமன்னவனே தருமதேவதையைபூரியாவரத்தைவேண்டி
யிந்தவசுமதியிலடைந்தித்தலத்தின்முக்குளநீரினிதிறடித்
தந்தவசுக்கொத்ததலத்திருந்தாமுடித்ததுகோடிதவங்கடானே. ()

மன்மதனையெரித்தபிரான்றருமதேவதைக்கெதிரேவந்துதோன்றி
நின்மனதின்படியழியாவரமளித்தோம்வாகனமாநிலையுமீந்தோஞ்
சின்மயமாய்நாற்பதத்தோடெந்நாளுநீயிருக்குஞ்சிறப்பினாலே
தன்மபுரம்புண்ணியநற்கோடியெனப்பெறுகவிந்தத்தலத்தின்பேரே

வீறுமிந்தத்தலத்திலொன்றுகோடிபலமுதவும்வெள்ளைவிடையா
கென்று, னீறுபுனைந்தவனுரைத்தபடிவிடையாத்தாங்கியதுநெடியோ
ன்வேதன், றேறுமிமையவர்களம்பொன்மலர்மாரிவிழிமாரிசிந்தினார்
க, ளேறெனவேதருமம்வந்தாற்பசுபதியாரேறுமலிருந்திடாரே. ()

கலித்துயருமொழிந்துதன்பதேவதையார் நிலைபெறுதல்கண்டு,
வேதனு, சலிப்பறவித்தலத்தடைந்துமுக்குளத்தின்மூழ்கியிறைசரண
ம்போற்றி, யொலித்தனவாண்டெதிர்தோன்றிநான்மறைகாளஞ்சல
ஞ்சலுரகராசன், புலிச்சரணனெனநமதுதிருநடம்பார்த்தனுதினமு
ம்புகழ்வீரென்றான். (நிசு)

வள்ளலிவைமொழிந்ததற்பின்மறைசல்லரிதாளமதங்கம்வீணை
யெள்ளரியகுடமுழவஞ்சிறுதுடிநூபுரத்திலடைந்திசையுண்டாக்கி
வெள்ளைவனப்பொதுநடங்கண்டானந்தம்படைத்தவந்தவேதமேதந்
தள்ளுகையாலித்தலமும்வேதவெண்காடெனுநாமந்தரித்ததன்றே.

முத்திநகர்தமோநாசபுரம்பாபநாசபுரமுருகன்பூண்டி,சித்திநகர்
பாதாளகயிலாயஞானவனஞ்சிவானந்தக்கா, டொத்தகணபதிநகர
மாதிசிதம்பரந்திருவூருமையூர்மாலூர், மெய்த்தலநாயகம்பெரியமயா
னமெனும்பேருடனும்விளங்கிற்றன்றே. (சுக)

இத்தலத்தின்பேரிலொன்றையுரைத்தவர்க்கியாகபலமெல்லாமெ
ய்துஞ், சத்தியஞ்சத்தியமெனவேமுனிவனுரைத்தானவன்பொற்சர
ணம்போற்றி, யுத்தமனும்வசுவரசன்முக்குளத்தின்சிறப்பைவிரித்து
ரைப்பாயென்றான், மெய்த்தமிழுஞ்சந்தனமுந்தென்றலுஞ்சூழ்மலய
முனிவிளம்பலானான். (சுஉ)

திருநகரச்சருக்கம்-முற்றிற்று.

ஆகச்சருக்கம் உ-க்குச்செய்யுள் - கஙo.

## வசனம்.

—*—

இவ்வகையாகச் சூதபுராணிகர் சொல்லுதலும் நைமிசாரணியமுனிவர்கள் அவரைவாழ்த்திசுவாமி, அகத்தியமுனிவர் வசுமகாராசனுக்குச் சொல்லியகதைகளைச் சொல்லியருள வேண்டுமென்று கேட்கச் சூதமாமுனிவர் சொல்வாராயினர். முனிவிர்காள்! திகிரியுருட்டி உலகமுழுதாண்ட வசுமகாராஜன் தன்புத்திரனுக்கு மகுடஞ்சூட்டித், தான் உறுதிபயப்பனவாகிய தவங்களைச் செய்யுமாறுபுறப்பட்டு, போகமோக்ஷத்தைத் தருந்தலத்தைத் தேடிக்கொண்டு, காவிரிநதிக்கரைமார்க்கமாய் வந்து திருவெண்காட்டைச் சமீபித்தவுடன் தன்வலக்கண்ணும் மெய்யுமும் [illegible] மார்புந் துடிக்கக்கண்டு, பற்பல நன்மைகளையும் முத்தியையும் இத்தலந்தருமென்றெண்ணி, யோகமுனிவர்களுடைய ஆச்சிரமத்தையடைந்து, காமிகம் மகுடமுதலிய சிவாகமங்கள் ஓதுவோரையும் பவுட்கராகமம் கேட்போரையும் வேதத்தை விரித்துச்சொல்வோரையும் குற்றமற்ற புராணங்களைக்கேட்போரையும் ஒப்புகையினாற் கண்ணீர்சொரிவோரையுந் தெரிசித்துவணங்கிக்கொண்டு, சோலைவளங்களையும் வயல்வளங்களையும் திருவீதிச்சிறப்புக்களையும் பார்த்துமகிழ்ந்து முக்குளத்தின் மூழ்கி நியமங்களைமுடித்துநெய்நிறைந்தகுளான்னமும்பொன்னும்மறையோர்க்குத் தானஞ்செய்து திருக்கோயிலினுட்புகுந்து பெரியவாரணப்பிள்ளையாரையும் சண்முகக்கடவுளையும் சுவேதவனப்பெருமானையும் பெரியநாயகியாரையும்நடேச பெருமானையும் அகோரமூர்த்தியையுந்தெரிசித்துவணங்கிப் பேரானந்தமுற்றுத்திரும்பி, பலஅற்புதங்களையும்முனிவர்களுடைய பர்ணசாலைகளையும் பார்த்துமகிழ்ந்து அகத்தியமுனிவர் எழுந்தருளி இருக்கும் ஆச்சிரமத்தையடைந்து, அகத்தியமுனிவரைவணங்கித்துதித்து, சுவாமி அடியேனுக்குத் திருவெண்காட்டின் மகிமையையும் தீர்த்தமகிமையையும் மூர்த்திமகிமையையும் உரைத்தருளும் என்று பிரார்த்திக்க, முத்தமிழ்க்கடலாகிய அகத்தியமுனிவர் அவைகளையெல்லாம் வசுமகாராசனுக்குச் சொல்லியருள்வாராயினர்-மாலையணிந்த மார்பினையுடைய வசுமகாராசனே இத்திருவெண்காடு தலங்களுக்கெல்லாம் அரசென்று சொல்லப்படுவதாகும். இங்கெழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் தெய்வங்களுக்கெல்லாம் நாயகமாகும். முக்குளம் நன்மைபெற்ற தீர்த்தங்களுக்கெல்லாம் நாயகமாகும். இம்

மகிமைகளையெல்லாம் அளவைகொண்டறிய வல்லவர்யாவர்? எக்காலத்திினும் எழுவகைப்பிறப்பினுஞ் சேர்ந்து நொந்து நொந்து இருவினைகள் தரும்பலன்களை யெல்லாம்புசித்து உலைந்திடுகின்ற ஆன்மாக்களுக்கு அரிதாகிய மோக்ஷத்தைத் தரும்பொருட்டுச் செவ்வானம் போலுந் திருமேனியையுடைய சிவபெருமான் றிருவருளினாலே இத்தலத்தையமைத்தார் - இத்தலத்திலே பாவம்புகுதாதபடிப் புனலூராகக் கீழ்த் திசையிலே கடல்பொருந்தவும், காவேரி நதிவளைந்து இருமருங்கினும் வரவுஞ்செய்து நடுவேபுண்ணியங்களைத் திரட்டிச் சிவபெருமான் வைத்தருளினார். முதல்வராகிய நம்மிறைவர் இத்தலமுந்தாமும் அபேதமாயிருந்து முத்தியைக்கொள்ளை கொள்ளும்படி செய்தருளினார் - பிரமலோகவாசிகளும் இத்திருவெண்காட்டில் வந்துமரித்தால் அழிவிலாப்பதம்பெறலா மென்றெண்ணுவார். நாராயணனுலகத்தை யடைந்து சேஷசயனத்திலே சயனிப்போரும் இத்தலத்தின் மணலிற்சயனிப்பதே நலமென்று மகிழ்வார். இந்திரபதம் பெற்றிருப்போர்கள் இத்தலத்திற் கிருமியாகப் பிறத்தற்கு மனந்துணிவார்கள் - நூறு அசுவமேதஞ்செய்து இந்திரபட்டம்பெற்றுஉண்கின்ற இனிய அமுதத்தைப்பார்க்கிலும இத்தலத்திற் சிறுகுழியிலூறுஞ் சருகூறனீர் மிகவுமினிதாகும். எவ்வாறென்னின் இச்சருகூறல் நீர் பிறவிநோய்க்கு மருந்தாகும் - அவ்வமுதத்தாற் போகமுண்டாமேயல்லது பிறவிநோய்போகாது. சொர்க்கலோகத்துமங்கையர்களுடைய முலைகளினின்றும் புறப்படும் குங்குமப்பொடியினும், அம்மாதர்களணிந்த கற்பகமாலையி னின்றெழும்பராகந்தப் பொடியினும், இத்தலத்தில் வசிக்கும் ஓர்நாயின் சிறியகாலிற் புறப்படும் மண்தூளி புனிதமாகும். அரம்பைமாதரோடு கூடிச்செருக்குறும்செல்வத்தைப் பெற்றிடுதலைப்பார்க்கிலும் இத்தலத்திற் பிச்சையூண்நலமாகும் மற்றொருதலத்தில் யாகஞ்செய்பவரைப் பார்க்கிலும் இந்நகரில்வசிக்கும் தேவரைநல்ல தவமுடையதாகும். புண்ணியபலத்தினாலே உலகமுழுதும் ஆள்வதைப்பார்க்கிலும், இத்தலத்திற் குரங்குகளாவதே மேன்மையாம். இப்பதியிலே மரித்தோரெல்லாம் தேவர்க்கரசராய் விளங்குவார்கள். முத்தானது விலையில்லா நேர்த்திபெற்றதாயினும் மேன்மையாகிய நாகரத்தினத்துக்கு ஒப்பாகுமோ? ஒப்பாகாது, அதுபோல உண்மைபெற்ற தவத்தைக்கொடுக்குந் தலங்கள் மிகவும் உண்டாமாயினும் இத்திருவெண்காட்டுக்கு உவமானமாகச்சொல்லலாகுமோ? ஆகா, இது சத்தியம்! சத்தியம். முனிவர்களும்,தேவர்களிற்

றலைமைபெற்ற பன்னிரண்டு சூரியர்களும் இரண்டு அச்சுவினிகளும் எட்டுவசுக்களும் பதினொரு உருத்திரர்களும் ஆகியமுப்பத்து மூவரும், துன்பஞ்செய்கின்ற யமனுக்குப்பயந்து திருவெண்காட்டைச் சேர்ந்து காவிரியினும் முக்குளத்தினும் மூழ்கி, சுவேதவனப்பெருமானையும்,பெரிய நாயகியம்மையாரையும், நடேச பெருமானையும், அகோரமூர்த்தியையும்.வணங்கித்துதித்து அழிவில்லா வரம்பெறும் படிச் சிலநாளருந்தவஞ்செய்ய, சுவேதவனப்பெருமான் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளிவந்து, முனிவிர்காள்! தேவர்காள்! நீங்கள் விரும்பியவரம் யாதென்றுகேட்டருள; அவர்கள் வணங்கித்துதித்து "எம்பெருமானே எங்களுக்கு அழிவில்லாவரம் வேண்டுமென்ன,அவ்வரத்தைக்கொடுத்து மறைந்தருளினர். தருமதேவதையொருக்காலும் இறப்பில்லாத வரத்தைவேண்டி இத்திருவெண்காட்டைச் சேர்ந்து காவிரியினும் முக்குளத்தினும் மூழ்கி இறைவரை நமஸ்கரித்துப்போற்றி அளவில்லாத தவங்களைச்செய்ய சுவேதவனப் பெருமான் தருமதேவதைக் கெதிரேவந்துதோன்றி.தருமதேவதையே நின்மனதின்படி இறப்பில்லாவரமும் நமக்குவாகன மாகுகின்றநிலைமையுந் தந்தோம். சின்மயமாய் நாற்பததத்தோடு எந்நாளும் நீயிருக்குஞ்சிறப்பினலே, இத்தலம் தன்மபுரம் புண்ணியகோடியெனப்பெயர்பெறக்கடவது. இத்தலத்தில் ஒரு புண்ணியம் கோடிபுண்ணியபலனைக்கொடுக்கும். தருமதேவதையே நீவெண்மைபொருந்திய இடபமாவாய் என்று சொல்லியருளத் தருமதேவதை உடனே இடபமாய்வந்துசுவேதவனப்பெருமானைத்தாங்கிப்போானந்தமுற்றது'தருமதேவதை துயரொழிந்து நிலைபெறுதலை நான்குவேதங்களுங்கண்டு திருவெண்காட்டைச்சேர்ந்து,முக்குளத்தின் மூழ்கிச்சிவபெருமான் றிருவடிகளைப்போற்றி யொலிக்க, சுவேதவனப் பெருமான் வேதங்களுக்கெதிரே தோன்றி நான்குவேதங்களே! அஞ்சற்க! அஞ்சற்க! பதஞ்சலியும் வியாக்கிரபாதனும் போல நமதுதிருநடனத்தைத் தெரிசித்து எக்காலமும் புகழ்வீர்களென்று வரங்கொடுத்து மறைந்தருளுதலும், நான்குவேதங்களும் சல்லரி தாளம் மதங்கம் வீணை குடமுழவந்துடி சிலம்பு என்பனவைகளிலடைந்து இசையையுண்டாக்கித், திருவெண்காட்டின் மகாசபையில் சிவபெருமான் செய்யும் திருநடனத்தைத் தெரிசித்து,நித்தியானந்தம் பெற்றன. அக்காரணத்தால் வேதவெண்காடென்னும் பெயர்பெற்றது. அன்றியும்-முத்திநகர்-தமோநாசபுரம் பர்வநாசபுரம் முருகன்பூண்டி பாதாள கயிலாயம்

ஞானவனம் சிவானந்தக்காடு கணபதிநகரம் ஆதிசிதம்பரம் திருவூர் உமையூர் மானூர் தலநாயகம் பெரியமயானம் என்னும் பெயர்களை யும் உடையது. இப்பெயர்களுள் இயன்றதொன்றைச் சொன்னவர் களுக்கு யாகபலன்முதலியஎல்லாப்பலன்களும் உண்டாகும். இதுச த்தியம் சத்தியமென்றுசொல்லி யருளலும் இப்படிச்சொல்லிய அக த்தியமுனிவருடைய திருவடிகளை வசுமகாராஜன் மீட்டும்வணங்கிச் சுவாமியடியேனுக்கு முக்குளத்தின் சிறப்பையும் விரித்துச்சொல்லி வேண்டுமென்று பிரார்த்திக்க, தமிழ்மணமுந்தென்றல் மணமுஞ்செ றிந்த பொதியமலைக்கிறைவராகிய அகத்திய முனிவர் சொல்வாராயி னர்.

திருநகரச்சருக்கம்

முற்றிற்று.

# தீர்த்தச்சருக்கம்.

முன்னவரின் முன்னவனை முதலுகத்தி லறுசமய முதல்விபோ ற்றி, யன்னமுடியறியானே யானந்த நடமெனக்கா வாடுகென்றாள், பன்னககங்கணத்தானுமப்படியானந்தநடம்பண்ணுகின்றான், றுன் னியவானந்தசலங்கண்மூன்றில்விழுந்ததொருதுளிகளாக. (௧)

முத்துளிகள்விழுந்தவிட முக்குளமாய்முச்சுடரின் முதற்பேர் பெற்றுச், சித்தியெலாமளித்தனகாண்பின்னுகத்தின்மருத்துவனைச் சிதைக்கவேண்டி,யத்திரமொன்றெடுத்துவிழித்தாயிரவாண்டமைந்த னரன்றவர்கணூடே, சுத்தசலந்துளித்துளியாமூவகையாவிழுந்ததந் தத்தோயந்தன்னில். (௨)

புண்டரிகமண்டபத்தோன்றான்படைத்தவுயிர்க ளுய்யும்பொரு ட்டாலிங்கே, யெண்டருமஞ்செழுத்தைவிரித்திருக்குடனுச்சரித்தி ருந்தானிருக்கும்போதி, லண்டர்பிரானேவலினுலிருமறைக்காயத்தி ரியாமணங்குதோன்றி, முண்டகவேதியனுரேகீழ்க்குளமாவிருந்தெ வர்க்குமுத்தியீவேன். (௩)

வடகுளநாமகளுமற்றைமடநதைதென்பாற்குளமெனவும்வடிவ மேகொண், டுனுறுநோய்தவிர்ப்பரெனவுரைத்துமறைந்தப்படியே யுருவங்கொண்டாள், விடமருவுமிடற்றானும்விடைமிசையிலெழுந்த

ருளிவிரிஞ்சனுரே, தொடர்புறுமன்னுயிர்களுக்குமுக்குளநீர்கொடுவினையைத்தொலைப்பிப்போமே. (௫)

மூக்குளத்திற்படிந்தவர்கண்மூவகையாமேடணைகண்மூன்றுந்தீர்வர், முக்குணமுங்கழன்றிடுவரதற்கடியாகியபாசமூன்றுந்தீர்வர் மூக்கடமாவுரிபுனைவர்முதற்றலைவேல்பிடிப்பராராமுன்னாலாவர் மூக்கணுடையவர்சூழமுத்தொழிலுந்தந்தொழிலாமுடிப்பர்தாமே.

வேறு.

அகிலபுவனங்களெல்லாமொருகோலோச்சியாளுதற்குநினைக்கிலந்தவரசுண்டாகும, பகைமைதவிர்ந்திட நினைந்தாற்பகைமைதீரும் பாலகரைவேண்டிலந்தப்படியாமபின்னைத், தொகைபெறவோர்விடையுண்டாமிருதாளுண்டாஞ் சுடர்நயனமூன்றுண்டாந்தோளுன்குண்டா, முகவனசமைமந்துண்டாமுடியாறுண்டாமுக்குளத்திலொருபோதுமூழ்குவார்க்கே. (௬)

பத்திசெய்யுமடியாரைக் கண்டானம்மைப்பணிவதுபோற்பணிந்தருகுமபரிவுண்டாகுஞ், சித்தசுத்திமிகவுண்டாநமையெப்போதுஞ்சிந்தித்துச்சித்திக்குஞ்செல்வமுண்டாஞ், சுததவித்தைமுதனுதமளவாநீங்கிச்சுவானுபூதிகமடைந்துதொலையாச்சிவன், முத்தரெனுநிலையுண்டாந் திருவெண்காட்டின்முக்குளத்தி லொருபோது மூழ்குவோர்க்கே. (௭)

களித்திடுமுக்குளத்தை நெஞ்சானினைத்தபேர்கள்கங்கையிலேமூழ்கிவநதோர்கதியைச்சேர்வர், தெளித்தவர்கள்மகாபதத்தையடைவரிந்தச்செழுங்கரைமேலனுவளவுசெம்பொன்றான,பளித்தவர்கணமையடைவரளித்துமன்னுவாடியபேரானந்தவாழியூடே, குளித்திடுவரவுவயிலொருதுளிநீருள்ளேகுடித்திடுவார் தாய்முலைப்பால்குடித்திடாரே. (௮)

வேறு.

சையமால்வரைப்பிறந்தகாவிரியின் பசுந்திரைமேற்றவழ்ந்காற்றுப், பையவேயெவருடலிற்படினுமவர்வருணவிறைபதத்திற்சேர்வர், வைகையாறமரர்நதிமுனைநதிபரவும்வெள்ளைவனத்தின்மூன்று பொய்கையார்புனற்படிந்தாற்பூதத்தாருடன்சேரப்புனிதராவர். ()

மூக்குளத்தைப் புகழ்ந்தவர்க்குத்தானபலனியல்க பலன்முழுதுண்டாகுமூக்குளத்தைத்தொழுதவர்க்குமுப்பொழுதுஞ்சிவபூசைமுடித்தபேரு, மூக்குளத்தைவலம்புரிந்தான்மூவுலகைவலம்புரிந்தமுழுப்பேறுண்டா, மூககுளத்தின்மூழ்கினபேர்ககொருநயனாடுக்குளத்தின்முளைக்குந்தானே. (௰)

வடக்கதுருத்திரதீர்த்தந் தெற்கதுமாதவதீர்த்தமிருவுங்கீழ்பால், லடுத்ததுவேதிய தீர்த்தமதன்பெயரைபபொதுவிதியாலவறையுமபோதிற், றடத்துயர்மூவிலைச் சூலப்படைத்தீர்த்தமினியதன்மதானதீர்த்த, மெடுத்ததிரிகுணதீர்த்தமகாரமுதலானதொர்மூவெழுத்தின்றீர்த்தம். (௰௧)

கண்ணார்தருஞ்சாப்பனுடற் கொடியபிணி நெடிய நயன்காலினோத, லெண்ணரியசுவாகையிருகண்ணோவுதலைவலியாமெச்சனோவு பெண்ணுருாமினநோவுமூழ்கியிங்கேதவிர்த்தனர்காண்பிறவிதீரப் பண்ணுமருந்திதிற்சிறிது பயங்கொணடார் நமன்பொருட்டாற்பயங் கொள்ளாரே. (௰௨)

அத்தலத்தில்விடைபொறித்தாருடல்விடுத்தாலொருவிடைமேலரன்போற்செல்வார், பத்தியினாற்பசுவளித்தோர்பசுத்துவத்தை தக்கழிபபாவிலைப்பனவர்க்கீந்தோர், சுதவிதலை தநடு விருபபாகமைத்தோர்கலைகளாந்நதொலைத்தப்பாலே, முத்தியிலேபுகுவரனை படைக்கிர்ந்தவர்க்குங்கிடைக்குமந்தமுத்திதானே. (௰௩)

விடந்தரித்தாரடியவருக்கோதனபாதனமீந்தோர்விமலராவர் மடஞ்சமைத்தோர்மடத்துகட்கோரயுதயுகஞ்சிவபதத்தினிருப்பாரிவர், குடந்தரிக்குஞ்சிறியகொடிக்கன்னியர்த்தங்களைத்தானங்கொடுத்தபேர்கள், படநதர்த்தபாமபணையான்பதவியிலேபலபோகமயமினுவாரே. (௰௪)

## வேறு.

ஆலயத்திலலகிடுவார்க்கப்பயனோராயிரமாஞ்
சாலமெழுக்கிடுவார்க்குத்தகைமைபதினாயிராமா
மாலைபுனைந்தணிவார்க்குவரும்பலநூறாயிரமாங்
கோலவிளக்கிடுவார்க்குக்கோடிபலன்கொடுத்திடுமே. (௰௫)

ஓரகலில்விளக்கிடுவாருறைவரும்பரிறையாவ
ரீரகலிற்றீபமிட்டாரிலங்குமலரயனாவா
ராரவொருமூவகலிற்சுடரிடுவாரரியாவார்
சேரவொருநாலகலிலொளியிடுவார்சிவனாவார். (௰௬)

பானீயமினிமைதருபழந்தயிர்நெய்பச்சிளநீர்
தேனாலுஞ்செறிந்தபுனல்சிவனாடும்படியளித்தா
னானூறுயிரமயுதஞ்சதமகலாயிரங்கோடி
நானூறுயிரங்கோடிமகாகோடிநலந்தருமே. (௰௭)

மண்ணாலுந்தருவாலுமரன்கோயில்வகுத்தவர்கள்
தண்ணாரும்பிறைமுடியான்றமருடனேயமர்ந்திருப்பார்
எண்ணார்செங்கலிலமைத்தோர்சிவன்வடிவாயினிதிருப்பர்
பண்ணார்கற்களிலமைத்தோர்பரமசிவன்பதஞ்சேர்வார். (௰௮)

வேறு.

வேதியனேயெனவுரைத்துமறைந்தனன்முக்குளத்திலந்தவிரிஞ்சன்மூழ்கி, யாதியைவெண்காட்டரசைவலம்புரிந்துதவம்புரிந்தானயுதங்காலஞ், "சோதிவிடைமிசைத்தோன்றியுனக்களிக்கும்வரமேது சொல்வாயென்னப், பூதமெலாம்படைத்தவயனுபதேசந்தருகவெனப்புகன்றான்போற்றி. (௰௯)

வேறு.

ஈனமுயலோனகலவாலவிழன்மீதிலுறையீசன்வடிவாய்பொழிகுவா
னபதிபாசமனுமூவகையனாதியுளவாமவையிலாதிசிவமே
ஞானமயமாயளவிலாதவருளாயகிலநாயகமுமாய்நிறைவுமாய்
மானமனவாசகவதீதவுருவோடுசுகவாரிதியின்மூழ்கலுறுமே. (௨௰)

மூலமலவாணவமுமேழுகுணமாமிருளைமூடிவருமோகினியுமோ
காலமுதலானபலகாரியமெலாமுதவுகாரணபதாகுமினிமா
னலினுடனாறுவகையானபலபோகவகைநாடொறுமளிக்குமிவையே
போலவினையானவையுமூவகையினாலுமிருபோகநுகர்வித்துவிடுமே.

ஆதியில்விஞ்ஞானகலரோர் மலவராமவரிலானமல பாகமுடையோர், சோதியுடனாவரதிலே சிறிதுபாகமுளதூயவர்களா லிருவரா, மேதமறுமீசர்வினையாணவமறுதவர்களேபிரளயாகலர்களா, மோதிலிவைபாகமுடையோர்கதியிலாவர்சிறிதோடுமலபாகமுடையார்.

நற்புவனதாரகர்களாமவர்களூறுபதினலினுடனலுபெயரடீமற்புதமதானபசுவர்க்கமிவையேசகலராணவமுமாயைவினையுந்,தற்பொதிகுவார்வினைதுலக்கவருபோதுமறைசத்திவதனப்படுதலா,லொற்கமறவீடடைவர்சற்குருவினல்வழியுபோதிலொருநாலுவகையே.

பொங்கபரமுத்திசிவகண்டர்புவனத்திடைபொருந்துதலுருத்திரபுரந், தங்குதலுமந்திர மகேசுரர்களீசுரர் சதாசிவர்கண் மூப்பதமுமாந், தங்கரணமற்றெமது சத்திகரணங்கொடுதமைத் தெரிசனப்படுதலா, லங்குநிறைவுற்றமைவியத்தமொடுசற்குணமு மடைதல்பரமுத்தியெனுமே. (௨௪)

ஆகமமெலாமிவைகள் கூறுமெனவோதுதலுமாலகிழன்மேவுசிவனைக், ப்காகனகவேதியன்வணங்கியிறைவாதரும கோடியேனுமிப்பதியிலே, தேகமுடிவாபளவுபேவிமுடிபோதுனதசேவடியில்வாழ்வருளெனு, வோகையொடுகூறியிதிலே தவமியற்றினனுரைத்தவொருநாறுவயதுப். (௨௫)

காலமுடி விற்பதுமன்மூவிருகுணத்தொடுகலந்து பரமுத்திபுகுதக், கோலவுடலத்தையரனொற்றி விழிகொண்டழல்கொளுத்தியகல்வித்தருளினன், ஞலமிசையேபெருமயானமெனலானதிதன்னினுடல்விட்டவரெலா, மேலையுலகாள்வரெனவோதிவசுவோடுமுனிவேறுமொருகாதைபுகல்வான். (௨௬)

தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆகச் சருக்கம் ௬-க்குச் செய்யுள்-௧௭௬.

## வசனம்.

—*—

வசுமன்னனே-கிருதயுகத்திலேஉமாதேவியார்“சிவபெருமானைபிரமவிட்டுணுக்களாலுங் காண்டற்கரிய அடிமுடியை உடையவரேஎன்று” துதித்து,எம்பெருமானே உம்முடைய ஆனந்தத்திருநிருத்தத்தை அடியேன்பொருட்டு ஆடியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் உமாதேவியார் வேண்டுகோளுக்கிசைந்துஇத்திருவெண்காட்டிலே நிருத்தஞ்செய்யும்பொழுது அவருடைய மூக்கண்களினின்றும் ஆனந்தத்தினல் மூன்றுதுளிகள் சிந்தின. அந்தமூன்றுதுளிகளும் விழுந்த இடம் முக்குளமாய் அக்கினிதீர்த்தம்சூரிய

தீர்த்தம் சந்திரதீர்த்தம் எனப்பெயர்பெற்றுச் சித்தியெல்லாங் கொடுத்தன. அஃதன்றியும் மற்றொருயுகத்தில் மருத்துவசங்காரத்தின் பொருட்டு அகோரசிவனார் அஸ்திரபாணியபராயணமந்து விழித்து நோக்குஞ் சமையத்தில், அவருடைய முக்கண்களினின்றுஞ் சிந்தியபுனிதநீராகிய முத்துளிகளும் மூன்றைய முத்தீர்த்தத்திற் றனித்தனி சென்றுகலந்தன. பிரமதேவர் தம்மாற்சிருட்டிக்கப்பட்ட வுயிர்கள் கதியடையும்பொருட்டுத் திருவெண்காட்டில் வந்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை இருக்கோடும் உச்சரித்துக் கொண்டிருக்கும்போது,தேவதேவராகிய சுவேதவனப்பெருமான் ஏவலினால்-காயத்திரியானவள் அந்தப்பிரமதேவருக்கெதிரே தோன்றி, கமலாசனரேநான் அக்கினிதீர்த்தவடிவமாய் அமர்ந்திருந்து யாவர்க்கும் முத்தியைக்கொடுப்பேன். நாமகள்சோமதீர்த்தமாயும் சாவித்திரி சூரியதீர்த்தமாயும் வடிவங்கொண்டு உடலுறுநோயை நீக்குவரென்று சொல்லிமறைந்து தான் சொல்லியபடியே வடிவங்கொண்டாள். பின்சுவேதவனப்பெருமான் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளி வந்து பிரமதேவரைநோக்கிச்சொல்வாராயினார். பிரமனே பாசத்தையுற்ற உயிர்களுக்கு இம்முக்குளநீரால் வினையையொழிப்போம்.இம்முக்குளத்தின் மூழ்கினவர் மூவகையாய்வருகின்ற பாவங்களினின்றும் நீங்குவர். முக்குணவேதனையும் நீங்குவர். மும்மலநீக்கமும்பெறுவர்.யானைத்தோற்போர்வையராகுவர்.முத்தலைச்சூலமேந்துவர்.சர்ப்பமுநூலராவர். மூன்றுகண்களையுடைய உருத்திரர் பலர் தம்மைச்சூழும்படி படைத்தல் காத்தல் அழித்தல்களாகிய முத்தொழில்களையுந் தந்தொழிலாய்க்கொண்டு செய்துமுடிப்பர் - இம்முக்குளத்தில் ஒருபோது மூழ்குவோர் சகலலோகங்களையும் அரசாளநினைக்கில் அவ்வாறேயாளுவர். பகைவரைவெல்வர். சற்புத்திரரைப்பெறுவர். மறுமையில் இடபவாகனமும் இரண்டுபாதங்களும் மூன்றுகண்களும் நான்குதோள்களும்ஐந்துமுகங்களும் முடியிலே கங்கையும் உடையவராவர். அன்றியும் நம்பத்தர்களைக்கண்டால் நாமாகப்பாவித்துப் பணிந்துருகும் பத்திமையுண்டாகும். சித்தசுத்தியுண்டாகும். நம்மைச்சதாசிந்தித்தலால்உண்டாகுஞ்செல்வமும்.பெறுவர்.சீவன்முத்தருமாவர்.முக்குளத்தைதரிசித்தவர்கள் கங்காஸ்நானபலன்பெறுவர். முக்குளநீரைப் புரோக்ஷித்துக்கொண்டவர் மகாபதத்தையடைவர். இம்முக்குளத்தின் கரையில் சற்பிராமணர்களுக்கு அணுவளவு செம்பொன்னாயினுந் தானஞ்செய்தவர் நம்மையடைவர் - மூழ்கினவர்கள் ஆனந்த சமுத்திரத்

தின் மூழ்குவார்கள். ஆசமனஞ்செய்தவர்கள் பிறவியில்வாரார். இத்தலத்திற்காவேரிநதியின் அலைகளிலே பொருந்தியகாற்றுளவருடலிற் பட்டாலும் அவர்வருணதேவன் பதத்தையடைவர். எத்தீர்த்தத்தாலும் துதிக்கப்படும் இம்முத்தீர்த்தத்தின் காற்று மேலேபட்டால் சுத்தமாயாபுவனத்தை யடைவர். இம்முக்குளத்தின் பெருமையைப்பிறர்க்குக்கூறினவர்க்குத் தானபலன்களும் யாகபலன்களும் உண்டாகும். இம்முக்குளத்தை வணங்கினவர்களுக்கு முக்காலமுஞ் சிவபூசைசெய்தபலன்கிடைக்கும். பிரதக்ஷணஞ்செய்தவர் மூவுலகத்தையும் பிரதக்ஷணஞ்செய்த பேற்றையடைவர். நமக்குவடக்கில் உள்ளது உருத்திரதீர்த்தமென்றும் தெற்கில் உள்ளது விஷ்ணு தீர்த்தமென்றும கிழக்கில் உள்ளது பிரமதீர்த்தமென்றும் பெயர்பெறும். அன்றியும் மூவிலைச்சூலதீர்த்தம் தன்பதீர்த்தம் தானதீர்த்தம் முக்குணதீர்த்தம் அகரமுதலான மூவெழுத்தின் றீர்த்தம் எனப்பொதுப்பெயர்களும்பெறும். கிருட்டினன் குமாரனாகிய சாம்பனுடலிலே உண்டாகிய கொடியபிணியும், யமன்காலிலுண்டாகிய நோயும், சுவாகையிருகண்ணிலு முண்டாகிய நோயும், எச்சன்றலைவலியும், சூரியன் தனக்குண்டாகிய பெண்ணுருவமும், இம்முக்குளநீரில் மூழ்கிப்போக்கினார்கள். பிறவிநோய்க்கு மருந்தாகும். இம்முக்குளநீரில் சிறிது நீரை மரணகாலத்து உட்கொண்டவர்கள் யமனுக்கஞ்சார்கள். இத்திருவெண்காட்டில் இடபஞ்செய்துவைத்தவர்கள் உடலைவிட்டவுடனே சிவன்போல ஒருஇடபத்தின் மீதேறிக்கொண்டு போய்ச் சிவலோகத்தையடைவர். பிராமணர்க்குப் பசுவைத்தானஞ்செய்தவர்கள் பசுத்துவத்தைக்கழிப்பர். பூமிதானஞ்செய்தவர் சுத்தவித்தையினடுவேயிருப்பர். கலைகளைத்தானஞ்செய்தவர் பஞ்சகலைகளையுந் தொலைத்து அப்பாலுள்ள முத்திபிற்புகுவர். அன்னதானஞ்செய்தவர்க்கும் அம்முத்தியாகிய பலன்கிடைக்கும். நம்திருத்தொண்டர்களுக்கு அன்னமுந்திரவியமுங் கொடுத்தவர் மலரகிதராவர். மடங்கட்டி வைத்தவர் அம்மடத்தின் ஒருதூளிக்குப் பதினாயிரயுகஞ் சிவலோகத்தில் வாழ்வார்கள். குடம்போலுந்தனங்களையுங் கொடிபோலும் இடையையும் உடையகன்னியர்களைத் தானஞ்செய்தவர்கள் சேஷ சயனத்தையுடைய நாராயணன் பதத்தையடைந்து பலபோகங்களையும் அனுபவிப்பார்கள். இத்திருக்கோயிலிலே திருவலகிடுவார்க்கு மற்றைத்தலத்திலே திருவலகிடும்பலனிலும் ஆயிரமடங்குபலனும், திருமெழுக்கிடுவார்க்குப் பதினாயிரமடங்குபலனும் திருமாலை புனைந்தணிவிப்பார்

க்கு நூறுபிரமடங்குபலனும், அழகியவிளக்கிடுவார்க்குக் கோடிபல னுங்கிடைக்கும். ஓரகலில் விளக்கிடுவோரிந்திரனுவார். ஈரகலில்விள க்கிடுவார் பிரமனுவார். மூவகலில்விளக்கிடுவார் விஷ்ணுவாவார். நா லகலில் விளக்கிடுவார் சிவனுவார். இத்தலத்தில் நமக்கு அபிடேகத் தின்பொருட்டுப் பானீயங்கொடுத்தவர்க்கு நானூறுமடங்குபலனும் மதுரம்பொருந்திய பழமளித்தவர்க்கு ஆயிரமடங்குபலனும் தயிரளி த்தவர்க்குப் பதினாயிரமடங்குபலனும் நெய்கொடுத்தவர்க்கு நூறாயி ரமடங்குபலனும் இளநீர்கொடுத்தவர்க்குக் கோடி மடங்குபலனும் தேன்கொடுத்தவர்க்கு ஆயிரங்கோடி மடங்குபலனும் சந்தனக்குழ ம்புகொடுத்தவர்க்கு மகாகோடிமடங்கு பலனுங்கிடைக்கும். சுத்தா ன்னம் நிவேதித்தவர்கள் தருமத்தையும், முற்கான்ன நிவேதித்தவர் கள் பொருளையும், குளான்னம் நிவேதித்தவர்கள் இன்பத்தையும் அன்னத்தைப் பர்வதம்போலக் குவித்துவர்க்கவகையுடனே நிவே தித்தவர்கள் மோக்ஷத்தையும் பெறுவர்கள். மண்ணினுலே கோயில் கட்டுவித்தவர் நம்சாலோகத்தையும் மரத்தினுலே கோயில்கட்டுவித் தவர் சாமீபத்தையும் செங்கல்லினுற் கோயில்கட்டுவித்தவர் சாரூப த்தையும் கருங்கல்லினுற் கோயில்கட்டுவித்தவர் நம்சாயுச்சியத்தை யும் பெறுவர்கள் என்றுசொல்லி மறைந்தருளினர். சிவபெருமான் மறைந்தருளுதலும் மீட்டும் பிரமதேவர் முக்குளத்திலே ஸ்நானஞ் செய்து முதல்வராகிய திருவெண்காட்டிறைவரை வலம்புரிந்துவண ங்கித் துதித்துப் பதினுயிர வருடந்தவஞ்செய்தார். சுவேதவனப்பெ ருமான் இடபவாகனமேற்கொண்டு வெளிப்பட்டுப் பிரமனே, நீசெ ய்த தவத்திற்கு மிகமகிழ்ந்தோம் உனக்குவேண்டும் வரம்யாது கூறு வாயென்ன பிரமதேவர் நமஸ்கரித்து வெள்விடையானே வெண்கா ட்டரசே! வேதநாயகனே, விண்ணேர் தலைவனே, அகாரசிவனே, ஆன் மநாயகனே, அற்புதமன்றி லாடுசேவடியனே, யென்று துதித்து அடி யேற்கு ஞானேபதேசஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க உடனேசுவேதவனப்பெருமான்மும்மலமென்னும்மாயையொழியும் பொருட்டுதக்ஷிணமூர்த்திதிருவுருக்கொண்டுபிரமனேபதிபாசும்பசு என்னு முப்பொருளும் அனுதி நித்தியமாய் உள்ளன. அவைகளில் முதற்பொருள் பதியே அப்பதிப்பொருள் ஞானமயமாயும் அளவில் லாத அருளையும்சகல புவன முதலாயும் சர்வபரிபூரணமாயும் மன வாக்குக்கெட்டாத அதீதவுருவோடு சுகசாகரமாகவும் இருக்கும். மூலமலமாகிய ஆணவமேழுகுணங்களையுடையதாகும் இருளைமூடிவரு

ம் மோகினியானது காலமுதலான பலகாரியங்களை யெல்லாந் தரும் காரணப் பொருளாகும். மாஞனது நால்வகைப்பேதத்தை யுடைய தாய் அறுவகைச்சுவையதாய் விளங்கும் பலபோக வகைகளை எப் பொழுதும் கொடுக்கும். இவைபோல வினையும் ஆதியான்மிகம்ஆதி தைவிகம் ஆதிபௌதிகமென்னும் மூன்றின்வழியினல் இன்பதுன்ப ங்களைக்கொடுக்கும். முதற்கண் விஞ்ஞானகலரென்பூார் ஓர் மலமு டையரார்வர். அவரில்மலபரிபாக முடையோர் சிவத்திற்கலப்பர். சிறிது மலபரிபாகமுள்ளதூயவர்கள் அட்டவித்தியேசுர ரெனப்படு வர். கன்மமலம்ஆணவபலமென்னும் இருமலமுடையார் பிரளயாக லர்களாவர். இவரிற்பெரிது மலபரிபாகமுடையார்கதியையடைவர். சிறிதுமலபரிபாக முடையார், சுத்தபுவனவாசிகளாய் நூற்றுப்பதி னெண்மராவர். ஆணவம்கன்மம்மாயையென்னும்மும்மலங்களையுமுடை யார்சகலரெனப்படுவர். இவர்கள் வினையொழிக்குங்காலத்துச்சத்தி பதிதலால் தளர்ச்சியில்லாமல் சற்குருதிருவருளால்முத்தியையடை வர். அம்முத்தியை யடையும்வழி சரியை கிரியை யோகம் ஞானம் எனநான்குவகைப்படும். அபரமுத்தி பரமுத்தியென முத்தியிருவ கைப்படும். அபரமுத்தியாவது ஸ்ரீகண்டபுவனம். உருத்திரபுரம். ம கேசுரபுவனம் ஈசுரபுவனம் சதாசிவபுவனம் என்னும் ஐவர்களிடமா கிய சாலோக சாமீப சாரூபமென்னு முப்பதங்களாம். பரமுத்தியா வது சிவகரணமொழிந்து சிவகரணமுற்றுத் தம்மையுந் தலைவனையும் பாசத்தையுங் காணுதலோடு அருட்டெரிசனமுற்றுச் சிவத்தில்வி யாப்பியமாய்ச்சிவமாந்தன்மைப் பேறுபெறுதலாம் என்று ஆகமங் கள் கூறுமெனத் திருவாய்மலர்ந்தருளினவுடன்தாமரையாசனராகிய பிரமதேவர்வணங்கி, ஆன்மநாயகரே! அருபகோடியென்னுமித் திரு வெண்காட்டிலே அடியேன் தேகமுடியுமளவும் இருந்து முடியும் போது உமதுசேவடிவாழ்வைத் தந்தருளவேண்டுமென்றிரந்துநூறு வயதளவுந் தவமியற்றிக்கொண்டிருந்தார். இப்படித் தவஞ்செய்து கொண்டிருந்த பிரமதேவர் காலமுடிவிலே அறுகுணதேடு கலந் துபரமுத்தியடைந்தார். அந்தப்பிரமதேவரது சரீரத்தை அரன்அக் கினிநேத்திரத்தாற் றகித்தனர். அக்காரணத்தால் இத்தலம் மகாஸ் மயானமெனப் பெயர்பெற்றது. இதிலேமரித்தவர்கள் மோக்ஷத்தை யடைவர்கள் என்றுசொல்லிப் பின்னும் வசுமகாராசனுக்கு அகத் தியமுனிவர் மற்றொரு சரித்திரம் சொல்லத் தொடங்கினர்.

தீர்த்தச்சருக்க முற்றும்.

# வேதராசிச்சருக்கம்.

முன்னமேயொருகாலத்துமுனிமகன்வேதராசி
யென்னுமோர்மறையோன்கேளிரிருந்தவூர்க்கேகும்போதிற்
புன்னகமுன்றுந்தவாழும்பழுமரப்பொதும்பினூடே
துன்னியபொதியின்சோற்றைவைத்துநீர்த்துறையிற்சேர்ந்தான்

புக்குநீர்குடையும்போதுபொதும்புறைபுயங்கநஞ்சு
கக்கினததனுளுள்ளேநனைந்ததுகட்டுப்போன
மக்கணாத்தவனுங்கண்டானவன்வருமரவத்தாலே
தொக்குடையரவம்போனதெடுத்தனன்பயந்துசோற்றை. (உ)

பைய்ராச்சொரிநஞ்சீதிற்படிந்ததோவிலையோவென்னென்
றையமாவிருக்கும்போதில்வழியிலோரந்தணாளன்
வெய்யவான்பசியாலன்னமிரந்தனன்வேதராசி
கையினலளித்துக்கேளிரிருந்தவூர்கடிதிற்சேர்ந்தான். (ங)

உதவியகட்டுச்சோறேரொற்றிலாக்கட்டுச்சோறு
யதனையுமுணராதள்ளியருந்தினனந்தணாள
னிதமிலாவிடமுள்ளூறியிறந்தனனிறந்தபோதில்
விதியினற்பிரமகத்திபிடித்தனன்வேதராசி. (ச)

அச்சமாய்வேதராசியன்றுநாமளித்தவன்ன
மிச்சையாயருந்தும்பார்ப்பானிறந்தனனாகவேணும்
நிச்சயமிதுவென்றெண்ணிநெடுந்துயர்க்கடலின்மூழ்கி
நச்சராவருந்தினோர்போல்வருந்தினனடுங்கிப்பின்னர். (ரு)

வேறு.

வேதபாரகர்பாற்சென்றீதுரைத்தனன்வேதராசி
யாதியாதவத்தோர்சொல்வாரரியதீர்த்தங்களாடி
நீதிசேர்தலத்திற்பன்னாளிருந்திடினீங்கிப்போமென்
றோதினாரந்தவூரையறிகிலேனுரைப்பீரென்றான். (சு)

அன்னவிற்சிறந்தோர்சொல்வாரடைந்தநின்பிரமகத்தி
யுன்னைவிட்டெங்கேநீங்குமத்தலத்துறைவாயென்றார்
சொன்னவப்பொழுதேநன்றென்றெழுந்தவர்துணைத்தாள்போற்றி
யின்னிலமனைத்துங்காலால்வலஞ்செய்தானிருகாலாக. (எ)

கங்கையேமுதலாந்தெய்வநதிதொறுங்கலந்துமூழ்கிச்
சங்கரன்கயிலைபோலுந்தலங்களாயிரத்தில்வைகிப்
பொங்குநல்வினையினுலேபொன்னியங்கரையினண்ணி
வங்கமேன்மகரம்பாயும்வாரிதிக்கரையைச்சேர்ந்தான். (அ)

வேறு.

மச்சமன்கடலினின்மருங்கிற்கேதகை
பச்சைநுண்டுகள்பலபடியவீசுத
னிச்சயமருந்தமிழ்நிறுத்துமாமுனி
யெச்சிலென்றினியநீறிறைத்தல்போலுமே. (௯)

எழிலுறுநதியெலாமேற்றுமெங்கணு
நிழலுறுமணிக்கடனிரப்பிடாதது
தழலுறுவடவைதன்னுதரந்தாங்கிய
அழலையிற்சுவறியதொப்பதாகுமே. (௰)

கற்றைசேர்கதிரெழுகடலிணைப்பணே
குற்றமின்றியதுகிர்க்கொடிகள்சூழ்ந்தன
சுற்றமாம்வடவையைச்சூழ்ந்துவாழ்ந்திட
மற்றுளகனற்களும்வளைதல்போலுமே. (௰௧)

ஆற்றொடுபொருந்துமவ்வாழிகண்டதன்
மேற்றிசைமேவினன்வேதராசியும்
நாற்றிசையினுமுழனவையெலாமறத்
தோற்றியதரனுறைசுவேதகானகம். (௰௨)

வேறு.

கருதுமப்பதிகண்டகணத்திலே
விரிதலைக்குடராற்றுவிழுந்துமேற்
பிரமகத்திபுலர்ந்துபெயர்ந்ததே
யிரவியுற்றவிடத்திருளென்னவே. (௰௩)

காதநாலுகடந்துகணத்திலே
வேதராசியைமேவியபாதகம்
பூதலங்களின்மீதுபுகுந்துபோய்ப்
பாதலங்களின்மீதுபடிந்ததே. (௰௪)

கண்டுநெஞ்சுகளித்துநம்பாதகம்
விண்டவாமெனமெய்ம்மறந்தான்மது
வுண்டவண்டெனவுண்மகிழ்ந்தான்பல
தெண்டனிட்டனன்றெய்வவெண்காட்டையே. (௰௫)

பாடியாடினன்பாய்புனற்காவிரி
யாடிமுக்குளத்தாடினனன்பினா
னோடிநாரணனான்முகனான்மறை
தேடினானடிசேவித்துமீண்டனன். (௰௬)

நாவலம்பெருந்தீவினுணுமறி
யாவிடங்களின்றாயினுமீதுபோற்
பாவநீக்கும்பதியிலையிப்பதி
தேவர்நாட்டுக்குந்தேசிகனாகுமே (௰௭)

இந்தவெல்லையில்யாமுள்ளமட்டுமா
னந்தத்தாண்டவநாடுவமென்னவே
சிந்தைசெய்ததிற்செய்கடன்முற்றியே
யந்தணாளர்க்குமன்னம்வழங்கினான். (௰௮)

வேறு.

தம்மையேநிகர்வார்பன்னசாலையிற்றினமும்வைகி
யிம்மையேமூழ்குவாருக்கெழுநதியுதவும்பேற்றின்
மும்மடங்குதவுந்தெய்வமுக்குளத்தடைவின்மூழ்கிச்
செம்மலைவிதியாற்பூசைபுரிந்தனன்றிருவெண்காட்டில். (௰௯)

இப்படியொழுகுநாளிலினியநாண்மலரெய்தாம
லப்பதிமுடிவினெல்லையணுகியோர்வில்லத்தேறி
முப்புடையிலைகளெல்லாங்கொய்திடும்பொழுதுமுன்னே
கைப்படைநமனார்தூதரிருவரைக்கண்ணிற்கண்டான். (௨௰)

பருவரால்குதிக்கும்போதுபாளைதேன்சொரிவெண்காட்டில்
வெருவராதுலவுமந்தவேதியன்வெருண்டுநோக்கி
யொருவராய்ப்பயந்தந்நாளிலோடியபிரமகத்தி
யிருவராய்த்தொடர்ந்ததாமென்றிலங்குதோள்குலுங்கநக்கான். ()

பரவுமோர்விடையின்பின்னேபாலினுக்குழல்வார்போலப்
பிரமபாதகமேயின்னம்பின்பிடித்துலைகின்றாயோ
வரவபூடணனாரன்பரடித்துகள்பிடித்தென்கையா
லுரமெலாமுமக்குப்போகவெறியவோவோடுமென்றான். (௨௨)

தூதருமொழிவார் நாங்கள்தொடர்ந்திடுமமனார் தூத
ராதியாம்பிரமகத்தியகன்றுழுவாட்டைக்கால
மாதவாவவ்வூர்நீங்கிவரவுபார்த்திருந்தோமிங்கே
போதராயுனைக்கொண்டெங்கள்புரத்தினிற்புகுதவென்றார். (௨௩)

இருந்தபாற்கடம்பாராபலினியபானலம்பார்ப்பார்போற்
பரந்தெழுமுனைப்பாராதிப்பதிநலம்பார்த்தோங்கண்டாய்
விரைந்தெமதுடனேபோந்தான்மிகநலந்தருவோமன்றேல்
வருந்துதீநெறிக்கட்கொண்டுபுகுந்துனைவருத்துவோமே. (௨௪)

நாட்டியசுவேதகேதுமுனிவனந்நாளிலேவெண்
காட்டிலேயிருந்தானன்னான்கழுத்திலேகாலபாசம்
பூட்டினார்நமனார்சார்புனைமலர்ப்பதத்தாற்கூற்றை
வாட்டினாரன்றேயவ்வூர்மிதித்திடோமறந்துமென்றார். (௨௫)

பாசமாம்வலைகொண்டாவிபறித்திடுநமனாரானை
யீசனாரானையிந்தவிரண்டுமார்கடக்கற்பாலார்
பூசுராவுனக்குப்போகாப்பொறியினிபோகவென்று
நாசமாம்படிக்கேழ்வாரியெனும்படிநகைக்கலுற்றார். (௨௬)

வில்வமாமரத்தின்கீழேவிழுந்தனன்மயக்கமாகி
யல்லலாயதுவுநாலைந்தாறுநாழிகையிற்றீர்ந்து
சொல்லுவானமக்கென்காலதூதுவரிணக்கம்வெண்காட்
டெல்லையிலிருப்பாரெல்லாஞ்சிவபதத்திருப்பரன்றே. (௨௭)

என்றுகொண்டெழுந்துபின்பார்த்தேகினனியமன்றூதர்
நின்றனரிதில்வாராதேயெறிந்தனர்நெடியபாசம்
பின்றொடர்புலிகண்டோடும்பிணையெனத்தாயைக்காணக்
கன்றெனவேதராசியழைத்தனன்கனற்கண்ணனை. (௨௮)

வேறு.

அடியார்வினைவேயருள்வாய்முறையோ
பொடியார்தொடியார்புயனேமுறையோ
வடிவேனமனார்மறலீமுறையோ
முடியார்முதலேமுறையோமறையோ

துதிசேரடியார் துயராகியபோ
தெதிரேவருவாயிமவான்மருகா
கதியேபதியேகருணாலயனே
முதியாயிளையாய்முறையோமுறையோ. (௩௰)

துனியாமடியார் துணையேமுறையோ
கனியேயெளியார்கதியேமுறையோ
யினியாரினியாரிலைகாண்முறையோ
முனிவோரரசேமுறையோமுறையோ. (௩௧)

வேறு.

முறையினான்மறையோன்கூறுமொழிகளைமுருகராகுஞ்
சிறுவனார்மழலைபோலத்திருச்செவிசாற்றாநின்றான்
நிறையிலாரெனினுந்தம்பேரோருதரநினைப்பாருக்குக்
குறையெலாந்தவிர்த்தல்வேலையெனக்கொடியுயர்த்தகோமான். (௩௨)

ஓலமென்பதனைக்கேட்டபொழுதுதன்னுழைநின்றோனைக்
காலனார்வலியிற்கோடியுடையமாகாலன்றன்னைப்
பாலலோசனத்தினாலேநோக்கினன்பரமன்பார்த்த
சீலமாகுறிப்பைநோக்கியூதினான்சிறியசங்கம். (௩௩)

ஊதியசங்கத்தாலேயுடைந்ததுநமனார்சென்னி
தூதுவர்செவியுமார்பும்வெடித்தனர்துடித்துவீழ்ந்தார்
மாதிரநடுங்கிற்றும்பர்வாசவன்முனிவோரெல்லா
மாதியைநினைந்துவெள்ளிமலையடைந்தபயமென்றார். (௩௪)

அஞ்சலிபுரிந்தார்நம்பனயன்முதற்கடவுளாரை
யஞ்சலென்றருளானேக்கியமைத்தசெங்கையினாலே
தஞ்சமாயிருக்கநீரென்சஞ்சலப்படுவீரென்று
நஞ்சமார்மிடற்றினானகைபுரிந்திசைக்கலுற்றான். (௩௫)

ஒருதலந்திருவெண்காடென்றுளதுதென்றிசையின்மீதே
யருணடம்புரிவோமங்கேயிருப்பனோரந்தணாளன்
பொருவிலாவேதராசியெனுமவன்போதுவேண்டித்
திருநகர்முடிவிற்சேர்ந்தானவன்றனைச்செறிந்தார்தூதர். (௩௬)

அத்தலத்தனுகவஞ்சியகன்றநின்றழைத்தார் தூத
ரெய்த்துநொந்திரங்கிவேதராசியுமுறையோவென்றான்
சத்தியையனந்தகோடித்தழலினால்வெதுப்பிக்காதில்
வைத்தவருளைவுபோலவிருந்ததெம்மனத்திற்றானே. (௩௭)

பணிவிடைநமக்குச்செய்யும்பரிகலம்பதினெண்கோடிக்
கணமதிலொருவன்சூலக்கையன்மாகாளனென்போன்
இணையிலாநமதுகோபங்கண்டிலகிடுக்கணுமென்
றுணர்விலாவியமன்பேரின்முனிவினாலொலித்தான்சங்கம். (௩௮)

காரணமிதுவேயல்லாற்பிறிதில்லைகவலல்வேண்டா
தாரணிதனிலேயன்பர்வருந்திறற்றலங்களேழு
மாரணமடையுமன்னார்மகிழ்ச்சிநம்பகிழ்ச்சியாகு
மேரணியவருநாமுமிரண்டறவிருப்போமென்றும். (௩௯)

ஆவினைக்கொலைசெய்துண்பார்நாய்க்குணவிடுவார்மற்றுந்
தீவினைமிகுதிசெய்வாராயினுந்திருநீறிட்டார்
நாவிலஞ்செழுத்துச்சொல்வார்தமதுபின்னடந்துகாப்போம்
பூவிளங்குழலிபின்னேதொடர்ந்திடும்புனிதர்முன்னை. (௪௰)

முந்தியவடியான்வாணாசுரனெனுமுதல்வன்வேண்ட
மைந்தர்களுடனேகூடிவாயில்காத்திருந்தோமன்னாள்
சுந்தரன்றனக்காவினத்தொழிலெனுந்தூதுசென்றே
மந்தரஞ்சிறிதுப்பாரோமடியர்தமளவுக்கென்றார். (௪௧)

அத்திமாமுகத்தோன்கந்தனுமைதனக்கரியராவோ
மெத்தியேவணங்குமேழையடியவர்க்கெளியராவோஞ்
சித்தர்சாரணர்தேவாதிதேவர்நம்பணியேநிற்பர்
பத்திசேரடியாரேவும்பணிவிடைபுரிவோம்பற்றி. (௪௨)

மெய்ச்சிலையனையதிண்டோள்விசயனோடெதிர்ந்தபோரி
லச்சிலையடிமேற்கொண்டோமடியவனுதலாலே
கைச்சிலைபுனைந்தவேடனின்றெனக்கரத்தாலீந்த
வெச்சிலைநுகர்ந்தோமின்னமிதனில்வேறெளிமையுண்டோ. (௪௩)

செயலிதுநமக்குவேண்டும்வரமெதுதெரிப்பிரென்று
னயன்முதலிமையோர்சொல்வாரடியர்பேற்கருணைபோலே
துயர்களைந்திடுவதேநல்வரமெனத்தொழுதுபோற்றி
வியனுலகடைந்தாரென்றுமொழிந்தனன்வேதன்பாலன். (௪௪)

வசுவெனுமரசனந்தமுனிவனைவணங்கிச்சொல்வான்
கசிவுடன்வேதராசிகவற்சியெவ்வகையானீத்தா
னிசைவுறுசமனார்தூதரெதுசெயல்புரிந்தாரென்றான்
றிசைமுகன்புதல்வனீதுசெயலெனச்செப்பலானான். (௪௫)

அன்று பெய்ம்மறந்தவேதராசியாரமுதுண்டாற்போ
லென்றுமாஞ்செழுத்தவோதாநலைத்திறலெழுந்துபார்த்தான்
குன்றுகளெனவேதூதர்விழுந்துபூண்குலைந்துதூசு
சென்றதுமறியாராகிக்கிடந்தனர்திறந்தவாயார். (௪௬)

இவரெழுந்திருக்குமுன்னேபோதுவதியல்பென்றெண்ணிப்
பவனமாமெனவேயோடுபோதுங்குர்பின்பார்க்கும்வெட்கு
மவரெனவெளியைக்கண்டுநடுங்குமிவ்வடைவேசென்று
சிவனுறைகோயிற்சேர்ந்தானடுக்குமுந்துயருந்தீர்ந்தான். (௪௭)

வேறு.

பண்காணுமழலைமொழியிடத்துறையும் பெருமானைப்பணிந்தான்றேவர், கண்காணவரியயனுங்காணாததிருவடியுட்கரந்தான்மன்னு, தண்காடுதனிற்றிரியுங் கரிகருமான்முதலாகத் தவஞ்செய்தேத்தும், வெண்காடனிடமானபடியாலேகினைத்ததெல்லாமிசைப்பெற்றானே. ()

வேறு.

மாதவன்கன்றவாறேமயக்கமற்றெழுந்துகாலன்
றூதரானவரும்பார்த்துச்சுவேதகானனத்தினூடும்
வேதபாரகன்றனூடுமவிளைந்ததித்துயரென்றெண்ணிச்
சீதவாய்புலரக்காலுங்கரங்களுந்தெற்றப்போனார். (௪௯)

நாழிகையரையிற்செல்லுநெறியெலாநடக்கமாட்டா
தேழுநாழிகையிற்செல்லப்பயமெனுமிடியினாலே
வீழும்வாளரவமென்னவிழுந்தெழுந்தகன்றுதாங்கள்
வாழூர்புகுந்துகாலன்கால்கண்மேன்மறிந்துவீழ்ந்தார். (௫௰)

புரண்டுவெய்துயிர்த்துவிம்மல்பொருமலாயழுதார்கூற்ற
னிரண்டுதூதரையுங்கையாலெடுத்தணைத்திரங்குவானேன்
மருண்டதென்னுரைப்பீரென்றான்மறையவன்கழுத்தின்மேலே
சுருண்டநீள்கயிற்றைவீசிப்பட்டபாடனைத்துஞ்சொன்னார். (௫௧)

எங்களைதெளிந்தொன்றாகவிரண்டுநாழிகையேமுன்ன
மூங்களைத்திருவெண்காட்டிற்புகுதுமென்றுரைசெய்தேமோ
திங்களையணிவானன்பர்சிவனினுமதிகரன்றோ
வெங்களைநுகர்ந்தாரென்னவிலங்குநீர்பூட்டிக்கொண்டீர். (௫௨)

சிங்கமோர்மசகங்கண்டாற் சினத்திடாவகையேபோலச்
சங்கரன்முனிவுநம்மேலணுகிடாமையினாற்சார்ந்தி
ரிங்கிவையிருக்கவெண்காட்டெல்லையைக்கொடியநாக
வெங்கடுவிடமாக்காண்போநமக்கெதிர்வெள்ளிபோலும். (௫௩)

ஞானவெண்காட்டைப்பார்க்கநடப்பவரதில்வாழ்வார்க்குப்
போனகமுடிக்கையீவார்புகழுவார்க்குறையுளீவார்
தேனகுமலர்க்காவைப்பார்திருப்பணிபுரிவார்க்கேவ
லானவர்சகடத்தேர்வைத்தவர்க்குநாமஞ்சுவோமே. (௫௪)

வேதராசிச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௪-க்குச் செய்யுள் ௨௩0.

---

## வசனம்.

—*—

முன்னொருகாலத்திலே ஒருமுனிவர் குமாரனாகிய வேதராசி யென்னும் பிராமணன் தன்சுற்றத்தாரிருக்கின்ற வூர்க்குச்செல்லும் போது மார்க்கத்தில் இருந்த ஆலமரப்பொதும்பில்தான்கொண்டு போன பொதிசோற்றை வைத்துவிட்டு, அருகிலுள்ள நீர்த்துறை யையடைந்து, ஸ்நானஞ்செய்யும்போது அவ்வாலமரப் பொதும்பி லுள்ள ஒருசர்ப்பமானது நஞ்சைக்கக்கி அப்பொதிசோற்றை நனைத்தது. அதனை அவன்கண்டு வருபோது சர்ப்பமும் பயந்தோடி ற்று. வேதராசி பயந்து பொதிசோற்றை யெடுத்து இதில் நஞ்சுபடிந்ததோ, இல்லையோவென்று சந்தேகித்திருக்கும்போதில் அம்மார்க் கமாய்ச் சென்ற ஓர்பிராமணன் கொடும்பசியினால் வேதராசியை நோக்கி, சுவாமி - எனக்குப் பசிபொறுக்க முடியவில்லை கொஞ்சம் அன்னந்தருவீரென்று கேட்க, உடனே வேதராசி அப்பொதிசோறு முழுதும் அவ்வேதியனிடத்துக் கொடுத்துவிட்டு, சுற்றத்தாரிருக் கும் பதியைச்சேர்ந்தான். கட்டுச்சோற்றை வாங்கியவேதியன் அதில்

நஞ்சுகலந்திருப்பதைப் பெரும்பசியா லறியாமல் உண்டுவிட்டு உள்ளுறிஇறந்தனன். அவன் இறந்த அப்பொழுதே வேதராசியைப்பிரமகத்தி பிடித்துக்கொண்டது. வேதராசி மிகப்பயந்து இப்பிரமகத்திக்குக்காரணம் நாம்கொடுத்த கட்டுச்சோற்றில் நஞ்சு கலந்திருக்க வேண்டும். அந்தப்பிராமணன் பசியினுல் அறியாது புசித்து இறந்திருக்கவேண்டும். அதுவேயாம். என்றுதெளிந்துநடுநடுங்கி, வேதங்களையோதி அவைகளின் பொருளை யறிந்த பிராமணப் பெரியோரிடஞ் சென்று, வணங்கி, தான்செய்த குற்றத்தையும், தன்னைப் பிரமகத்தி பிடித்துககொண்டு, வருத்துவதையுங் கூறிநிற்கதாயினும் அன்பு மிக்க அந்தப்பெரியோர்கள் வேதராசி படுந்துயருக்கிரங்கி, வேதராசியே ! நீபுண்ணிய தீர்த்தங்களிலே மூழ்கிப், புண்ணிய தலத்திலே பலநாள் வசிப்பையாயின், இப்பிரமகத்தி நீங்கும் என்றுகூற, வேதராசி சுவாமிகாள்! அந்தப்புண்ணியதலம் இன்னதென் றடியே னறியேன் அதனைத் தெரிவிப்பீர்களென்று பிரார்த்திக்க, அப்பெரியோர்கள்! அன்பனே, உன்னையடைந்த பிரமகத்தி எத்தலத்தில்நீங்குமோ அத்தலமே புண்ணியத்தலமாகும். அத்தலத்திலே தானே வசிப்பாயென்றார்கள். இப்படி அவர்கள் சொன்ன உடனே வேதராசி நன்றென்றெழுந்து அப்பெரியோர்களுடைய பாதங்களை வணங்கிப், போற்றிக்கொண்டு புறப்பட்டு, கங்கை முதலாகிய தெய்வ நதிகடோறும் ஸ்நானஞ்செய்து, சிவபிரான் எழுந்தருளி யிருக்கும் திருக்கயிலாயம்போன்ற அளவில்லாத தலங்களில் வசித்துப்பெருகுகின்றநல்வினையினாலே காவேரிககரையை யடைந்து, கிழக்குநோக்கிப்போய்ச்சமுத்திரக்கரையைச் சேர்ந்து, அங்கே ஸ்நானம்செய்து கொண்டு மேற்றிசையை நோக்கினன் - நோக்கும்போது வேதராசி யெதிரே தோன்றுந் திருவெண்காட்டைக் கண்டான். கண்டவுடனே அவனைப்பிடித்த பிரமபாதகம் - சூரியன் புகுந்த இடத்தைவிட்டு ஓடும் இருள் போல வாடியோடிற்று. வேதராசி பிரமபாதகம் நீங்கியதைக் கண்டு மிகமகிழ்ந்து. திருவெண்காட்டைத் தெரிசித்த பெரும்புண்ணியத்தினாலேதான் பிரமபாதகம் நம்மைவிட்டுத் தொலைந்ததென்று நினைத்துத், திருவெண்காட்டை நோக்கிப் பரவசனாய்த் தேனுண்ட வண்டு போல உள்ளமகிழ்ந்து பலநமஸ்காரம் செய்துபாடி ஆனந்தக்கூத்தாடிக் கொண்டுவந்து, காவேரிநதியிலும் முக்குளத்திலும் ஸ்நானஞ் செய்து, பேரன்போடு சுவேதவனப் பெருமானையும் பெரிய நாயகியம்மையாரையும் நடேசபெருமானையும் அகோர சிவனாரையும் நமஸ்கரித்துச், சுருதிகளாற்றுதித்து, நாவலம்பெருந்தீவில் யானறியாதத்ல

ங்கள் இல்லையாயினும், இத்தலம்போலப்பாவநீக்குந்தலமில்லையென்று புகழ்ந்து,யானுள்ளவளவும் இத்தலத்திலே சிவபெருமான் செய்தருளும்ஆனந்த தாண்டவத்தைத் தெரிசிப்பேனென்று கருதிச்,செய்ய வேண்டிய கடன்களைச் செய்துமுடித்து,பிராமணர்க்கும் அன்னதானஞ்செய்து ஒப்பற்ற தபோதனர்களுடைய பர்ணசாலையில் வசித்துக்கொண்டு, நாடோறும் தெய்வத்தன்மை பொருந்திய முக்குளத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, சிவபெருமானைப்பூசித்துவருவானாயினன்.

இவ்விதமாக வேதராசி பூசை செய்துகொண்டு வருகின்ற நாளில் வில்வமெடுத்தற்குரிய நல்லதினம்வர, அத்தினத்தில் வேதராசி திருவெண்காட்டின் எல்லைமுடிவில் இருக்கின்ற ஓர்வில்வ மரத்தின் மீதேறி மூன்றுகிளைகளாயுள்ள பத்திரங்களை யெல்லாங் கொய்திடும் பொழுது, கையின்கண்ணே ஆயுதங்களைத் தாங்கிய யமதூதரிருவரைக்கண்டு, பிரமகத்தியென்று நினைந்துகோபித்துப்பார்த்து,இத்தலத்திற் புகுதற்கஞ்சி ஒருருவாய் அந்நாளென்னை விட்டோடிய பிரமகத்தி இந்நாளிருருவாய்வந்து தொடர்ந்ததென்று தோள்குலுங்க நகைத்து,பிரமபாதகமே! நடந்துபோகின்ற இடபத்தின் பின்னேபாலுக்கழுதுகொண்டு செல்வார்போல இன்னும் என்னைப்பின்றொடர்ந்துழல்கின்றாயோ? இங்கே இனிநிற்பையாயின் சுவேதவனப்பெருமானடியார்களுடைய பாததூளியைக் கையாற்பிடித்து உன்னுடைய வலிமையெல்லாந் தொலையும்படி எறிவேன்ஓடுகென்றான். யமதூதர்கள் இப்படிச்சொல்லிய வேதராசியைப் பார்த்து,யாங்கள்யமதூதர்கள் மாதவனே! நீதிருவெண்காட் டெல்லையை நீங்கும் சமயம்பார்த்துக்கொண்டிருந்தோம் இங்கேவா!உன்னையமபுரத்திற்கொண்டுபோய்ச்சேர்க்கவேண்டும். சீக்கிரம் எங்களுடன்வந்தால், மிகுந்தநன்மை செய்வோம். இல்லையாயின் துன்பந்தருகின்ற மார்க்கமாய்க்கொண்டு போய் உன்னைவருத்துவோம். முன்னொரு காலத்திலே திருவெண்காட்டில் இருந்த சுவேதகேது முனிவரைப்பிடித்து,எங்கள் யமனார் பட்டபாட்டை நினைந்து யாங்கள் மறந்தேனும் இத்திருவெண்காட்டில் அடியெடுத்துவைபோம். ஆயினும் யமனுடைய ஆக்கினைக்கும் சிவபெருமானுடைய ஆக்கினைக்கும் தப்பினார் ஒருவருமில்லை. வேதராசியே! போகாத உன்னுயிர் போகக்கடவதென்று உறுத்து வேதராசியின் உயிர் போகும்படி சப்த சமுத்திரங்களும் ஒன்றாய்க்கூடி ஒலித்தாற்போல நகைத்தார்கள். உடனே வேதராசி பொறிகலங்கி

வில்வமரத்தின் கீழ்விழுந்து ஐந்நாழிகையில் மயக்க நீங்கியெழுந்துநின்று யமதூதரைநோக்கித் திருவெண்காட்டெல்லையில் வசிப்பவர்யாவரும் சிவபதத்திருப்பார்கள், உம்முறவு எனக்குவேண்டுவதில்லையென்று சொல்லித்திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடினன். இயமதூதர்கள் அதனையறிந்து, திருவெண்காட்டிற் புகுதாமற், புறத்தினின்றுகொண்டு நீண்டபாசத்தை வீசினார்கள். வேதராசி புலிக்குப்பயந்தோடும் மான்போலோடித் தாயைக்காணாக்கன்றுபோலக் கதறிநெற்றிக்கண்ணனாகிய சுவேதவனப்பெருமானை யழைத்து, அடியார்நினைத்தவற்றைக் கொடுப்பவனே முறையோ. விபூதியும் சர்ப்பகங்கணமும் நிறைந்தபுயத்தையுடையவனே முறையோ, காலகாலனே முறையோ. முடிவில்லாத முதல்வனே முறையோ. என்று மெய்ம்மறந்து விழுந்தான். வேதராசி கூறிய முறையீட்டைச் சுவேதவனப்பெருமான் முருகக்கடவுளுடைய மழலை வார்த்தைபோலத் திருச்செவிசாற்றித், தம்பக்கத்தினின்ற மகாகாளனை நெற்றிக் கண்ணிலே பார்த்தருளுதலும் அம்மகாகாளன் சிவபிரான் திருவுளக்குறிப்புணர்ந்து ஓர்சிறியசங்கத்தை யூதினன். அந்தச்சங்கொலியால்யமன்றலையுடைந்தது. வேதராசியை வருத்திய யமதூதர்கள் காதும் மார்பும் வெடித்துத் துடித்து வீழ்ந்தார்கள். திக்குகள் நடுங்கின. தேவர்களும் இந்திரனும் முனிவர்களும் மற்றுமுள்ளோருஞ் சிவபெருமானைத்தியானித்துத், திருக்கயிலாயத்தையடைந்து, அபயமென்று அஞ்சலிசெய்தார்கள். சிவபெருமான் அஞ்சலிசெய்த தேவர்களைத் திருவருளானோக்கி, நாம் அமைத்தசுகமே உங்களுக்குத் தஞ்சமாயிருக்கச், சஞ்சலம் என்னையென்று, புன்னகைசெய்து சொல்லியருள்வாராயினர்.

தேவர்களே! தென்றிசையிற் திருவெண்காடென்றொரு தலமுண்டு. அங்கே ஆனந்த நிருத்தஞ்செய்வோம். அங்குள்ள நம்மன்பனாகிய வேதராசி அத்தலத்தின் எல்லையிற் சென்று வில்வமெடுக்கும்போது அவனை யமதூதர்கள் வருத்தினார்கள். அவன் நம்மை நோக்கி, முறையிட்டான். அம்முறையீட்டைக் கேட்டவுடனே காய்ச்சியவேலாயுதத்தைக் காதில்வைக்கப்பட்டவர்க் குண்டாகிய வருத்தம்போல நம்மனத்தில் வருத்தந்தோன்றிற்று. அப்பொழுது நமக்குப்பணிவிடைசெய்யும் பதினெண்கோடிப் பரிகலக்கணர்களுள் ஒருவனாகிய மகாகாளனென்பவன் நமதுகோபக்குறிப்பையறிந்து, யமன்மீது முனிவாகிச் சங்கையூதினன். தேவர்களே! இதுதான் சத்தநிக

ழ்ச்சிக்குக் காரணம். நீங்களஞ்சாதீர்கள். பூமியிலே நம்பத்தர்கள் வருத்தமுற்றால் ஏழுலகமும நாசமடையும். அப்பத்தர்களுடையமகி ழ்ச்சி நம்மகிழ்ச்சியாகும். ஆகையால் நமக்கும் அவர்களுக்கும் பே தமில்லை. பசுவினைக்கொலை செய்தாண்பவர்களாயினும் நாய்க்குண விடுவோர்களாயினும், இன்னும் மிகுந்த தீவினைகளைச் செய்வோரா யினும்,நமதுதிருநீற்றைத் தரித்துப்பஞ்சாக்கரத்தைச் செபிப்பார்க ளாயின் இளங்கன்றின் பின்னே செல்லுந்தலையீற்றுப் பசுவைப்போ லஅவர்பின்னே நடந்துகாப்போம். முற்காலத்திலே வாணாசுரனெ ன்னும் அடியவன் வேண்டிக் கொள்ளுதலின் பொருட்டு, மைந்தர்க ளோடுங்கூடி அவனுக்கு வாயில்காத்தோம். நம்தோழனாகிய சுந்தர னுக்கு இழிவென்றெண்ணாமல் தூதுசென்றோம். கண்ணப்பனெச்சி லையுண்டோம். விசையன் வில்லடியுப்பட்டோம். இவைகளைக் காட் டினும் இழிந்தவைகள் வேறில்லை. கணபதிகந்தன் உமைமுதலியவர் களுக்கு அரியராயிருப்போம். நமைவணங்குமேழையடியவர்களு க்கு எளியராயிருப்போம். சித்தர்களும் சாரணர்களும் தேவர்களும் நமக்குப்பணிவிடைசெய்வார்கள். பத்தியையுடையஅடியார்களுக்கு நாம்பணிவிடைசெய்வோம். அடியாரளவில் நாமபெருமையைப் பா ராட்டோம். இதுவேநமக்கு வேலை. உங்களுக்கு வேண்டும் வரங்களை த்தருவோம் கேளுங்கள் என்றுசொல்லி யருளுதலும், பிரமன்முத லியதேவர்கள் வணங்கியெம்பெருமானே! அடியவர்க்குக் கருணைசெ ய்தல்போலக் கருணைசெய்து எங்கள் துயரத்தை நீக்குவதே நல்ல வரமென்று,தொழுதுவிடைபெற்றுத், தத்தம்பதவிகளை யடைந்தார் கள்," என்று அகத்திய முனிவர் சொல்லியருளினர்.

இப்படிச்சொல்லிய அகத்தியமுனிவரை வசுமகாராசன் மீட் டும்வணங்கிச் சுவாமி! வேதராசி எவ்வாறு கவலை நீங்கினன். யமதூ தர்கள் செயல்எவ்வாறாயிற்று? என்றுகேட்கப் பிரம புத்திரராகிய அகத்தியமுனிவர் சொல்வாராயினர். வசுவே! மெய்ம்மறந்து கிடந் தவேதராசியானவன் பஞ்சாக்ஷரத்தை எனறும் ஓதுகின்ற நன்மை யினல் எழுந்து,"யமதூதுவர்கள்பர்வதம்போலவிழுந்து, ஆபரணங் களழிந்ததும்,வத்திரம் விலகியதும அறியாமல்,வாயைத்திறந்துகொ ண்டு கிடப்பதைக்" கண்டு, இத்தூதர்கள் எழுவதற்கு முன்னே யாம் திருக்கோயிலுக்குச் செல்வதே யியல்பென் றெண்ணிக், காற்றைப் போலஓடியும்,பயந்தும், ஒதுங்கியும்,பின்பார்த்தும்,வெட்கியும்,உரு வெளியைத் தூதுவரெனக்கண்டு, நடுங்கியும்சென்று,திருக்கோயிலை

யடைந்து, அச்சமுந்துயரும் நீங்கிப் பெரியபிராட்டியாரை வாமபாகத்துக் கொண்டருளிய சுவேதவனப்பெருமானைப் பணிந்து, அவருடையதிருவடி நீழலையடைந்தான். இயமதூதர்கள் வேதராசிஎழுந்து சென்றபின்பு மயக்கம்நீங்கி,எழுந்துபார்த்து, வேதராசியாலும் வெண்காட்டினாலும இத்துயரம் நமக்கு விளைந்ததென்று நினைத்து, யமலோகத்தை நோக்கி வாய்புலரக் கைகால்கள் பின்ன, இடியொலிகேட்ட சர்ப்பம்போலப்பயந்து வழிகளில் விழுந்தெழுந்து போய்த்தங்கள் அரசனாகிய இயமன்கால்களின் மேல்மயங்கி விழுந்து புரண்டு விம்மிப்பொருமி யழுதார்கள். இப்படி விழுந்தழுகின்ற தூதர்களை இயமனானவன் கையாலெடுத்தணைத்துத்,தூதர்களே நீங்கள் இரங்குமாறென்னை? மயங்கியதென்னை யுரையுங்களென்ன,அவர்கள்வேதராசியின் கழுத்தின்மேலே நீண்டபாசத்தை வீசிப்பட்டபாடுகளை யெல்லாம் சொல்ல,இயமன் அதனைக்கேட்டுத் தூதுவர்களே! எமக்குக் களைதெளிந்து இரண்டுநாழிகையாயின. நாமுங்களைத் திருவெண்காட்டிற் புகுதும்படி சொன்னோமோ? திங்களையணிந்தசிவபெருமானிலும் அவரடியார் மேன்மையுடையரல்லவா? சிங்கமானது கொசுகுடனெதிர்க்காதவாறுபோலப்பரங்கருணைத்தடங்கடலாகியசிவபிரான் உங்களையோர் பொருட்படுத்திக் கோபியாமையால்உயிருடன் இங்குவந்து சேர்ந்தீர்கள். இவைநிற்க நாம் ஆலகாலவிஷத்துக் கஞ்சுவதுபோலத் திருவெண்காட் டெல்லையை அணுக அஞ்சுவோம். அஃதன்றியும் திருவெண்காட்டைத் தெரிசிக்கச் செல்வோர்க்கும் அத்தலத்தில் வாழ்வார்க்கு அன்ன வஸ்திரம் கொடுப்போர்க்கும், திருவெண்காட்டைப் புகழ்ந்தவர்க்கு வீடுகட்டிவைத்தவர்க்கும்,அங்கேதிருநந்தனவனம் வைப்பவர்க்கும், திருப்பணி செய்வோர்க்கும், திருப்பணிசெய்வோர்க் கேவல்புரிவோர்க்கும், திருத்தேர்செய்துவைத்தவர்க்கும், நாம் அஞ்சுவோம். ஆகையால் இவற்றை யறிந்துகொள்ளுங்க ளென்று கூறினன்.

வேதராசிச்சருக்க முற்றிற்று.

# சத்தியநல்விரதச்சருக்கம்

ஆழிகரங்கொடுவீசுவலம்புரியாரசலஞ்சலமேல்
விழவுடைந்தொளிசேர்தரளங்கரைமேல்விரவுந்தனியூ
ரேழுவிடங்கினுமேன்மைவிடங்கெனயாருமகிழ்ந்திடுமூர்
ஞாழல்செருந்திகுராமலர்சிந்தியநாகைவளம்பதியே. (க)

அந்தவளம்பதியாளுநெடுந்தகையகிலதலப்புகழ்வான்
மந்தரமொன்றிருதிண்கவர்கொண்டுவளர்ந்ததெனும்புயவேள்
செந்தபனன்குலதீபனிராசசிகாமணிசெய்முகமே
சந்ததமுந்தவழுதநெடுந்தகைசத்தியநல்விரதன். (உ)

அன்னவனீதிசெயந்நகரத்திடையந்தணரிற்சிலபேர்
பன்னியபஞ்சமதங்களைவிட்டனர்பஞ்சமிபத்தியினன்
மன்னியவாரணமந்திரம்விட்டனர்மந்திரமேநுகர்வார்
கன்னமிடுஞ்சிலகள்வரெனும்படிகரவுபுரிந்துறைவார். (ங)

பச்சமதுத்தசைநித்திரைபோகமதித்தவையஞ்சினுமே
யிச்சைபடைத்துமடந்தையர்கூடவிருட்பொழுதிற்புரிவார்
மெச்சுபகற்பொழுதிற்புலர்சோமவெளுத்திடுமுத்தரியங்
கைச்செறிமுஞ்சிசமித்தொடுநற்றவர்கண்டுதொழத்திரிவார். (ச)

இங்கிவருக்குண்முதற்றிறமானவிழக்குடையானொருவன்
மங்குமயக்கொடகத்திலிருந்தனன்வழிவருதூய்மறையோ
னங்கம்வியர்க்கநடந்தவிளைப்பிலவன்கடையிற்புகுதாக்
கங்கைகொடுத்திடுமென்றுவிழுந்திருகண்கள்சுழற்றினனே. (ரு)

வேறு.

விழுந்துமெய்ம்மறந்ததூயவேதியன்விடாய்க்குத்தீயோ
னெழுந்தொருகலசத்தாலேபுதுமதுவெடுத்துவார்த்தான்
பொழிந்திடுமதுவுட்கொண்டபூசுரனடுங்கித்தன்வாய்க்
கிழிந்திடுதுளிகளொன்றுமின்றியேயெடுக்கலுற்றான். (சு)

சொக்கினன்கொடியோன்வார்த்தமதுவெலாந்துளியொன்றின்றிக்
கக்கினன்மறையோன்முன்னேயரற்றினன்கலுழாநின்றான்
விக்கினனறைந்தான்சென்னிவெடிக்கவேவலரசன்வாயிற்
புக்குநான்படும்பாடெல்லாங்கேளெனப்புகல்வதானான். (எ)

### வேறு.

முன்புறவேடன்றுரந்தவரிப்புறுவருந்தித்
துன்புறவேகண்டுதுடைக்குமதுகாரணமா
வென்புறவேநின்றதசையெத்தனையுண்டத்தனையு
மன்புறவேயீந்தகுலத்தையாகோவையாகோ. (௮)

சித்தமகிழ்ந்தின்பமுறச்செங்கோனடத்தநம
னுத்தமனென்றந்நாளுயிர்கொடுபோகாமையினான்
மொய்த்தமுதியோர்க்குமுதுமக்கட்சாடிபல
வைத்தகுலதீபகனேமன்னாகோமன்னாகோ. (௯)

### வேறு.

கோவெனவரசன்கேட்கக்கூறுமவ்வந்தணாளன்
சேவைபிததலத்திலேயான்செய் திடவருப்போதிவ்வூர்ப்
பாவியோரந்தணாளன்கடையினீர்ப்பானம்வேண்டி
மேவினன்சோபித்தேன்வாய்விட்டனன்மதுவையென்றான். ()

என்னரசரிமைக்கெல்லாமொழியிதென்றிரங்கியேங்கி
மன்னவனிதற்குமாற்றேதெனச்சொலமனுநூல்வல்லோர்
பொன்னிரும்பரக்குநீராவுருக்கிவாய்புகட்டிக்கொண்டாற்
றன்னறிவிலாதேயுண்டபாதகஞ்சமிக்குமென்றார். (௰௧)

இப்படிபுரிந்தாலிந்தவேதியனிறந்துபோவ
னப்படிபுரிவோமன்றேலரசியலழிவதாகு
மெப்படிநமக்குத்தீமைதவிர்க்கலாமினியென்றெண்ணி
மைப்படர்மயக்கநீங்கவதிட்டரைநினைந்தான்மன்னன். (௰௨)

அருந்ததிக்கிறைவனுமணுகியேயரசன்முன்னே
பொருந்தினானவனுநெஞ்சிற்களிப்புடன்பணிந்துபோற்றித்
திருந்துமாதனத்திலேற்றியுரைத்தனன்செயற்கையெல்லாம்
வருந்துவான்கவற்சிநீங்கவதிட்டமாமுனிவன்கூறும். (௰௩)

### வேறு.

நஞ்சராத்திரிசடைநம்பனாண்முகன்
குஞ்சராத்திரிக்கருள்கொண்டன்மூவரும்
வஞ்சராற்றெரிவருஞ்சைவம்வைதிகம்
பஞ்சராத்திரமதமுறையிற்பண்ணினார். (௰௪)

பவமெலாமகற்றியபஞ்சராத்திரம்
புவனமேல்வைதிகமிரண்டும்போற்றினாற்
றவமெலாம்பலித்துமேற்சைவஞ்சாரலாஞ்
சிவசமயத்தினான்முத்திசேரலாம். (௰௫)

ஈனமிலாதநூலியற்கையைப்புவி
வானவர்மன்னவர்வணிகர்சூத்திர
ரானவர்பயிற்றியதன்றியீனருந்
தானவரிராக்கதர்தாமும்பண்ணினார். (௰௬)

யாவருந்தமக்கருங்கதியிலேறினா
ராவல்கொண்டிராக்கதரவுணர்மேன்மையாய்த்
தேவரைநலிந்தனர்தேவர்கூடியே
மூவர்முன்படைந்திவைமுறையிட்டோதினார். (௰௭)

ஆக்கியகடவுளுமயனைமாயனை
நோக்கியொன்றுரைசெய்வானவுணர்நோன்மையுந்
தேக்கியவிராக்கதர்வலியுஞ்சேரவே
போக்கிடும்படிசிலசமயம்பூட்டுவோம். (௰௮)

என்றுகாளாமுகம்வாமமென்பதுங்
கன்றுகாபாலமாமதமுங்கட்டினார்
பொன்றியவருகமும்புத்தநூல்களும்
வன்றிறனெடியமால்வரைந்துகட்டினான். (௰௯)

மலரவன்கொடியசார்வாகமாதியாம்
பலபலமதங்களும்பண்ணினானதி
னுலகுயிரனைத்தும்வீழ்ந்துயர்ச்சியின்றியே
கலகமேபுரிந்துகீழ்க்கதியிற்சேர்ந்தவே. (௨௰)

நற்குலத்தவர்க்கிதுநண்ணலாவதன்
றற்பமுமதுவயின்றவணீக்காணினுஞ்
சொற்பலகேட்கினுந்தோயமூழ்கியே
பற்பலகதிரையும்பார்க்கவேண்டுமே. (௨௧)

காற்றிலேமதுமணங்கலந்துவீசினா
னீற்றிலேமூழ்கியவ்வினையைநீக்கலாஞ்
சேற்றிலேயவருடன்செறியிற்சானவி
யாற்றிலேயொருபகலாடத்தீருமே. (௨௨)

புத்தரையருகரைப்பொருந்தினும்பிழை
யுத்தமநெறியிலேயொழுகலேகடன்
மத்தியமறைத்துணுமறையினோர்தமைச்
சத்தியவிரதனேதறிக்கவேண்டுமே. (௨௩)

கள்ளுணவினர்கொடுநோயர்காணர்க
டள்ளியுங்கோளர்கள்குணகர்சண்டர்க
ளுள்ளருங்குண்டர்களுனருந்துன்
ரெள்ளுனர்சிவாலயமிகத்தல்வேண்டுமே. (௨௪)

மன்னவனவர்களைத்தெரிந்துவண்கிளை
தன்னுடனகரினுந்தவிர்த்தலேகட
னிந்நெறிமுறைசெயாதிருந்தமன்னவன்
றுன்னியநரகிடைத்துளைந்தமுழ்குமே. (௨௫)

மழையறும்வளவயல்விளைவுமாய்ந்திடும்
பிழைவருமாதலாற்பிரிக்கவேகடன்
றழைசெவிமழைமதத்தாரைபாய்கவுட்
கழைசுளிபுகர்முகக்களிற்றுவேந்தனே. (௨௬)

வருணநான்கினுதித்தவர்கண்மந்திரந்
தரணியிலருந்தின்முன்புரிந்ததானமு
மருமறைதவங்களுமழியுமீதலா
லிருணிறைநரகினுமிருப்பரென்றுமே. (௨௭)

காலைபாசங்களாறுகட்டிச்சூதுவ
ராலமாடகமிருப்பரக்குக்காய்ச்சியே
சாலவேயவர்கள்வாய்தன்னிலூற்றுவார்
சூலமார்கனலினுஞ்சுற்றுவார்களே. (௨௮)

பலபதினுயிரங்கற்பம்பற்களின்
மலையெனவழல்களைச்சொரிவர்மார்பினுந்
தலையினுந்தோளினுஞ்சலாகைநாட்டுவா
ரலம்வருசெக்கினிலாட்டுவார்களே. (௨௯)

மற்றுளவாதையும்வகுத்துக்கூறினுற்
சொற்றிடுநாவையுஞ்சுடுமிதன்றியே
செற்றிடும்வினைவிளைற்செவியையாதலாற்
குற்றமானவைகடீர்நெறியைக்கூறுவாம். (௩௰)

புத்தியாலறிந்ததுபொசிக்கவேயறுஞ்
சித்தமீதுணர்விலாவினைக்குத்தீர்வையுண்
டுத்தமதலத்திலேயொழுகினைத்தல
மெத்தலமெனிலுனக்கியம்புவாமரோ. (நக)

வேதவெண்காடெனுநகரின்மேவியே
யாதியாஞ்சிதம்பரமதனிலெய்தினுற்
பூதவேதாளநோய்வருமைபோமகா
பாதகமனைத்தும்வேர்பறிந்துபோகுமே. (நஉ)

முக்குளந்தன்னிலேமூழ்கிக்காவிரி
புக்கசங்கமத்திலும்படிந்துபூவிலே
மிக்கசாய்க்காடரைத்தொழுதுமீண்டுவந்
தக்குளமூன்றிலுமாடவேண்டுமே. (நந)

முண்டிதஞ்செய்துபின்மூழ்கியற்றைநா
ளுண்டியுந்தவிர்ந்தரனுறையுங்கோயில்புக்
கண்டர்நாயகரையுமசலமானையும்
பண்டரங்கனையுமுன்பணிந்துபோற்றியே. (நச)

இகலறவடியருக்கேகமோதனஞ்
சகலமுமுதவிமெய்த்தவமியற்றினு
லகலுமிவ்வினைகளென்றறியக்கூறியே
முகிலிடைவதிட்டமாமுனிவனேகினுன். (நரு)

மறையவன்றனக்குமுன்மதுவைநல்கிய
பொறையிலிதனைநகர்ப்புறத்துநீக்கியே
யறைகழன்மன்னவனந்தணாளனே
டிறைமகிழ்சுவேதகானனத்தினெய்தினுன். (நசு)

அந்தணன்மன்னனையகன்றுகோயிலு
ணந்துமுக்குளத்தினிடையின்மூழ்கியே
யெந்தையையிறைவியையிறைஞ்சியாயிடை
மூந்தியகடனெலாமுடித்துவைகினுன். (நஎ)

நன்பகலொன்றிலேநடுங்கிப்பாதகம்
வன்புடனகன்றதுமன்னர்மன்னனுந்
தன்பெரும்புதல்வனுந்தருமவாசக
னென்பவன்றனையரசுரிமைக்கேவினுன். (நஅ)

தந்தைபால்விடைகொடுதருமவாசகன்
வந்துதன்னகரிடைமருவுஞ்செம்பொனை
யந்தமில்களிற்றினிலளிக்கமன்னவன்
புந்தியின்மகிழ்ந்தரன்பூசைக்கிந்தனன். (௩௯)

பத்தியிப்படிபலபலவுஞ்செய்துபின்
சத்தியவிரதனுங்கதியிற்சார்ந்தன
னுத்தமவசுவெனவுணர்த்திஞன்முனி
முத்தடக்குளத்தியன்மொழியலுற்றனன். (௪0)

சத்தியநல்விரதச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௭ - க்குச் செய்யுள் - ௩00.

---

# வசனம்.

—*—

நாகபட்டினத்திலே சத்தியநல் விரதனென்று ஒரு சோழராசன் இருந்தான். அவன்மநுநீதியோடு அரசுபுரிந்து வருநாளில், அந்நகரத்துப் பிராமணர்களிற் சிலர்,சத்தியினது பத்தியாலே,சௌரம், காணாபத்தியம், கௌமாரம், வைஷ்ணவம், சைவம்,என்னும் ஐந்துமதங்களையும் பழித்துச், சாக்த்தேயமதத்திற் புகுந்து, வேதமந்திரங்களை விட்டு, அவைதிகராய்க்கட்குடித்துக் கொண்டு, கன்னமிடுங்கள்வர்போல மறைந்து திரிவார்கள். அன்றியும் அவர்கள் மச்சம், கள், மாமிசம், நித்திரை, போகம், என்னும் ஐந்தையும் மதித்து, அவையைந்தினும் இச்சைகொண்டு மாதர்கள் தங்களை வந்து கூடும்படி இராக்காலத்தில் அதற்குரியவற்றைச் செய்வார்கள். பகற்காலத்திலே தோய்த்துலர்ந்த சோமனும், உத்தரீயமும், அணிந்து கையிலே தருப்பைப்புல்லையும் சமித்தையும் பிடித்துக்கொண்டு தவத்தினர்கண்டு தொழும்படித் திரிவார்கள். ஒருநாள் - இவர்களுக்குள்ளே முதற்றிறமான இழுக்குடையவனொருவன், கள்ளுண்ட பெருமயக்கத்தோடும் வீட்டின்கண் இருக்கும்போது, பரிசுத்தனாகிய ஓர் பிராமணன், சரீரம் வியர்க்கும்படி வழிநடந்துவந்த இளைப்பினால் அக்கொடியோன் வாயிலிற் புகுந்து, கிழேவிழுந்து, தாகத்தின்பொருட்டு நீர்கொடுமென்று சொல்லிச் சண்சுழற்றினான். இவ்விதமாய்விழுந்துமெய்ம்மறந்த அந்தச்சுத்தவேதியன்தாகவிடாய்க்கு, அக்கொடி

யோனெழுந்து ஒருகலசம் புதுக்கள்ளை எடுத்து அவன் வாயில் வார்த்தான். அக்கள்ளை உட்கொண்ட பூதேவனாகிய அப்பெரியோன் நடுநடுங்கி ஒருதுளிகள்ளாயினும் வயிற்றிற்றங்காமற் கக்கி அக்கொடியவன் முன்கூச்சலிட்டு அழுதுவிக்கிச் சென்னிவெடிக்க அறைந்து அரசன்வாயிலிற் புகுந்து,அரசனே! நான்படும்பாடெல்லாம் கேளென்றுசொல்லலாயினான்: முற்காலத்திலே வேடனாற் றுரத்தப்பட்ட புறுவானது வருந்திவந்து, அடைக்கலம்புகுத, அப்புறுவைக்காக்கும்பொருட்டு, அவ்வேடனுக்குத் தன்னுடம்பின் தசைமுழுதையும் அறுத்துக்கொடுத்த வேந்தன் குலத்திற்பிறந்தமன்னவனே! முறையோ! உயிர்களெல்லாம் இன்பமுறும்படி செங்கோல் செலுத்த, இடமன் உத்தமனென்று அந்நாளிலே உயிர்களைக்கொண்டு போகாமையினால், முதியோர்க்கு மக்கட்சாடி பலவற்றை வைத்த மன்னவன் குலத்திற்பிறந்த அரசனே! முறையோ! முறையோ! வென்று அவ்வந்தணன் முறையிடுதலும், சத்தியநல்விரதன், "அந்தணரே! உமக்குநேரிட்ட துன்பம் யாது? அதனைக்கூறுமென்ன,அவ்வேதியன்மன்னனே! யான் இந்நாகை நகரிலெழுந்தருளியிருக்கும் சுந்தரவிடங்கப்பெருமானைத் தெரிசிக்கவந்தேன். வரும்போது தாகவிடாயினால் இவ்வூரிலுள்ள பாதகனாகிய ஒருபிராமணன் வாயிலிற்சென்று, சோமடைந்தேன். அப்போது அப்பிராமணன் என்வாயிலே கள்ளைவார்த்தானென்று கூறுதலும்,அரசன் அதனைக்கேட்டு, இரங்கிவருந்தி, மநுநூல்வல்லோர்களைப்பார்த்து, இதற்குப் பிராயச்சித்தம்யாதென்றுகேட்க, அவர்கள் பொன்னையும் இரும்பையும் அரக்கையும் நீராய் உருக்கி வாயில்வார்த்துக்கொண்டால் தன்அறிவில்லாமற்கள்ளுண்ட பாதகம் நீங்கும் என்றார்கள். அதுகேட்ட மன்னவன் இவ்வாறுசெய்வோமாகில் இப்பிராமணர் இறந்துபோவார். இதனைச் செய்யாது விடுவோமாயின் அரசியல் அழியும். நாம்எப்படி இத்தீமையைத்தவிர்ப்போமென்று எண்ணித் தன்மயக்கம் நீங்கும்படிக் குருவாகிய வசிட்டமுனிவரை நினைக்க, அவர் அதனையறிந்து அரசன்முன்வருதலும், அரசன் அம்முனிவரை நமஸ்கரித்துத் துதித்து ஆசனத்திலேற்றி நிகழ்ந்தவற்றைக்கூற, வசிட்டமுனிவர் சத்தியவிரதன் கவற்சி நீங்கும்படி சொல்வாராயினர்.

"சத்தியநல்விரதனே! கேட்பாயாக! சிவபெருமானும் பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் முறையே சைவம், வைதிகம், பாஞ்சராத்திரமென்னும்மூன்றுமதத்தையுஞ்செய்தார்கள்.பாஞ்சராத்திரத்

தையும் வைதிகத்தையும்அனுட்டித்தால் அவைகளிலுள்ளதவங்களெல்லாம்பலித்துச் சைவசமயத்தை யடையலாம். சைவசமயத்தினால் முத்தியைச்சேரலாம். இம்மூன்றுசமயத்தையும்பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சூத்திரரும் அனுட்டித்ததன்றி, அநுலோமர்முதலாயினோரும், இராக்கதர்களும், அசுரர்களும் அனுட்டித்து, யாவருக்கும் கிடைத்தற்கரிய கதியில் ஏறினார்கள். இராக்கதர்களும் அசுரர்களும் இம்மதங்களை யனுட்டித்தலால் மேன்மையுற்றுத், தேவர்களைவருத்தத், தேவர்கள் திரிமூர்த்திகளிடஞ் சென்று வணங்கித் துதித்து முறையிட்டோதலும், சிவபிரான் பிரமதேவரையும் விஷ்ணுமூர்த்தியையும்பார்த்து, அசுரரிராக்கதருடைய வலிமைதொலையும்படி சில மதங்களை நாம்செய்வோமென்று சொல்லிக், காளாமுகம், வாமம், காபாலமென்னு மதங்களைக்கட்டினார். விஷ்ணு, சமணம், பவுத்தமென்னுமதங்களைக்கட்டினார். பிரமதேவர், சார்வாகமுதலிய மதங்களைக்கட்டினார். உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் அம்மதங்களில் விழுந்து மேன்மை பெறாதலின்றிக் கலகம்விளைத்துக்கொண்டு கீழ்க்கதியையடைந்தன.

ஆதலால் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரரென்னும் நற்குலத்திலே பிறந்தவர்க்கு இக்கள்ளுண்டல் பொருந்துவதன்று. சிறிதேனுங்கள்ளுண்டவரைக்கண்டாலும், அவர்வார்த்தைகளைக்கேட்டாலும், நீரிலே ஸ்நானஞ்செய்து அநேகந் தீபங்களைத் தெரிசித்தல் வேண்டும். கள்ளினாற்றங்காற்றோடு கலந்து வந்துமேற்படிந்ததாயின், விபூதியினாலே ஸ்நானஞ்செய்தால் அப்பாவம் நீங்கும். கட்குடித்தவரைப் பரிசித்தால் அப்பாவம் கங்கையாற்றிலே ஒருதினம் மூழ்கப்போம் - புத்தசமயத்தையும் சமண சமயத்தையும் அநுட்டித்தலும் பாவமாம். உத்தமமாகிய பஞ்சராத்திரம் வைதிகம், சைவமென்னுஞ் சமயங்களை யனுட்டித்தலே முறைமையாம். வேந்தனே! மறைந்து கள்ளுண்ணும் வேதியர்களை மன்னன் தண்டித்தல் வேண்டும் கள்ளுணவினரும், கொடுநோயரும், காணரும், கோளரும், குணகரும், சண்டரும், குண்டரும், ஊனருந்துபவரும், எள்ளுநரும் ஆகிய இவர்களைச் சிவாலயத்துக்குத் தூரத்தே நீக்குதல்வேண்டும். ஆதலால் அரசன் அவர்களை யாராய்ந்தறிந்து கிளைகளோடும் நகரத்திற்குப்புறம்பே நீக்குதல் முறைமையாம். இம்முறைமையைச் செய்யாதிருந்தால் மழை நீங்கும்; விளைவுகெடும்; அரசன் கொடிய நரகந்தனிலே யழுந்துவான். மேலாகிய நான்குவருணத்திற் பிறந்தவர்கள் கள்ளுண்பார்களாயின், முன்செய்த தானபலன்களும், மந்திரபலன்

களும், தவபலன்களும் கெடும். இஃதன்றியும்இருணிறைந்த நரகத்தையுமடைவார்கள். நரகத்திலே அவர்களை யமதூதர்கள் காலபாசங்களாற்கட்டி, விடத்தையும், இரும்பையும், பொன்னையும் அரக்கையும், காய்ச்சி அவர்கள்வாயிலே வார்ப்பார்கள். அக்கினிநிறைந்த சூலத்தலையில் வைத்துச் சுழற்றுவார்கள். அநேகபதினாயிரங் கற்பகாலம் பற்களிலே மலைபோல அக்கினியைச் சொரிவார்கள். மார்பினுந் தோளினுந் தலையினும அக்கினியிற்காய்ச்சிய இருப்புச்சலாகைகளை நாட்டுவார்கள். செக்கிலிட்டு அரைப்பார்கள். சத்திய நல்விரதனே! அவர்களை யமதூதர்கள் செய்யும மற்றைத் துன்பங்களையும் விரித்துச்சொலலுமிடத்து, சொல்கின்ற நாவையும், கேட்கின்ற காதையுஞ்சுடும். ஆதலாலவைநிற்க இனிப்பாவம் போகும் நெறியைச் சொல்லுவோம். அறிந்து கள்ளுண்டபாவம் அநுபவத்தைக் கொடுத்தே நீங்கும். அறியாது கள்ளுண்ட பாவம் உத்தம தலத்திலே வசித்தால் நீங்குதல் உண்டு. அந்த உத்தமத்தலம்யாதெனில் ஆதிசிதம்பரமாகிய திருவெண்காடேயாம்.

அத்தலத்தையடைந்தால் பூதநோயும், வேதாளநோயும், வறுமைநோயும்போம். மகாபாதகங்களெல்லாம் வேரோடுங் கெடும். அங்குள்ள முக்குளத்திலே மூழ்கிக்காவிரி நதிபுகுகின்றசங்கமத்திலும் ஸ்நானஞ்செய்து சாயாவனேசுரரைத் தொழுது மீண்டுவந்து அம்முக்குளத்திலும் ஸ்நானஞ்செய்தல்வேண்டும். பின்னுள்முண்டிதஞ் செய்துகொண்டு மூழ்கிஉபவாசஞ்செய்து திருக்கோயிலிற்புகுந்து, பெரியவாரண விநாயகரையும சுவேதவனப் பெருமானையும் பெரியநாயகியம்மையாரையும் நடேசப்பெருமானையும் அகோரசிவனாரையும் வணங்கித்துதித்துச், சிவனடியார்க்குப் போசனமும் பொன்னும் ஆடைமுதலிய பலவுங்கொடுத்து மெய்த்தவஞ்செய்தால் இப்பாவம் நீங்கும்" என்றுகூறி, வசிட்டமாமுனிவர் ஆகாயத்திற் போயினர். குருவாகிய வசிட்டமாமுனிவர் கூறியவற்றையெல்லாங்கேட்ட சத்தியநல்விரதமகாராசன், முன்வேதியன்வாயிற் கள்ளை வார்த்த பாதகனை நகருக்குப்புறத்தே நீக்கிவிட்டு அறிவில்லாது கள்ளுண்டபிராமணனோடும் திருவெண்காட்டையடைந்தான். அரசனோடுவந்த பிராமணன்,விளங்குகின்ற முக்குளத்திலும், காவிரிநதியினுமூழ்கிச், சுவேதவனப்பெருமானையும்,பெரியபிராட்டியாரையுந் தொழுதுதுதித்து, அவ்விடத்தேசெய்யவேண்டிய கடன்களையெல்லாஞ்செய்துமுடித்து, வைகுதலும், ஒருபகற்குள்ளே யவனுடைய

பாதகம் நீங்கிற்று. அரசர்க்கரசனாகிய சத்தியநல்விரதன், தன்மூ தன்மைந்தனாகிய தருமவாசகனுக்குத் தன்னரசுரிமையைக்கொடுத்து, நாகையம்பதிக்கனுப்பிவிட்டுத் தான்நாடோறும் முக்குளத்தில் ஸ்நானஞ்செய்து, திருவெண்காட்டரசரைப் பணிந்துகொண்டிருந்தான். தருமவாசகன் தந்தையின் கட்டளைப்படி தன்னகரையடைந்து செங்கோல் செலுத்திக்கொண்டு, அளவில்லாதயானைகளின்மேற்பொன்னையேற்றிப்,பிதாவாகியசத்தியநல்விரதனிடத்தனுப்பச்,சத்தியநல்விரதன் மனமகிழ்ந்து, அப்பொன்களையெல்லாம் பத்தியினால் சுவேதவனப் பெருமான் பூசனையின்பொருட்டுக்கொடுத்து, அளவற்றபணிவிடைகளைச் செய்துகொண்டிருந்து, முத்தியையடைந்தானென்று அகத்தியமகாமுனிவர் வசுமகாராசனுக்குச் சொல்லிப், பின்புமுக்குளமகிமையைச் சொல்வாராயினார்.

சத்திய நல்விரதச் சருக்க முற்றிற்று.

---

# அக்கினிதீர்த்தச் சருக்கம்.

முன்னகுடனென்பவனைமூரியரவாகச்
சொன்னமுனிபின்னுமொருதூயகதைசொல்வான்
தன்னிகரில்வானவர்கடானவர்கண்முன்னாண்
மின்னிலகுபொன்னுலகின்மீதமர்விளைத்தார். (௧)

அன்றமராழிந்தமரரங்கியையழைத்தே
யொன்றுபுரியென்றனருரைத்தருளுமென்றான்
மன்றவெமதொண்பொருளைவைத்திடுகயாமே
வென்றுவரிலிப்பொருளைமீளவுதவென்றார். (௨)

போற்றுவலெனக்கனலிபொற்குவையெடுத்தே
வேற்றுருவுகொண்டுபலமேவியமைவுற்றான்
காற்றெனநடந்தமர்கடந்தமரர்வென்றார்
தோற்றனர்கடானவர்கடுன்பமொடுசென்றார். (௩)

கூடியிமையோர்முதல்கொடுத்தபொருள்கொள்வான்
தேடியழலோனிடைசெறிந்தனர்கடியோ
னோடினனொளித்தனனொளிக்குமதுகண்டே
வாடினர்கணாடினர்கள்வானுலகமெங்கும். (௪)

## வேறு.

சினத்தாருக்குவமையிடுஞ்செங்கனலோ னெழுமுனிவோர்தே
விமார்கள், கனத்தாரஞ்சுமந்துவளர்முலைக்காகவருந்தினன்முற்கால
த்தூடே, மனத்தாலுநினைப்பரியவிமையவர்தம்பொருட்கொடின்று
மறைந்தான்மன்னு, தனத்தாசைபிடித்திழுத்தான்மிக்கவொளிபடை
த்தவர்க்குந்தப்பலாமோ. (௫)

கிளருமொழியந்தகனும்வருணனும்வெள்விடையோனுங்கீழ்பா
லோனு, மளகைநகரதிபதியும்வாயுவுடனிருதிமுதலானபேருங், களை
வுடையகனலவன்போந்திசை நாடிவளைந்துகொண்டார்கண்டார்த
ண்டார், வளருமிருபுயவசுவேயொளியுடையோர்தமையெவரான்ம
றைக்கலாமோ. (௬)

பூந்தார்மென்புயத்தசைய முடியசையவமரரெலாம்புலர்ந்துசொ
ல்வார், சேர்ந்தாரையழிப்பவனேநெறிகளெல்லாங்கருநெறியாச்செ
ல்லுவோனே,வீந்தார்போற்கண்டதெல்லாநுகர்வானேயெழுமுனிவ
ர்விரும்புமாதர், சாந்தாருமுலைவிருமபிக்கழுவாதபழிபடைத்ததறு
கணனே. (௭)

தீயவனென்றறியாமற் றாயவனென்றுனைமிகவுந்தெளிந்தோமு
ன்றன், மாயமெலாம்விடுகவெமதரும்பொருளைத்தருகவென்றுவலி
திற்கொண்டே, காயமிசைக்கண்படைத்தோன்முதலாயதேவரெலா
ங்களிதுப்போனு, ராயபொருளிழந்தமையாலுருவமெலாமழலா
னழலானே. (௮)

எந்நாளுங்கனலாலே பொன்னுருகிக்கரைந்துகரைந்திடுமல்லா
மற், பொன்னுலேகனலுருகிக்கரையுமொருபுதுமையுமப்பொழுதே
கண்டோம், மன்னுவத்தழலவன்கண்சொரிந்தபுனலனைத்தும்வெள்
ளிவடிவமான, வன்னுடொட்டின்றளவுமகங்களுக்காகாதபடியகற்றி
னாரே. (௯)

நம்பிவைத்தபொருட்கவர்ந்தபாதகத்தான்மெலிந்தவெழுநாவி
னனு, மும்பருக்குமறிவரியானஞ்செழுத்தைவிதிப்படியேயுரையாநி
ன்றான், வம்பலர்தேனிதழியினன்கதிரிடத்தேதோன்றிவெள்ளைவன
த்திற்சோதி, யம்பலத்துணடங்காணிலுனக்குவினையகலுமெனவறை
ந்துபோனான். (௰)

ஐயனுஞ்செங்கதிரிடத்தின்மறைந்ததற்பின்சுவேதவனத்தபூலோன்மேவிப், பையவநகாவிரியின்முக்குளத்திற்படிந்துமையைப்பணிந்துபாரோருய்யநடித்தருள்வானைத்தொழுது திருவெண்காட்டிலுறைபெம்மானைக், கையிலொருசிறுமானைத்தரித்தருளும்பெருமானைக்கண்டுவாழ்த்தி. (௰௧)

தன்றடத்தின்கரையிலொரு பன்னசாலையுஞ்சமைத்துத்தவத்தினாலும், பொன்றருமர்ச்சனையாலும்பலகாலங்கழித்ததற்பின்புனிதனுரைத், துன்றியவத்தடங்கரையினிலையாக்கித்தன்பெயராற்றுதித்தான்வன்னி, மன்றுடையான்பழவிடைமேலெழுந்தருளிச்சொரியலுற்றான்வரத்தின்மாரி. (௰௨)

பாதகமுமிலையேதுநுகர்ந்தாலுமுனக்கதனாற்பழியுண்டாகா, வேதநெறியுனக்காகத்தேவருக்குமுகமாகவேள்வியாக, வாதரவாலுனைவணங்குமறையவர்நம்பதமடைவரல்லாதோர்கண், மாதருடன்புணர்ந்ததெல்லாமன்னையரைச்செறிந்ததிலுர்வன்மையாக. (௰௩)

எட்டிலொருபங்காகி யெமதுநெற்றிக் கண்ணாகியிருப்பாயென்று, மட்டதிசை தன்னிலொருதிக்காகவெனவுமொழிந்துபலன்போனான், மட்டவிழுங்குழலிபங்கர்வெண்காட்டைப்பரவியதில்வலஞ்செய்தேத்தித், தட்டறுதன்பதியடைந்தயாவருக்குபசமுடித்துத்தலைமையானான். (௰௪)

அக்கினிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆகச் சருக்கம் ௬ - க்குச் செய்யுள் - ௩௧௪.

---

## வசனம்.

—*—

"வசுபகாரசனே! முன்னாளிலே பொன்னுலகின் கண்ணே தேவர்களும் அசுரர்களும்போர்செய்தார்கள். அப்போரிலே தேவர்கள் தோற்று, அக்கினிதேவனையழைத்து, அக்கினிதேவனே! நீஎங்கள் பொருள்களை வைத்துக்கொண்டு காப்பாற்றுவாயாக. யாங்கள் அசுரர்களை யெதிர்த்துப்போர்செய்யச் செல்கின்றோம். யாங்களே வென்றுவந்தால் இப்பொருளை மீளக்கொடுவென்று ஒப்புவித்தார்கள். அவ்வாறே காத்துத்தருகின்றேனென்று அக்கினிதேவன் பொற்

குவியலைப் பெற்று, வேற்றுவடிவம் பலகொண்டு அடங்கி இருந்தான். தேவர்கள் மிக்கவிரைவோடு சென்று, அசுரர்களைச்செயித்துவந்து கூடி, முன்கொடுத்த பொருள்வாங்குமாறு அக்கினிதேவனிடத்துச் செல்ல, அவன் தேவர்கள் வந்ததறிந்து, ஒடியொளித்தான். அவன் ஒளித்ததைக்கண்டு, இயமனும், வருணனும், ஈசானனும், இந்திரனும், குபேரனுமுதலாகிய தேவர்கள் அக்கினிதேவன் போகின்ற திசையைநாடி வளைந்துகொண்டு, அவனைக்கண்டு, சேர்ந்தாரை யழிப்பவனே! நெறிகளெல்லாங் கருநெறியாகச் செல்வோனே! கண்டவற்றையெல்லாம் புசிப்பவனே! சப்தரிஷிகளுடையபத்தினிமார்களின் தனங்களை விரும்பி, நீக்கக்கூடாதபழியைப் படைத்த தறுகண்ணனே! உன்னைத்தீயவனென்றறியாமற் றூயவனென்று மிகவுந் தெளிந்தோம். உன்மாயமெல்லாம் விடக்கவாய். எமது அரும் பொருளைத் தருவாயாகவென்று வலிதில் அப்பொருளைப் பற்றிக் கொண்டுபோயினார்கள். அக்கினிதேவன் அப்பொருளை இழந்தமையால் உருகியழுதான். அவன்கண்களினின்றுஞ் சொரிந்தநீரெல்லாம் வெள்ளி வடிவமாயின. அதனால் அந்நாண்முதல இந்நாளளவும்வெள்ளியையாகங்களுக்காகாதபடி நீக்கினார்கள்.

பின் அக்கினிதேவன் நம்பிவைத்த பொருளைக் கவர்ந்த பாதகத்தினால் வாடிச், சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தைவிதிப் படியே செபித்தான். சிவபிரான் சூரியனிடத்தே தோன்றியருளி, "அக்கினியே! நீதிருவெண்காட்டிலே பிரகாசம் பொருந்திய சபையின்கண்ணே நாம்செய்யும் திருநடனத்தைத் தெரிசிப்பாயானால் உனக்கு இப்பாவம் நீங்கு"மென்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். சிவபெருமான் றிருவாக்கின்படியே, அக்கினிதேவன் திருவெண்காட்டைச்சேர்ந்து, காவிரியிலும் முக்குளத்திலும ஸ்நானஞ்செய்து, பெரியவாரணப் பிள்ளையாரையும, முருகக் கடவுளையும், சுவேதவனநாதரையும், பெரிய பிராட்டியாரையும், நடேசப்பெருமானையும், அகோரமூர்த்தியையும் நமஸ்கரித்துப் போற்றித் தன் தடாகக்கரையில் ஒருபன்னசாலை செய்து, அதிலிருந்துகொண்டு, தவத்தினாலும் அர்ச்சனையினாலும் பலகாலங்கழித்துப், பின் அத்தடாகக்கரையில் தன்பெயரால் ஒரு சிவலிங்கமூர்த்தியைத் தாபித்துப் பூசித்தான். சுவேதவனப்பெருமான் இடபவாகனமேற்கொண்டெழுந்தருளிவந்து, அக்கினிதேவனை நோக்கி "அக்கினியே! உன் பூசனைக்கு மிக மகிழ்ந்தோம். நீ எதைப் புசித்தாலும் உனக்குப் பாவமும்

பழியுமில்லை. வேதநெறி யுனக்கேயாகுக. தேவர்களுக்கு உன்முகமாக யாகங்கள் நடக்குக. அன்போடு உன்னை வணங்கும் பிராமணர்கள் நம்பதத்தையடைவர்கள். உன்னை வணங்காத பிராமணர்கள் மனைவியரைப்புணர்ந்த தெல்லாம் தாயைப்புணர்ந்ததினும் கொடிதாகுக. நீ நம்முடைய அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகியும் நெற்றிக்கண்ணாகியும் விளங்குவாயாக. அட்டதிக்கில் ஒருதிக்கு உனக்காகுக" என்று வரங்களைக் கொடுத்து மறைந்தருளினார். அக்கினிதேவன் திருவெண்காட்டை வலஞ்செய்து துதித்துத் தன்பதியையடைந்து, யாவருக்கும் யாகங்களை முடித்துத் தலைமை பெற்றான்.

அக்கினிதீர்த்தச் சருக்கமுற்றிற்று.

---

# சந்திரதீர்த்தச் சருக்கம்.

வன்னிதடத்தின்பெருமைவிரித்துரைக்க மனமகிழ்ந்தவசுவர்மன்ன, னின்னமொருதடத்தியல்புமொழிந்தருள்வாயெனமுனிவனிசைப்பான்முன்னே, யன்னமிசைவருவார்க்குமனத்தினில்வந்துதித்தவரீரைந்துபால, ருன்னுமிந்தப்பதின் மருக்குளத்திரியென்றொருமுனிவனுயர்ச்சியானான். (க)

வேறு.

சந்திரனத்திரிதனதுகண்ணிலே
வந்தனன்றந்தையுமனமகிழ்ச்சியாய்
முந்தியவாரணமுறைவழாமலே
யைந்திருகருமமுமடைவிற்பண்ணினான். (உ)

அவியுணுமமரருக்கமுதுநல்கென
நவிலுதல்போலவின்னமுதுநல்கினான்
சிவனதுசிகாமணியாகுஞ்செம்மலென்
றுவகையிற்சிகாமணியொன்றுசூட்டினான், (ந)

மலர்கொள்செவ்வந்திமாமாலையானெனத்
தொலைவில்வெண்டாமரைமாலைசூட்டினா
னுலவுமீரெண்கலையுடையனென்றவற்
கலகிலெண்ணெண்கலையறிவித்தானரோ. (ச)

மட்டிலாமகிழ்ச்சியால்வளர்த்துமைந்தனைச்
சிட்டியென்றுரைத்தனன்றிருவெண்காட்டிலே
கட்டியமாசுணக்கச்சையான்பதங்
கிட்டினலவ்வரங்கிடைக்குமென்றனன். (௫)

சொல்லியதந்தையைத்தொழுதுதானுறை
யெல்லையினகன்றுகாவிரிபுக்கெய்தியே
நல்லவெண்காட்டினணுகிமுக்குளத்
தொல்லையிற்படிந்தரனுமையைவாழ்த்தினன். (௬)

சோமபுட்கரிணியின்மருங்கிற்சோதியா
நாமனைச்சோமநாயகனைநாட்டினன்
றாமரையுற்பலஞ்சாதிசெண்பகப்
பூமலர்பலகொடுபூசைபண்ணினன். (௭)

ஒருபதினாயிரம்வருடமூழொழித
தருமையிற்பெருந்தவமனைத்துமபண்ணினன்
றிருவுளமகிழ்ந்தரன்சித்தர்சாரண
ரிருமருங்கினும்வரவேற்றிலெய்தினன். (௮)

போற்றினன்மகரன்போற்றுவான்றனை
யேற்றினன்மிகமகிழ்ந்தியம்புவானுனக்
காற்றல்சேர்வீரமுமழகுமாண்மையுந்
தொற்றமுமனேகரச்சுடருநல்கினேம். (௯)

பணிவுடனமரர்தம்பசியுநீக்குவா
யிணையிலாநமதுமெய்யெட்டொன்றாகுவாய்
மணிமுடிதனிற்சிகாமணியுமாய்த்தின
மணியுடனமதுகண்மணியுமாகுவாய். (௰)

எனச்சொலியிவன்றனக்கிராசவேள்வியும்
வனப்புடனடத்துவிமணமுஞ்செய்வியென்
றனப்பரியவனுடனறைந்துபோயினன்
றனைத்தொழுமவர்க்கெலாந்தளர்ச்சிநீக்குவான். (௰௧)

உடுபதிதனக்குமூவொன்பதாகிய
மடநடைமகளிரைமணமுங்கூட்டுவித்
தடலுறுமகமுடித்தருளிவேதியன்
றடமிகுசத்தியவுலகிற்சார்ந்தனன். (௰௨)

அத்திரிகண்ணில்வந்தான்கண்ணனவன்
வித்தகமாட்டந்துதன்னுலகின்மேவியே
சித்தமன்றேழமைகொண்டுதேவியர்
முப்பத்தணிமுகிழ்முலைமுகட்டின்மூழ்கினான். (௰௩)

மாமதியிப்படிமயங்குநாளிலே
தீமதிமேவிடக்குருவின்றேவியைத்
தூமதிமுகத்தியைத்தொடர்ந்துகூடினான்
காமனுமிரதியுங்கலந்ததென்னவே. (௰௪)

சீதளவிமகரன்குருவின்றேவியை
யேகமிறன்னகத்திடையில்வைத்தன
னாதியிற்குருவுடன்படித்ததாகம
மாதுடன்படித்ததுமதனவேதமே. (௰௫)

இந்திரபுரோகிதனிமையவர்க்கெலாஞ்
சந்திரன்கொடுமையத்தனையுஞ்சாற்றின
னந்தரதலத்திடையமரர்கூடியே
வந்திவையுரைத்தனர்மகபதிக்குமே (௰௬)

வாசவன்றினகரர்வசுக்கள்வானவர்
தேசிகன்செருத்துணையாகச்சேர்ந்தனர்
நாசமிறயித்தியரரக்கர்நாகரும்
பூசலில்விமகரன்றுணைக்குப்போயினர். (௰௭)

பெருவரங்களைமுனம்பெற்றபெற்றியா
லிருவரும்பொருதனரெல்லையற்றநா
ளொருவருமிடைந்திலருலகுதீய்ந்தது
பருவரல்கண்டுதான்பதுமன்றோன்றினான். (௰௮)

போரினைநிறுத்தியேபுண்டரீகனுந்
தாரையைவிடுகெனச்சசிக்குக்கூறினான்
பூரணவிமகரன்பொருந்தவல்லனோ
மாரனங்கையிற்சிலைவளைவுகண்டுமே. (௰௯)

வானவர்போரையும்வளைந்துகொண்டெதிர்
தானவர்போரையுந்தடுப்பதன்றியே
தேனுறுமலரவர்க்கெனினுந்திண்கொடி
மீனவர்போரினைவிலக்கலாகுமோ. (௨௰)

பொதியவிழ்மலரவன்புகன்றசொற்கொளா
மதியவனுடன்படான்மறுத்துக்கூறினான்
பிதிர்படுகுபேரனும்பேரனாதலால்
விதியவன்பின்னருள்விளம்பலுற்றனன். (உக)

கவிமகன்வெள்ளிபாற்கற்றதண்டகன்
கவிமகன்மகளுடன்கரந்துகூடினா
ன்வனொருசாபமிட்டனனத்தண்டக
னவமுறநாடுமாரணியமானதே. (உஉ)

உரிமையிற்புணர்ந்தவரோன்பதிற்றுமூன்
றரிவையருனக்குளரமுதப்போலுவார்
பருவமும்வளமையும்பயிர்ப்புமுள்ளவர்
திருமகளுருவமுஞ்சீருப்பூண்டவர். (உ௩)

கலந்துடனிருக்கவுங்கசிவுறாதுநீ
பலந்தருதேசிகன்பன்னிக்காவதே
னலந்திகழ்பசுங்கழைநடுவினிற்குபவே
யுலர்ந்ததோர்நாணலையுவந்தெடுக்குமே. (உச)

என்றிவையுடன்படவியம்பினனிவ
னென்றியவிமகரனுயிரைநீக்கியே
நின்றவர்போலவடனைநீக்கினான்
சென்றவடேசிகனகத்துச்சேர்ந்தனள். (உரு)

குருமனையிடத்தினிலுறையுங்கோல்வளை
கருவயிறறிலகியகாலமாதலா
லருவெனுமருங்குல்கண்டறியலானது
திருமுகமண்டலந்திங்கள்போன்றதே (உசு)

கலவியிலிலகியகலைமதிப்பிரான்
றலையளிபெய்துறத்தழுவுநாளிலே
நிலவொளிதழும்புறநின்றபோலிவள்
விலகருமேனியும்வெண்மையானதே. (உஎ)

பனிமதியுரத்தினிற்பகலிராவெலாந்
தனதடமழுந்தவேதைத்தபோதினி
லனையவனடிக்களங்கடுத்ததாமெனக்
கனதனமுகங்களுங்கருமையானவே. (உஅ)

கிளர்தருபுதனவக்கிரகத்தொன்றென
விளைதலையறிந்துதான்வினவுவோமென
வளவறுகரியபாம்படுத்ததாமென
வொளிர்தருமுதரமீதுரோமபந்தியே. (௨௯)

கண்டனன்றேசிகன்கனன்றுநோக்கியே
யெண்டரும்பிறன்பொருளிதனைநீக்கென
விண்டுரைமொழிந்தனன்வெகுண்டுதாரையு
மண்டனில்விடுத்தனள்வயிற்றின்கர்ப்பமே. (௩௰)

மைந்தனதெழுச்சியும்வளமுங்கண்டவ
னிந்திரபுரோகிதனெடுத்துக்கொண்டனன்
சந்திரனிடையிலேதடுத்துவாங்கினான்
கந்தரமுழக்கெனக்கலகமிக்கவே (௩௧)

அதிர்ப்பதுதவிர்த்தயனவளைநோக்கியின்
றுதித்தநின்மதலையார்க்குரியனென்றனன்
மதித்துளநாணினாண்மதலைகண்டுநான்
விதிக்கவோவுண்மையைவிளம்புகென்றனன். (௩௨)

சாபமேயிடவருந்தனயன்வெவ்விய
கோபமேதடுத்தயன்கூறுவான்குல
தீபமேபன்னியர்திலதமேயினிப்
பாவமேவிடாதுமெய்பகருகென்றனன். (௩௩)

கற்புடைமடந்தைதன்மகனைக்கைக்கொடு
நிற்பெறுதாதையுநிலவனென்றன
ளற்புதங்கண்டவன்புதல்வற்கந்தண
னற்புதனென்றொருநாமம்பண்ணினான். (௩௪)

மருவியபாலனைப்பற்றிமாமதி
யிரவியையேந்தியதென்னவேந்தியே
பரிவுடன்வளர்த்தனன்பயின்றதாரையைக்
குரவனுமகத்தினிற்கொண்டுபோயினான். (௩௫)

தக்கதேசிகன்புணர்தாரையென்பவள்
ஒக்கவேமுயங்கியவிழுக்கையுன்னியே
துக்கசாகரத்தினிற்றுளைந்துமூழ்கினான்
மிக்கசாகரத்தினிலுதிக்கும்வெண்மதி. (௩௬)

விண்ணினுமொருமொழிவிளம்புமிந்துவே
பண்ணியகொடுவினைபாறவேண்டினா
லெண்ணிடுஞ்சுவேதகானகத்திலெய்தினாற்
புண்ணியமிகவரும்பாவம்போகுமே. (௩௭)

நம்புககடிதினினடக்கவென்றது
சம்புவின்சரணமேசரணமாய்நினைந்
தம்புலியெனுமவனணைந்துசேர்ந்தனன்
செம்புலியதனினான்றிருவெண்காட்டையே. (௩௮)

அடைந்துகாவிரியினிலரன்கண்ணீரினிற்
படிந்துகைதொழுதருந்தவங்கள்பண்ணினான்
விடந்திகழ்மிடற்றினான்வெள்ளையேற்றின்மேன்
மடந்தையுந்தானுமாய்வந்துதோன்றினான். (௩௯)

தொழுதுளமகிழ்ந்தனன்சுருதிபாடினா
னிழுதெனவுருகினானிந்துவென்பவன்
மழையெனமதிக்குநல்வரங்கள்சிந்தினான்
விழுதெனுஞ்சடைமிசைவெள்ளந்தாங்கினான். (௪௰)

சொல்லரும்பாதகக்கடலுந்தூர்த்தன
மெல்லையிலின்பமேயென்றுமீந்தன
மல்லியந்தடத்துநீரருந்தினார்தமக்
கொல்லையிற்சிறுவர்வந்துதிப்பரென்றனன். (௪௧)

மார்கழிப்பௌரணைமாசிப்பூரணை
சோர்வறுகார்த்திகைச்சோமவாரநாள்
ஏர்மலிகிரணநாளிதனின்மூழ்கினா
லார்தருபரிமகமயுதமொக்குமே. (௪௨)

எனவருள்செய்துமையிறைவனேகலு
மனமிகமகிழ்ந்துமாமதியுந்தன்பதி
தனிலினிதடைந்துவெண்டாரகைக்கெலாம்
புனிதநற்றலைமையேபொருந்திமேவினான். (௪௩)

சந்திரதீர்த்தச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௭ - க்குச் செய்யுள் - ௩௨௭.

## வசனம்.

—*—

இவ்விதமாக அக்கினி தீர்த்தத்தின் பெருமையை அகத்திய முனிவர் சொல்ல, வசுமகாராசன் கேட்டு, மகிழ்ந்து, சுவாமி! இன்னுமொரு தடாகத்தின் பெருமையை உரைத்தருள வேண்டுமென்றுகேட்க, அவ்வகத்திய முனிவர் சொல்வாராயினர். வசுவரசனே! பிரமதேவருடைய மனத்திற்றோன்றிய புத்திரர் பதின்மருள் ஒருவராகிய அத்திரிமுனிவருடைய கண்ணிலே சந்திரன் வந்து பிறந்தான். அத்திரிமுனிவரும் மிகமகிழ்ந்து, வேதவிதிப்படி பத்துக் கருமங்களையுஞ் செய்து புதல்வனாகிய சந்திரனை வளர்த்து, அச்சந்திரனைப்பார்த்து, மைந்தனே! நீதிருவெண்காட்டிற் சென்று, சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து வரம்பெற்றுச் சிருட்டி செய்வாயென்று கூறினர். சந்திரன் தந்தைசொற்படியே, திருவெண்காட்டையடைந்து காவிரியினும் முக்குளத்தினும் ஸ்நானஞ் செய்து, சுவேதவனப்பெருமானையும்பெரியநாயகியம்மையாரையும் நடேசப்பெருமானையும் அகோரமூர்த்தியையும் நமஸ்கரித்துப் போற்றிச், சந்திரதீர்த்தக் கரையிலே சோமநாயகரைத் தாபித்துத், தாமரை செங்கழுநீர் சாதி சண்பகம் முதலாகிய பல மலர்களைக் கொண்டு பூசித்துப், பதினாயிரவருடம் தவஞ்செய்தான். சுவேதவன நாதர் இடபவாகனமேற்கொண்டு வெளிப்பட்டுச், சந்திரனை நோக்கி அன்பனே! உன்தவத்திற்கு மிகமகிழ்ந்தோம். உனக்கு ஆற்றல் சேர்ந்த வீரமும், அழகும், ஆண்மையும், தோற்றமும், மனத்திற்கு மகிழ்ச்சியைத தருகின்ற கிரணமுங் கொடுத்தோம். தேவர்களுடைய பசியை நீக்குவாய். தினமணியாகுவாய். நம்முடைய அட்ட மூர்த்தங்களில் ஒன்றும் திருமுடியிற் சிகாமணியும் கண்மணியும் ஆகுவாய், என்று பலவரங்களைக்கொடுத்தருளிப், பிரமாவை நோக்கிப், பிரமனே! இச்சந்திரனுக்கு இராசசூய யாகமும் விவாகமுஞ் செய்வியென்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். பிரமதேவர் சிவபெருமான் றிருவாக்கின்படியே சந்திரனுக்கு அசுவதி முதலாகிய இருபத்தேழு பெண்களையும் விவாகஞ் செய்வித்து, இராசசூய யாகத்தையும் முடித்துத் தம்முலகஞ்சேர்ந்தார். சந்திரன் மேன்மை பெற்றுத், தன் பதியையடைந்து, மன்மதனைத் தோழமை கொண்டு, தேவிமார்களுடைய முலைமுகட்டில்மூழ்கிப் போகங்களை யனுபவிப்பானாயினன். இப்படி

இன்பமனுபவிக்கு நாளில் மாமதியானவன், நீதியை விட்டதனால் காமனும் இரதியுங் கூடினாற்போலக் குருமனைவியாகிய தாரையைக் கூடி அவளைத் தன்னில்லத்தழைத்து, வைத்துக்கொண்டான். சந்திரன் செய்த கொடுமைகளைக் குருவாகிய வியாழ பகவான் தேவர்களுக்குச் சொல்லுதலும், தேவர்கள் இந்திரனிடத்துக்கூற, உடனே சந்திரனோடு போர்செய்தல் குறித்து, இந்திரனும், சூரியர்களும் வசுக்களும் மற்றுமுள்ள தேவர்களும வியாழபகவானுக்குப் போர்த்துணையாகச் சென்றார்கள். சந்திரன் இதனையறிந்து, அசுரர்களையும், இராக்கதர்களையும், நாகர்களையும் போர்த்துணையாகச் சேர்த்துக்கொண்டுவந்து, எதிர்ந்தான். இருபக்ஷத்தார்களும் அளவில்லாதநாட்போர்செய்தும், பெரியவரங்களை முன்னே பெற்றிருக்குந் தன்மையால், ஒருவராயினுந் தோற்றிலர். உலகம் அப்போரினால் வாட்டமடைகின்றதைப் பிரமதேவர்கண்டு, அவ்விடத்தே தோன்றி, யுத்தத்தைநிறுத்தித், தாரையை விடுவாயாகவென்று சந்திரனுக்குச் சொல்லுதலும், சந்திரன் அதற்குடன்படாது மறுத்துக் கூறினான். சந்திரன் பேரனாதலினால் பிரமதேவர் பின்னும் சொல்வாராயினர் - சந்திரனே! சுக்கிரனிடத்தே கல்விகற்ற தண்டகன் அச்சுக்கிரன்மகளைக் கரவிற்புணர்ந்தான். அதனைச் சுக்கிரனறிந்து சபித்தலும், அத்தண்டகன் கேட்டையடைந்தான், அவனுடைய நாடும் காடாயது. இதனையறிவாயாக. நீ விவாகஞ்செய்துகொண்ட இருபத்தேழு மங்கையர்களும் அமுதம் போல்வாராயும், பருவமும் வளமையும் பயிர்ப்புமுள்ளவராயும், திருமகள்போல உருவமும் சீரும் உள்ளவராயும் உன்னையகலாது கலந்திருக்கவும் நீ அவர்களிடத்தே யன்புவையாமல், ஆசாரியன் மனைவியிடத்தே ஆசைசெய்வதானது, கரும்பின் மத்தியில் நிற்கின்ற காய்ந்த நாணலை விரும்பிய தொக்கு மென்று, உடன்படும்படிப் பிரமதேவர் கூறினார். இப்படிப் பிரமதேவர் சொல்லிய வார்த்தைகளைச் சந்திரன் கேட்டுத், தாரையை விடுத்தான். தாரையும் கருப்பத்தோடு வியாழபகவானிடத்திற் போயினாள். தாரைவயிற்றி லிருக்குங் கருப்பத்தை வியாழபகவான் கண்டு கோபித்துத், தாரையே! இக்கருப்பம் பிறன் பொருளாகும். இதனை விடுவாயென்றுகூற, அவளும் கோபித்துத், தன்வயிற்றிலிருந்த குழந்தையைப் பூமியில் விடுத்தாள். பூமியில் விடுத்த அம்மைந்தனது எழுச்சியையும் அழகையுங்கண்டு விருப்பமுற்று, வியாழபகவான் எடுத்துக்கொள்ளுதலும், சந்திரன் அதனையறிந்துவந்து தடுத்து வாங்கினான். அப்பொழுது [illegible]

பிரமதேவர் அவ்விடத்தே தோன்றிக், கலகத்தை நீக்கித், தாரையை நோக்கி, இன்றுபிறந்தசின் மைந்தன் யார்க்குரியன்? சொல்வாயென்ன, அவள் ஒன்றுஞ்சொல்லாது நாணி நின்றாள். அதனை அம்மைந்தனறிந்து, தாயே! நீ உண்மை கூறுயாயின் உன்னை யான் சபிப்பேனென்றான். சாபமிட வருகின்ற புத்திரன் கோபத்தைப்பிரமதேவர் தடுத்துப், பின்னுந் தாரையை நோக்கிக், குலதீபமே! பன்னியர்திலகமே! இனிப்பாவ மேவிடாது உண்மையைச் சொல்வாயென்னலும், தாரைதன் மகனைக் கரத்தி லேந்திக்கொண்டு மைந்தனே! உன்னைப் பெற்றபிதா சந்திரனென்றாள். பிரமதேவர் அப்புத்திரனுக்குப் புதனென்று பெயரிட்டார். சந்திரன் புதனைக் கையிலேந்திக்கொண்டுபோய்த், தன்னிருப்பிடத்தைச் சேர்ந்து, அன்போடும் வளர்த்தான். வியாழபகவானுந் தாரையைத் தன்னில்லத்திற் கழைத்துக்கொண்டுபோயினார். பின்பு சந்திரனானவன் ஆசிரியன் மனைவியாகிய தாரையைப் புணர்ந்த கொடும்பாதகத்தை நினைந்து, வருந்தும்போது ஆகாயத்தில் ஒருவாக்குத்தோன்றிச், சந்திரனே! நீசெய்த கொடும்பாவம் நீங்கவேண்டுவையாகில், திருவெண்காட்டை யடைவாயாக. அடைந்தால் புண்ணியம் மிகவுமுண்டாம். பாவம் நீங்கும். இதனை நம்பி விரைவில் நடக்குக. என, சந்திரன், இவ்வாகாய வாக்கைக் கேட்டவுடனே சுவேதவனப் பெருமான் றிருவடிகளையே புகலிடமாக நினைந்து, திருவெண்காட்டைச் சேர்ந்து, காவிரியாற்றினும் முக்குளத்திலும் மூழ்கிச், சுவேதவனப் பெருமானையும் பெரியநாயகியம்மையாரையும் நடேசப்பெருமானையும் அகோர மூர்த்தியையும் வணங்கிப் போற்றி அரியதவங்களைச் செய்தான். சுவேதவனப் பெருமான் பெரியநாயகி யம்மையாரோடும் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளி வந்து, சந்திரனே! உன்தவத்திற்கு மிகமகிழ்ந்தோம். உன்னுடைய கொடும்பாதகத்தை நீக்கினோம். அளவில்லாத இன்பத்தை என்றும் உனக்குக் கொடுத்தோம். உன்தடாக நீரை அருந்தினார்க்குச் சற்புத்திரப்பேறுண்டாம். மார்கழிப் பவுரணையிலும், மாசிப்பவுரணையிலும், கார்த்திகைச்சோமவாரத்திலும், கிரகணகாலத்திலும் இத்தடாகத்தில் மூழ்கினார்க்குப் பதினாயிரம் அசுவமேதப்பலன்கிடைக்கும் என்றுவரங்கொடுத்து மறைந்தருளினார். சந்திரன் மனமகிழ்ந்து, தன்பதியை யடைந்து, நக்ஷத்திரங்களுக் கெல்லாந் தலைமைபெற்று விளங்கினான்.

சந்திரதீர்த்தச் சருக்க முற்றிற்று.

# ஆதித்த தீர்த்தச் சருக்கம்

தரைக்கதிபதியேயென்றுசாற்றினனவனைவேந்த
னிரக்கமாயிரவிதீர்த்தத்தியல்பையுமுரைப்பீரென்றான்
வுரைக்குறுமுனிவன்கூறுமன்னவாமுன்னமேயோ
ரரக்கனிப்புவிகளேவாழ்ந்தானவன்பெயர்வித்துன்மாலி. (க)

உள்ளுணர்தவங்கள்செய்யவுலகெலாந்தேடித்தேடி
வெள்ளையம்பலத்தின்மேவித்தவஞ்செய்தான்வித்துன்மாலி
வள்ளலும்விடையிற்றோன்றிமகிழ்ந்தனன்வரங்கேளென்றான்
பிள்ளைவெண்பிறையான்றாளிற்பணிந்திவைபேசலானான். (உ)

வெய்யவனையேபோலவிளக்கமுபவனைப்போலச்
செய்யமால்வரையைச்சூழ்ந்ததேருமொன்றளிப்பாயென்றா
னையனுமரக்கர்கோவுக்காயிரங்கதிருஞ்சோதி
வையமும்வானுஞ்சூழும்வரங்களுமளித்துப்போனான். (ங)

செஞ்சுடர்ப்பரிதிசூழுந்திசைக்குமாறானகோணத்
தெஞ்சலிறனதுதேர்கொண்டிருளெலாமகற்றாநின்றான்
மஞ்செனத்திணிந்துநின்றவிருளெலாமாய்ந்துபோன
வைஞ்செழுத்துரைப்பாருள்ளத்தாணவவிருளாமென்ன. (ச)

முளரிபோதவிழ்ந்துகண்ணீருகுத்தனமுகைவிடாமற்
குளிரவாயொருகாலத்துந்திறந்திலகுமுதராசி
தெளிவிலாருறவின்கண்ணுமருளிலார்திருவின்கண்ணுங்
களவினார்மனத்தின்கண்ணுமொளித்தனகங்குற்காடு. (ரு)

காசினிதனிலேபோனகங்குலிப்படிபோகாம
னேசமாய்விதைக்குமேலேநிறுத்திவைத்ததுவேபோல
வோசைசேருயிரைக்காக்கவுடலைவிற்றுணவுகொள்ளும்
வேசிமார்மனங்கடோறுமிருந்தனவிரிந்தகங்குல். (சா)

சோகமுந்துயருமின்றித்துணையுடன்பிரிப்பாரின்றிக்
கோகமும்பெடையுங்கூடியிருந்தனகுறைவில்லாதே
மாகமீதுடுக்கடோன்றுமொழிந்தனமாலைகாலை
யேகமாயளவிடாதேயிருந்தனபகலதாகி. (எ)

கன்மமானவைகட்கெல்லாங்கரியுமாய்க்கண்ணுமாகி
நன்மதிதானுமாகியுலோகநாயகனுமான
தொன்மைசேர்கதிரோற்கிதுபொழிந்தனர்துறக்கத்தோர்கள்
வன்மையாற்கறுத்துப்பானுமுடுக்கினன்வயிரத்தேரை. (௮)

எதிர்தரவெதிர்ந்துவெய்யோனிராக்கதனுடலமெல்லாங்
கதிரினாற்கொளுவிவெய்யகணைகளாற்றுளையாநின்று
னதிருமோராழித்திண்டேரக்க றிவீழ்ந்தா
னதிரியாய்த்துகளாய்ப்போனதோரியவருநீணத்திண்டேர். (௯)

விண்ணவர்முனிவர்போற்றவெய்யவன்மகிழ்ச்சியாகிப்
பண்ணுறுபரித்தேரூடுதிரிந்தனன்பண்டுபோல
மண்ணிடையிருந்தவித்துன்மாலியிப்பதியிலெய்தி
யெண்ணருங்காலம்பூசைபுரிந்தனனிறைவன்றாளில். (௰)

அருளுடையிறைவன்றோன்றியன்பனேயஞ்சேலஞ்சே
லிருளுடைகதிரோனாகியெழுபரித்தேரிலேறி
மருளறவுலாவுகென்றுவரங்கொடுத்தழல்வெற்பாகி
யுருளுடைபிரவித்தேரையழித்தனனுங்காரத்தால். (௰௧)

தேரினுமிழிந்துமுன்னேசெய்தநல்வினையாலிந்தச்
சூரியதடத்தின்மூழ்கிக்கோயிலைச்சூழ்ந்துவீழ்ந்து
பாரினிலிருகான்முக்காற்புகழ்ந்துபன்மலருஞ்சாத்தி
யோரிலிங்கமுந்தன்பேராலமைத்தனனுலகம்வாழ. (௰௨)

ஆலயமருங்கிற்றன்பேராகியதடத்திற்பன்ன
சாலையுஞ்சமைத்துமிக்கதவம்பலபுரியாநின்றான்
மேலிடுந்தவத்தின்வெம்மைபொறுத்திலகனைத்துவெப்ப
மாலயன்மகவான்றேவரனைவரும்வருத்தமானார். (௰௩)

சன்னிதிமருங்கிற்சார்ந்துசங்கராபோற்றிபோற்றி
கன்னலந்தியனைக்காய்ந்தகண்ணனேபோற்றிபோற்றி
பின்னலஞ்சடைமேற்பிள்ளைப்பிறையணிபெரியோய்போற்றி
பொன்னதிமுடியாய்போற்றிபுண்ணியாபோற்றிபோற்றி. (௰௪)

அழிவிலாமுதலேபோற்றியறிவிலாச்சிறியோர்செய்த
பிழையெலாம்பொறுப்பதென்றும்பெரியவர்கடனேயன்றோ
வழுவியாதவனூர்செய்தமடமைநீபொறுப்பாயெங்கள்
மொழியெலாமறுப்பாயல்லையெனப்பலமொழியலுற்றார். (௰௫)

தனக்கதிபிழைகள்கோடிசைலமத்தனைசெய்தானு
மனத்திடைபொறுப்பான்றனைவணங்குநல்லடியார்தம்பாற்
றினைத்துணையெனினுங்குற்றஞ்செய்யினும்பொறுதசெய்பல்
கனற்கதிரிறைவன்செய்தகொடுமையாற்கரந்துநின்றான். (கசு)

என்னதுகொடுமையாலேயிரங்கிலானிறையோனென்றென்
றுன்னியங்கடலினுப்பண்டவஞ்செய்தானுலகந்தீந்து
வன்னியின்கொடுமையாலேவருந்தியநிலைமைகண்டு
பின்னருமையயோரெல்லாங்குழுமினார்பிறங்குவானில். (கஎ)

மந்தணமுடித்துவித்துன்மாலிபாலடைந்தாரன்று
ளிந்திரன்முதல்வரானதேவரைமெதிர்கொண்டேத்திப்
புந்தியான்மகிழ்ந்துவந்தவாறுரைபுகல்வீரென்றான்
வந்தகாரியமீதென்றுமகபதிமொழிவதானான். (கஅ)

சங்கரர்க்குரிமையானதகைமையாற்றலைமைதன்னு
ளெங்களிலொருவனல்லாலுன்னைவேறெண்ணலாமோ
வங்கவையிருக்கவீசற்கவரிபோலிருந்தசீற்றம்
பொங்குறுவகைகளாஞ்சொல்லிப்பணிந்திடப்போதுகென்றான். (கசூ)

இனனுமக்கினனேயானுலெமக்குமப்படியேநீவி
ரனைவருநினைத்தவெல்லாமெனக்குமதடுத்ததாகுந்
துனியறவருகவென்றுசுவேதகானகத்தினண்ணி
வினைகெடத்தொழுதான்றேவர்பலருடன்வித்துன்மாலி. (உ0)

வேறு.

கள்ளிருக்குமலர்ச்சோலைதிகழருணைநகர்க்கருணைக்கடலேபோற்றி
யெள்ளிருக்குமிடமன்றிபுனதுருவாந்திருக்குடந்தையிறைவாபோற்
றெள்ளிருக்குமறைபுகழுமயிலாடுதுறையிலுறைசிவனேபோற்றி [றி
புள்ளிருக்குவேளூராவெண்காட்டிற்பரஞ்சுடரேபோற்றிபோற்றி.

நற்கபிலையிடத்தானேவலஞ்சுழியினடித்தானேநப்பாபோற்றி
சிற்கனமாயேகமுமாய்த்திருவாலவாயுறையுஞ்செல்வாபோற்றி
நிற்குணனேநிரஞ்சனனேதிருவாலங்காட்டிலுறைசிவலாபோற்றி
பொற்கனகசபையானேதிருவெண்காட்டுறைவானேபோற்றிபோற்றி.

வேறு.

பிழைபலபொறுப்பவன்பிறைமுடிப்பவ
னுழைமுசெறிகரத்தவனுமையிடத்தவ
னழல்விரிநிறத்தவனமரர்காணவே
மழவிடைமிசையிலேவந்துதோன்றினான். (உக)

கண்டனரிமையவர்கலந்துவாழ்த்திறை
ரண்டருங்கனற்கதிரவனும்போற்றியே
யெண்டரும்பிழைபொறுத்திடுகவென்றனன்
வண்டமரிதழியான்மகிழ்ந்துகூறுவான். (உச)

வேறு.

இட்டமாகிநம்வலதுகண்மணியுமாயிரங்கி
யட்டமூர்த்தியிலொன்றுமாயுலகளித்தருளுந்
பட்டமீதினின்மூழ்கினல்வயிற்றுநோய்பதினெண்
குட்டமானவைபிறவுளபிணிகளுங்குறுக. (உரு)

மயலுறுமலுன்னுதயமுன்கார்த்திகைமாசி
சயமதேதருமருக்கவாரங்கள்சத்தமியி
லயர்வுறுமலேமூழ்கினலைகைவேதாள
முயலகன்வலியகன்றுபோநினைத்ததுமுடியும். (உசா)

என்றுபானுவுக்கருள்புரிந்திமையவரெவர்க்கும்
வென்றிமிக்கருள்விடைகொடுத்தரக்கர்கோவினுக்குத்
தன்றுணைப்பதமலர்கொடுத்தரனுமாதவனுட்
சென்றுபுக்கனனெனவகத்தியனுரைசெய்தான். (உஎ)

ஆதித்ததீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் அ - க்கு செய்யுள் கூருச.

---

## வசனம்.

—*—

என்றிவ்விதமாக அகத்திய முனிவர் சொல்லியருளுதலும் வசுமகாராசன் சுவாமி! ஆதித்த தீர்த்தத்தின் மகிமையுஞ் சொல்லியருளுமென்றுகேட்க, அவ்வகத்தியமுனிவர் சொல்வாராயினர்.

வசுமகாராசனே! முன்னொருகாலத்திலே வித்துன்மாலி என்னும் இராக்கதனொருவன் திருவெண்காட்டைச் சேர்ந்து, அரியதவங்களைச்செய்தான். சிவபெருமான் இடபவாகனமேற்கொண்டெழுந்தருளிவந்து, நீவிரும்பிய வரம் யாது? என்று கேட்டருள; அவ்வித்துன்மாலி வணங்கித்துதித்து, எம்பெருமானே! சூரியனைப் போன்ற மேனிவிளக்கமும், அவனைப்போல மேருமலையைச் சூழ்ந்தேறொன்றும் அடியேனுக்குக் கொடுத்தருளும் என்றுபிரார்த்திக்கச், சிவபெ

ருமான் அவ்வரங்களைக் கொடுத்து மறைந்தருளினார். வித்துன்மாலி சூரியன் சூழுந்திசைக்கு மாறான கோணத்திலே தனது தேரைச்செலுத்திக்கொண்டு இருளையெல்லாம் அகற்றுதலும், இருளெல்லாம் பஞ்சாக்கரத்தைச் செபிப்போருள்ளத்தினின்றும் ஆணவ இருள் நீங்குதல் போல நீங்கின. ஆகாயத்திலே நக்ஷத்திரங்கள் தோன்றுதொழிந்தன. மாலைகாலைகள் வேறுபாடின்றி ஒருபடித்தாகி யிருந்தன. இப்படி யிருக்குந் தன்மையைத் தேவர்களெல்லாரும் சூரியனிடத்துச்சொல்லச், சூரியன் கோபங்கொண்டு தன்வயிரத்தேரை வித்துன்மாலிக் கெதிரேசெலுத்தி, அவ்வித்துன்மாலியின் உடலை யெல்லாந் தன்கிரணங்களாற் கொளுத்திக், கலைகளினாலே துளைத்தலும், வித்துன்மாலியும் அலறிப்பூமியில் விழுந்தான். அவன் ஏறிய ஒருருளைத்தேரும் உடைந்தது. பின்தேவர்கள் முனிவர்கள் போற்றச், சூரியன் மகிழ்ச்சியுற்று முன்போலச் சஞ்சரித்தான். பூமியில் விழுந்த வித்துன்மாலி இதிருவெண்காட்டை யடைந்து, இறைவனாகிய சுவேதவனப்பெருமான் றிருவடிகளில் எண்ணில்லாத காலம் பூசித்தான். சுவேதவனப்பெருமான் அவ்வித்துன்மாலிக்கெதிரேதோன்றி அன்பனே! அஞ்சாதே அஞ்சாதே. இருளை நீகருங்கிரணங்களோடையவனாகி, ஏழுபரித்தேரிலேறி, மயக்கம் நீங்கச் சஞ்சரிப்பாயென்று வரங்கொடுத்துப். பின் அக்கினி மலையாகிச் சூரியன் தேரை உங்காரத்தால் அழித்தலும், சூரியன் தேரினின்றும் இழிந்து, முன்னேசெய்த புண்ணியபலத்தினாலே திருவெண்காட்டை யடைந்து, சூரியதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, திருக்கோயிலை வலஞ்செய்து நமஸ்கரித்துத்துதித்துத் தன்தடாகக்கரையில் தன்பெயரால் ஒரு சிவலிங்கந்தாபித்துப் பூசித்து, அருகே ஒருபர்ணசாலைசெய்து அதிலிருந்துகொண்டு மேம்பட்டபலவாகிய தவங்களைச்செய்தான். அத்தவத்தின் வெம்மையைப் பொறாமல் உலகமெல்லாம் வெம்புதலும், விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாரும் வருத்தமுற்றுச், சுவேதவனநாதர் சந்நிதானத்தையடைந்து, நமஸ்கரித்து நின்று, துதித்துச், சூரியன்செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளுமென்று பிரார்த்திக்கவும், (தமக்குக் கோடிமலையளவு பிழைகள் செய்தாலும் பொறுப்பவரும், தம்மைவணங்கும் மெய்யடியார்களுக்குத் தினையளவு பிழைசெய்தாலும் பொறாதவருமாகிய) சுவேதவனநாதர் சூரியன் செய்த கொடுமையால் மறைந்து நின்றார். இப்படித் தேவர்கள் பிரார்த்திக்கவும் என்கொடுமையாலே சிவபிரான் மறைந்து நிற்கின்றார்

என்று, சூரியன் எண்ணிப், பின்னரும் அக்கினியின் மத்தியிலேநின்றுதவஞ்செய்தான். அவ்வக்கினியின் கொடுமையாலே உலகம் மிகவும்வருந்திய நிலைமையை இந்திரன் முதலிய தேவர்கள் கண்டு,வானுலகத்திற் கூடி ஒருசூழ்ச்சிசெய்து முடித்துக்கொண்டு,வித்துன்மாலி இடத்துச்செல்ல, அவ்வித்துன்மாலி தன்னிடத்து வருகின்றதேவர்களை எதிர்கொண்டழைத்துத் துதித்து மனமகிழ்ந்து, என்னிடத்து நீங்கள்வந்தகாரியம் யாதென்றுகேட்க, உடனே இந்திரன் வித்துன்மாலியே! சிவபெருமானுக்கடிமையான தகைமையானும், தலைமையினாலும் எங்களில் ஒருவனென்றெண்ணாமல் உன்னைவேறாக எண்ணலாமோ எண்ணலாகாது. அவை நிற்கச், சிவபெருமானுக்குச் சூரியன்மீதிருக்கின்ற கோபம் நீங்கும்படி துதித்துப்பணிதற்கு நாம்செல்வோம் வருவாயாகவென்றான். அவ்வார்த்தையைக்கேட்ட வித்துன்மாலி, இந்திரனே சூரியன் உங்கள் இனத்தவனால் எனக்கும் அப்படியேயாகும்.நீங்கள் நினைத்தவையெல்லாம் எனக்கும் ஒத்தனவாகும். என்றுகூறி, இந்திரன் முதலிய தேவர்களோடும் திருவெண்காட்டைச்சேர்ந்து,சுவேதவனப்பெருமான் சந்நிதானத்தில் சூரியனுடையபாவம் நீங்கும்படிநமஸ்கரித்துப்,பலவிதமாகத்துதித்தான்.இப்படிவித்துன்மாலிதேவர்களோடும் துதித்தபோது, சுவேதவனநாதர் இடபவாகனமேற்கொண்டெழுந்தருளிவந்து, நமஸ்கரித்துநிற்குஞ் சூரியனைநோக்கிச் சூரியனே! உன்பிழையைப் பொறுத்தோம், நீ நம்முடைய வலதுகண்ணும், அட்டமூர்த்தங்களிலொன்றும் ஆகி உலகங்களைக் காப்பாயாக. உன்தடாகத்தில் மூழ்கினார்க்கு, வயிற்றுநோயும், பதினெண்வகைக்குட்டங்களும், பிறவுமுள்ள நோய்களும் நீங்கும், கார்த்திகை மாசிமாதங்களில் வருகின்றஞாயிற்றுக்கிழமையினும், சப்தமிதிதியினும், நீயுதிப்பதன்முன் சந்தேகப்படாமல் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு, அலகையும் வேதாளமும்முயலகன்வலியும் நீங்கும், நினைத்தவையெல்லாமுடியும், என்றுவரங்கொடுத்தருளித், தேவர்களுக்கு விடைகொடுத்து, வித்துன்மாலிக்குந் தம் திருவடிநீழலையளித்துச், சூரியனிடத்திற்புகுந்தருளினார். என்று அகத்தியமகாமுனிவர் சொல்லியருளலும்,வசுமன்னன் வணங்கிச் சுவேதகேது முனிவர் சரித்திரத்தைச் சொல்லியருளவேண்டுமென்றுவினவ அவ்வகத்தியமுனிவர் சொல்வாராயினர்.

ஆதித்ததீர்த்தச்சருக்கமுற்றிற்று.

# சுவேதகேதுச் சருக்கம்.

முச்சுடரின்றடத்தியல்பும்பாதகங்கடவிர்ந்தமையுமுனிவன்கூற விச்சையுடன்மகிழ்ந்துருகிவசுவுரைப்பானெழுபுவனமெதிர்த்தேயாடு மெய்ச்சுடரைப்பணிந்தவர்கள்சிறப்பனைத்துந்தெளியவினிவிளம்புவோன்று, னச்சுபசுந்தமிழ்முனிவன்சுவேதகேதுவின்சரிதநவில்வதானான்.

அருமறையின்முடிவுணர்ந்தசிவயோகத்திலகனுத்தாலகனென்றோது, மொருமுனிவனெடுங்காலஞ்சிறுவிருக்காத்தவமுயன்றானுலகத்தூடே,பொருவரியசிவனவனுக்கெதிர்தோன்றியுனக்கினியபுதல்வனீந்தோ,மருவுமந்தப்புதல்வனுக்குவயதிருநான்கெனவுரைத்துமறைந்துபோனான். (௨)

சொன்னபடியொருபுதல்வன்பயந்தனனப்புதல்வனுக்குச்சுவேதகேது, வென்னுமபிதானமிசைத்தாரணநூலாகமநூலிரண்டும்போதித்,துன்னரியமந்திரதந்திரகலைகளனைத்தினையுமுபதேசித்தான்,முன்னியநற்றவப்பலத்தாற்சிறுவனெறிமுறையறிவான்முதியனானான்.(௩)

வேறு.

மகவிடத்துமனதுபற்றிமகிழுநாளின்மைந்தனுந்
தகரவித்தைதனதியற்கைதாதைகூறுகென்றனன்
மிகுதிபெற்றதகரவித்தைவிதமிரண்டுமைந்தனே
யிகழ்வதற்றவாதிபூதமான்மிகங்களென்னவே. (௪)

அதுவிரிக்கின்முன்னதானவாதிபூதமதுவிராட்
டிதயபுண்டரீகமானவெல்லைதில்லையதனிலே
நதிவிளங்கமதிதுளங்கநகைதுளும்பிவழியவே
கதிரனந்தகோடியன்னகடவுளாடுநடனமே. (௫)

மற்றையாதியான்மிகத்தின்வகையுரைக்கின்மனிதர்தங்
குற்றமற்றவிதயபுண்டரீகஞானகுகரமா
முற்றவீதிரண்டுகூறதொன்றுமானதத்ததா
மற்றையொன்றுவாசகத்ததென்றுகூறுமறைகளே. (௬)

மானதங்களத்தரூபம்வாசகங்கள்சத்தமா
மானவிவ்விரண்டுதானுமருவுதன்னொடுருவமா
ஊனமற்றசத்தபேதவுருவமன்னவுருவமா
மீனமற்றசத்தபேதவருவநாதமேழுமே. (௭)

அருத்தரூபி னுருவமாவதானஞான தாண்டவ
மருத்தரூபிலருவமாவதாவிலாதசின்மயம்
நிருத்தமிவ்விரண்டுடற்றுங்கருமுன்னைநினைவினாற்
கருத்திலைந்துவன்னமாகவெழுதுமைந்தகாணமே. (௮)

ஆடகப்பொன்னம்பலத்திலாடல்காணிறைடலா
நாடகத்தைநாடஞானநகரின்மேவுமென்றனன்
மாடமுற்றதில்லைகாணமகிழ்சுவேதகேதுவுங்
காடுவெற்புநாடகன்றுகாவிரிக்கணெய்தினான். (௯)

ஆறுகண்டுகரைமருங்கிலாலயங்கள்கண்டுபோ
ரேறுகொண்டகொடியர்தில்லையெல்லைகண்டுபரவினான்
வீறுகெண்டைமீனுகண்டுமேல்விழுந்தபூகதந்
தாறுகொண்டசைந்தசைந்ததண்டலைக்குண்மேவியே. (௰)

துய்யவீதியிற்புகுந்துசூழவந்துகோயிலிற்
செய்யகங்கையிற்படிந்துதிவ்யலிங்கவடிவமா
மையனைப்பணிந்துநான்முகனுமாலுமமரரும்
வையமுய்ப்பிழைக்கநல்கும்வல்லிதாள்வணங்கினான். (௰௧)

வரபுயங்கள்கண்டபோதுவரமளிக்குமன்றினீ
ரிருபுயங்களிடுபுயங்கமெழுதுநீறுதிகழவே
யொருபுயங்கர்புலிவணங்கவுருகியன்பர்மகிழநீ
டருள்புயங்கநடனமாடுமமுதைநின்றுபருகினான். (௰௨)

செங்கையொன்றினின்றவங்கிதிகுதிகென்றுகனலவோ
ரங்கைதங்குதுடிமுழக்கிடண்டகோளமதிரவோர்
பங்கயம்புரைந்தசெங்கைபயமகற்றவாளராக்
கங்கணம்பொருந்துமோர்கைகதியிதென்றுகாட்டவே. (௰௩

பரிபுரங்கள்கலகலென்றுபதயுகத்திலசையவே
புரிமருங்கிலுந்திமார்புபுரிமுநூலிலங்கவே
திருமுகம்புன்முறுவலின்கவாடுகின்றதேனைநல்
லருண்முகந்துசொரியுமங்கணரசைநின்றுபரவினான். (௰௪)

இந்நடத்தையிதயபுண்டரீகமீதிலெழுதியே
யந்நகர்க்கண்வைகுநாளிலவனுயிர்க்கமைந்தநாண்
முன்னடுத்ததுதெளிந்துமுனிசுவேதகேதுவு
மின்னலுற்றகாலம்வெல்வதேதிலென்னவெண்ணினான். (௰௫)

## வேறு

நையுமாமுனிவனுஞானமேன்மையா
லுய்யுமாறிதுவெனவுறுதிநோக்கியே
யையன்வாழ்வுடையகாலனாசரத்திலே
வெய்யகாலன்றனைவெல்லமேவினான். (௰௬)

ஆலயம்புகுந்துமுக்குளத்திலாடினான்
சூலியைக்கன்னியைத்தொழுதுபோற்றினான்
காலனையுதைத்தகாற்கடவுள்வைகிட
நாலிருசெங்கலாற்கோயினாட்டினான். (௰௭)

வயதுநாலிரண்டதாய்மாயுநாள்வரச்
செயலெலாஞ்சிவனதுசெயலதாகவே
யயர்விலாதிருந்தெழுத்தைஞ்சுமோதினான்
புயமெலாமந்தகன்பாசப்பூட்டினான். (௰௮)

வெங்கயிறதுதனைக்காலன்வீசவு
மங்கமுநடுங்கிலனந்தமாமுனி
சங்கரனருச்சனைதவிர்குதேயென
மங்கினனவனெதிர்வள்ளறோன்றினான். (௰௯)

மண்டுபோரந்தகன்வலிமைநீக்கியே
யண்டரானவர்தொழவந்தமாமுனி
கண்டபாசத்தையுங்கழற்றியேகினான்
தொண்டர்பாசங்களைத்துரக்குந்தோன்றலே. (௨௰)

தூயவன்மறைந்தபின்சுவேதகேதுவு
நாயகன்றிருநடநாடவேணுமென்
றாயமாதவஞ்செயவுந்தநாளிலே
மாயவன்கருடன்மேல்வந்துதோன்றினான். (௨௧)

வீறியமுனிவனுமிகுத்தவன்பினால்
மாறிருவடிமலர்வணங்கியேத்தினான்
ஏறியகருடனிலிழிந்துமாமுனி
தேறிடமுனிவனாச்சிரமஞ்சேர்ந்தனன் (௨௨)

செய்தவப்பலத்தினாற்சேர்ந்தமாடனை
யெய்தியேமுனிவனுமிறைஞ்சிக்கூறுவான்
மைதிகழ்மிடற்றினான்மணிநடந்தொழு
துய்வதற்கொருவரமுதவுகென்றனன். (௨௩)

தவமறுமுனியுடன்முகுந்தன்சாற்றுவா
னவனிமேற்சிவன்புரியாடலொன்பதிற்
புவனமுமேத்திடப்புனிதனாடுவான்
கவுரிதாண்டவத்தைவெண்காடுதன்னிலே (௨௪)

சிதம்பரநடனமுன்சேவித்தேன்மெய்யுண்
னதம்பெறுகவுரிதாண்டவத்தைநாடுதற்
குதங்கனேமுதலவாமுயர்ச்சியாருடன்
மதங்கராச்சிரமமாமதனில்வைகினேன், (௨௫)

அசிதரன்கேவலன்கபிலனங்கிரா
வசுமதிகாசிபன்வதிட்டன்கண்ணுவன்
சசிபெறுமத்திரிசனகன்கோதமன்
பசுபதிநாரணமுனிவன்பார்க்கவன். (௨௬)

சவுனகன்சுதீட்டிணன்சத்திகந்தனு
மவுனபார்க்கவன்சதானந்தன்மாரிசன்
கவுசிகனுரோமசன்கவுற்சன்காலவன்
தவமுயன்றனர்நடந்தன்னைக்காணவே. (௨௭)

நிற்குணவடிவமாய்நிருத்தஞ்செய்தலாற்
சிற்சபைமுத்தியேயளிக்குஞ்செல்வமு
மற்புதமுத்தியுமளிக்குமித்தலஞ்
சற்குணமுடன்புரிதாண்டவத்தினால். (௨௮)

•இத்தலந்தனின்மகாலிங்கமொன்றுள
துத்தமத்துத்தமமுவமையற்றத்
சத்தியஞ்சத்தியந்தனைவணங்கினாற்
பத்தியற்றவர்களும்பாசநீங்குவார். (௨௯)

இதுதனைப்பகிர்ந்துநான்கெல்லையாகவே
முதலளவிரண்டுடன்மூன்றுநான்கெனும்
விதமதிற்பயின்றவர்வீடுபெற்றுமுன்
பதவிகளனைத்திலும்பயிலுவார்களே. (௩௰)

இந்திரன்றன்பழியிதனினீக்கினன்
முந்தியவுகந்தனின்முனிமுனிந்திடு
தந்தநான்குடையபஞ்சாபந்தீர்ந்ததென்
றந்தணன்புதல்வனுக்கறியக்கூறுவான். (கூக)

சுவேதகேதுச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் கூ-க்கு செய்யுள் கூஅரு.

---

## வசனம்.

—*—

உத்தாலகமுனிவர் புத்திரப்பேற்றை விரும்பிச், சிவபெருமானைநோக்கி நெடுங்காலந் தவஞ்செய்தார். சிவபெருமான் இடபவாகனமேற்கொண்டெழுந்தருளிவந்து, உத்தாலகனே! உனக்குஒரு சற்புத்திரனை யீந்தோம். அப்புத்திரனுக்கு வயது எட்டென்று சொல்லி மறைந்தருளினர். சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தின்படியே உத்தாலகமுனிவர் ஒரு புத்திரரைப்பெற்று, அந்தப்புத்திரருக்குச் சுவேதகேதுவென்றுபெயரிட்டு, வேதசிவாகமங்களையும், மந்திரதந்திரகலைகளையும் போதிக்க, அச்சுவேதகேதுமுனிவர் முற்றப்பிறப்பிற்செய்த தவபலத்தினாலே, அந்நூல்களெல்லாங் கற்றுணர்ந்து, வயதிற்சிறிய ராயினும் கல்வியறிவொழுக்கங்களாற் பெரியராயினர். ஒருநாள் சுவேதகேதுமுனிவர் தந்தையாரை நமஸ்கரித்துத், தகரவித்தையினியல்பைஉபதேசித்தருளவேண்டுமென்று கேட்கத், தந்தையாராகிய உத்தாலகமுனிவர், மைந்தனே! பரங்கருணைத் தடங்கடலாகிய நடேசப்பெருமானுடைய இலக்கணங்களை உண்மைநூல்வாயிலாக அறிந்து, நல்லொழுக்கத்தின் வழுவாது நிலைகொண்டு, அவருடைய விளக்கத்துக்கு இடமாகிய திருவுருவைவிராட்புருடனாகிய பிரமாவினது பிரமாண்டசரீரத்தின் இருதயகமலமாகிய தில்லையிலே நாடோறும்விதிப்படி அன்போடு தெரிசித்துக்கொண்டு வந்தவர், அந்நடேசப்பெருமானைத்தமது பிண்டசரீரத்தினது இருதயகமலமாகிய தகரத்திலே தியானித்துத் தரிசித்துப்,பாசநீங்கி முத்தியடைவர், இதுவே தகரவித்தை என்று உபதேசித்துச், சிதம்பரத்திற்குச் செல்வாயென்றார்.

சுவேதகேதுமுனிவர் அவ்வாறே சிதம்பரத்தையடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து திருமூலட்டானேசுரரைப் பணிந்து சிவகாமியம்மையாரை வணங்கி நடராசப்பெருமானைத் தெரிசித்துப் பேரானந்தமுற்று, அந்நடேசப்பெருமானைத்தமது பிண்டசரீரத்தினது இருதயகமலமாகிய தகரத்திலும் தியானித்துத் தரிசித்துக்கொண்டு, அச்சிதம்பரத்திலே வசிக்கின்ற நாளில் தம்முடையிருக்கமைந்த எட்டுவயதும் முடியுங்காலம் சமீபித்ததனை அறிந்து, வருந்திப் பின்பு, ஞானபோன்மையினலே, திருவெண்காட்டில் இயமனைவெல்லலாமென்று அறிந்துகொண்டு, சிதம்பரத்தினின்றும் நீங்கித், திருவெண்காட்டைச்சேர்ந்து, திருக்கோயிலினுட்புகுந்து, முக்குளத்திலே ஸ்நானஞ்செய்து, சுவேதவனப்பெருமானையும் பெரியபிராட்டியாரையும் வணங்கித்துதித்து ஒரு சிவலிங்கந் தாபித்துப், பூசைசெய்துகொண்டிருக்கின்றநாளில் எட்டுவயதும் முடிந்து இறக்கும் நாள்வருதலும், சுவேதகேது முனிவர் தமசெயலற்று, எல்லாம் சிவச்செயலாகச், சோர்வின்றியிருந்து, திருவைந்தெழுத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்பொழுது, இயமன் வந்து, அம்முனிவருடைய புயமூழுதிலும் பாசத்தைப பூட்டுதலும், அதற்குச் சிறிதும் அவர் நடுங்காமல் சிவபூசை தவிர்கின்றதேயென்று வருந்தினர். இப்படியாக வருந்துகின்ற சுவேதகேது முனிவருக் கெதிரே சுவேதவனப்பெருமான் தோன்றியருளி, யமனையுடைய வலிமையை நீக்கி, அம்முனிவரைப்பூட்டிய பாசத்தையுங்கழற்றி மறைந்தார், சுவேதவனப் பெருமான் மறைந்தபின்பு சுவேதகேதுமுனிவர் திருவெண்காட்டிலே சிவபெருமான் திருநிருத்தத்தைத தெரிசித்தற் கன்புற்றுத், தவஞ்செய்தார்; அப்பொழுது விஷ்ணுமூர்த்தி அங்கே வந்துதோன்றுதலும், சுவேதகேதுமுனிவர் அவ்விஷ்ணுமூர்த்தியின் திருவடிகளை வணங்கித் துதித்துச், சுவாமி. இத்தலத்திலே சிவபெருமானது திருநிருத்தத்தைத் தரிசித்துய்வதற்கு ஒரு வரம் அருளுமென்று வினவ, விஷ்ணுமூர்த்தி சொல்வாராயினர்.

சுவேதகேதுவே! சிவபெருமான் பூமியின்கண்ணே செய்கின்ற ஒன்பதுதாண்டவத்திற் கௌரி தாண்டவத்தை இத்திருவெண்காட்டிற்செய்தருளுவர். யான்முன்னே சிதம்பரநிருத்தத்தைத்தெரிசித்தேன். இத்தலத்திலே கௌரிதாண்டவத்தைத் தெரிசித்தற்கு மதங்காச்சிரமத்திலிருந்து தவஞ்செய்தேன். அசிதரன், சேவலன், கபிலன், அங்கிரா, வசுமதி, காசிபன், வதிட்டன், கண்ணுவன், அத்திரி, சன

கன், கோதமன், பசுபதி, நாரணமுனிவன், பார்க்கவன், சவுனகன் சுதீட்டிணன், சத்தி, கந்தன், மௌனபார்க்கவன், சதானந்தன், மாரிசன், கவுசிகன், உரோமசன், கவுற்சன், காலவன் என்னுமுனிவர்களும் இக்கௌரிதாண்டவத்தைத் தெரிசித்தற்குத்தவஞ் செய்தார்கள். சிவபெருமான் நிற்குணவடிவமாய் நிருத்தஞ்செய்தலினால் சிதம்பரம் முத்தியைமாத்திரமே கொடுக்கும். சற்குணவடிவமாய்த் தாண்டவஞ் செய்தலினால், இத்திருவெண்காடு செல்வத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும், இத்தலத்தில் உத்தமத்தில் உத்தமமாயதும், ஒப்பில்லாததும், ஆகிய மகாலிங்கம் ஒன்றுண்டு. பத்தியற்றவர்களேயாயினும் அம்மகாலிங்கமூர்த்தியைவணங்கினால், பாசநீங்கி முத்தியடைவர். இதுசத்தியம் சத்தியம். இத்தலத்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களினாலும் வழிபாடு செய்தவர், பாசநீக்கம்பெற்றுச் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் நான்கு பதங்களையுமபெறுவர்.

சுவேதகேதுச்சருக்க முற்றிற்று.

---

# இந்திரன்பழிதீர்த்தசருக்கம்

முன்னைநாளிலேயிந்திரனெனும்பகைமுடிக்கத்
தன்னைநேரிலாதவன்றுவட்டாவெனுந்தபதி
யின்னலாகியவஞ்சகமகத்தினையிழைத்தா
னன்னவேள்வியினுதித்தனனவிடத்திலோரவுணன். (க)

நித்தனித்தமோரம்பிடையூரமேகியிர்ந்து
சுற்றுமப்படிவளர்ந்தனன்விருத்திராசுரனென்
றுற்றநாமமும்விருத்தியாற்றரித்தனனுலகிற்
பெறறதிண்கிரியனையதோர்நெடுங்கதைபிடித்தான். (உ)

வளைந்துநீளெயிறிரண்டுமாமேருவில்வளர
வளக்கரேழுமொன்றுனபோற்சுடர்விழியகல
விளக்கும்வானகமடைபடவளர்த்தனன்மெய்யைத்
துளக்கவானவர்சதமகற்கிவன்செயல்சொன்னார். (ந)

பகையுரத்திடுமுன்னமேயழிப்பதுபரிசென்
றிகன்மதித்தெழுந்திந்திரனீரிரண்டெயிற்றுப்
புகர்முகப்புழைக்கரத்தயிராவதப்பொருப்பின்
சிகரமொத்தமத்தகத்தில்வச்சிரங்கொடுசென்றான். (௪)

கண்டெதிர்ந்தவன்சுழற்றினன்கதையிணைக்கதையின்
சண்டவாயுவினவிசையினாற்கிரியெலாஞ்சாய்ந்த
தெண்டிசாமுகத்திபங்களுங்குருதிநீரொடுத்த
வண்டகூடமுஞ்சிதறினதமரர்வெந்நடைந்தார். (௫)

வேறு.

விண்ணிலோடினார் விரைந்துபின்னுள
கண்ணிலிந்திரன்கண்டுவெம்பகட்
டண்ணன்மேலுகைத்துவந்தவுணன்கைக்கதை
தண்ணிலாவச்சிரப்படையிற்றள்ளினான். (௬)

புரந்தரன்மீளவுங்குலிசமபோற்றில
னிருந்தடம்புயத்தினிலெறிந்துவாட்டினன்
வரிந்திடுமொருபுறமதற்குமுன்னமே
விரிந்திடுகிமிர்ந்திடுமேருவென்னவே. (௭)

ஆண்டுநூறாயிரமமர்விளைத்தலுங்
காணடகுவிருத்திரன்கடூததுவீழ்ந்தில
தீண்டிவன்வளர்ந்திடுமெழுச்சியேதெள
பாண்டபன்மகத்தினன்மனத்தினெண்ணினன். (௮)

வெவ்வியமகமுனஞ்செய்தவேலையில்
வவ்வினராகுதியதியுமங்கியு
மவவிருவருமிவனகத்தாகியே
யிவ்வுடல்வளர்த்தனரென்றுதேறினன். (௯)

தேறினவிந்திரன்றிங்களங்கியை
வீறுறவழைத்திவன்மெய்யைவிட்டுநீ
ரேறுகபுறம்பெனவேத்தினனவன்
கூறுமவழியிலேகுதிக்கவென்றனர். (௰)

வழியதுதிறந்திடிலவருகுவோமென
மொழிவையுமவிரித்தனர்முனியுமிந்திரன்
பழிபடும்விருத்திரனபாழிவாயிரு
கழிபடவஞ்சகக்கிரியைசெய்தனன். (௰௧)

விருத்திரன்பாழிவாய்கிரித்துவிண்ணின்மேற்
கரத்தையுமெடுத்தனன்கணக்கிலாதநா
ளருத்தியான்மதியமுமங்கியும்மவன்
புரத்திலுமகன்றுதம்புரத்திலெய்தினர். (யஉ)

அன்னவரகன்றபின்னவுணர்கோமகன்
றன்னதுவளர்ச்சியும்வலியுந்தாழ்ந்தன
முன்னமேயெறிந்திடுமூரிவச்சிரஞ்
சென்னியையரிந்துகீழ்த்திசையிலிட்டதே. (யங)

வரமதாசலத்திறைமகிழ்ந்துபோயினன்
றிரமதாமிமையவர்திரண்டுவாழ்த்தினர்
முரணியேயவுணனைமுன்புசெற்றிடும்
பிரமபாதகமவன்பின்பிடித்ததே. (யச)

அப்பழிதொடர்தலுமஞ்சிவாசவ
னிப்பதியடைந்துதன்னிடும்பைநீக்கினன்
ஒப்பறுமுனிவவென்றுரைத்துவெண்கரி
மெய்ப்பழிதுடைத்ததும்விளம்பலாயினன். (யரு)

இந்திரன்பழிதீர்த்தசருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ய - க்குச் செய்யுள் ௬௦௦

---

## வசனம்

—*—

முற்காலத்திலே துவட்டாவென்னுந் தபதியானவன் தன்பகை வனாகிய இந்திரனை அழிக்கும்பொருட்டு, ஒருகொடிய யாகத்தைச் செய்தான். அந்தயாகத்தினின்றும் விடம்போல ஒரு அசுரன் பிறந்தான். அவ்வசுரன் தினந்தினம் ஒரு அம்புசெல்லும்உயரம் நிமிர்ந்து சுற்றுப்பக்கமும் அப்படியே வளர்ந்து, விருத்திராசுர னென்னுங் காரணப்பெயர்பெற்றான். அவ்விருத்திராசுரனைக்கண்ட தேவர்கள் நடுங்கி, அவன் செயலை இந்திரனிடத்திற் சொல்ல, இந்திரன் அவ னோடு போர்செய்தல் கருதி வெள்ளையானைமேற்கொண்டு வச்சிரா யுதமேந்திச் சென்றான். இந்திரன் வருதலை விருத்திராசுரன் கண்டெ திர்த்துத் தண்டாயுதத்தைச் சுழற்ற அத்தண்டாயுதத்தின் சண்ட

வாயுவின் விசையினால், மலைகளெல்லாம் சாய்ந்தன, திக்குயானைகள் உதிர நீரைச்சொரிந்தன. அண்டகூடப் சிதறியது. தேவர்களெல்லாரும் ஆகாயத்தில் ஓடினார்கள். இந்திரன் தேவர்கள் தோற்றோடுவதைக் கண்டு, வெள்ளையானையை நடத்திக்கொண்டு, விருத்திரனுக்கெதிரே சென்று, அவன் கையிலுள்ளகதாயுதத்தை வச்சிரத்தாற்றாளிபடுத்திக் கைகளை யறுத்தான். அக்கைகள் அறுக்குந்தோறும் வளர்ந்து கொண்டே வந்தன. இப்படி நூறுயிரவருடம் இந்திரன் போர்செய்தும் விருத்திராசுரன் இறந்திலன். பின்பு இந்திரன் விருத்திரன் வளர்ச்சிக்குக் காரணம் யாதென்று ஆலோசித்துத் (துவட்டாயாகஞ் செய்தகாலத்திலே சந்திரனும் அக்கினியும் ஆகுதியைவவ்வினார்கள். அதனால் அவ்விருவரும் இவனுடலிற் புகுந்து, இவ்வுடலை இப்படி வளர்க்கின்றார்கள் என்று) தெளிந்து, சந்திரனையும் அக்கினியையும் அழைத்து, நீங்கள் இருவரும் இவ்விருத்திரனுடைய உடலைவிட்டுப் புறஞ்செல்க என்றுதுதிக்க, அவ்விருவரும் யாங்கள் வெளிப்படுதற்கு வழியில்லையென்றார்கள். அதுகேட்ட இந்திரன் விருத்திரனுடைபாழிவாயானது இருகிழிபடும்படி ஒரு வஞ்சகக்கிரியை செய்தான். உடனே விருத்திரன் பாழிவாயை விரித்துக் கையை உயரத் தூக்கிக்கொண்டு, கணக்கிலாதநாள் நின்றான். அக்காலத்திலேசந்திரனும், அக்கினியும், அவ்விருத்திரனுடையஉடம்பினின்றும் நீங்கித் தம்மிடஞ் சென்றார்கள். பின்பு விருத்திரனுடைய வளர்ச்சியும் வலிமையுந் தாழ்ந்தன. அப்பொழுது இந்திரன் வச்சிராயுதம் விருத்திரன் தலையையறுத்துக், கீழ்த்திசையில் இட்டது. உடனே தேவர்கள் கூடிவாழ்த்த இந்திரன் தன்பதியையடைந்தான். பின்விருத்திராசுரனைக்கொன்ற பிரமபாதகம் இந்திரனைப் பிடித்துக்கொண்டது. இந்திரன் பயந்து, திருவெண்காட்டையடைந்து, மூக்குளத்திலே ஸ்நானஞ்செய்து, சுவேதவனப்பெருமானைப் பணிந்து தன்பாதகத்தை நீக்கிக்கொண்டான்.

இந்திரன் பழிதீர்த்த சருக்க முற்றிற்று.

# ஐராவதச்சிவப்பிரியச்சருக்கம்.

பொன்னுலகிடத்தின்முன்னேபுரந்தரன்பவனிபோந்தான்
முன்னியபவனிகாணமுனிதுருவாசன்சேர்ந்து
கைந்நிறைகனகமாலைகையுறையாகத்தந்தான்
மன்னவனதனைவாங்கிவாரணத்தலைமேல்வைத்தான். (௧)

வெண்கரியதனைக்காலால்மிதித்தறத்தெறிந்ததங்கே
கண்கனல்சொரியநோக்கிமுனிவரன்கனன்றுகூறுந்
தண்பொலிகனகமாலைதனையறத்தெறிதலாலே
மண்புடைமதமாய்க்காட்டுவாரணமாகவென்றான். (௨)

மோகமானதுபோயானைமுனிவனைத்தாள்போற்றிந்தச்
சோகநீங்குவதென்றென்றுதுதிக்கையாலணங்கிச்சொல்ல
நாகமேயுனதுசாபநடிக்கமுந்திருவெண்காட்டி
லேகினுலறுமென்றேகிமுனிவரனிருக்கைசேர்ந்தான். (௩)

வெங்கயமுனிவன்சொன்னவிதியினாற்றிருவெண்காட்டோர்
பங்கயமடுவின்மீதேவிழுந்துதன்பயங்கடீர்ந்து
மங்கையர்முலைநேர்கோட்டுமழைமதப்புழைக்கையாட
வங்கயமனந்தகாலங்கழித்ததாரணியந்தோறும். (௪)

பற்பலபிடிகள்சூழப்பயமறத்திரிந்ததிப்பால்
முற்கலயோகிதந்தமுனிசிவப்பிரியனென்பா
னற்பகற்புரிவதெல்லாமரனருச்சனைகளாகுங்
கற்பதைஞ்செழுத்தேயாகுங்கேட்பதாகமங்களாகும். (௫)

மைந்தனுமறிவான்முற்றுமரித்திடாவரத்தைநாடித்
தந்தையைப்பணிந்துசாவாவரந்தருதலமேதென்று
னந்தமாமுனிவன்கூறுமரனுறைதிருவெண்காட்டின்
முந்தியேயுறைவார்க்கெல்லாமுத்திமுத்தினத்திலாகும். (௬)

ஆதலாற்றிருவெண்காட்டிலமர்கவென்றருளிச்செய்தான்
றாதைசொற்படியேயந்தமுனிவனத்தலத்திலெய்திச்
சோதியைத்தொழுதுசைவத்துறையவண்சூழநல்ல
மாதவமுடித்தான்சித்தவடதருமருங்கிற்பன்னாள். (௭)

ஒருபகற்பொழுதுமுன்சொல்லுயர்களிறுலாவுங்கானத்
தரியபூந்தடத்திற்புக்கோராயிரங்கமலங்கொய்து
பெருகியசுமையாக்கொண்டுமீண்டனன்பிடியோடந்தப்
பொருகரிவரவுகண்டுகடிதினிற்போவதானான். (அ)

ஓடியமுனிவன்றன்னைத்தொடர்ந்தடர்ந்தொருகைவேழங்
கூடியங்கவன்றன்மார்பிற்குத்தினகொடியகோட்டால்
வாடியமுனிவன்வீழ்ந்தான்மயக்கமுமுடனேநீங்கித்
தேடியமலர்விடாதேயெழுந்தனன்றுவட்சியோடே. (௯)

எழுந்தவனிதயத்துள்ளேயிறையவனெழுத்தோரைந்து
மழுந்தியகடினத்தாலேயடற்கரிமருப்புரும
லிழிந்ததக்களிற்றின்றீயவயிற்றினிலிரத்தமாரி
பொழிந்திடப்பழையதானநினைவுடன்பொருமிற்றன்றே. (௰)

முனிதுருவாசனிட்டசாபமோமுடியக்காணே
மினஞ்சிவப்பிரியன்சாபமிடுகிலோவென்னுமென்று
மனங்கரைந்தவனையெய்திப்பணிந்துகைமபதமாக்கூறுஞ்
சினங்கொடுன்றனைநான்செய்தபிழையெலாந்தீர்க்கவேண்டும். ()

பொதிசடைமுனிவாவென்றுபலபலபுகழுபபோதி
னதிமதியணிவாரன்பனகைபுரிந்துரைப்பானீயு
மதமுடைமையினாலுந்தாமதகுணமுடைமையாலு
மிதமகிதங்கள்பாராதெமக்குநீயிடுக்கண்செய்தாய். (௰௨)

இடுக்கணீயெமக்குச்செய்தவியல்பினாலுனக்குப்பாவ
மடுக்குமேயெனவென்றஞ்சியிருந்தனமதுவேயல்லா
னடுக்கம்வேறிலைபோகென்றுமுனிவரனவின்றுவேணிக்
கடுக்கையானிருந்தகோயிற்குறுகினான்கமலத்தோடே. (௰௩)

தீர்த்தமூன்றினிலுமாடிச்சிறந்தபொன்னியிலுமூழ்கி
வாய்த்தசம்புவைத்தெண்ணீரான்மீளையாலமுதாற்சாந்தா
லாத்தநூன்முனீறவழாமலருச்சனைபுரிந்துநித்த
நாத்தழும்பேறுமாறஞ்செழுத்தையுநவிலலுற்றான். (௰௪)

பூசனையிரண்டுபோதும்புரியுமந்நாளிலோர்நாட்
டேசுடனிலிங்கமீதிற்றிருவுருதெரியத்தோன்றி
யீசனுங்கரங்களாரவவன்றனையிறுகப்புல்லி
மாசிலாவிலிங்கத்துள்ளேயவனுடன்மறைந்துபோனான். (௰௫)

தினகரன்மதியங்கூடுந்தினத்தில்வைகாசிதன்னில்
முனிவரனிறையைசசேர்ந்தானுதலான்முருகன்போல்வா
யனையதிங்களிலந்நாளிலவரடிவணங்குவார்கள்
புனையலர்சொரிவாரெல்லாஞ்சிவகதிபுகுதுவாரே. (௰௬)

ஐராவதச்சிவப்பிரியச் சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௰௩ - க்குச் செய்யுள் ௨௬௯

## வசனம்.

—*—

முற்காலத்திலே பொன்னுலகின்கண்ணே இந்திரன் பவனிவந்தபோது அப்பவனியைக்காணும் பொருட்டுத, துருவாசமுனிவர் வந்து, கையுறையாக இந்திரன் கையினிடத்தே கனகமாலையைக் கொடுக்க, அவ்விந்திரன் அதனை வாங்கி வெள்ளையானையின் தலையின் கண்வைத்தான். அவ்வெள்ளையானையானது அம்மாலையைக் காலினால் மிதித்து அழுத்தெறிய, அதனைத்துருவாசமுனிவர்கண்டு மிகக் கோபித்து, வெள்ளையானையே நீ பூமியினிடத்தே மதம் பொருந்திய காட்டுயானையாகக் கடவாயென்று சபித்தலும், அவ்வெள்ளையானை நடுங்கி, அம்முனிவரைத் துதிக்கையால் வணங்கிச், சுவாமி! அடியேனுக்கு இச்சாபம்நீங்குவது எக்காலமென்று பிரார்த்திக்கத், துருவாசமுனிவர் யானையேநீ! திருவெண்காட்டிற்சென்று சிவபெருமானை வணங்குவையாயின், இச்சாபம் நீங்குமென்று கூறித்தம் மிருப்பிடத்திற் சென்றார். பின்பு வெள்ளை யானையானது திருவெண்காட்டில் ஒரு தாமரைமடுவில் விழுந்து, பயம் நீங்கி மழைபோலும் மதநீர்சொரியப், பலபெண் யானைகளோடுகூடி, ஆரணியந்தோறுந்திரிந்து, அநேக காலங்கழித்தது.

இப்பால் சிவப்பிரியமுனிவர் தம்தந்தையாராகிய முற்கலயோகியாரைப்பணிந்து, பிதாவே! சாதல் இல்லாதவரந்தரும் சிவத்தலத்தைச் சொல்லியருளும் என்று பிரார்த்திக்க,முற்கல முனிவர்மைந்தனே! திருவெண்காட்டில் வசிப்போருக்கு முத்தினத்தில் முத்திசித்திக்கும் அத்தலத்திற்குச் செல்வாய் என்றார். பிதாவின்வார்த்தைப்படியே சிவப்பிரியமுனிவர்திருவெண்காட்டையடைந்து, சுவேதவனப்பெருமானைத் தொழுது, ஞானமயமாகிய ஆலவிருக்ஷத்தின்கீழே சைவசமயத்தோர்கள்சூழ, நல்லமகாதவத்தைப் பலநாட்செய்தார்.

ஒருநாள் சிவப்பிரியமுனிவர் முன்சொல்லப்பட்ட வெள்ளை யானை சஞ்சரிக்கும் காட்டில் உள்ள ஒருதாமரைத் தடாகத்திற் சென்று ஆயிரந்தாமரை மலர்கொய்து கொண்டு திரும்பி வரும்போது, அவ் வெள்ளை யானையானது பெண் யானையோடும் வருதலைக்கண்டு, விரைவோடுஞ் சென்றார். அப்பொழுது வெள்ளை யானை நெருங்கிக், கொம்புகளினால் அம்முனிவருடைய மார்பிலே குத்த, அவர் வாடிவிழுந்து, உடனே மயக்கம் நீங்கித் திருப்பூங் கூடையைக்கைவிடாதெழுந்தார். அந்த யானையின்கொம்புகள், அம்முனிவருடைய இருதயத்திலே சிவபிரானுடைய திருவைந்தெழுத்து அழுந்தியிருக்கின்ற கடினத்தால் அழுந்தாமல், அந்தயானையின் முகத்திற்றானேயழுந்தி வயிற்றிற்செல்லுதலால், இரத்தம்மழைபோலப்பொழிந்தது. பின்பு அவ்வெள்ளையானை முன்னினைவு பெற்றுத், துருவாசரிட்ட சாபமோ முடியக்காணோம், இன்னும் இம்முனிவருஞ் சாபமிடில் யாதாய்முடியுமோவென்று, மனங்கரைந்தழுது, அச்சிவப்பிரிய முனிவரைதுதிக்கையால் வணங்கிச், சுவாமி! அடியேன்பிழையைப் பொறுத்தருளுமென்று, பலவாகப் புகழ்ந்தேத்தியது. அப்பொழுது அம்முனிவர்நகைபுரிந்து, வெள்ளையானையே ! நீமதமுடைமையாலுந் தாமதகுணமுடைமையாலும் இதம் அகிதம் பாராமல் எமக்குத் துன்பஞ் செய்தாய். இப்படி எமக்குத் துன்பஞ்செய்தலால் உனக்குப் பாவம் வருமேயென்று வருந்தி யிருக்கின்றோம். அதுவே யல்லது உன்னைச்சபியோம். போவாயாகவென்று சொல்லி, அங்குநின்றுந் தாமரைமலரோடுந் திருக்கோயிலைச் சேர்ந்து, முக்குளத்தினுங்காவிரியினும் ஸ்நானஞ்செய்து, சிவபெருமானைச் சிவாகமவிதிப்படி 'பூசித்துத்' தினந்தோறும் நாவானது தழும்பேறுமாறு திருவைந் தெழுத்தைச் செபிப்பாராயினார். இவ்விதமாகச் சிவப்பிரிய முனிவர் இரண்டுகாலமுஞ் சுவேதவனப்பெருமானைப் பூசைசெய்து கொண்டு வருகின்ற நாளில் வைகாசி மாதத்து அமாவாசை தினத்தில் இறைவராகிய சுவேதவனநாதர், சிவலிங்கத்தினின்றுந் தேசுபொருந்திய திருமேனிகொண்டு தோன்றியருளிச், சிவப்பிரிய முனிவரைத் திருக்கரங்களால் இறுகத்தழுவிக் கொண்டு, அவரோடும் சிவலிங்கத்தினுள்ளே மறைந்தார். ஆதலினால் வைகாசிமாதத்து அமாவாசையில் சுவேதவனப்பெருமான் திருவடிகளையுஞ் சிவப்பிரியமுனிவர்திருவடிகளையும் வணங்குவோரும் பூசிப்போருஞ் சிவகதியடைவர்கள்.

ஐராவதச்சிவப்பிரியச்சருக்க முற்றிற்று.

# ஐராவதச்சருக்கம்.

தருஞ்சிவப்பிரியன்செய்தசெயலொன்றுசாற்றினேமுன்
பகர்ந்தமால்யானைசெய்கைபகருவோபரிந்துகேளாய்
முகந்தனிலெழுந்துங்கோட்டுக்குருதிபோய்முறிந்துமார்பிற்
புகுந்துடலனைத்தும்வாட்டமுற்றதப்புழைக்கையானை. (௧)

பையவேவயிற்றிற்கட்டிப்பரபரப்பியகுருதிக்கட்டி
துய்யபுட்கரத்தினூலேசொரிந்திடும்பொழுதுதொண்ட
ரையனீரடியிற்சூட்டுமலர்களைப்பறித்தோமென்று
கையதாமலர்பெய்கூடையினிற்சொரிகபடம்போலும். (௨)

நோவொருவகையானீங்கிநுணங்கியகேள்வியாளர்
மாவடதருவின்கீழினுறைந்தனர்மகிழ்ந்துபோற்றி
மூவறுபுராணநூலுமவரிடைமுறையாற்றேர்ந்து
தாபதரெனவேவசித்துத்தவங்களைப்புரிந்ததன்றே. (௩)

தன்பெயரதனாலந்தத்தலத்திலோரிலிங்கந்தாபித்
தின்புகையொளிநீர்மாலையெடுத்தருச்சனையும்பண்ணி
யன்புடன்வலமுஞ்செய்ததந்தநாளதனிலோர்நாட்
பொன்புனைசடையினானுந்தோன்றினான்புலவர்போற்ற. (௪)

ஆனையின்சாபநீக்கியவிர்ப்பியதனைவீக்கி
யானைமாமுகனையீன்றவனங்கொருபுறத்திற்காண
வானைமேற்கொண்டெனையனருண்மழைபொழியாநின்றுன்
யானையும்வணங்கியேத்தியடியில்வீழ்ந்தெழுந்துகூறும். (௫)

விழியிடந்துமக்குச்சாத்துமேகமேனியினார்முன்னாள்
பொழிமதக்கரியைக்காத்தபோருளெனவடியேற்கென்று
மழிவிலாதளித்துச்சாபமகற்றுமென்றுரைத்துப்போற்ற
வழிபெருங்கருணைவாரிமழையெனவரங்களீந்தான். (௬)

உட்புழைதிரண்டுகோடுமுதரம்விட்டெழுந்துநான்காப்
பெட்புறப்பழையசாபம்பெயர்ந்திடவினைகடீர்த்தோம்
தட்பநின்றடத்துமூழ்கியதிலுறைதலைவனாரை
நட்புடன்வலஞ்செய்வார்க்கும்பரகதிநல்குமோரோ. (௭)

வரங்களிப்படியேநல்கிமறைந்தனன்மறைந்தபின்னர்
பெருங்களிப்புடனேவிண்ணிலடைந்ததுபெருங்கைவேழ
மருங்கதியிதுபோனல்குந்தலமிலையாதலாலே
கரங்களிற்கனிபோலையன்றிருநடங்காணலாமே. (அ)

தவம்புரிசுவேதகேதுமுனிவனேயெனவுஞ்சாற்றிச்
சிவந்ததாமரைபோற்கண்ணன்மதங்கராச்சிரமஞ்சேர்ந்தான்
உவந்திடுகதையீதென்றுவசுவுடனுரைத்துப்பின்னும்
நவம்பெறுபுற்காலன்றன்கதையினைநவில்வதானன். (௯)

ஐயிராவதச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௰உ - க்குச் செய்யுள் சஉ௫

---

## வசனம்.

—*—

திருவெண்காட்டில், வெள்ளையானை யானது, சிவப்பிரியமுனிவரைக் கொம்பினுற் குத்தியபொழுது, அக்கொம்புகள் அம்முனிவர் மார்பிலமுந்தாது, தன்முகத்திலமுந்தி, மார்பிற் புதைதலால், உதிரம்பெருகியொழுக, வாடிப் பின்பொருவகையால் அந்நோய் நீங்கி, மகிமைபொருந்திய ஆலவிருக்ஷத்தினடியில் தவஞ்செய்யும் பெரியோர்களை வணங்கித்துதித்துப், பதினெண்புராணங்களையும் அவர்களிடத்தே கேட்டறிந்து தவஞ்செய்தது. பின்பு அவ்வெள்ளையானை ஈசானதிசையில் தன்பெயரால் ஒருதடாகமமைத்து, அத்தடாகக் கரையில் ஒருசிவலிங்கந்தாபித்து, தூபம் தீபம் நீர் மாலை முதலியன கொண்டு அன்போடும் பூசித்து, வலஞ்செய்து கொண்டுவருகின்ற நாளில் ஒருநாள் சுவேதவனப் பெருமான் பெரியநாயகி டம்மையாரோடும் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளிவந்து வெள்ளையானையே! உன்பூசைக்கு மிகமகிழ்ந்தோம். உனக்கு உள்ளேபுதைந்த இரண்டு கொம்பும் வயிற்றினின்றெழுந்து, நான்குகொம்புகளாய் விளங்கவும், துருவாசனிட்ட சாபம் நீங்கவும் வரந்தந்தோம். உன்தடாகத்திலே மூழ்கி உன்னுற்றுபிக்கப்பட்ட சிவலிங்கமூர்த்தியைப் பூசித்து வலஞ்செய்வோர்க்கும் மேலான வரங்களைக் கொடுப்போம், என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். வெள்ளையானை பெருமகிழ்ச்சியோடும் விண்ணுலகடைந்தது. அரிதாகிய கதியை இத்தலம்

போலக்கொடுக்கும் தலம்வேறில்லை. ஆதலால் இங்கே சிவபெருமானது திருநிருத்தத்தைத் தெரிசிக்கலாம். சுவேதகேது முனிவனே! தவஞ்செய்வாயாக. என்றுகூறி, விஷ்ணுமூர்த்தி மதங்காச்சிரமத்தை யடைந்தார். சுவேதகேது முனிவருந்திருநிருத்த தரிசனத்தின் பொருட்டுத் தவஞ்செய்தார் என்று அகத்தியமுனிவர் வசுஷ்ஙன்னனுக்குச் சொல்லிப் பின்பு வியாக்கிரபாதமுனிவர் சரித்திரத்தைச் சொல்வாராயினர்.

ஐராவதச்சருக்க முற்றிற்று.

# வியாக்கிரபாதச் சருக்கம்.

உத்தமர்க்கெலாமுத்தமனொருவன்முன்னுகத்தின்
மத்தியந்தினனெனும்பெயர்மாதவன்பயந்த
புத்திரன்புலிக்காலனிப்புவியிலெப்பொருளிற்
சத்தியப்பொருளறிந்ததன்வழியிலேசார்ந்தான். (க)

அயர்விலாதநன்னெறியிலேநடந்திடுமவனை
முயலகன்வலிபிடித்ததுமுன்னுளவினையாற்
றயனுற்பெறுந்தாதையுமன்னையுஞ்சலித்துப்
பயமதாயதுதவிர்ந்திடுஞ்செயலெலாம்பணித்தார். (உ)

பிள்ளையின்மையேதீமையாம்புதல்வரைப்பெற்றூற்
றெள்ளிதாயினன்றன்றெனிலதனினுந்தீதா
மொள்ளிதாகியபுதல்வனுக்கிடுக்கண்வந்துற்றூற்
கொள்ளையாகியதீதினிற்றீதெனக்குலைந்தார். (ங)

எந்தைநல்வினைபுரியவுந்தீர்கிலாதிருக்க
மைந்தனொந்துளம்வருந்தினன்வருந்தியமகனைத்
தந்தைகூறுவான்வருந்தலைவருந்தலைதனயா
சிந்தையான்மகிழ்ந்திறைவன்வெண்காட்டினிற்செல்வாய். (ச)

அன்றுநின்பிணியகலுமென்றொருகதையறைவான்
குன்றிருஞ்சிறையரிந்தவன்மலரவன்கோயிற்
சென்றுமுன்னமேசெம்பொனுநமுசியுஞ்சினத்தால்
வென்றிகொண்டதற்கிடர்கொடுத்தமையெலாம்விரித்தான். ()

மறையினானவற்குரைசெய்வானியான்றரும்வரத்திற்
குறைவிலாமையாலவுணருமுனக்கிடர்கொடுத்தார்
பிறையுலாவியவேணியானருள்வரம்பெற்று
மிறையிலேயவர்வலியெலாந்தடுப்பையென்றிசைத்தான். (சா)

மீனினத்துடன்செறிபுனல்விளங்கியசுவேத
கானனத்துநீபெருந்தவம்புரியெனக்கருணை
யானனத்தயனுரைத்தனனுரைத்தலுமமரர்
கோனனத்தனைப்பணிந்துநன்றெனவிடைகொண்டான். (எ)

கவுரிதாண்டவம்புரியும்வெண்காட்டினிற்கலந்து
நவமதானவோரிலிங்கமத்தலத்திடைநாட்டித்
தவமதானதுபுரிந்தனனவன்புரிதவத்தைப்
புவனமுய்யநின்றுடிறான்மகிழ்ந்தெதிர்போந்தான். (அ)

புரந்தரன்றொழு திறைஞ்சினான்புராந்தகன்புகல்வான்
வரந்தரும்படிக்குரையெனமகபதிமகிழ்ந்து
பரந்தசெம்பொனைநமுசியைப்பாகனைவலனைச்
சிரந்துணித்திடும்படைதருகெனவுரைசெய்தான். (கூ)

அமலனேதுவான்வலன்முதலவரையென்பதனால்
நமுசிதன்னைவெண்ணுரையிலாற்சிதையெனநவிற்றிச்
சமரின்மற்றுளபகையையுந்துணியெனச்சாற்றி
யுமையிடத்தினான்மறைந்தனன்பலவரமுதவி. (ய)

மின்பறிந்தபொன்னுலகிலேமகபதிமேவி
வன்புகொண்டவெண்ணுரையினானமுசியைமாற்றித்
தென்புலங்களிலவுணரையடக்குவான்றெதிசி
யென்புகொண்டுவச்சிரஞ்சமைத்தமர்கடந்திருந்தான். (யக)

## வேறு.

மீண்டுமப்பதியினின்மேவியிந்திரன்
பூண்டுமுக்குளத்திடைப்புனலின்மூழ்கியே
தாண்டவப்பரனையும்பணிந்துசந்ததம்
நீண்டவப்பழிகளுநீக்கியேகினான். (யஉ)

வியாக்கிரபாதச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் யகூ - க்குச் செய்யுள் அ௲கள

## வசனம்.

—*—

அரசனே! முன்னுகத்திலே மத்தியந்தின முனிவருடைய புத்திரராகிய வியாக்கிரபாதமுனிவர், உண்மைப்பொருள்சிவபெருமானேயென்றறிந்து, நல்லொழுக்க வழியிலே நடப்பாராயினர். இத்தன்மையராகிய வியாக்கிரபாதமுனிவரை முன்னைவினையால் முயலகன் வலிபிடித்து வருத்தியது. தந்தையுந் தாயும் புத்திரர்க்குண்டாகிய முயலகன் வலிமையைக்கண்டு, மிகவருந்திப் பயந்து, அம்முயலகன்வலி நீங்குதற்கு வேண்டுஞ்செய்கைகளை யெல்லாம் செய்தும, அது நீங்காதிருத்தலினால் வியாக்கிரபாதர் மனநொந்து வருந்தினர். வருந்துகின்ற புத்திரரைத் தந்தையராகிய மத்தியந்தின முனிவர் நோக்கி, மைந்தனே வருந்தாதிரு, வருந்தாதிரு. திருவெண்காட்டிற் சென்று சிவபெருமானை வழிபடுவையாயின், அப்பொழுதே நின்முயலகன் வலிநீங்கும் என்றுசொல்லி, ஒருகதை சொல்வாராயினர்.

முற்காலத்திலே இந்திரன் பிரமதேவரிடத்திற் சென்று, செம்பொனென்பவனும் நமுசியென்பவனும் தனக்குச் செய்த துன்பங்களையெல்லாஞ் சொல்லப், பிரமதேவர்கேட்டு, இந்திரனே! யாம்கொடுத்தவரத்தினாலே, செம்பொன் முதலிய அசுரர்கள் உன்னை வெற்றிகொண்டார்கள். நீதிருவெண்காட்டிற் சென்று, தவம்புரிந்து, சிவபெருமானிடத்திலே வரம்பெற்றால், அவ்வசுரர்களுடையவலிமையையெல்லாங் கணப்பொழுதிலே நீக்கலாமென்றார். இப்படிக் கூறிய பிரமதேவரை இந்திரன் வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருவெண்காட்டைச்சேர்ந்து, ஒருசிவலிங்கந் தாபித்துப் பூசித்துத் தவஞ்செய்தான். சுவேதவனப்பெருமான் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளிவந்து, இந்திரனே! உன்தவத்திற்கு மிகமகிழ்ந்தோம். வேண்டியவரங்களைக் கேட்பாயாக வென்றலும், இந்திரன் நமஸ்கரித்துத் துதித்து, எம்பெருமானே! செம்பொன்னையும் நமுசியையும் பாகனையும் வலனையும் சிரந்துணித்தற்கு ஆயுதந்தந்தருளு மென்றான், சுவேதவனப்பெருமான் இந்திரனே! வலன் முதலோரை என்பினாலும், நமுசியை வெண்ணுரையினாலும், கொல்லுவாய். போரினிடத்தே மற்றப் பகைவர்களையும் அழிப்பாய் என்று வரங் கொடுத்து மறைந்தருளினார். பின்பு இந்திரன் பொன்னுலகத்தைச் சேர்ந்து.

வெண்ணுரையினாலே நமுசியைக்கொன்று, ததீசிமுனிவருடையஎலும்பினால் வச்சிராயுதஞ்செய்து, போரினிடத்தே அசுரர்களை யெல்லாமழித்துச், செயம்பெற்றிருந்தான். மீட்டும் இந்திரன் திருவெண்காட்டையடைந்து, முக்குளத்திலே ஸ்நானஞ்செய்து, சுவேதவனப்பெருமானையும் பெரியநாயகி யம்மையாரையும் நடேசபெருமானையும் அகோர மூர்த்தியையும் பணிந்து, பெரியபழிகளையும் நீக்கிக்கொண்டு மகிழ்ந்து சென்றான்.

வியாக்கிரபாதச்சருக்க முற்றிற்று.

---

## சுவேதச் சருக்கம்.

துவாபரயுகத்தினிற்சுவேதனென்பவன்
றிவாகரகுலத்தினிற்சிறக்கத்தோன்றினா
னவாவினிலவன்புணர்பவள்சுலோசனை
தவாதவன்புதல்வன்வாதாவியாகுமே. (௧)

உலகினைத்தனயனுக்குதவிமின்னுடன்
றலைமைவானப்பிரத்தத்தின்மேவினான்
பலபகற்றவமிவன்பண்ணுநாளிலே
யிலவிதழ்ச்சுலோசனையிறுதியெய்தினாள். (௨)

புலோமிசையிவளெனப்புனைந்தபேரெழிற்
சுலோசனையிறந்தநாட்சுவேதனென்பவன்
விலோசனங்களினெடுவெள்ளந்தாங்கினான்
கலோலமீண்டியகருங்கடல்களென்னவே. (௩)

காவலன்சுவேதனுங்கவற்சிநீங்கியே
சாவறவரம்பெறுந்தலத்தைநாடியே
யாவருமிறப்பர்களிமைக்குமுன்னமே
மூவரிலொருவனேமுடிவிலாதவன். (௪)

படைப்பவனளிப்பவன்படைத்தயாவையுந்
துடைப்பவன்றுடைத்தவச்சுடலைமீதிலே
நடிப்பவனொருவனேநமனைவென்றவ
னடுத்தவர்தமக்குமெய்யழிவுநீக்குவான். (௫)

தருகுவன்வரமுயர்தலத்திலேதவம்
புரிகுவமெனவெணிப்பொன்னியாற்றின
திருகரைமருங்கினுமெல்லைகண்டிலான்
கருதியபடியிலவெண்காட்டையெய்தினான். (௬)

ஏற்றமாமுக்குளத்திடையிற்காவிரி
யாற்றினின்மூழ்கியாறணிந்தவண்ணலை
போற்றியவ்விடைத்தவமபுரியுநாளிலே
கூற்றுவனவனெதிர்குறுகித்தோன்றினான். (௭)

சூலுடைநெடுமுகில்சொரிந்தமின்னெனக்
காலனுங்கயிறவன்கழுத்திற்பூட்டினான்
சாலவுண்ணடுங்கியேதவனுஞ்செய்கோமகன்
ஓலமென்றிறைவனையுருகப்புல்லினான். (௮)

வேறு.

சமனுரைத்திடுமென்னையுன்னிடசங்கரன்கொல்விலக்குவான்
சிமயமொப்புடையாளிதன்னையொர்சிந்துரந்தடைசெய்யுமோ
கமலரொத்தனைமாயரெத்தனைகனகவாசவர்தம்முட
னமரரெத்தனையெனதுகையினிலழிவுபட்டனரையனே. (௯)

இறுதிநாள்வரின்முட்கிழிக்கினுமெவருமாவியிழப்பர்மே
லுறுதிநாளுளதாயின்வச்சிரமுருவினார்களுமுய்வர்கா
ணறுதிவீரர்களாயினுந்துணையற்றதீனர்களாயினு
மறலியாரெதிராகினுய்கிலர்வருகமன்னவவருகவே. (௰)

வேல்பிடித்தகைவேழராசிவிலக்கினாலும்விலங்கிடேன்
சால்வுரத்தனராகிவந்துதடுப்பராயினுமீள்கிலேன்
கால்பிடித்துவணங்கிநெஞ்சுகரைப்பரேனுமிரங்கிடேன்
றோலுடுத்தவரோதடுப்பவர்சொல்லுசொல்லுசுவேதனே. (௰௧)

என்றுகூறியிடிப்பதென்னவிடித்துவாயையெயிற்றினாற்
றின்றுகையைநிலத்தறைந்துசிவந்தகண்ணழல்சிந்தவே
நின்றெதிர்த்தெதிர்சென்றகாலனைநில்லடாவினிநில்லடா
நன்றுநன்றனெழூச்சியென்றுநகைத்துமன்னவனிவினுவான். (௰௨)

பாரொடாவநுபான்றிமே கடியபாதமென்றுணைபாசமாம்
நாரொடாதினியோடுநின்வழிநான்வராமலிருக்கவும்
வேரொடாகெடவந்தென்னவிசாரமென்னைவெருட்டநீ
யாரடாசடிதோடடாசொலையந்தகாகொலையந்தகா. (௰௩)

முப்புரத்தைநகைத்தெரித்ததில்மூவருக்கருள்செய்தவ
னொப்பொருத்தரிலாதவன்பவரோகவீரவைத்தியன்
மைப்புரத்தவர்தேடநின்றவன்மங்கைபாதியன்மாரவே
ளப்படர்த்தவனன்பனுனையஞ்சுவேனலளந்தகா. (௰௪)

சித்தசன்பகையானசந்திரசேகரன்கருணாகரன்
பத்தவற்சலனம்பிகாபதிபண்டரங்கநடித்தவன்
நித்தனற்புதனீலகண்டனிராமயன்சிவனின்மல
னத்தனன்பனுனக்குவன்படராதுதூரநில்லந்தகா. (௰௫)

கஞ்சமண்டபமண்டுமங்கையர்கட்டிவைத்தகழுத்துநால்
நஞ்சுபிஞ்சுவிடாமல்வாரியினஞ்சருந்தியநாயகன்
வஞ்சிபங்கனகண்டபூரணன்வள்ளலென்னைவளர்த்தன
னஞ்சுவேனலன்வந்துபாரினியந்தகாகொலையந்தகா. (௰௬)

பச்சிரத்தநிணத்தினோடுமெய்பற்றிமார்பிடைபற்றவே
சச்சைகொட்டியபூதநாயகர்தாளெனக்குளதாதலால்
முச்சிரத்தையெடுத்தடர்த்துமுறுக்குபாசமிறுக்கிநீ
யச்சுறுத்துவதென்னடாகொலையந்தகாகொலையந்தகா. (௰௭)

வஞ்சகந்தவர்பஞ்சபாதகர்வள்ளல்பாதமறந்தபேர்
வெஞ்சமர்க்குனையஞ்சுவாரினிவெள்ளையம்பலவீதிலே
சஞ்சரிப்பவர்நீறணிந்தவர்சைவர்தம்புகழ்சாற்றுவோ
ரஞ்செழுத்தினைநெஞ்சழுத்தினரஞ்சுவாரலரந்தகா. (௰௮)

நித்தனுரையடைந்தபேர்களுநித்தரானமைநினைகிலா
யத்தனுரடியார்கடம்மடியார்களாணையகன்றுபோ
மத்தனேயெனவுரைசெய்தானமன்மன்னிவந்துபிடித்தனன்
பத்தவற்சலன்வீரபத்திரர்பலரொடங்கெதிர்தோன்றினன். (௰௯)

கட்கசேடகம்வில்லுவாளிகணிச்சிசூலமெடுத்தடர்ந்
துட்குமாறுதுரத்தினனமனோடியாவியொழிந்தனன்
புட்பதந்தனும்வானுளோர்களுமலரின்மாரிபொழிந்தனர்
நட்பொடஞ்சலிபண்ணிமன்னவனண்ணியன்புடனவில்லுவான். (௨௰)

வேறு.

ஆழிகடைந்தோனுமயனுமகபதியும்
வாழியுனதுமணிவாயில்காத்திருக்கப்
பூழிபடுநாயிற்புழுவிற்கடையான
வேழையடியேற்கெளிரங்கியெதிர்வந்தாயே. (உக)

துன்பகலும்வண்ணஞ்சுரர்முனிவர்சாரணர்க
ளன்புடனின்றேத்தவருட்கடைக்கண்பாராதாய்
புன்புலவுநாறும்புழுவைப்பொருளாக்கி
யின்பகனமேனியனேயென்கருதிவந்தாயே. (உஉ)

கன்னற்றெளியேகனியேகடலமுதே
பொன்னித்துறையிற்செறிந்தபுதுமணியே
யன்னப்பெடையையிடத்தாளும்பெருமானே
யென்னைப்பொருளாக்கியென்கருதிவந்தாயே. (உ௩)

இப்படியேகூறியிறைஞ்சுமவன்சென்னியின்மேன்
மெய்ப்பிறையுநீரும்விளங்கியதுகந்தரத்தே
மைப்படிவமானதொருமானுமழுவுமிரு
கைப்புடையுஞ்சேர்ந்ததொருகண்ணுதலிற்காட்டியதே. ()

தேவருலகிற்செழுந்தேன்மலர்மழையாற்
பூவுலகமானதந்தப்புண்டரிகக்கண்ணனு
மேவுமலர்வேதியனும்விண்ணவருமிந்திரனும்
யாவருமெம்மான்புகழையெண்டிசையும்பாடினார். (உ௫)

வேறு.

கன்னியொருபுறத்திருந் துஞ்சிலைவேளையெரித்தநுதற்கண்ணா போற்றி, வன்னிவடிவெனப்பொலிந்துங்கங்கைமங்கைபுணருமணவாளாபோற்றி, யன்னமிருஞ்சாய்க்காட்டில்வெண்காட்டிலகலாதவமலாபோற்றி, பொன்னிநதியுடையானேசென்னிமதியுடையானேபோற்றிபோற்றி. (உ௬)

ஏகனுமாயிருந்து முயிர்க்குயிராகியெவ்விடத்துமிருப்பாய்போற்றி, யாகமவேதாந்தமற்று மளப்பரிதாயதீதமு மாமரசேபோற்றி, பாகமுறும்பசுத்துவத்திற் பரப்பொழியவருட்பொழியும்பரமாபோற்றி, போகமதிகாரலயமூவிடத்துமகலாதபுனிதாபோற்றி. (உ௭)

ஆலமுதலருந்தியெங்களாருயிர்காத்தளித்ததுபோலருளினாலே, காலனுயிர்கொடுத்தருளிப் பிழைபொறுப்பாயெனத்தொழுதார்கருணையாகிப், பாலவிழியவனுமந்தக்காலனுயிர்கொடுத்துமுன்னைப்பதவியீந்தான், மாலயனுமிந்திரனும் விடைகொடுதம்மாச்சிரமமருங்கு சேர்ந்தார். (உ அ)

இப்புவியெனச்சுவேதனிங்கேவரம்பெறலாற்சுவேதவனமெனப்பேராகு, முப்பதினுளிற்றவமுமுடிதலினாற்சித்திவனமுதற்பேராகு, மைப்பரவுதிருமிடற்றார் மகிழ்தலினாற்சிவப்பிரியவனப்பேராகுந், தப்பரியகாலன்வலியழித்தலினாற்பெயர்காலஞ்சரமதாகும். (உகூ)

இந்நகரின்பெயரிலொன்றை நினைத்தாலும் வினையகலுமிடுக்கணீங்கும், பன்னகந்தேள்விலங்கலகைமுயலகன்றீவிடமுதலாம்பயமுந்தீரு, மன்னவனேயெனவுரைத்தான் மலயமுனிவனை வசவும்வணங்கிக்கூறும், பொன்னகரிலமரரிங்கேயொளித்தகதையினைவெளியாப்புகல்வாயென்றான். (௩0)

சுவேதச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் - ம்சு க்குச் செய்யுள் சகூ௭

---

## வசனம்.

---

துவாபரயுகத்திலே சூரியகுலத்திலே சுவேதனென்பவன் பிறந்து, சுலோசனையென்னு மாதை விவாகஞ்செய்து கொண்டு, இவ்வுலகமுழுதையும் அரசாண்டுவருகின்ற நாளில் வாதாவி யென்னும் ஒருபுத்திரனைப் பெற்று, அப்புத்திரனுடைய கல்வியறிவினையும் அழகினையும் ஆண்மையினையுங்கண்டுமகிழ்ந்து, அவனுக்குத் தன்னரசாட்சியைக்கொடுத்து விட்டுச், சுலோசனையுடன் வானப்பிரஸ்தாச் சிரமத்தையடைந்து, பலநாள் தவஞ்செய்து வருகின்றநாளில் சுலோசனைமரணமடைந்தாள். அப்பொழுது சுவேதன் என்னன்பிற்கிசைந்த கற்புள்ள மனைவியே! பிறந்தாயோ இறந்தாயோவென்று, கடல்போலக் கண்ணீர்சொரிந்தழுது, பின்கவற்சி நீங்கிச், சாவில்லாதவையந்தரும் சிவத்தலத்தைச் சேர்ந்து தவம்புரிவோ மென்றெண்ணிப் புறப்பட்டுக், காவிரியாற்றின் இருகரையிடத்துந் தான்கருதிய வரந்

தருந்தலத்தைக் காணுதவனுய், அவ்வரத்தைக் கொடுக்குந் திருவெண்காட்டைச்சேர்ந்து, முக்குளத்திலுங் காவிரியிலும் ஸ்நானஞ்செய்து, சுவேதவனப் பெருமானையும் பெரியபிராட்டியாரையும் நடேசப் பெருமானையும் அகோரசிவனையும் நமஸ்கரித்துப் போற்றி, ஒருசிவ லிங்கந்தாபித்துப் பூசித்துத், தவஞ்செய்தான்.

இப்படித்தவஞ் செய்யுநாளில் ஒருநாள் இயமன் குறுகிச், சுவேதன் கழுத்திலே பாசத்தைப் பூட்டுதலும், அச்சுவேதன் மனம்நடுங்கித், திருநீலகண்டனே ஓலம். சந்திரசேகரனே ஓலம். கங்காதரனே யோலம் என்று சிவலிங்கமூர்த்தியைத்தழுவிக்கொண்டான். அப்பொழுது இயமன், சுவேதமன்னனே! என்னை உன்னுடைய சங்கரனே விலக்கவல்லன். யாளியை யானை தடை செய்யுமா. எத்தனை யோஇந்திரர்களும் எத்தனையோ பிரமர்களும் எத்தனையோ நாராயணர்களும் எத்தனையோ தேவர்களும் என்கையினல் அழிவுபட்டார்கள். மாளும் நாள்வரின் சிறியமுட்கிழிக்கினும் எவரும் உயிரிழப்பர். மேலே உறுதிநாளுண்டாயின், பெரிய வச்சிராயுதம் பட்டுருவினும் பிழைப்பர். வீரத்தின் மிகுந்தவர்களாயினும், துணையில்லாத எளியவர்களாயினும் யான்எதிர்ப்படிற் பிழையார்கள். வேலைப்பிடித்த கையினையுடைய யானைக்கூட்டங்கள் வந்து விலக்கினும் விலகேன். மிகுந்தவலிமையையுடையராய்வந்துதடுப்பாராயினுமீளேன். காலைப் பிடித்துக்கொண்டு வணங்கி மனத்தைக் கரைப்பவராயினும் இரங்கேன். என்பின்வருவாயாக. வருவாயாக. என்று இடிபோலக்கூறிக் கண்களினின்றும் அக்கினிப் பொறிசிதற எதிர்ந்தான். இவ்விதமாக எதிர்ந்த இயமனைப்பார்த்துச், சுவேதமன்னன் நகைசெய்து, கொலைத்தொழிலையுடைய அந்தகா! அந்தகா! சுவேதவனப் பெருமான் றிருவடிகள் எனக்குத் துணையாகும். இவ்விடம் விட்டு ஓடு. உன்வழிக்கு நான்வராமல் இருக்கவும், என்னிடத்துநீ வேரோடுங்கெடும்படி வந்தது என்னவிசாரம். என்னை வெருட்டுதற்கு நீ ஆரடா! சிவபிரானுக்கு அன்பனுகிய யான் உனக்கு அஞ்சுவேனல்லேன். என்னிடத்தில் உன் ஆக்கினை செல்லாது. தூரநில். வஞ்சகத்தரும், பஞ்சபாதகரும், சுவேதவனநாதர் திருவடிகளை மறந்தவரும் உன்னுடைய கொடுஞ்சமருக்கஞ்சுவார்கள். திருவெண்காட்டிலே சஞ்சரிப்பவரும் திருநீறணிந்தவரும், சைவர்களுடைய கீர்த்தியைச் சொல்வோரும், திருவைந்தெழுத்தைச் செபிப்போரும் உன்கொடுஞ் சமருக்கஞ்சுவாரல்லர். சுவேதவனப்பெருமானுடைய அடியார்க்கடியார்மேலாணை,

என்னைத்தொடராமல் அகன்றுபோ. அறிவில்லாதவனேஎன்றுசொல்ல, இயமன் அதனைக்கடந்துவந்து, அச்சுவேதமன்னனைப்பிடித்தலும், உடனே பக்தவற்சலராகிய சுவேதவனநாதர், பல வீரபத்திரர்களோடும் அங்கே தோன்றி, வாள், கேடகம், வில், அம்பு, மழு, சூலம் என்னும் ஆயுதங்களைத் திருக்கரங்களி லேந்திக், காலன் அஞ்சும்படி, துரத்தினர். அக்காலன்பயந்தோடி, விழுந்திறந்தான். தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். சுவேதமன்னன் அன்போடும் நமஸ்கரித்துத் துதித்தான். அப்பொழுது அச்சுவேதமன்னன் சிரசின் மேற்பிறையுங் கங்கையும், கழுத்திலே கருநிறமும், இருகரத்திலும் மானும்மழுவும், நெற்றியிலோர் கண்ணுந் தோன்றப் பெற்றுச், சிவசாரூபத்தையடைந்தான். விஷ்ணுமுதலிய தேவர்கள் சுவேதவனப்பெருமானை நமஸ்கரித்துக், காலனுயிரைக் கொடுத்தருளு மென்று பிரார்த்திக்கச், சுவேதவனநாதர் காலனுக்கு உயிரைக் கொடுத்து, முன்பதவியையும் ஈந்தருளினர். விஷ்ணுமுதலிய தேவர்கள் விடைபெற்றுக்கொண்டு, தம்மாச்சிரமங்களை யடைந்தார்கள். இத்தலம் சுவேதராசன் வ.ம்பெற்றமையால் சுவேதவனமென்றும், முப்பது நாளிற்றவமுடிதலினுற் சித்திவனமென்றும், சிவபெருமான் மகிழ்ந்திருத்தலினுற் சிவப்பிரியவனமென்றும், காலன்வலியழிதலினுல் காலாஞ்சரமென்றும் பெயர்பெறும். இப்பெயர்களி லொன்றை நினைத்தாலும் வினைகளுந்துன்பங்களும் நீங்கும். பாம்பு, தேள், விலங்கு, பேய், முயலகன்வலி, நெருப்பு முதலியவைகளா லுண்டாகும் பயமுந்தீரும். என்று சொல்லிய அகத்தியமுனிவரை வசுமன்னன் வணங்கித், திருவெண்காட்டிலே தேவர்கள் ஒளித்திருந்த கதையைச் சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, அம்முனிவர்சொல்வாராயினர்

சுவேதச்சருக்க முற்றிற்று.

# மருத்துவச் சருக்கம்.

மலர்ந்தகமலாலயத்தின்மயிலுலவுந்திருமார்பாவசுவேமுன்ன [னச்
நிலம்புரிந்தகொடுவினைபோலமரருக்குவிடம்போலெநெடுங்கூற்றென்
சலந்தரனென்ருேரசுரன் ருேன்றினனெண்கிரி பொருதுஞ்சலியாவீ
பலங்கருதிநெடுங்காலம்பிரமாவை நினைந்துதவம்பண்ணினனே. [ரன்

முண்டகனுமெதிர்தோன்றித்தவமொழிவாய்வரந்தருவோமொழிவாயென்றான், கண்டகனுப்பணிந்துரைப்பான்சுராசுராமற்றுளவுயிரின்கணத்தினாலும். தண்டருந்தீவிடத்தாலுமிறவாமலெனக்குவரந்தருவாயென்றான், புண்டரிகமலரோனுமவையளித்துத்தனதுலகிற்புகுந்தானன்றே. (உ)

வேறு.

பேருலகதனிற்சாகாவரம்பெறும்பெருமையாலே
மேருவையலைப்பனேழுவேலையைக்கலக்கியைந்து
தாருவைமுறிப்பன்விண்ணோர்தலைவனையடுவன்மாகயிற்
போருகும்வடிவாளேந்தியுலகெலாம்புடையாநிற்பன். (௩)

பிரமனைமுனிந்துசத்யவுலகினைப்பெயர்த்தான்மாயன்
புரமதுபுகுந்துமாலைப்புறங்கொடுத்திடப்போர்செய்தான்
வரமதின்முதிர்ச்சியாலேமயக்கமுங்களிப்புமாகிப்
பரமனாருறையும்வெள்ளிப்பருப்பதம்புகுதலுற்றான். (௪)

அவுணரையழைத்துநுங்கட்கரியனிமையோர்கோமான்
சிவனிடவெறுக்கையீவேன்செருத்துணையாகிலென்றா
னுவகையாலவரவ்வாறேபுரிவமென்றுடன்சென்றார்கள்
கவனவெம்பரிமாவான்றேர்நிரையுடன்களித்துச்சென்றான். (௫)

அமலனும்விடைமேற்றோன்றியவுணனேயுனதுசேனை
யமபுரமிசையிற்சேர்தற்கமைத்தநாளின்றேயென்றான்
சமனிகரவுணன்சொல்வான்சமரிலேசொல்வதல்லா
லிமகிரிமருகனேயிறுதிநாளிசையேனென்றான். (௬)

சங்கரன்பதத்தினாலோர்திகிரியைச்சமைத்துத்தீயா
விங்கிதுதலையின்மேலேயெடுத்திடும்வலியுண்டாயிற்
பொங்கியவுணனேவெற்றியெனநகைபுரிந்தான்றீயோ
னங்கதுபுரிவனென்னவாழியினருகிற்சேர்ந்தான். (௭)

காலுனிவிரலாலீசன்கணத்திலேசமைத்தவாழி
யானதையெடுத்தான்வெற்பையரக்கனன்றெடுத்தாற்போலப்
பூநிறைகளத்தின்மீதேயணைந்திடும்பொழுதிற்றீயோ
னூனுறவறுத்துத்தள்ளியிரவிபோலுதித்ததாழி. (௮)

மற்றுளவவுணரெல்லாமாய்ந்தனருங்காரத்தாற்
சுற்றிநின்றிமையோரெல்லாஞ்சொரிந்தனர்மலரின்சோனை
பெற்றனங்கருணைவெள்ளம்பிழைத்தனமெனவுஞ்சொன்னார்
கொற்றமுண்டகத்தினானுமுகுந்தனுங்குலிசத்தானும். (கூ)

ஆழியிலறுப்புண்டான்மெய்க்குருதிநீரடங்காதாழி
யேழினுங்கலந்ததாேனாரவுரவநரகிற்சேர்ந்த
தாழியங்கனலைமானுந்திகிரியையுறுதல்வேண்டி
வீழியம்பதியின்மாயனருச்சனைமிகவுஞ்செய்தான். (ய)

செய்யதாமரையின்போதோராயிரந்தினமுமேந்தி
யையனீரடிகளானதாமரைமலரிற்சாத்தி
யுய்யுமாபுரிந்தானப்போதொன்றினையொளித்தானைய
னெய்யுமாமலரோனருதைமலர்குறைநதிடுதல்கண்டான். (யக)

ஒருமலர்குறையலாமோவெனமனமுருகிக்கண்ணந்
திருமலரிடந்துபோதோராயிரந்திகழசசாத்திக்
கருமலங்களைவாயென்றுபரவினன்கருணையாலே
நிருமலன்விடையின்வந்தானீறுவெண்ணிலவுகால. (யஉ)

மண்ணிடந்தவனுமீசன்மலரடிமிசையில்வீழ்ந்து
பெண்ணிடம்புரிவாயெங்கள்பிழைபொறுத்தருள்வாயென்றான்
விண்ணிடந்தயனார்தேடும்விடையினன்மொழிவானுன்றன்
கண்ணிடந்ததற்குமாறுமுதவிநாங்கண்டிலோமே. (யங)

எமக்கிணையெனவேயென்றுமழிவிலாதிருப்பாயாவுஞ்
சுமக்குமீவாளரவுமுன்றன்பாயலாய்த்துலங்கவெம்பா
லமைத்தகண்மலரினாலேயம்புயவிழியானென்றுஞ்
சமைத்தபேர்பெறுகவென்றுசக்கரப்படையுமீந்தான். (யச)

வேறு.

சலந்தரனழிந்தபின்றனுவின்பாலரும்
புலர்ந்தனரொருவருமபுவனத்தின்றியே
பலந்தருகவிமகன்பதைத்துமுன்னமே
யுலந்தவர்மீள்வதற்குபாயமெண்ணினன். (யரு)

புதல்வரையழைத்தவர்புரோகிதஞ்செய்வான்
கதமிகுசலந்தரன்களேபரத்தினை
யெதிரொடுகடைந்தனனென்புநாட்டியே
யுததியையமரர்முன்கடைந்ததொப்பவே. (யசா)

கறங்கெனச்சுற்றியகளேபரத்திலே
மறங்கெழுமருத்துவன்வந்துதோன்றினா
னிறந்திடுமவுணருமெண்மடங்கதாய்ப்
பிறந்தனரமரரைப்பிடித்தபாவமே. (௧௭)

திங்களினிலவெனச்சிரித்துவெள்ளியு
மங்கவர்க்குறைபதியருளிப்போயினான்
பொங்கியவவுணர்தம்புவனஞ்சேர்ந்தன
ரெங்கணும்பரவியவிருட்களென்னவே (௧௮)

செருத்துவந்தனையினாற்றிருந்துதோளினான்
மருத்துவன்சாவிலாவரத்தைநாடியே
கருத்திலன்பொடுதவங்கனலிற்பண்ணினான்
பெருத்தவன்பொடுவரம்பிரமனல்கவே. (௧௯)

தீயிடையருந்தவஞ்செய்யுநாட்சரு
காயிரவருடமாயருந்தினான்சில
நேயமோடருந்தினனெடிதுநாளெலாம்
வாயுவையருந்தினான்வருடமாயிரம். (௨௰)

பண்டிமாதவஞ்செயுமருத்துவற்கெதிர்
புண்டரீகப்பசும்பொகுட்டின்மேவிய
வண்டநாயகனெழுந்தருளியுன்மனங்
கொண்டதேதுளததுகூறுகென்றனன். (௨௧)

தானவருலகெலாந்தரிக்குமாற்றலும்
வானவர்கணங்களைவருத்தும்வன்மையு
மூனிறையுயிரினுலுயிர்களற்றதால்
மேனிமேற்கழிந்திடாவரமும்வேண்டுமே. (௨௨)

நித்தமாகியவரநீங்கிமற்றைய
வெத்தனையுளவவையாவுநல்கினே
மத்துவாவனைத்தையுங்கடந்தவண்ணலே
சத்தியநிலைவரந்தருவனென்றனன். (௨௩)

வரமினந்தருகுவமருத்துவாவினி
யரனடியவர்க்கிடரளித்திடாவிடி
லாரனுடனிருப்பையென்றோதியோதிமப்
புரவியன்சத்தியவுலகிற்போயினான். (௨௪)

உளமகிழ்யருத்துவனுலகிலுள்ளதன்
கிளையுடன்செறிந்துவானுலகங்கிட்டியே
வளமைகொண்டிந்திரன்வலியைநீக்கினா
னளகைபரதிபதியரசுமாற்றினான். (௨௫)

கூற்றுவன்பதவியைக்குலைத்துப்பாவக
னேற்றமும்விலக்கினானிரவிசந்திரன்
றேற்றமுமடக்கினான்சுரர்களஞ்சியே
நாற்றிசையிடத்தினுநடுங்கியோடினார். (௨௬)

திக்குறைபாலர்கள்சென்றுநான்முகற்
கக்கணத்தவன்செயலனைத்துங்கூறினார்
தக்கபங்கயத்தனுந்தாமுமாகவே
மைக்கடற்றுயிலுமான்மருங்குநண்ணினார். (௨௭)

மடநடையவர்பதம்வருடபாசுணப்
படமணிவெயில்விரிபாயன்மீதிலே
மிடலொடுமுகிலெனவிழித்துறங்கிய
கடவுளையிமையவர்கண்டுபோற்றினார். (௨௮)

வெற்றிகொளாழியான்விரிஞ்சன்செங்கையைப்
பற்றியோராசனத்திருக்கப்பண்ணினான்
முற்றவுமிந்திரன்முதலினோர்க்கெலா
மற்றுமோராசனமளித்துவைகினான். (௨௯)

பதுமரேயிவரொடெம்பக்கனீர்வரும்
விதமுணர்ந்திலமெனவிரிஞ்சன்கூறவா
னதிகளானவைக்கெலாநலமதாகிய
கதிகளாவதுபெருங்கடலதல்லவோ. (௩௰)

வந்ததுபிறிதிலைமருத்துவப்பெய
ரந்தகன்கொடுமையாலமரர்யாவரு
நொந்தனரவரவர்நோவுதீர்த்தரு
ளிந்திரைமகிணனேயென்றுகூறினான். (௩௧)

கயவர்கள்வலியுடன்களித்துவாழ்குவ
தியலுடைநலத்தினோரிடுக்கட்கேதுவே
சயமிகுகொடும்புலிதருக்கிச்செல்வது
பயமுறுபசுக்களின்பாவமாகுமே. (௩௨)

இடர்செயுமருத்துவற்கிறப்பிலாவரங்
கொடுத்ததுமிலையெனவிரிஞ்சன்கூறினான்
படப்பருமணியராப்பாயலான்பகை
அடைத்திடுநெறியினைச்சொல்லலாயினான். (௩௩)

வேறு.

ஆதியுடனித்துயரனைத்தையுமுரைத்தா
னீதிவழுவாவகைநினைத்ததுமுடிப்பான்
போதுமெனவானவர்புரந்தரன்விரிஞ்சன்
மாதவர்கடங்களுடன்மாதவனெழுந்தான். (௩௪)

விண்ணினுமிழிந்தனர்சுவேதவனமெய்திப்
புண்ணியரிருக்குமனைபோலுநகர்புக்குப்
பண்ணிலகுமுக்குளமணிப்புனல்படிந்தார்
கண்ணுதல்பதத்தின்மிசைகண்மலரைவைத்தார். (௩௫)

போற்றினர்பணிந்தனர்கள்பூமழைபொழிந்தார்
சாற்றினர்கடங்குறைதடக்கைமழுவாளு
மேற்றின்மிசையெய்தியுமதின்னலுமொழிப்போ
மாற்றல்செய்மருத்துவனதாண்மையுமழிப்போம். (௩௬)

இவ்வனசர்முன்னமவிதியிட்டபடியேனுந்
தெவ்வரழிவாருமதுசிந்தனைதவிர்நகே
யவ்வளவுமிவ்விடையமர்ந்துறையுமென்றான்
வெவ்வினைதவிர்த்தருள்சுவேதவனநாதன். (௩௭)

நச்சுபுகழித்தலமுநாமமடிவொன்றே
யிச்சிறுகுழிக்கிடையெழுங்கிருமிமேலே
வச்சிரம்விடுத்திடினுமாய்தலரிதாகும்
மூச்சுடர்நினைந்ததுமுடித்ததலமீதாம். (௩௮)

காலனணுகுதூதமரருகாலுமிதில்வாரார்
சீலமறுநோய்பகைமைதீமைமிடிசேரா
நாலுமறைமூதவாநயந்ததலமீதா
மேல்விதிலேயுறையுமென்றிறைமறைந்தான். (௩௯)

அங்கவீரன்னவர்களவ்வுருவமாறிப்
பங்கயாசிசாலைமிசைபற்பலபயின்று
ரிங்ஙகரசல்லதெனவிந்திரனிருக்கும்
பொன்னகரம்வந்துகுடிபுக்கசெயல்போலும். (சய)

மாயமதியிற்பொலிமருத்துவனும்விண்ணோர்
நாயகனிருக்குநகரத்துலவுநாளிற்
றூயபகபற்றலறுதொலைந்தபலசேதா
வாயமறைவீடியவழிந்தசவமெல்லாம். (சக)

யாவர்கணமக்கெதிரெனப்பலவிசைத்துத்
தேவர்களொளித்ததிசைசென்றறிமினென்றே
மேவுபலதூதரைவிடுத்தனன்விடுத்தோர்
மூவுலகுநாடினர்கண்முற்றியெதிகாணர். (சஉ)

சாரணருரைத்தனர்கடங்கள்செயலெல்லாம்
வீரனும்வெறுத்தனன்வெறுத்துலவுநாளி
லாரணரவைக்கிடையகன்றனுமதத்தா
னாரதன்மருத்துவனைநாடியெதிர்வந்தான். (சங)

அந்தமுனிவற்கெதிரணைந்தடிபணிந்தே
முந்தவரியாசனமுகட்டின்மிசைவைத்தான்
நந்தமையனந்தனைதமாதானவர்களெல்லாம்
வந்ததிலுரிக்கதொரமகிழ்ச்சியுளதென்றான். (சச)

வேறு.

பொன்போலுந்தவமுனிவனவனுக்குரைபபான் பதினாலுபுவனத்துள்ளே, நின்போலநினைத்தசெயனமுடித்தவராருளரிதாவுநிற்கவீரா, முனபோலமகிழ்ச்சியின்றி முகமயுலர்ந்ததகருமமெனனமொழிவாயென்றான், மின்போலுஞ்சுடரவடிவேனமருத்துவனுமுனிவனுடன்விளம்பலானான். (சரு)

வினைபகையென்றிருவகையுங்குறைகிடந்தாலெழற்கிடைபோல் விழுமங்காட்டு, மெனவறிந்துஞ்சலந்தரனார்குலத்ததிதித்தநகரங்களிரண்டிருந்துமென்னே, சினவிமையோர்சிறுபகையைமுடிக்குநெறியறியாமறறிருந்தேனென்றே, மனமுருகிற்றெனவுரைத்தான்மருத்துவற்குநாரதனுமகிழ்ந்துகூறும். (சசு)

புண்காட்டுநெடுவேலாய்புலவரெலாம்புவியிடத்துப்பொன்னிசூ
ழும், வெண்காட்டிலொளித்தனர்காண்கருங்காட்டிலொளித்துறையு
ம்விலங்குபோல, வண்காட்டுமுனைதம்பெருங்கிளைகளெல்லாமொருவரி
ன்றிவளைந்துகூடி, யெண்காட்டைவளைந்ததெனத்தொடர்ந்திடுகவெ
னமுனிவனியம்பிப்போனான். (௪௭)

கேட்டளவிலவுணர்பதிநகைபுரிந்தானுருபுடமுங்கிரிகள்போல, வாட்
டமறவளர்ந்தவவன்முகமலர்ந்ததொருகரியவனப்பபோலே, யீட்டிய
தனனமைச்சருடன்கிளைஞாகளாயேமூலகத்திருப்பார்தமைக்கூட்
டுகவென்றுரைத்தனனங்கவருரைத்தபடியவுணர்குழுமினரே. (௪௮)

அரிமுகவன்புலிமுகவனமலைமுக்கன்கருட்காதனட்டகோணன், கரி
முகவனபணைக்காலன்மேதிமுகனகரமுகத்தான்கனலிற்கண்ணான்,பரி
முகவன்புகைநிறத்தன் விரிகேசனபருவயிறறன் பலலபோல்வான்,
எரிமுகவன்ஞாளிமுகனெனுந்தலைவர்திரண்டுவந்தாரிரண்டுகோடி. ()

ஒரொருவற்குளநெடுந்தேரொருகோடியிருகோடியுலவாவேழ
மேருலவுமிவுளிகளிருகோடிபதாதிகளுமிரண்டுகோடி
பாருலகினிடங்கிடையாதெனநெருங்கியெழுந்தனமுற்படைகளாகக்
காருலவுமருத்துவனாநெடுஞ்சேனைநானாவெள்ளங்கலந்தவன்றே. ()

எடுத்தபலகொடிநிரையாலிரவிமறைந்திருளபரந்தவிருட்டிலேமின்
பொடித்ததெனவிளங்கியனபடைக்கலங்களுரைசெவழுபுலிங்கராசி
யடுத்தகணப்பறைமுழவனுசல்லரிபல்லரிசங்கவதிரப்பாலெண்டம்
வெடித்ததெழுகடன்முழக்கமடங்கியதுசெவிடுபட்டவேழ்ராசி. ()

சேனையெழுதூளியினாலிரவியொளித்ததுவிடையின்செருக்குபோரிற்
றானவர்களிறந்துதனைபபிளந்திடுவாரெனமறைந்ததனையபோலு
மானைகளின்கடமெல்லாந்தூளடைந்தவானைமதவருவியாலே
மாநிலமேற்றுமடங்காதிருக்கமுன்னேபரிகரித்தவகையைபோலும்.

குதிரைகளின்காற்றூளிகடலேழுங்கலந்துநிலங்கொண்டபோது
கதிகளைந்துந்தரங்காட்டநிலமபோதாதெனவிடனுசெய்காட்டிபோ
புதியநெடுந்தேரிலெழுபாரகபடலங்களொனுபயற்களுடே [லும்
யதிர்கவனகுரகதவாய்விலாழிகளுபலம்போலவடைந்தவன்றே.

ஏறுவலிமருத்துவனார் பெருஞ்சேனைக்கடல்பரப்பியெழுந்து
பொன்னி, யாறுதனிற்புகுந்ததந்நாரதனும்வெண்காட்டிலணைந்து

போற்றி,வீறுகின்றவாருக்குமருத்துவனார் பொருமவரவைவிரித்தா னந்த,மூறுகின்றகடலாடுமதுகாணகினைந்துபுலியூரைச்சேர்ந்தான்.

இமையவர்களிருந்திருந்தவிடங்களெல்லாந்திருவெண்காட்டிறை வாவென்பார், சமனுருளவுதைத்தானேபுவனமுய்யநடித்தானேசர ணீயென்பார்,உமையவள்பங்குடையானேசுவேதவனப்பெருமானே யுயிரேயென்பார், தமையுணர்வார்க்கெளியானேயெனவுரைப்பாரா கிமனத்தளர்சகித்தார். (௫௫)

அந்தகரழியாமல் விடைவீரன்கடோதான்போரடுமாகாளன், றந்திமுகனறுமுகவன்வயிரவன்மாசாத்தனுமோஞ்சத்திதானும,வநதி னிதுகாத்திருக்குமபெருவாயினுன்கிளையுபவனாநதுகொண்டா, ரிநத நெடுஞ்சேனை யெல்லாமழிந்திடக் கீழ்த்திசை யில்விடையெழுநத தன்றே. (௫௬)

முப்பதியோசனையகலைப்பதியோசனைநீளமுகமபத்தாகுஞ், செபமியயோசனையுயரமொருநூறுயோசனையாகுஞ்செப்பார்சண்கள், ஒப்பறுயோசனையாரையாமருப்பொருபத்தோசனையினுயரமாகு. மிப்படியேயெதிர்தோன்றிவெள்ளிமலைநடநதெனவிகலிற்றன்றே.

வேறு

பெருந்துகிட்புரிமருவுகொம்பிருபிறையெனுமபடிகிளரவே
கிரணசங்கிலிசாமரம்பலகிண்கிணித்தொகைபுரளவே
சரணநூபுரமணிசதங்கைகள்சலசலென்சசெலெனவே
பொருகளம்புடைபடநடந்ததுபுனிதரேவியவிடபமே. (௫௮)

பண்கிளக்குநுனிக்குரததில்வளைச்சுழுத்துவளைக்குமேல்
விண்குனிக்குமருப்பினுனுறவெட்டுமுட்டுமவெருச்கொளக்
சண்கமூற்றுமுயிர்ப்பினிற்புகைகாலுநீடுகடற்களோ
ரெண்பதிற்றுமடங்கொலித்திடுமெநதையேவியவிடபமே. (௫௯)

வெற்பொரெட்டுகணைக்குவிட்டுவிழக்கரித்திரள்வீழவே
யற்புதச்சரணத்துகட்களிலலைநிலப்படவிர்மணிச்
சற்பமுற்றகமூத்தடிச்கடிதளர்வுறக்களதெளதமா
நற்பொருப்பெனவிடையில்வர்ததுநடபரேறியவிடபமே. (௬௰)

நிற்குமோடும்வளைக்கும்வாலைநிமிர்த்துரோமநெறித்திடும்
பொற்குளம்பின்மிதிக்குமானவர்புனைபதாதியுமிரதமும்
விற்கைவீரர்கள்போர்தடுக்குமெதிர்க்குமவன்னிவிழித்திடுந்
தெற்கிலந்தகனவுணராருயிர்தின்றுதின்றுதெவிட்டவே. (சுக)

வேறு.

மடிக்குமிருபதமரக்குநிறையவும்விழித்தெனவிழிசிவக்குமே நடிக்குமிரு செவியசைக்குழுது கினைநடுக்குமணிமயிர் பொடிக்கும் வாய், துடிக்குமலையெனுமுரிப்புநகையொடுசுருக்குமுதரமிந்நிலத் திலே, கிடக்குமவலையவுமருப்பு நுனிகொடுகிளப்புமவரெதிர்கிட் டுமே. (சுஉ)

வேறு.

நிருதர்விரிதலைநெரியவிருபுயநெடியவுடனெறநெறமெனப
பரியதுடைகளிலடைசிநெடுவிடைபவுரிபலபலசுழலுமே
யருணரளவிலருதயநிகரெனவவர்கள்குருதியிலலைவுறு
மிரதவுருளைகளதனைநிரைநிரையிடறிமுகிலிடையெறியுமே. (சுஙு)

கொடியமதகரிவயிறுசொரிகுடர்குதிரைசொரிகுடர்கொடிகள்போல்
விடையையுழுவதும்வளைதலவுணர்களவிசிறுமவலைகளைநிகருமே
நெடியதலைவர்கடலைகடுணிதலினிறுவுமவரறுநீர்மையாற்
படியிலிரிதருமிவுளிபலபலபசுவினிரைதிரிபான்மையே. (சுச)

அறிவிலவுணர்கள்குருதியலைபுனலமர்செய்களமெனும்வயலிலே
நிறையவரவுரவவர்கடசையொடுநிணவெள்ளளறுடனீடவே
தறுகண்மறவர்கடுவசநிரைநிரைதழைகளிடுவனவாகவே
மறலிபடையெனுமுழவர்மகிழ்வுறமருவியுழுதிடுமன்னியே. (சுரு)

வேறு.

படுதானவருதிரங்கடல்பரிசைத்திரள்கமடம்
விடுதேர்கலன்மணிநித்திலமீனாயுதமாகுங்
கொடியேதிரைபவளங்குடர்கொழுமூளைவெண்ணுரையா
மடர்சாமரைநிரைசைவலமணிபேரணியலவன். (சுசு)

தாரோடிகல்பொருமால்விடைதரியார்வடிவாளின்
நேரோர்விடையுருவாமெனநிழலாடியபொழுதிற்
பாரூடிதனுடன்யார்பொருபவரென்றதிபயமுற்
றோரோர்விடைகொடுதானவர்வருகின்றமைபொக்கார். (சுஎ)

படுபேயடர் குருதிக்கடல்படிந்தேறியபொழுதின்
வடிவார்முகமிசைசெம்மைகொண்மருப்பாகியவிரண்டு
மடுதானவருயிர்வாயுவையருந்தும்படிவிடையா
னெடுமாசுணமிருநாவியுநீட்டுஞ்செயல்காட்டும். (சுகூ)

அமராடுநல்விளையாடுதலாகத்திரிவிடையி
னிமையாவொளிர் மருப்பாகியவிரண்டிற்செறிகுடர்க
ணமருர்படைவருவாயிலெலலாம்வகைநவமாய்த்
தமராவிடைமணித்தோரணஞ்சமைத்தாலெனத்தயங்கும். (சுகூ)

புல்லார்படைதானிப்படிபொடிபட்டபினின்றே
ரொல்லாமொருகுழுவாய்த்திரண்டெய்தார்படையெறிந்தார்
கொல்லாரயில்சூலம்பலகுந்தங்கொடுகுத்திக்
கல்லார்வரைபலவீசினர்நுழைத்தார்பகைமுழுதும். (எ0)

தணிபாவமர்தன்னுல்விடைதளாநதேவிடுமூச்சிற்
கணநாதர்கள்பலர்தோன்றினர்கணைமாமழைபொழிந்தார்
மணியோசையிலிடபப்பெயர்மகவீரனங்குறித்தான்
றுணியாவடிவாள்கொண்டெதிர்துள்ளிச்சமர்தொடுத்தான். (எக)

ஆர்த்தார்தரியலர்சென்னியையறுத்தானனல்விழியாப்
பார்த்தானவருடலங்கொடுபரவைக்கடலெல்லாந்
தூர்த்தான்பகைநெடுங்காட்டினைக்கணப்போதினிற்சுட்டான்
வேர்த்தான்மருத்துவனூர்பெரும்படைவீரருமவீழ்ந்தார். (எஉ)

தோளற்றனருடலற்றனர்துடையற்றனர்சிலர்வா
ளுளற்றனர்செவியற்றனர்நகையற்றனர்சிலபேர்
தாளற்றனர்விழியற்றனர்சரணமறறனர்சிலபேர்
வாளற்றனர்பொரவந்துபின்வாயற்றனரெவரும். (எகூ)

வேறு.

பெருத்தகுறைத்தலையாடவேதாளமாதாளம்பிடிக்கும்போர்க்கு [ணை
னெருத்தாசன்கொம்புவைத்துத்தமரிரத்தமிறைக்கையினுமிறவாவன்
மருத்துவனூர்பரிகளித்துத்திரிகையினுஞ்சிலர்சிலர்க்குவயிற்றுநோவுக
கருத்தழியாச்சிலர்சிலர்க்குத்தலைநோவுமாய்மிகவுங்கவலைகூர்ந்தார்.

### வேறு.

கோடிகோடிகொடும்படைவீரர்க
ளாடல்வாசியவர்களிற்பாதியாம்
வாடிலாவிபம்வாசியிற்பாதியா
மோடுதேர்களுவாவினிற்பாதியே. (எரு)

கீலகேயர்நிரைத்தகவசர்க
ணீலமால்வரையன்னநிருதர்கண்
ஞாலமீதிலுறைபவர்நாகர்பா
தாலமீதுறைதானவர்சுற்றவே. (எசா)

மாமருத்துவன்மாலவிடைநெறியிற்
றேமரத்திற்புடைத்தெதிர்துள்ளினான்
றீமடுத்தகண்ணேறுசினத்தவன்
பூமுடிக்கிடைகோடுபுடைத்ததே. (எஎ)

வாளிகோடிமழையெனச்சிந்தினான்
றாளியாகத்துகைத்ததுபால்விடை
தாளிரண்டினுமவாளகொடுசாடினு
ளமென்னவொடிந்ததுநாந்தகம. (எஅ)

கொம்புகொண்டகலையெனக்கொல்விடை
கொம்புகொண்டவன்மார்பைக்குடைந்தது
வெம்புனற்கடலூடுதிளைத்துட
னம்பரத்திலவனையெறிந்ததே. (எகூ)

### வேறு.

யோசனைநூற்றுக்கப்பால்விழுந்தபின்னொருவரத்தான்
மாசறுதுயரமநீங்கிவாரிதிக்கரையைச்சேர்ந்தா
னேசமாமயனென்றேதுமவுணனங்கிலையிற்றோன்றி
ஈசனைவணங்கியின்னுமவரங்கேளென்றியம்பிபோனான. (அ௰)

நலமெனவெழுந்தானந்துநடுத்தழல்வளர்த்துநாப்பண்
மலைவறத்தவமேசெய்தான்வள்ளலுமறைந்துநின்றான்
றலைதனையறுத்துப்பின்னுந்தழலிடைபுரிந்தானங்கே
கலைமதியணிந்தவானுந்தோன்றினன்கணங்கள்சூழ. (அக)

மருத்துவனெழுந்தான்சென்னிவளர்ந்ததெம்பிறவிநோய்க்கு
மருத்துவனனையான்றனில்வணங்கினான்வணங்கினானைக்
கருத்துவந்துனக்குவேண்டும்வரமெதுகழறுகென்றான்
கருத்துவந்தனைகணிக்கக்கதிதருங்காட்சியானே. (அஉ)

அங்கைவாளெடுத்துச்சென்னியரிந்தழற்கவியாயீந்தான்
செங்கைமான்மழுவாய்தேவர்சிங்கமேதிருவெண்காட்டி
னங்கைநாயகனேயாண்டநம்பனேநமன்போற்சீறுந்
துங்கமால்விடைநான்கொல்லச்சூலமொன்றளிப்பாயென்றான். ()

கற்றைவார்சடையான்சொல்வான்கயிலைபோல்விடையின்மீதே
பற்றிநாமிருக்கையாலுமறத்தினைப்பாவம்வெல்லுங்
கொற்றமொன்றிலாமையாலுங்கொல்லுதலரிதாலும்
வெற்றியைத்தருமிச்சூலமெனவளித்தணைந்தான்வெற்பில். (அச)

இணைப்பருஞ்சூலங்கைக்கொண்டெழுந்தனனுடும்பேய்கள்
கணப்பறைபெற்றாலென்னக்களித்தனன்காலகேயர்
துணைப்படுமவுணர்வெள்ளமிருசதந்தொடரச்சென்றான்
மணிக்குரல்விடையுந்தீயோன்வரவுபார்த்தெதிர்ந்ததன்றே. (அரு)

வலைகள்சங்கிலிகள்பாசவகைகளாற்பிணித்துவாலைத்
தலைசெறிமருப்பைநூறுகோடிபேர்சலிப்பித்தார்கள்
பலதுகளாகநூறிப்பந்தபாசத்தைநீக்கி
யலைவிலாத்தறுகணேற்றையவுணர்கண்ணேறுகொண்டார். (அசு)

ஒருபதுவெள்ளமான்றேருபயகோட்டொருகைவேழ
மிருபதுவெள்ளம்வாசியீரிருபதிற்றுவெள்ளம்
பொருபடையவுணர்நூறுவெள்ளமுன்புடையிற்சூழ்ந்து
வெருவரும்படிபோர்செய்துவெருட்டினார்விலக்கினார்கள். (அஎ)

வச்சிரப்படைவாள்வாளியுலக்கைகூர்மழுநாராச
முச்சிரப்படைகடம்மால்வருத்தினார்முதுகில்வாலின்
மெய்ச்சிரநடுவிலேறியழுத்தினாரனந்தம்வேலைப்
பச்சிரத்தங்களாலேநனைந்ததப்பசுவின்மேனி. (அஅ)

கூசுவதன்றியேறுங்குரகதங்களிறுதேரை
வீசியேபுல்லார்தம்மைமெய்ந்ததுசிலபேர்வாலைத்
தேசுறப்பற்றிச்சுற்றித்திரிந்தனர்கடலினுப்பண்
வாசுகியதனைப்பற்றிமந்தரந்திரித்தாரென்ன. (அகூ)

வாளினாலெறிந்ததொன்னார்மாதிரந்தோறும்வீழ்ந்தா
ரோலமாய்விடையின்கீர்த்தியுலகெலாமுரைப்பாரென்னச்
சாலவேயவுணரெல்லாமிறந்ததுதனைக்கண்டந்தச்
சூலவாயுதத்தைக்கொண்டுமருத்துவன்வளைத்தான்றுள்ளி. (௬௰)

குத்தினானேற்றையேறுங்குளம்பினாற்குத்திக்குத்திச்
செத்தினாலெனவேசெய்ததவுணனுஞ்சிவனேயெனாறு
மத்தினாற்றயிர்போலுள்ளமறுகினான்றெளிந்தான்மாகோ
பத்தினாற்சிவன்பேர்சொல்லியெறிந்தனன்பாணிச்சூலம். (௬௧)

அலகிலாத்திருப்பேர்சொல்லியரனளித்திடுஞ்சூலத்தைப்
பலபடவெறியக்கண்டுமபரமனார்பலிததாரென்றுந
தலையிறக்குடனேநின்றதவுணனுந்தடங்கைவாளா
லுலைவுறச்செவிகோடெல்லாமறுத்துடலூறுசெய்தான. (௬௨)

அறிவுடைமுனிவர்வானோரரற்றினாரழுதார்கண்ட
பறவையும்விலங்குங்கண்ணீருகுத்தனபரவைபோலச்
சிறுபறையுடனேயந்தமருத்துவன்செருக்கிமீண்டு
குறியுடையவுணர்வம்மினமரரைகொணாகவென்றான். (௬௩)

அடலினார்திருவெண்காட்டையணைந்துமாமுனிவர்தேவர்
படருறப்பிணித்துரோமநிரையெலாமபறித்தார்கையாற்
சடைகளைப்பறித்தார்தேவர்முனிவர்கடளர்ந்தெங்கோவே
கடல்விடநுகர்ந்தகாளகண்டனேமுறையோவென்றார். (௬௪)

வேறு.

என்றனர்களென்றளவிலெள்ளிடையிலெண்ணைய
நின்றதெனநிற்குமவனீண்முனிவுகொண்டான்
மன்றவெதிராமுனிவைவாவெனவழைத்தே
துன்றவுணர்தோண்முடிதுணித்துவருகென்றான். (௬௫)

கோலவெரிகுஞ்சியொடகோரவடிவாகிய
பாலவிழிசெங்கனல்பரப்பமழைமேகம
போலவொளிகாலநிறைபூணினொடுகண்டா
மாலைபுடைசூழவளைவாளெயிறிலங்க (௬௬)

### வேறு.

துடிமணிபலகைவாள்சூலம்வெண்டலை
கடியிருநான்கெனுங்கரத்திற்பற்றியே
யிடரலைகடப்பதிப்படியென்பாரென
வடியிணைநடந்துசீராகத்தோன்றவே. (௯௭)

கிளரொருமூர்த்தியாயவனைக்கிட்டினா
ரளவறுபயம்பிடித்தவுணன்மாண்டுபோ
யொளியுருவாயவருருவிலொன்றினான்
வளைதருதானையுங்கூடமாய்ந்தவே. (௯௮)

வேட்டதுதருமரன்விடையிறனோன்றினான்
னோட்டலரிமையவர்சொரிந்துவாழ்த்தினார்
கேட்டதுதருகுவங்கிளத்துமென்றனன்
வாட்டமிலிமையவர்வணங்கிக்கூறுவார். (௯௯)

இத்தலத்தகோரமாமிறைவனாரிருந்
துத்தமவரங்களையுதவுமாறருள்
வித்தகவென்றனர்விமலன்கூறுவா
னத்திரவகோரயாமவரைநோக்கியே. (௱)

### வேறு.

வஞ்சனையலகைநோய்வறுமைதீர்த்திடு
மஞ்சலிபுரிந்தவர்க்கருள்புரிந்திடுஞ்
செஞ்சபைப்பிரணவச்சிலைபின்பாங்கரி
லெஞ்சலில்கூர்ப்பீடத்திலெய்துமே. (௱௧)

எனச்சொலியிருடியரிமையவர்க்கெலாந்
தனித்தனிபினிமையதாகச்சாற்றிநீர்
நினைத்தவித்தலத்திலேயிருத்தங்காட்டுவோ
மினித்தவம்புரிந்திடுமெனவுங்கூறினான். (௱௨)

அவ்விடைமால்யனணுகிக்கூறுவார்
செவ்விடைதளர்ந்ததுதீர்த்திடென்றனர்
வெவ்விடருனக்கிலைவிடபமேயிதி
லிவ்வடையாளமோடிருத்தல்வேண்டுமே. (௱௩)

பூசனையில்விடைக்குதவிப்போற்றினன்
மாசறுமெனச்சொலிமறைந்துபோயினன்
பூசுரர்வடிவுடன்புரந்தராதியர்
நாசமிலவனடநாடிவைகினர். (௯௪)

பந்தமில்வியாக்கிரபாதனையெனத்
தந்தையுங்கூறினன்றவமியற்றினு
லந்தவெண்காடனையருளுவானனக்
கிந்தமாமுயலகனிடருந்தீருமே. (௯௫)

போதுகவென்றனன்பலியினங்கமாம்
பாதனுந்தாதையைப்பணிந்துபற்பல
காதமுங்கடந்துபோய்க்காவிரிப்புடை
வேதவெண்காட்டினுள்விருப்பியெய்தினன். (௯௬)

மருத்துவச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம - ௰௫ - ககுச் செய்யுள் ௫௱௯

---

## வசனம்.

—*—

வசுவே ! சலந்தராசுரன் பிரமதேவரை நோக்கி நெடுங்காலந்தவஞ்செய்து, தேவர் அசுரர் முதலிய உயிர்க்கூட்டங்களாலும், அக்கினியாலும் விடத்தாலும் சாகாதவரம்பெற்று, இந்திரனையும் பிரமதேவரையும் விஷ்ணுவையும் போர்செய்து வென்று, அவர்கள் பதங்களையுங்கைக்கொண்டு, பின்சிவபெருமானோடு போர்செய்தல் கருதித், திருக்கயிலாய மலையைநோக்கிச் செல்லும்பொழுது, சிவபெருமான் இடபவாகனமேற் கொண்டுதோன்றிப், பூமியின்கண் திருவடிநுனிவிரலால் ஒருசக்கரத்தைச் சமைத்துச் சலந்தரனே ! இச்சக்கரத்தைத் தலையின்மேல் எடுப்பையாயின், வெற்றி உன்னுடையதாமென்றுகூற, அச்சலந்தரன் அச்சக்கரத்தைப் பெயர்த்தெடுக்கும்பொழுது, அதுகழுததளவில் வருஞ்சமயத்து, அவனை அறுத்துக்கீழேதள்ளியது. சலந்தரன் பின்வந்த அசுரர்களும் உங்காரத்தினுல் இறந்தார்கள். விஷ்ணுமூர்த்தி அந்தச்சக்கராயுதத்தைப் பெறும்பொருட்டுத், திருவீழிமிழலையிற் சென்று. தினம் ஆயிரந்தாமரைமலர்கொண்டு சிவபெருமானைப் பூசைசெய்யும் நாளில் ஒருநாள் சிவ

பெருமான் ஒருமலரை ஒளிக்க, விஷ்ணு ஒருமலர் குறையலாமோ வென்று, மனமுருகித் தங்கண்மலரைப்பறித்துப் பூசித்துத் துதித்தார். உடனே சிவபெருமான் இடபவாகனமேற்கொண்டு வெளிப்பட்டு, விஷ்ணுவே! நீஎமக்குஒப்பாக எந்நாளும் அழிவில்லா திருப்பாயாக. ஆதிசேடன் உனக்குப்பாயலாய் விளங்குக. எமக்குக் கண்மலரைச் சாத்தியதனால் தாமரைக்கண்ணனென்றும் பெயர்பெறுக. என்று திருவாய்மலர்ந்து, சக்கரத்தையுங் கொடுத்து, மறைந்தருளினர்.

சலந்தரன் இறந்தபின் உலகத்திலே ஓரசுரருமில்லாமல் இறந்தொழிந்தமையால், அசுரகுருவாகிய சுக்கிரன் வருந்தி, முன்னிறந்த அசுரரெல்லாரும் மீள்வதற்கோருபாயம் நினைந்து, புத்திரரையழைத்துச், சலந்தரன் களேபரத்தின எலும்பை நாட்டிக்கடைய, அக்களேபரத்தினின்றும் மருத்துவன் வந்துபிறந்தான். இறந்த அசுரர்களும் முன்னிலும் எண்மடங்காய்ப் பிறந்தார்கள். சுக்கிரன் கண்டு மகிழ்ந்து, அவ்வசுரர்கள் வசித்தற்கு நகரங்களை யமைத்துக்கொடுத்துப் போயினன்; பின்பு மருத்துவன் சாவில்லாத வரம்பெறவேண்டிப், பிரமதேவரைநோக்கி அருந்தவஞ்செய்யப், பிரமதேவர் அவனுக்[illegible] தோன்றி உனக்குவேண்டும் வரங்களைக்கேள் தருவோமென்ன மருத்துவன் வணங்கி, அசுரபுவனங்களை யெல்லாந்தாங்கும் ஆற்றலும், தேவர்களைவருத்துகின்ற வலிமையும், உயிர்ப்பொருள்களாலும் உயிரற்றபொருள்களாலும் சாவில்லாதவரமும், தந்தருள் வீரென்றுகேட்கப் பிரமதேவர் மருத்துவனே! சாதலில்லாத வரத்தைச் சிவபெருமானொருவரே தருதற்குரியார். நாந்தருதற்குரியோமல்லோம். மற்றவரங்களைத் தந்தோம். சிவனடியார்க்குத் துன்பஞ்செய்யாவிடிற் சாவில்லாதிருப்பையென்று கூறித், தம்முலகமடைந்தார், இவ்விதமாகவரம்பெற்ற மருத்துவன்மகிழ்ந்து, அசுரர்களோடுங் கூடிவானுலகமடைந்து, இந்திரனைவென்று, அவன்செல்வத்தைக்கவர்ந்துகொண்டு, பின்புதிக்குப்பாலகர்களைச் செயித்துச் சந்திரசூரியர்களுடைய தோற்றத்தையும் அடக்கினன். தேவர்கள் பயந்து நாற்றிசையிலும் ஓடினர்கள், அப்பொழுது திக்குப்பாலகர்கள் பிரமதேவரிடத்திற்சென்று, மருத்துவன்செய்யுந் துன்பங்களை யெல்லாஞ் சொல்லி, அந்தப்பிரமதேவருந் தாங்களுமாகத் திருப்பாற்கடலையடைந்து, விஷ்ணுமூர்த்தியை வணங்கிச் சுவாமி! மருத்துவன்செய்யுங் கொடுமைகளை நீக்கி யருளுமென்று பிரார்த்திக்க, விஷ்ணு

மூர்த்தி, பிரமனே! தேவர்களே! திருவெண்காட்டிற்சென்று, சிவபெருமானிடத்தே இத்துன்பங்களையெல்லாங் கூறினால், அக்கடவுள் நினைத்தவற்றையெல்லாம் முடிப்பார். அங்கேசெல்வோம் வருவீராகவென்று தேவர்களை அழைத்துக்கொண்டு திருவெண்காட்டையடைந்தார். இவ்விதமாக வந்த விஷ்ணு முதலிய தேவர்கள் சுவேதவனப் பெருமான்றிருவடிகளில் நமஸ்கரித்துத் துதித்துத், தங்குறைகளை யெல்லாங் கூறுதலும், சுவேதவனப் பெருமான் இடபவாகனமேற் கொண்டெழுந்தருளிவந்து, தேவர்களே! உங்கள் துன்பங்களைப் போக்குவோம், மருத்துவன் ஆண்மையை அழிப்போம். அவ்வளவும் இத்தலத்திற்றானே இருங்களென்றுசொல்லி, மறைந்தருளினார். சுவேதவனப் பெருமான் மறைந்தருளியபின் தேவர்கள் வேற்றுவடிவங்கொண்டு பர்ணசாலைகளில இருந்து தவம்புரிந்தார்கள்.

அக்காலததிலே மாயாபதி நகரத்தில் வாழ்கின்ற மருத்துவன், தேவர்கள் ஒளித்திருக்கின்ற திசையை யறிநது வரும்படி, பலதூதர்களையனுப்ப, அத்தூதர்கள் மூன்றுலகினுநதேடித் தேவர்களைக் காணுதவராய், மருத்துவனிடத்தேவந்து, அவுணர்கோமானே! தேவர்களை யெவ்விடத்தினுங் காண்கிலோமென்றார்கள். அவ்வார்த்தையைக்கேட்டு மருத்துவன் வாட்டமுற்றிருக்கையில் நாரதமகாமுனிவர் அவனிடத்திற் சென்று, தேவர்களெல்லாரும் திருவெண்காட்டில் ஒளித்திருக்கின்றார்கள்; போய்வளைந்து கொள்வாயாக, வென்று கூறிப்போயினார். பின்புமருத்துவன் பெருமகிழ்ச்சியுற்றுச், சிங்கமுகன புலிமுகன் மலைமூக்கன் முதலிய இரண்டுகோடிசேனைவீரர்களை நால்வகைச்சேனைகளுடன் முற்படையாகச் செல்லும்படி விடுத்துத், தான்நூறுவெள்ளஞ்சேனைகளுடன் திருவெண்காட்டை நோக்கிப் புறப்பட்டான். இவ்வாறு புறப்பட்ட மருத்துவன் சேனை காவிரி யாற்றங்கரையில் வந்தபொழுது, நாரதமுனிவர் திருவெண்காட்டிலடைந்து, சிவபெருமானை வணங்கிப், பின்தேவர்களுக்கு, மருத்துவன் வரவையுரைத்துப் போயினார். தேவர்கள் அவ்வார்த்தையைக் கேட்டவுடன் பயந்து, திருவெண்காட்டிறைவரைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள், அச்சமயத்தில் சுவேதவனப்பெருமானுடைய ஏவலினால் இடபதேவர் முப்பதுயோசனை அகலமும், ஐம்பது யோசனை நீளமும், பத்துயோசனை நீண்டமுகமும், நூறு யோசனை யுயரமும், அரையோசனை விசாலமுள்ள கண்களும், பத்துயோசனை நீண்டகொம்புகளும் பொருந்திய ஒருதிருமேனிகொ

ரண்டு, கீழ்த்திசையிற்றோன்றி, மருத்துவன் சேனைகள் அழியும்படி போர்புரிவாராயினர்.

இடபதேவர் அசுரசேனைகளை வளைத்துப், பதாதிகளையும் இரதங்களையுங் குளம்பினால் மிதித்து, வீரர்கள் செய்யும் போரைத்தடுத்தார். அன்றியும் அசுரர்களுடைய தலைகளும் புயங்களும் உடல்களும் நெறுநெறு வென்று நெரியும்படித், தொடைகளினால் நெருக்கியும் தேருருளைகளை வரிசைவரிசையாகக் காலினால் இடறி ஆகாயத்தில் எறிந்தும், யானைகளையும் குதிரைகளையுங் குடல் சொரியும்படி கொம்பினாற் குத்தியும் காலினால் மிதித்தும், அசுரசேனைகளைப் பொடிபடுத்தியபோது, இறவாதுநின்ற அசுரர்களெல்லாரும் ஒருங்குகூடி, இடபதேவர்மீது பல ஆயுதங்களை யெறிந்து, வேல்சூலங்களினாற் குத்திப் பலமலைகளை வீசினார்கள், அப்பொழுது இடபதேவருடைய மூச்சினின்றும் பலகணநாதர்கள் தோன்றி, அசுரர்மீது பாணமழைகளைப் பொழிந்து வருத்தினார்கள். அந்த இடபதேவருடைய மணியோசையில் இடபவீரன் தோன்றி, வாள்கொண்டு மருத்துவன்சேனை வீரர்களுடைய தலைகளையறுத்து வீழ்த்தினான். பின்பு மருத்துவன், சேனைவீரர்களெல்லாரும் இறந்தமையைக்கண்டு, கோபமுற்றுக், கோடிகோடிபடை வீரர்களும் மற்றுமுள்ள படைகளும் காலகேயர்களும் சூழவந்து, இடபதேவர்நெற்றியில் தோமராயுதத்தால் அடித்தான். இடதேவர்கோபித்து அவன்றலையிற் கொம்பினாற் புடைத்தார். பின்புமருத்துவன் கோடிபாணங்களைப் பிரயோகித்தான். இடபதேவர் அவைகளை யெல்லாங் காலினாற் றுகைத்தார். இவ்வாறுமருத்துவனும் இடபதேவரும் போர்செய்யும்போது, இடபதேவர் மருத்துவனை மார்பிற் கொம்பினாற் குத்தித், தூக்கி, ஆகாயத்தில் எறிந்தார். மருத்துவன் நூறுயோசனை தூரத்திற் கப்பால் விழுந்து, துயரம் நீங்கிச் சமுத்திரக் கரையைச் சேர்ந்தமாத்திரத்தில் மயனென்னும் அவுணன் அங்கேதோன்றி, மருத்துவனே! சிவபெருமானைவணங்கி, இன்னும் வரம்பெற்றுக் கொள்வாயென்று சொல்ல, அதனைக்கேட்டுச், சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிந்தான். சிவபெருமான் எதிர்தோன்றி, மருத்துவனே! உனக்கு வேண்டும் வரம்யாது சொல்வாயென்ன, அம்மருத்துவன் வணங்கித்துதித்து, எம்பெருமானே! திருவெண்காட்டிலே என்னை வருத்தமுறுவிக்கின்ற இடபத்தைக் கொல்லுதற்கு ஒரு சூலாயுதம் ஈந்தருளுமென்னச், சிவபெருமான், மருத்துவனே! இடபத்தின்மீது யாம்

விரும்பி இருத்தலாலும், தருமத்தைப்பாவம் வெற்றிகொள்ளாதாகையாலும் நீ அந்த இடபத்தைக் கொல்லுதல் அரிது ஆகும். ஆயினும் இச்சூலம் வெற்றியைத்தரும்" என்று ஒரு சூலத்தைக் கொடுத்து மறைந்தருளினார்.

மருத்துவன் சூலாயுதத்தைப்பெற்று மகிழ்ந்து, காலகேயர்களும், இருநூறுவெள்ளம் அசுரசேனைகளுஞ் சூழவந்தான், இடபதேவரும் மருத்துவன் வரவுபார்த்தெதிர்ந்தார். எதிர்ந்த இடபதேவரை நூறுகோடி அசுரர்கள் வலைகளாலும் சங்கிலிகளாலும் கட்டி, வாலையுங் கொம்பையும் பிடித்து அசைத்து வருத்தினார்கள். அன்றியும் பத்துவெள்ளம் தேரும், இருபதுவெள்ளம் யானையும், நாற்பதுவெள்ளங் குதிரையும், நூறு வெள்ளம் அசுரரும் பக்கத்திற் சூழ்ந்து அஞ்சும்படி போர்செய்து, இடபதேவரை வெருட்டி விலக்கினார்கள். இடபதேவர் அச்சமின்றிக், குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் கொம்பினாற் குத்தி வீசியெறிந்து, அசுரர்களையுங் கொன்றார் சிலஅசுரர்கள்இடபதேவருடைய வாலைப்பிடித்துச், சுற்றித்திரிந்தார்கள். அப்பொழுது இடபதேவர் வாலினால் வீசியெறிதலும், அசுரர்கள் திசைகள் தோறும்போய் விழுந்து இறந்தொழிந்தார்கள். இப்படி அசுரர்களெல்லாரும் இறந்ததன்மையை மருத்துவன் கண்டு கோபித்து, இடபதேவருடன் போர்செய்து, அவருக்குச் சிறிதும் ஆற்றாமல் மனமயங்கிப், பின்தெளிந்து பெருங்கோபங்கொண்டு, கையிலுள்ள சூலாயுதத்தைச் சிவநாமங்களைச் சொல்லிப்பிரயோகித்தான். இப்படிமருத்துவனால் விடப்பட்டு வருகின்ற சூலாயுதத்தை இடபதேவர் கண்டு, இது சிவபெருமானாற் கொடுக்கப்பட்ட சூலமென்றறிந்து தலையிறக்கோடும் நின்றார். அப்பொழுது மருத்துவன் கையிலுள்ள வாளினால் அவ்விடபதேவருடைய செவியையும் கொம்பையும் அறுத்து உடலிற்காயஞ்செய்து, செருக்கடைந்து, மீண்டு அசுரர்களை நோக்கித் தேவர்களைப் பிடித்துக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தான். அவ்வாறே அசுரர்கள் திருவெண்காட்டில் இருக்கின்ற முனிவர்களையுந் தேவர்களையும் பிடித்துக் கட்டி, ரோமங்களையுஞ் சடைகளையுங் கையினாற் பறித்துவருத்துஞ் சமயத்தில், அம்முனிவர்களும் தேவர்களும், வருந்தித், திருவெண்காட்டில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! கடலிற்றோன்றிய விடத்தையுண்ட காளகண்டனே! ஓலம்ஓலம் என்றார்கள். அப்பொழுது சுவேதவனப் பெருமான் மருத்துவன் மேற் பெருங்கோபங் கொண்டார்.

உடனே அக்கோபம் எதிர்வருதலும், சுவேதவனப் பெருமான் அதனையழைத்து, அசுரர்களைச் சங்கரித்து வருகவென்றார். அக்கோபம் அழகியஎரிபோலுஞ்சிகையுடனே அகோரவடிவாகி நெற்றிக்கண் அக்கினியைப் பரப்பதிருமேனி நீருண்டமேகம்போல் ஒளிவீச ஆபரணங்கள் பிரகாசிக்கக் கண்டாமாலைபுடைசூழ ஒளிபொருந்திய கோரதந்தங்கள்விளங்கத் துடி,மணி பலகை வாள் சூலம் வெண்டலை கடி என்பனவைகளை எட்டுத் திருக்கரத்தினும் பிடித்துக் கொண்டுநட ந்துமருத்துவனைக் கிட்டலும,அமமருத்துவன் அகோரமூர்த்தியைக் கண்டு, அளவற்ற பயமபிடித்து, இறநது ஒளியுருவமாகி, அவ்வகோரமூர்த்தி திருஉருவிற் சேர்நதான், அவனைச் சூழ்ந்த சேனைகளும் கூட இறந்தன. அப்பொழுது சுவேதவனப் பெருமான் இடபவாகனமேற் கொண்டெழுநதருளித், தேவர்களே! நீங்கள் விருமபிய வரங்களைக் கேளுங்கள் தருவோமென்னத், தேவர்கள் நமஸ்கரித்து, எம்பெருமானே ! இத்திருவெண்காட்டில் அகோரசிவனார் நீக்கமின்றி இருந்தருளி வரங்களைக் கொடுக்குமாறு அருள்செய்யுமென்று பிரார்த்திக்கச், சுவேதவனநாதர் அத்திர அகோரசிவனாரை நோக்கி வஞ்சனை பிசாசு நோய் வறுமை இவைகளை நீக்கி,அஞ்சலிசெய்தவர்க்கருள்புரிந்து கொண்டு, சபையின் வாயுதிசையில் கூர்மாசனத்தில் விற்றிருப்பீராகவென்று திருவாய்மலர்ந்தருளித், தேவர்கள் முனிவர்களுக்கெல்லாந் தனித்தனி இனியவசனஞ்சொல்லி, உங்களுக்கு இத்தலத்திலே நிருத்ததரிசனங் காட்டுவோம் தவஞ்செய்யுங்களென்று கூறி, இடபதேவரைநோக்கி இடபமே ! உனக்குத் துன்பமில்லை. நீயித்தலத்தில் இவ்வடையாளத் தோடிருத்தல் வேண்டும். உன்னைப்பூசித்துப் போற்றினார்க்கு வினைநீங்குமென்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். இந்திரன் முதலிய தேவர்கள் நிருத்த தரிசனத்தின் பொருட்டுப் பிராமண வடிவங்கொண்டு அத்தலத்திலே தவம்புரிந்தார்கள்/என்றுமத்தியந்தின முனிவர் வியாக்கிரபாதருக்குரைத்து, மைந்தனே நீயும் அங்கேதவஞ்செய்வையாயின் சுவேதவனநாதர் அருள்புரிந்து இம்முயலகன் வலியை நீக்குவார். ஆதலால் திருவெண்காட்டிற் சேர்வாயென்றார், வியாக்கிரபாத முனிவரும் பிதாவைப் பணிந்து அன்போடுந் திருவெண்காட்டை யடைந்தார்.

மருத்துவச்சருக்க முற்றிற்று.

---

# தாண்டவச் சருக்கம்.

நாற்பதிற்றொன்பதா நற்குலத்தரோ,
டேற்புறுமுக்குளத்திடையின்மூழ்கினன்
பார்ப்பதியுடன்வளர்பாகத்தானையுஞ்
சீர்ப்பொலிநடத்தையுஞ்சேவைபண்ணினன். (க)

இலைக்குடிலுற்றனனிலிங்கமூர்த்தியைத்
தலத்திடைநாட்டிப்பூசனைக்கண்ணினன்
நிலைப்படுமுயலகனீங்கிடாமையான்
மலைச்சிலையவன்முன்னேவருந்திக்கூறுவான். (உ)

மறந்துநின்றிருப்பையாவழுத்தில்யாவரும்
பிறந்திறந்துலைந்திடுபிணியையாற்றவை
முறிந்தவோரிலையைநின்முளரித்தாளினைத்
திறைஞ்சுவார்சிவகதியேறவைப்பையே. (ங)

அணுவளவெனினுநின்றனைத்துவார்வினைப்
பிணிகளைந்தவர்கள்பின்பிடித்துழையை
மணியணியடியர்தம்பணிமுடிக்கணை
யிணையறுகங்கையாயெடுத்துவைப்பையே. (ச)

நின்பெருநலமிவைநெடியபாவியா
னென்பிணியகற்றிலையினியாகுமோ
அன்பரையாளுதலருள்செய்வார்கள்
வன்பரையாளுதல்வன்மையல்லவோ. (ரு)

என்றிவைபுகலுவானெதிரிற்றோற்றமாய்
நின்றவன்முயலகப்பிணியைநீக்கியே
வென்றிகொள்பதத்தினன்மிதிக்ககோரனார்
பொன்றருங்கரத்தினிற்கொடுத்துப்போயினார். (சா)

பாவமாறிடுபுலிப்பதத்தினருடன்
றேவரத்தலத்தரன்சேவைபண்ணினு
ராவலிற்சங்கனுமாநடந்தொழக்
காவிரித்திருநதிக்கரையினண்ணினன். (எ)

அங்கவுன்பெருந்தவமதனிற்பண்ணினுன்
சங்கவாரணியமத்தலத்தினிற்பெயர்
பொங்கியவாசுகியரவப்போந்தும
தங்கராச்சிரமமேற்றவமுடித்ததே. (அ)

நாகமாபுரமெனுநகரமத்தலத்
தாகியதவ்விரண்டரவமன்றியும்
பாகசாதனன்முதற்பாலரெண்மரு
மேகமாநடந்தொழவியற்றினர்தவம். (கூ)

வேறு.

இடமெனத்திருவெண்காட்டிலிருந்தருந்தவங்கள்செய்தார்
நடமிதிற்காண்பதெந்தநாளெனக்கவலும்போதில்
வடதிசைமருங்கேகோடிவலம்புரிமுழக்கத்தோடே
கடலொலிமடங்கவார்க்குங்காகளமுழக்கங்கேட்டார். (ய)

வசையிலாமுதல்வன்வந்தான்மாலயற்கரியான்வந்தா
னசலமாதிடத்தான்வந்தானடியவர்க்கெளியான்வந்தா
னிசையுமால்விடையான்வந்தானிறையவன்வந்தானென்று
திசைதொறுமுழக்கங்காட்டுந்திருச்சின்னவோசைகேட்டார். (யக)

நாவலன்மொழிக்காத்தூதுநடந்ததாளிணையான்வந்தான்
மேவியாழ்ப்பாணர்க்காகவிறகெடுத்தருள்வான்வந்தான்
சாவிலாதில்லைமைநல்குஞ்சங்கரன்வந்தானென்று
தீவினைபறிக்கவூதுந்திருச்சின்னவோசைகேட்டார். (யஉ)

கற்பகமலர்கடுவக்கனகசாமரங்கள்வீசப்
பற்பலகவிகைசூழப்பல்லியங்குழுமியார்ப்பச்
சொற்பெறுசுருதிபாடச்சுவேதகானகத்தின்மீதே
சிற்பரன்விசும்பினெய்தித்திருநடங்காட்டினுனே. (யங)

அவிழ்ந்தசெஞ்சடைமேனீருமம்புலித்தொழுந்துமாடக்
கவிழ்ந்தசெங்கையின்மேலிட்டகங்கணப்பணிநின்றுடச்
சிவந்தமுண்டகத்தாள்வீசிச்சிறுதுடிமுழக்கஞ்செய்யத்
தவம்பயின்முனிவர்காணத்தாண்டவமாடினுனே. (யச)

கண்டனர்களித்தார்ஞானக்கண்ணினுல்வாரிவாரிக்
கொண்டனர்நடத்தானந்தக்கோதிலாவமுதையள்ளி
யுண்டனரறிவினேடேயுறங்கினர்மலங்கண்மூன்றும்
விண்டனர்திருக்கூத்தாடியோய்ந்தனன்விடையின்பாகன். (யரு)

தாண்டவந்தொழுதபேரைத்தனித்தனியழைத்தெங்கோமான்
வேண்டியதளிப்போமுங்கள்கருத்தினைவிளம்புமென்றான்
ஆண்டவனுரைத்தபோதிலடிதொழுதமரர்சொல்வார்
பூண்டநின்னடத்தையிந்தத்தலத்திலேபுரிவாயென்றும். (யசு)

ஞானநாட்டத்தாற்காணுநடத்தினைநரர்கடாமு
மேனைநாட்டத்தாற்காணவினிவரமருள்வாயென்றார்
வானநாட்டவர்கள்சொல்வைரமளித்தருளிஞான
மானநாட்டியத்தையிந்தத்தலத்தினிலாடினனே. (யஎ)

வாசுகியரவஞ்சங்கன்புலிப்பதன்மதங்கனென்னுந்
தேசிகன்சுவேதகேதுவாணியன்றிருமால்வேத
ஞைசையப்புரப்போர்திங்களருணரெண்வசுக்கள்பூமா
ஞைசைகொள்சுருதியையனடந்தொழுதுலகையுற்றார். (யஅ)

வேறு.

ஓகையினற்சுவேதவனச்சிறப்பதனைவினவினர்க்குமுறைத்தபேர்க்குஞ், சோகமறும்பிணியகலும்பகையழியும்வறுமையெனுந்துயரந் தீரும், யாகமெலாமுடித்தபலன்றனமெலாங்கொடுத்தபலமெல்லாஞ்சேரும், போகமுண்டாமுத்தியுண்டாமெப்போதும்பழியாதபுகழுண்டாமே. (யகூ)

வேறு.

ஆத்தியந்தமாய்க்கதையெலாமுடித்தியலறிவான்
மாத்தியந்தினனுரைத்தனனென்றனன்வசுவுந்
தீர்த்தமுள்ளனவிலிங்கமுள்ளனவெலாந்தெரியக்
கோத்தசெந்தமிழ்முனிவனேகூறெனக்கூறும். (உய)

தாண்டவச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் யசு - க்குச் செய்யுள் ருகூகூ

---

## வசனம்.

---

வியாக்கிரபாதமுனிவர், திருவெண்காட்டில் நாற்பத்தொன்பது பிராமணர்களோடு முக்குளத்திலே ஸ்நானஞ்செய்து. சுவேதவன... தனையும் பெரியபிராட்டியாரையும் நடேசப்பெருமானையும் அகோர

மூர்த்தியையும் சேவைசெய்து, பர்ணசாலையில் வசித்துக்கொண்டு ஒருசிவலிங்கந்தாபித்துப் பூசித்துத், தவம்புரிந்தார். அவ்வியாக்கிர பாதமுனிவர், முயலகன்வலி தன்னை நீங்காமல் வருத்துதலினால் வருந்திச் சுவேதவனப்பெருமான் சந்நிதானத்தை யடைந்து, வணங்கி நின்று, சுவாமி! யாவராயினும் மறந்தேனும் உம்முடைய திருப்பெயரைச்சொல்லின் பிறப்பிறப்பை மாற்றுவீர். கிள்ளிய ஓர்பத்திரத்தை, உம்முடைய திருவடியிற் சாத்தி வணங்குவாரைச் சிவகதியிற்சேர்ப்பீர். அணுவளவேனுந் திருநீறணிவாருடைய வினைகளைப்போக்கி, அவர்கள்பின்னே உலாவுவீர். உமமுடைய பெரியநன்மைகள் இவைகளாகும். பெரும்பாவியாகிய என்பிணியை யகற்றினால் ஈனமாகுமோ என்று துதித்துக்கொண்டு நிற்கும்போது, சுவேதவனப் பெருமான், எதிரேதோன்றியருளி வியாக்கிரபாதமுனிவரைப் பிடித்திருந்த முயலகப்பிணியை நீக்கித்திருவடியினால்மிதித்து, அகோரசிவனார் திருக்கரத்திற்கொடுத்து மறைந்தருளினார். பிணிநீங்கிய வியாக்கிரபாதமுனிவரோடு, தேவர்களும, சுவேதவனப்பெருமானைச் சேவித்துக்கொண்டிருந்தார்கள். சங்கன் அன்போடுந் திருநிருத்தந்தெரிசித்தற்குக், காவிரிநதிக்கரையை யடைந்து, அருந்தவஞ் செய்தான். அவ்விடம்சங்காரணியமென்றுபெயர்பெற்றது. வாசுகியாகிய அரவம் வந்து, மதங்காச்சிரமத்திற் றவஞ்செய்தது. அவ்விடம் நாகமாபுர மென்றுபெயர்பெற்றது. இந்திரன் முதலாகிய திக்குப்பாலகரும் நிருத்த தரிசனத்தின்பொருட்டுத் தவஞ்செய்தார்கள்.

இவ்வாறாகத் திருவெண்காட்டிலிருந்து தவஞ்செய்தோர்கள், இத்தலத்திலே சிவபெருமானது திருநடனத்தைத் தரிசிப்பது எந்தநாளென்று கவலும்போது, அவர்கள் காணும்பொருட்டுத், திருவெண்காட்டின் ஞானசபையிலே, கற்பக மலர்கள் சொரியப் பொற்சாமரங்கள்வீசப், பலவாத்தியங்கள் குமுமியாரவாரிக்கச், சிவபெருமான், சடையின்மேற் கங்கையும் பிறையும் ஆடவும், கவிழ்ந்த திருக்கரத்திலிட்ட கங்கணமாகியபாம்பு நின்றாடவும், துடிமுழக்கஞ்செய்யவும், சிவந்ததாமரை மலர்போலுந் திருவடியை வீசித்திருநிருத்தஞ்செய்தருளினார். தேவர்களும்முனிவர்களும்ஞானக்கண்ணினாலே சிவபெருமானுடைய திருநிருத்தத்தைத் தெரிசித்துப், பரவசராய் மும்மலங்களும் நீங்கினார்கள். தேவர்கள் வணங்கி, எம்பெருமானே! இன்றுமுதல் எக்காலமும் இத்தலத்திலே இஞ்

ஞான நடனத்தைச் செய்தருள்வீர். ஞானக் கண்ணினாலே தரிசிக்கும் இந்நடனத்தை மனிதர்களும் மற்றைக்கண்ணினாற் றரிசிக்கும்படி அருள்புரிவீர் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்குச்சிவ பெருமான் உடன்பட்டருளி, அன்றுதொடங்கித், தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர்களும் தரிசித்துவணங்க, இத்திருவெண் காட்டிலே எக்காலமும் ஞானநிருத்தத்தைச் செய்தருள்வாராயினார். திருநிருத்ததரிசனஞ் செய்த தேவர்முனிவர் முதலாயினோர் தம்முலகமடைந்தார்கள் என்று அகத்தியமுனிவர் கூறுதலும், வசுமகாராசன் வணங்கிச் சுவாமி தீர்த்தங்கள் எல்லாவற்றையும், சிவலிங்க மூர்த்திகள் எல்லாரையும், தெரியும்படிச் சொல்லவேண்டுமென்று வினவ, அம்முனிவர் பெருமான் சொல்வாராயினார்.

தாண்டவச்சருக்க முற்றிற்று.

# இலிங்கச் சருக்கம்.

சோமேசர்கணேசர் சூரியேசர்துலங்கயிராவதவீசர்சுவேதகேது, நாகேசர்வருணேசர்கணபதீசர்நடேசருடன்வியாதேசர்நகுடவீசர், யாமீசர்கபிலேசர்மனுவின்பேராமீசர்சிவப்பிரியேசரியக்கவீசர், பூமேவுவேதேசர்பத்தநாதர்புனிதர்திருக்கோயிலுள்ளும்புறம்புஞ்சேர்ந்தார். (௧)

சந்திரபுட்கரிணியின் கீழ்ப்புறஞ்சோமேசர்தழற்குளத்தின்கீழ்ப்புறமத்தழற்பேரீசர், செந்தூபனதடமேற்குச்சூரியேசர்திருக்கோயிற்கீசானத்திக்குத்தோன்று, முந்தயிராவதவீசர்சுவேதகேதுமுனிவனுக்குநினைத்தவெல்லாமுடித்தவீச, ரெந்தைதிருக்கோயிலுக்குளீசானத்திலிருப்பர்பத்தநாதருமேற்கெய்தினரே. (௨)

இத்தகையசோமேசர் வடபாலாகவிறைவிதிரு முன்னாகவிமையோர்சூழுஞ், சித்தவடங்கிளருமரதத்தானந்தானுஞ்சிவலோகந்தனிலுமிகச்சிறந்ததாகு, மத்தலத்திற்புரிந்தசெபமொன்றுதானூறுயிரமாமொருதவமுமயுதமாகு, முத்தமமாமொருதானங்கொடுத்தாலந்தவொருபலமுங்கோடிபலமுதவுந்தானே. (௩)

மாசியிலேகாதசிகளிரண்டிலந்தவர்ணிதட மூழ்கியுபவாசம்பண்ணி, யீசரெழுத்தைந்தையுமவ்வடத்தின்கீழேயிருந்திருமூவாயிரமோ வெண்ணிப்பின்னர்த், தேசுபெறுதுவாதசியிலுதயமாகத்தினகரனுர் தோற்றுமுனந்தீர்த்தமூழ்கிப், பூசுரர்பன்னிருவருக்கோதனமுமீந்து பூசைமுடித்தரனைவலம்புரிந்துபோற்றி. (ச)

பாரணம்பண்ணினர்க்குமுத்திபலிக்குமிம்மைப்பயனுண்டாம்பதினறுபாலருண்டாந், தாரணியிலிவைபுரியவறியோராஞற்சந்தத மைந்தெழுத்தினைநாத்தழும்பவேத்தி, லாரணனுரணனறியாத்திருவெண்காட்டிலானந்தசபையினடமாடுகின்ற, காரணகாரியங்கடந்த மலர்ப்பதத்திற்கலந்திடுவர்பிறவியிலேகவிழ்ந்திடாரே. (ரு)

அரணியமோற்றிசை பதனிற்சுயம்புலிங்க மவரருகேபிரமலிங்க மைந்தோடைந்தா, மரணியற்குவடபாலாப்புலிக்காலண்ணலமைத் தலிங்கஞ்சேவிப்பார்க்கசுவமேத, மரணியற்குமேற்புறத்தின்மதங்கநாதரவரருகேயேழிலிங்கமமரர்பூசை, நிருதிதிக்கிஞகேசரவரைச்சேரநிகழிலிங்கம்பதினறுவர்நிலைகொண்டாரே. (சு)

அரகரமாங்கடைமுடியென்றிடு தானத்திலரகரேசுரருறைவரவரைச்சேரப், பொருவில்கிருத்திரநாதரவர்முன்ஞகைப்புண்ணியபுட்கரிணியுண்டுபொன்னித்தென்பா, லொருவர்சிபீச்சுரநாதரவரீசானத்து ரோமசமாமுனிபோராலுறையுமீச, ரிருமருங்கிற்சங்கேசர்நாகநாதரிவர்க்குமுன்னேமகதீர்த்தமிலங்குந்தானே. (எ)

எண்ணியமார்க்கண்டர்கண்டார் காலகாரியெனுமிலிங்கம்பிறப்பொழிக்குமிவரீசானம், வண்ணமகாமயானமங்கேவேதநாதர்வடமேற்கேநடராங்காவடபாலாக, நண்ணுமரீச்சுரமுன்னேதிகிரிதீர்த்தநம்பர்வடபுறம்யோகநாதர்முன்னே, புண்ணியகாவிரிமுதலாமூழ்கப்பாவம்போக்குமணிகன்னிகையாம்பொய்கைதானே. (அ)

போகிபுனேவாசீசர் கோயிற்சூழம்பொய்கையுமே ழிருடியராற்புனைந்ததாகுங், கோகனகத்திருவாணியுமையாள்கன்னிகுலிசன்முதலாயனந்தகோடிபேர்க, ளோகையுடன்ருெழுதலிங்கம்படிந்ததீர்த்தமுளவவையிலோரொன்றேயுதவும்பேறு, யாகபலந்தானபலம்யோகத்தாலேயிசைந்தபலமியாவருக்குமெளிதாயெய்தும். (கூ)

இலிங்கச்சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௰எ - க்குச் செய்யுள் சுளாஉ.

# வசனம்.

—*—

சோமேசர், அக்கினீசர் - சூரியேசர் - ஐராவதீசர் - சுவேத கேதீசர் - வருணேசர் - கணபதீசர் - நடேசர் - வியாதேசர் - நகுடவீசர் - யாமீசர் - கபிலேசர் - மநுவீசர் - சிவப்பிரியேசர் - இயக்கவீசர் - சுவேதேசர் - பத்தநாதர் - என்னும சிவலிங்கமூர்த்திகள் சுவேதவனப்பெருமான் திருக்கோயிலின் உள்ளிலும் புறம்பிலுமிருக்கின்றார்கள்.

இவர்களில்,சந்திரதீர்த்தத்தின் கீழ்பக்கத்தில் சோமேசரும் அக்கினிதீர்த்தத்தின் கீழ்பக்கத்தில் அக்கினீசுரரும் சூரியதீர்த்தத்தின் மேற்கே சூரியேசரும் - திருக்கோயிலின் ஈசானதிக்கிலே ஐராவதீசரும் - திருக்கோயிலினுள்ளே ஈசானத்தில் சுவேதகேதீசரும்,மேற்கிற்பத்தநாதரும் இருக்கின்றார்கள்.

சோமேசருக்கு வடபாலாகவும், பெரியபிராட்டியார் திருமுன்னுகவும் ஞானமயமாகிய ஆலவிருக்ஷம் விளங்கும். அந்தத்தானம்சிவலோகத்தினும் மிகச்சிறந்தது. அவ்விடத்திற் செய்த செபம் ஒன்று நூறாயிரமாகும். ஒருதவம்ப தினுயிரந்தவமாகும். ஒருதானங்கொடுத்தால் கோடிதானபலன்கிடைக்கும்.மாசிமாதத்து ஏகாதசிகள் இரண்டிலும் அந்தச் சந்திரதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து உபவாசப்பண்ணி, அவ்வாலவிருக்ஷத்தின் கீழேயிருந்து, திருவைந்தெழுத்தை ஆறுயிரமுருச்செபித்து, பின்பு துவாதசியில் சூரியோதயத்தின் முன்னே அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, பன்னிரண்டு பிராமணருக்கு அன்னதானங்கொடுத்துப், பூசைமுடித்துச், சுவேதவனப்பெருமானைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்துத்துதித்துப், பின்பு பாரணம்பண்ணினவர், இம்மைப்பயனையும் பதினறுபுத்திரரையும் மோக்ஷத்தையும் பெறுவர். இவை செய்தற்கு வறியவரானல் அவ்வாலவிருக்ஷத்தின் கீழிருந்து எக்காலமும் திருவைந்தெழுத்தை நாத்தழும்பச் செபிக்கின் அவர் சுவேதவனப் பெருமான் திருவடியிற் கலப்பார்.

மேற்றிசையிலே திருக்காட்டுப்பள்ளியில் சுயம்புலிங்க மூர்த்தியாகிய ஆரண்யேசுரரும் அவரருகே பிரமேசர் பதின்மரும்விளங்குகின்றார்கள். ஆரண்யேசுரருக்கு வடபாலாகத் திருப்புலீச்சுரர் உறை

கின்றார். அவரைச் சேவிப்பவர்க்கு அசுவமேதப்பலன் கிடைக்கும் அந்த ஆரண்யேசுரருக்கு மேற்புறத்தில் மதங்கீசரும், அவரருகே தேவர்கள் பூசித்தஎழுசிவலிங்க மூர்த்திகளும் விளங்குகின்றார்கள். நிருதிதிக்கில் நாகேசரும், அவரைச்சேரப் பதினாறு சிவலிங்கமூர்த்திகளும் உறைகின்றார்கள். திருக்கடை முடீச்சுரத்திலே அரகரேசுரர் உறைகின்றார். அவரருகே கிருத்திரநாதர் வீற்றிருக்கின்றார். அக்கிருத்திரநாதர்க்கெதிரே புண்ணிய புட்கரிணிஉண்டு. காவிரியின்தென்பாலில் சிபீச்சுரநாதரும் அவரீசானத்தில் உரோமச முனீசுரரும் உறைகின்றார்கள். இவ்வுரோமசமுனீசுரருக்கு இருபருங்கிலும் சங்கேசரும் நாகநாதரும் விளங்குகின்றார்கள். இவர்க்கு முன்னே மக தீர்த்தம் விளங்கும. மார்க்கண்டர் பூசித்த மூர்த்தி காலகாரீசுரர் இவரீசானத்தில் மகாஸ்மயானம் அங்கே வேதேசர் வீற்றிருக்கின்றனர். வடமேற்கில் நடராங்கா. வடபாலில் அரீச்சுரத்தில் அரீச்சுரர் விளங்குகின்றார். இவர்க்கு முன்னே சக்கரதீர்த்தம் விளங்கும். வடபுறத்தில் யோகீசுரர் விளங்குகின்றார். இவர்க்குமுன் மணிகர்ணிகையென்னும் பொய்கைவிளங்கும். சுவேதவனப்பெருமான் திருக்கோயிலைச் சூழ்ந்திருக்கின்ற ஏழுதீர்த்தங்களும் அகத்தியர் - ஆங்கீரசர் - கௌதமர் - காசிபர் - புலத்தியர் மார்க்கண்டர்-வசிட்டர் - என்னும் ஏழுமுனிவர்களாலும் இயற்றப்பட்டன.

இன்னும் உமாதேவியார் - துர்க்கை - இலக்குமி - சரசுவதி - இந்திரன்முதலாகிய அனந்தகோடிபேர்கள் ஸ்நானஞ்செய்த தீர்த்தங்களும் பூசித்த சிவலிங்கங்களும் பலவுள்ளன. அவைகளில் ஒவ்வொன்றே யாகபலன் தானபலன் யோகபலன்களை யாவர்க்கும் எளிதிற் கொடுக்கும்.

இலிங்கச்சருக்க முற்றிற்று.

# திருவிழாச் சருக்கம்.

இந்திரன்றன் னுலகிடத்திவ் வரசுவெண்காட்டிறைவரளித்தாரெனவேயெண்ணிப்பூவில், வந்துமயன்றனைக்கொடுபொற்கோயிற் கட்டிமண்டபங்கோபுரஞ்சாலைமதிலுண்டாக்கி, முந்துதிருவிழா நடத்தமுனிவோர்விண்ணோர்முதலவரைவரவழைத்துமுறையான்மாசி, யிந்துவளர்துவாதசியிற்புனர்பூசத்திலேற்றினார்க்கினியகொடி யேற்றினனே. (க)

மருவிரண்டாந்திருநாளிலழகர்சோமமண்டலத்திற்பவனிவந்தார்மதலையான, முருகருமபோதாயனமாமுனிவாசத்தினமுனிவரெலாந்தொழவணைந்தார்மூன்றுநாளிற், கருதிரவிமண்டலத்திலமார்போற்றக்கவுதமாச்சிரமதனிற்கலந்துசேர்ந்தா, ரிருவினையுமறத்திருநாலாநாளிலிந்திரனூர்தருஞ்சிவிகைமேறினாரே. (௨)

ஐந்துகுரோசத்தளவாமெல்லைசூழவவனியுய்யத்தேவர்களுமயகனூர்மேவிப், புந்திமகிழ்மதங்கராச்சிரபனுசேரப்புண்டரிகாரணியனூர்புலிக்காலண்ணல், வந்தெதிர்கொண்டார்பதங்கதலத்திலீசர்வரவெதிர்கொண்டிடக்கனகமண்டபத்தி, லெந்தைமகபூசையுங்கொண்டிருந்துநாங்கையிடையளத்தற்கரியவர்பாலெய்தினரே. (௩)

இன்னமுதமுதற்பூசைபலவுங்கைக்கொண்டிப்பாலாய்நாகேசரிடத்திலெய்தி, நன்னெறிசேர்தசவிலிங்கமருங்கிலெய்திநாற்சகத்ரக்கணபதிபானண்ணியோக, மன்னவரெண்யோகிசர்மருங்கிலெய்திமருவுநரகரித்தானமருங்கின்மேவி, யன்னமுதற்பூசைகொண்டார்பெருநதோட்டத்திலராயிராவதனுருமருச்சிததாரே. (௪)

வாய்த்தபொன்னித்தென்கரையில்வந்துமுல்லைவனநாதர் பூசிக்கமகிழ்ந்துசங்கம், பூத்தகடற்கரையணைந்துகலிக்கா மூரிற் பொருமதனையெரித்தவாபாற்பொருந்தியென்பு,கோத்தணிவார்சாய்க்காட்டின்மருவிப்பூசைகொண்டுசங்கமுகதீர்த்தங்கொடுத்துநல்லோ, ரேத்தகத்தியாச்சிரமம்புகாருடெய்தியெழிற்பலவனீச்சுரத்துமெய்தினரே.

ஆரமுதிவ்விடங்கொடாறுமருந்திமேல்பாலடைந்துதிருவலம்புரத்திலமர்ந்துகொன்றைத், தாரணியுமவரையங்கேகிறுவிமற்றைத்தலைச்சங்காட்டினிலடைந்துதலைவனுரை, யேரணிபுநகரிடையினிதுத்திமற்றையிலங்குபிரமீச்சுரத்திலெய்திமிக்க, வாரணஞ்சூழ்திருக்காட்டுப்பள்ளிமேவியகன்றுசுவேதாரணியத்தணுகினரே. (௬)

மடக்கொடிபங்காளர்வலம்புரியும்போதில்வலம்புரிந்தோர்சிவபதத்தின்மருவிவாழ்வார், இடுக்கணறவலம்புரிந்தோர்கனகத்தானமீந்தவர்கள்சிவனுலகிலிருப்பர்சார்ந்து, தடக்கையினல்விசிறிதந்தோர்தண்ணீர்ப்பந்தல்சமைத்தவர்களிந்திரற்குந்தலைவராவ, ரடிக்கடிநாமுரைப்பதென்னவலஞ்செய்வோர்கட்கடிக்கடியோர்மகபலமுண்டாகுந்தானே. (௭)

மற்றையஞ்சாந்திருநாளில்விடைமேற்போந்து மதங்கருக்காவா ருநாண்மகிழ்ந்தானேறிக்,கொற்றமிகுமதங்கர்ளித்தருண்ஞானப்பூங் கோதைமணம்புணர்ந்தருளிக்குஞ்சரத்தி, னற்றவர்சூழ்நகரில்வலம் புரிந்தேழாநாணவமணிப்பொற்றேரின்மிசைநணியெட்டாநா, ளூற் றபவனியிலரக்கன் கயிலேமேவியுயர்ந்தவியாக்கிரதானத்துகந்துசேர்ந் தார். (அ)

அவ்விருளினடேசரும்பல்லியங்களார்ப்பவரம்பையர்சேவித்தி டவேழகம்பார்க்கைக்குச், செவ்வியனுஞ்சுவேதநெடுங்கேதுவாழாச் சிரமமதிலடைந்துதிருச்சாந்துசாத்தி, நவ்வியுடன்முத்திவரமுதவிய ந்தநள்ளிருளிற்றீபதெரிசனமும்பண்ணி, யிவ்விடியற்பொழுதிலிந்த்ர விமானத்தூடேயெழுந்தருளித்திருக்கோயிலெய்தினரே. (கூ)

மிக்கவொன்பதாந் திருநாட்பரியிலேறிவியாக்கிரனாச்சிரமமி சையிற்சேர்ந்தார், தக்கபத்தாந்திருநாளிற்றீர்த்தநல்கித்தனித்துவச மிறக்கிவைத்தார்சாய்க்காட்டாரு, முக்கணற்குப்பங்குனியில்விழாவு ண்டாக்கிமுடித்தனன்பங்குனிமுதலாமுறையினலே,நக்கருக்குமகபூ சைநடத்திவேந்தனுடோறுந்திருநாளோநடத்தினனே. (ய)

வேறு.

மேதினிமிகவும்வாழிவேதவெண்காடுவாழி
யாதிநூலனுதிநூலாமமலனூலிரண்டும்வாழி
நீதிசேரரசன்வாழிநீறுமைந்தெழுத்தும்வாழி
மாதவர்முனிவர்வாழிவையமேல்வானம்வாழி. (யக)

வேறு.

பாலன்றமிழ்விரகனுநம்வாழியேபாடுந்தமிழரசர்பாதம்வாழியே ஞாலம்புகழ்பரமர்தோழன்வாழியேநாளும்பரமகுருநாதன்வாழியே, மேலுந்திருமுறைக ளேழும்வாழியே வேதங்களுமிறைவர்நூலும் வாழியே, காலஞ்சரமமரு மீசர்பேரிலே காலிங்கனுரைபுராணமும் வாழியே. (யஉ)

திருவிழாச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் - யஅ க்குச் செய்யுள் கூாயச

# வசனம்.

இந்திரன் திருவெண்காட்டில்வந்து, சுவேதவனப்பெருமானு க்கு மயனைக்கொண்டு பொற்கோயில் கட்டுவித்து, மண்டபங்களும் கோபுரங்களுஞ் சாலைகளும் மதில்களும் உண்டாக்கித், திருவிழாநட த்துதற்குத், தேவர்முனிவர் முதலாயினோரை வரவழைத்துச், சிவா கமவிதிப்படி மாசிமாதத்தில் பூர்வபக்ஷ துவாதசிதிதியும் புனர்பூசநக்ஷத்திரமுங் கூடியசுபதினத்தில் சங்கம பேரி எக்காளம் பூரி தாளம் முழவு குடமுழா சின்னம் படகம முதலியவாத்தியங்களு டன் தேவதுந்துமி முழங்கவும், உருத்திரகணிகையர் நடிக்கவும் வேதவொலி முழங்கவும் சிவனடியார்கள் அரகரவெனக் கூறி அஞ் சலித்தேத்தவும் சுவேதவனப் பெருமானுக்கு, இடபக்கொடியேற் றினன்.

இரண்டாந்திருநாளில் சுவேதவனப்பெருமான் சோமமண்டல த்திலே பவனிவந்தார். சுப்பிரமணியக்கடவுள், முனிவர்களெல்லா ரும்வணங்கித் துதிக்கப் போதாயன முனிவாசத்துக்கு [நெய்தல் வாயிலுக்கு] எழுந்தருளினார்.

மூன்றாந்திருநாளில் சூரியமண்டலத்தில் சுவேதவனப் பெரு மான் எழுந்தருளிக் கௌதமாச்சிரமத்திற்குச் சென்றார்.

நான்காந்திருநாளில் சுவேதவனப் பெருமான் இத்திருவெண் காட்டுக்குச் சுற்றிலும் உள்ள ஐந்து கூப்பிடுதூர எல்லையை வலம் புரியும்பொருட்டும், உலக முழுதும் உய்யும் பொருட்டும், இந்தி ரன் வேண்டுகோளுக்கிணைந்து அவனாற்செய்வித்தபல்லக்கில் எழுந் தருளி மதங்காச் சிரமமாகிய திருநாங்கூரைச் சேர்ந்த மாத்திர த்தில் புண்டரீ காரணியத்தில் எழுந்தருளியிருக்கும் திருப்புலீச் சுரர் எதிர்கொண்டழைத்துப் பூசிக்கப் பெற்று, பின் அங்கு நின் றும் புறப்பட்டபொழுது மதங்கேசர் எதிர்கொண்டழைக்கச் சென் று கனக மண்டபத் தெழுந்தருளி அம்மதங்கேசுரரால்மக பூசை

செய்யப் பெற்று, பின் அளத்தற்கரிய பெருமாள்பாற் சென்று அவராற் செய்தபூசையைக் கைக்கொண்டு, பின்நாகேசரிடத்தெய்தி அந்நாகேசராற் பூசிக்கப் பெற்று, பின்பு தசலிங்கத்தானத்தடைந்து, தசலிங்கேசுரராற் பூசிக்கப்பெற்று, அங்கு நின்றும் புறப்பட்டு நாலாயிரக் கணேசரிடத்திற் சென்று அக்கணேசராற் பூசிக்கப்பெற்று, பின்பு நரசிங்கத் தானத்தை யடைந்து நரசிங்கமூர்த்தியாற் பூசிக்கப்பெற்றுப், பெருந்தோட்டத்திற் சென்று ஐராவதீசுரராற் பூசிக்கப்பெற்று, அங்குநின்றும் புறப்பட்டுக் காவிரிநதியின் (வடகாவிரி) தென்கரையில்வந்து முல்லைவன நாதராற் பூசிக்கப்பெற்று, கடற்கரையை யடைந்து கலிக்காமூரிற்சேர்ந்து கலிக்காமீசுரராற் பூசிக்கப் பெற்றுச், சாயாவனத்திற் சென்று, சாயாவனேசுரராற் பூசிக்கப்பெற்றுப், பின்பு சங்கமுக தீர்த்தங்கொடுத்து, அதன் பின்பு அகத்தியாச்சிரமத்தையடைந்து அகத்தீசுரராற் பூசிக்கப் பெற்றுக், காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்து பல்லவனீச் சுரத்தைச் சேர்ந்து பல்லவனீசுரராற் பூசிக்கப்பெற்றார். இவ்விடங்கள்தோறும் அன்னமுதலாகிய பூசைகளைக் கொண்டருளினர். இப்பால் சுவேதவனப்பெருமான் திருவலம் புரத்தையடைந்து வலம்புர நாதராற் பூசிக்கப்பெற்று, வலம்புர நாதரை அங்கே நிறுத்தி, பின்பு பிரமீச்சுரத்தை (இலையமுதுகூடம்) அடைந்து பிரமீச்சுரராற்பூசிக்கப்பெற்றுத் திருக்காட்டுப் பள்ளியைச்சேர்ந்துஆரண்யேசுரராற் பூசிக்கப்பெற்றுத் திருவெண்காட்டையடைந்து, திருக்கோயிலிற் சேர்ந்தருளினர். சுவேதவனப் பெருமான் பஞ்சக்குரோசவலம் புரியும்போது வலம்புரிந்தவர்களும் அப்பொழுது பொன்னைத் தானஞ்செய்தவர்களும் சிவலோகத்தை யடைந்துவாழ்வார். விசிறிகொடுத்தோருந் தண்ணீர்ப்பந்தல் வைத்தோரும் இந்திரனுக்கு மேலானபதத்தை யடைவர். வலஞ்செய்வோர்களுக்கு ஒவ்வோரடிக்கு ஒவ்வொருயாக பலன்கிடைக்கும்.

ஐந்தாந்திருநாளிற் சுவேதவனப் பெருமான்இடபவாகனத்தின்மீதெழுந்தருளிப் பவனிவந்தார்.

ஆறாந்திருநாளில் மதங்கமுனிவர் பொருட்டு, சுவேதவனப்பெருமான் இடபவாகனத்தின்மீ தெழுந்தருளி மதங்கராச் சிரமத்தை யடைந்து, மதங்கமுனிவராளித்த ஞானப்பூங்கோதை யம்மையாரைத் திருமணஞ் செய்துகொண்டருளித் திருவெண்காட்டிற்கு வந்து யானைவாகனத்தின்மீ தெழுந்தருளிப் பவனிவந்தார்.

எழாந்திருநாள் சுவேதவனப்பெருமான் நவமணியிழைத்த திருப்பொற்றேரில் எழுந்தருளிப் பவனிவந்தார்.

எட்டாந்திருநாள் சுவேதவனப்பெருமான் கயிலாயவாகனத்தின்மீ தெழுந்தருளி வியாக்கிரபாத ராச்சிரமத்தை யடைந்தார். அன்றிரவில் நடேசப்பெருமான் பலவாத்தியங்கள் முழங்க அரம்பையர்கள் நடிக்க எழுந்தருளிச், சுவேதகேது முனிவராச்சிரமத்திற்சென்று திருச்சாந்தாத்ரிக்கொண்டு சிவகாமியம்மையாரோடும் முத்திவரங்கொடுத்துத், தீர்த்தசானஞ்செய்து, விடியற்காலையில் இந்திரவிமானத்தெழுந்தருளித் திருவீதியிற் பவனிகொண்டு திருக்கோயிலை யடைந்தருளினர்.

ஒன்பதாந்திருநாள் குதிரைவாகனத்தின்மீ தெழுந்தருளி வியாக்கிர பாதராச் சிரமத்திற்குச் சென்றார்.

பத்தாந் திருநாள் தீர்த்தங்கொடுத்தருளி இடபக்கொடியை இறக்கினர். பின்புஇந்திரன்,பங்குனிமாதத்தில் திருச்சாய்க்காட்டில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானுக்குத் திருவிழாச்செய்தான். சுவேதவனப் பெருமானுக்குப் பங்குனிமாத முதலாகச் சிவாகமவிதிப்படி இந்திரன் மகாபூசையை நடத்தி நாள்தோறுந் திருநாளைச்செய்வித்தான், என்றிவ்விதமாக அகத்தியமகாமுனிவர் சொல்லி முடித்தலும் வசுமகாராசன் கேட்டுப் பேரானந்தமுற்று, அம்முனிவர் பெருமானை வலஞ்செய்து நமஸ்கரித்துத் துதித்து அவர்பால் விடைபெற்று, அகத்தியாச் சிரமத்தினின்றும் புறப்போந்து காவிரியில் ஸ்நானஞ்செய்து சுவேதவனப் பெருமான்றிருக்கோயிலையடைந்து முக்குளத்தின் மூழ்கி,திருவெண்ணீறும் உருத்திராக்க மாலையும்

பூண்டு நியதிமுடித்துத் திருவைந்தெழுத்தைச் செபித்துக்கொண்டு சிரமிசைக்கூப்பியகரத்தனாய்ச்சென்று, மூத்தபிள்ளையாராகியபெரிய வாரண விநாயகப் பெருமானைப் பணிந்து அவர்அருள்பெற்று, இளையபிள்ளையாராகிய சண்முகப்பெருமானது நாண்மலர் நிகருந்தாண்மலரைத் தன்னீண்முடிமிசைநிலவப்பணிந்து அவரனுக்கிரகமும் பெற்றுச், சுயம்பிரகாச பரஞ்சோதியாகிய சுவேதவனப் பெருமானைப் பணிந்து, பிரமனுக்கருளிய பிஞ்ஞகாபோற்றி அமரர்க்கரியனே போற்றி அடியார்க்கெளியனேபோற்றி யென்று துதித்து, பலவகையாகப்பாடி ஆனந்தக்கூத்தாடிப், பெரியபிராட்டியாரையும் நடேசப் பெருமானையும், அகோரப்பெருமானையும் அன்போடு வணங்கித் துதித்து, பலகாலந் தவஞ்செய்து கொண்டிருந்து சுவேதவனப் பெருமான் றிருவடி நிழலையடைந்தான். என்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்லியருளினர்.

## திருவெண்காட்டுப்புராணம்

முற்றிற்று.

---

PRINTED AT THE PANDITHA MITHRA PRESS:—MADRAS.